நாவலர்
ந.மு.வேங்கடசாமி நாட்டார்

பதிப்பாசிரியர்

முனைவர் சா கிருட்டினமூர்த்தி

முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் வரிசை – 2

நாவலர்
ந.மு. வேங்கடசாமி
நாட்டார்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 2
நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் (23-07-2003)

Title of the Book	:	**Nāvalar Na.Mu. Veṅkaṭacāmi Nāṭṭār**
Editors	:	Dr. S. Krishnamoorthy Director IITS, Taramani, Chennai - 600 113. Dr. S. Sivakami Associate Professor IITS, Taramani, Chennai - 600 113.
Publisher	:	International Institute of Tamil Studies C.I.T. Campus, Taramani IInd Main Road, Chennai 600 113. Ph: 22542992
Publication No	:	487
Language	:	Tamil
Edition	:	First Edition
Date of Publication	:	2004
Paper Used	:	18.6 kg TNPL Map litho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	viii+160
No. of Copies	:	1200
Price	:	Rs. 50/- (Rupees Fifty Only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road, Chennai - 600 004.
Subject	:	Biography and Criticism on Navalar Na.Mu. Venkadasami Nattar

---

கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒல்லும்வகையெல்லாம் தமிழை வளர்ப்பதில் அயராது பாடுபட்டுவருகிறது.வாரக்கருத்தரங்கு,திங்கள் கருத்தரங்கு, ஆண்டுக்கருத்தரங்கு, அறக்கட்டளைக் கருத்தரங்கு போன்ற பல்வேறு கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி அக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்து வருகிறது. தமிழாய்வுக்கு உடனடித் தேவை என்ன என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்திவருவதே இதற்குக்காரணமாகும்.

இந்நிறுவனம் தொடக்கக் காலத்திலிருந்து பல்வேறு பொருண்மைகளில் கருத்தரங்குகளை நடத்திவருவதைத் தமிழுலகம் நன்கு அறியும். தமிழுக்கென்று அமைந்த மரபையும் பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் தமிழ் இலக்கியக் கொள்கை என்ற தொடர்கருத்தரங்கை இந்நிறுவனம் நடத்திவந்தது. தமிழர் கலைச் செல்வங்கள் என்ற தலைப்பில் தொடர் கருத்தரங்காகத் தமிழ் மரபினை உணர்த்தும் வகையிலும் கருத்தரங்குகளை நடத்திவந்தது. இவையன்றியும் பல்வேறு இலக்கியப் பொருண்மைகளில் கருத்தரங்கை நடத்திவந்தபெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு. இந்நிறுவனம் தன் அளவிலும் பிற நிறுவனங்களோடு சேர்ந்தும் இத்தகைய கருத்தரங்குகளை நடத்தித் தமிழாய்வுக்குச் சிறப்புச் சேர்த்து வந்துள்ளது. இக்கருத்தரங்குகளைத் தொடர்ந்து தமிழறிஞர்களை மையப்படுத்திய நிலையில் தொடர்கருத்தரங்கு ஒன்றைத் தொடங்க எண்ணியது. இவ்வகையில் **'தமிழறிஞர் வரிசை'** என்ற பெயரில் தொடர் கருத்தரங்கை நடத்துவதன்மூலம் அறிஞர் பலரின் அரிய தமிழ்த்தொண்டுகளை எல்லாம் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்ட முடியும் என்ற நிலையில் இத்தகைய தொடர்கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது.

வரலாறு எழுதப்படாத தமிழறிஞர்களுக்கு ஒரு வரலாற்றை உருவாக்குவதன் மூலம் அத்தமிழறிஞர்களைப் பற்றிய செய்திகள் ஆவணப் படுத்தப்படும். அவ்வாறு ஆவணப்படுத்தப்படுவதால் இத்தமிழறிஞர்கள் இம்மண்ணில் பிறந்த பயனும், இம்மண்ணிற்கும், மொழிக்கும், இனத்திற்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகளும் பின்வருவோரால் போற்றப்படும் நிலை

உருவாகும். இதனால் இத்தமிழறிஞர் வரிசைக்கருத்தரங்கை வாழ்க்கை வரலாற்றுக் கருத்தரங்காக அமைக்காமல் ஆய்வுக்கருத்தரங்கமாக அமைத்துக்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. அவ்வகையில் தமிழுக்கு உழைத்து மறைந்த அறிஞர்கள் பலநூறுபேர் நம்முன் வந்தனர். அவர்கள் அனைவரைப் பற்றியும் இத்தொடர் கருத்தரங்கம் அமையவேண்டும் என்பது எங்கள் அவா. எனவே அனைவரையும் பட்டியலிட்டுப் பகுதி பகுதியாக இத்தொடர் கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதில் முதல் கட்டமாகப் பதினாறு அறிஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தமிழறிஞர்களின் முதல் பட்டியலைக் கொண்டு தமிழறிஞர்களைப் பற்றிய கருத்தரங்கு நடைபெறும் நாள், கட்டுரை வழங்க வேண்டிய நாள் பற்றிய குறிப்புகளுடன் முதல் அட்டவணை தயார் செய்யப்பட்டது.

இப்பதினாறு தமிழ் அறிஞர்களைப் பற்றியும் கட்டுரைகள் வழங்கத் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர்.

ஒரு திங்களுக்கு ஒரு தமிழறிஞர் என ஒருவரைப் பற்றிய கருத்தரங்கில் 5 அல்லது 6 பேர் ஆய்வு செய்யவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கட்டுரைகள் கோரப்பட்டன. ஒருவரைப் பற்றிப் பலர் ஆய்வுசெய்து கட்டுரை வழங்குவதால் அவ்வறிஞருடைய பன்முக ஆளுமையை வெளிக்கொணர முடியும். அத் தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு முதலில் அமையவேண்டும். பதிப்பு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு போன்ற நிலைகளில் அவ்வறிஞர் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்ற நோக்கில் கட்டுரைகள் பெறப்பட்டன. இக்கருத்தரங்கில் மிகுந்த விருப்பத்துடன் ஆய்வாளர்கள் கட்டுரை வழங்க முன்வந்தமை உண்மையிலேயே எங்களுக்கு வியப்பு அளித்தது. முறையாகத் திட்டமிடப்பட்டுச் செயல்படத் தொடங்கிய **இத்திங்கள் தொடர் ஆய்வுக்கருத்தரங்கு - தமிழறிஞர்வரிசை** புதுப்பொலிவுடன் எண்ணிய வண்ணம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இம்முதல் பட்டியலைத் தொடர்ந்து இரண்டாவது பட்டியல்,மூன்றாவது பட்டியல் எனத் தமிழறிஞர் வரிசை ஆண்டுக் கணக்கில் நடைபெறும் தொடர் கருத்தரங்காக உருவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய, நாளைய தலைமுறையினர்க்கும் தமிழ் உலகிற்கும் ஒரு சிறந்த ஆவணமாக அமைய இருக்கும் இத்தமிழறிஞர்வரிசைக் கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொடர்ந்து நூலாக வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை

கொள்கிறது. எப்போதும் ஒரு பணியைத் திட்டமிட்டு எதிர்கால நோக்கில் செயல்படுத்தினால் அத்திட்டம் வெற்றியடைவது உறுதி என்பதற்குச் சான்றாக இத்தமிழறிஞர் வரிசைத் தொடர் கருத்தரங்கு அமையலாம்.

தமிழறிஞர் வரிசையில் அடுத்து **நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கள் இடம்பெறுகிறார். இக்கருத்தரங்கிற்கு அறுவர் கட்டுரை வழங்கியுள்ளனர். தமிழ்ப் பணியாற்றிய சான்றோர்களுள் குறிப்பிடத்தக்கவராக விளங்கும் தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியரான வேங்கடசாமிநாட்டார் அவர்கள் சிறந்த ஆய்வாளராகவும், நல்லாசிரியராகவும் உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், தமிழுக்குப் பெரும்பணி ஆற்றியுள்ளார். அவர்கள் பற்றிய வாழ்க்கை வரலாற்றையும், அரிய தமிழ்ப்பணிகளையும் இந்நூல் தெளிவாக எடுத்துக்கூறுகிறது.

நாட்டார் பற்றிப் பல்வேறு கட்டுரைகளும், நூல்களும் தனித்தனியாக வந்திருந்தாலும் அவை அனைத்தும் ஒருங்கிணைந்த ஆய்வுநோக்கில் இந்நூல் அமைகிறது.

இந்நூல் தமிழ் ஆய்வாளர்க்கும், ஆர்வலர்க்கும் ஓர் அரிய பெட்டகமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தொடர் கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து சிறப்புடன் நடைபெற முழு முயற்சியுடன் செயல்பட்ட இலக்கியம் மற்றும் சுவடிப்புல இணைப் பேராசிரியர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கு என் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கருத்தரங்கு சிறப்புடன் நடைபெற அனைத்து உதவிகளையும் செய்த நல் உள்ளங்களுக்கு நன்றி. இத்தொடர் கருத்தரங்கக் கட்டுரைகள் நூலாக்கம் பெற இசைவளித்த நிறுவனப் பதிப்புக்குழுவினர்க்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைன்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

சென்னை

22-4-04 **இயக்குநர்**

கட்டுரையாளர்

முனைவர் கஸ்தூரி நாகராஜன்

தமிழ்ப்பேராசிரியர்

ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

முனைவர் இரா. காசிராசன்

பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை

அஞ்சல் வழிக்கல்வி நிறுவனம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

முனைவர் மோ.கோ. கோவைமணி

ஆய்வு உதவியாளர், ஓலைச்சுவடித் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முனைவர் சூ. நிர்மலாதேவி

ஆய்வு உதவியாளர், இலக்கியம் மற்றும் சுவடியியற்புலம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

முனைவர் தி. மகாலட்சுமி

ஆய்வு உதவியாளர், இலக்கியம் மற்றும் சுவடியியற்புலம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

முனைவர் அரு. மருததுரை

இணைப் பேராசிரியர், தமிழியல்துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

உள்ளே

வாழ்க்கை வரலாறு

சூ. நிர்மலாதேவி

தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர், தமிழ் நூற்கடலை நிலைகண்டுணர்ந்தோர், பெருநூல்களுக்கு உரை கண்ட பேரறிஞர், நாநயம், நாவன்மை கொண்டு செந்தமிழ்ச் சொற்பொழிவாற்றிய சீர்த்தியாளர், சிவனடி மறவாத சிந்தையர், இலக்கண இலக்கியத் திறனாய்வாளர், பல்கலைப் புலவர், தமிழ் நெஞ்சினர், தமக்கென வகுத்துக் கொண்ட இலக்கியக் கொள்கையினர், மரபு மீது மாறாத பற்றுக் கொண்டவர், மாறுபட்ட கருத்துத் தோன்றுமிடத்து அஞ்சாது எடுத்துரைப்பவர் என்ற பல சிறப்புப் பட்டங்களுக்கும் உரிமை பூண்ட ஒப்பற்ற தமிழறிஞராகத் திகழ்பவர் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்.

பிறப்பிடச் சிறப்பு

தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு எனும் சிவப்பதிக்கு அண்மையிலுள்ள குடமுருட்டி ஆற்றின் தெற்குப் பக்கத்திலுள்ள 'நடுக்காவேரி' எனும் ஊரில் 12-4-1884இல் பிறந்தார். இவ்வூர் சோழநாட்டின் வளம் மிக்க பகுதியாகும். திருநாவுக்கரசர் தங்கித் திருமடம் கட்டிப்பணி செய்து வந்த 'திருப்பூந்துருத்தி' எனும் ஊர் நடுக்காவேரியின் கிழக்கே இருகல் தொலைவில்தான் உள்ளது. நடுக்காவேரிக்கு "உத்தண்ட விஜயராகவபுரம்" என்ற மற்றொரு பெயரும் உண்டு எனத் தெரிகிறது.

நாட்டார் மரபினர்

ந.மு.வே. 'நாட்டார்' எனும் மரபில் தோன்றியவராவார். நடுக்காவேரியில் பெரும்பான்மையினரும் நாட்டார் எனும் பெயருடைய 'கள்ளர்' மரபைச் சேர்ந்தவர்களாவர். 'கள்ளர்' என்பவர் பல்லவ வகுப்பினர் அல்லது பல்லவரின் கிளைமரபினர். இவர்கள் தொண்டை நாட்டினின்றும் புறப்பட்டுச் சோழ, பாண்டிய நாடுகளில் குடியேறி 'அரையர்' எனும் பெயருடன் ஆட்சிபுரிந்து வந்தனர். பின்பு சோழர்


---

* "தாமே பயின்ற தமிழ்ப்பேராசிரியர்" என வே. நடராஜன் எழுதிய நூற்கருத்துகளை முக்கியத்தரவுகளாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது. பிற நூற் கருத்துகள் இக்கட்டுரையில் வரும்பொழுது அவை அடிக்குறிப்புகளில் தரப்படுகின்றன.

குடி முதலியனவும் இம்மரபில் கலந்துவிட்டன. இவை கள்ளர் மரபு குறித்து ந.மு.வே. எழுதிய 'கள்ளர் சரித்திரம்' குறிப்பிடும் கருத்துகளாகும்.

பரம்பரை வழி

ந.மு.வே. அவர்களின் தந்தை, தாத்தா ஆகியோர் கல்வியறிவுடையவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். ந.மு.வே.யின் உடன்பிறந்தார் எழுவராவர். இரு அண்ணன்மார்களும், இரு தமக்கையரும், மூன்று தம்பியரும் இருந்தனர் எனத் தெரிகின்றது. ந.மு.வே. நாட்டாரின் மகன் வே. நடராஜன் ஆவார். இவரின் பரம்பரைக் கொடி வழி வரைபடமாகத் தரப்படுகின்றது.[1]



தந்தையார் முத்துச்சாமி நாட்டார்

ந.மு.வே.யின் தந்தையார் முத்துச்சாமி நாட்டார் உடல் வனப்பும் உடல் வலிவும் உடையவராக இருந்தார். நைடதம், திருவிளையாடற்புராணம், வெங்கைக்கோவை, திருப்புகலூர் அந்தாதி

---

1. தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர், வே.நடராஜன், பக்.10-16ஆம் பக்கச் செய்திகளைச் சான்றாகக்கொண்டு வரையப்பட்டது.
2. 'தையலம்மாள்' எனவும் குறிப்புக் காணப்படுகிறது; சோழநாட்டுப் புலவர்கள், சு.அ. இராமசாமிப்புலவர், பக்.61

ஆகியவற்றில் இலக்கியப்பயிற்சியும், கைவல்யம், ஞானவாசிட்டம் போன்ற வேதாந்த நூற்பயிற்சியும், சாதகாலங்காரம், குமாரசுவாமியம், உள்ளமுடையான் போன்ற கணித, சோதிட நூற்பயிற்சியும் உடையவர் எனத் தெரியவருகின்றது.

ந.மு.வே.யின் இயற்பெயர், மறுபெயர்

பெற்றோரால் அவருக்கு இடப்பட்ட இயற்பெயர் 'சிவப்பிரகாசம்' என்பதாகும். இளம்பருவத்தில் கொடியநோய் ஒன்றால் ந.மு.வே. பாதிக்கப்பட, அவருக்கு முன்பிறந்த குழந்தைகளை இழந்த துயரத்தில் இருந்த பெற்றோர் திருவேங்கட மலையில் குடி கொண்டிருக்கும் வேங்கடசாமியை வேண்டினர். குழந்தை நலமுற்றது. முடியிறக்கிப் பெயரையும் 'வேங்கடசாமி' என மாற்றினர். பெற்றோர் தீக்கை பெற்ற சைவ சமயத்தினராயினும் திருமாலிடத்தும் பக்தியுடையவர்கள் என்பது இதனால் புலப்படுகின்றது.[3]

இளம்பருவக் கல்விப் பயிற்சி

ந.மு.வே. 4ஆம் வகுப்பு வரை திண்ணைப் பள்ளிக் கூடக் கல்வி பயின்றார். நெடுங்கணக்கு மற்றும் இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, குழிமாற்று முதலிய கணக்குச் சார்பான சிலசுவடிகளைப் படித்தார். தம் தந்தையிடம் ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி முதலிய நீதி நூல்களைக் கற்றார். திருக்குறளில் 60 அதிகாரங்களை மனனம் செய்து ஒப்பித்தார். பிற்காலப் பெருங்கல்விக்கு இவை அடிப்படையாக அமைந்தன. அப்பொழுது ஆரம்பப்பள்ளியில் 4ஆம் வகுப்பில் அரசியலார் தேர்வு இருந்தது. 8 கல் தொலைவிலிருந்த 'புதுச்சத்திரம்' எனும் ஊருக்கு நான்கைந்து அந்தண மாணவர்களுடன் சென்று தேர்வெழுதி ஒவ்வொரு பாடத்திலும் முதன்மை மதிப்பெண் பெற்றுத் தேர்ந்தார். 4ஆம் வகுப்பில் ஆங்கிலம் அல்லது சுகாதாரம் இருந்ததில் இவர் சுகாதாரம் எடுத்துப் பிரைமரித் தேர்வெழுதினார். பாரத, இராமாயண, கந்தபுராணக் கதை கேட்பதிலும் அபிமன்னன் சுந்தரி மாலை போன்ற எளிய செய்யுள் நூல்கள் கற்பதிலும் பெரு விருப்புடையராக இருந்தார்.

தந்தையிடம் கற்ற கல்வி

தம் தந்தையைப்போல் கல்விகற்றுச் சான்றோனாகத் திகழவேண்டும் என்ற உந்துதல் இயல்பாகவே இருந்தது, தம் தந்தையிடம் திருப்புகலூர் அந்தாதி, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, வெங்கைக்கோவை ஆகிய சிற்றிலக்கியங்களையும்

---

3. சோழநாட்டுப் புலவர்கள், சு.அ. இராமசாமிப் புலவர், ப.61.

நைடதத்தின் முற்பகுதியையும் பாடம் கேட்டார். நைடதத்தின் பிற்பகுதி, நன்னூல், திருவிளையாடற்புராணம், வில்லிபாரதம், கம்பராமாயணம் முதலியவற்றுட் சிற்சில பகுதிகளைத் தந்தையார் முன் பொருளுணர்ச்சியோடு படித்தார். அப்பொழுது ந.மு.வே.யின் வயது 16.

வேளாண்மை ஈடுபாடும், கல்விப் பயிற்சித் தொடர்ச்சியும்

நடுத்தரக் குடும்பத்தில் தோன்றிய நாட்டார் தம்முடைய குடும்ப நிலையை ஒழுங்குபடுத்துவதற்காகத் தம் வேளாண்மைத் தொழிலிலும் ஈடுபடலானார். சில ஆண்டுகள் நன்செய், புன்செய் நிலங்களில் உழவுத் தொழில் முதலியவற்றில் ஈடுபட்டு உழைத்தார். நடுக்காவேரிப் படுகை புகையிலைப் பயிர் செய்ய ஏற்றதாக இருந்தது. பண்ணையாட்களோடு தாமும் சேர்ந்து உழைத்ததால் நிலத்திலிருந்து நல்ல வருவாய் கிடைத்தது.[4]

வேளாண்மையில் ஈடுபட்டுக் கொண்டே சூடாமணி நிகண்டில் 11ஆம் தொகுதி முழுவதையும் மனனம் செய்தார். வடமொழி கற்க விரும்பிக் கிரந்த எழுத்துகளைப் பயின்று நீதிசாரம் முதலிய சிலவற்றையும் ஓரளவு சப்தத்தையும் பயின்றார். அமரநிகண்டில் நூற்றுக்கு மேலான சூத்திரங்களைப் பாடம் செய்தார். ஜி.யூ. போப்பையரின் சிற்றிலக்கணத்துடன் நன்னூற் பாயிரவியல், எழுத்தியலிலுள்ள சூத்திரங்களைத் தாமாகவே மனப்பாடம் செய்தார்.

சிறிய தந்தையிடம் இசைப் பயிற்சி பெறுதல்

ந.மு.வே.யின் சிறிய தந்தை சொக்கலிங்க நாட்டார் பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்த மகா வைத்திய நாதய்யரிடம் இசைப் பயிற்சி பெற்றவர். ந.மு.வே. இசைப் பயிற்சி பெறச் சென்றார். நான்கைந்து நாட்கள் வரையும் கையால் தாளம் போட்டுக் கொண்டு ஒரு பாடலைப்பாடுவதே பயிற்சியாக இருந்தது. நாட்டாரால் இயலவில்லை. நாளடைவில் இசைப் பயிற்சியை விட்டுவிட்டார். ஆனால் இசை கற்கச் செல்லும் பொழுது வீட்டுத் திண்ணைகளில் நடைபெறும் சீட்டாட்டத்தை 'இசை கற்கும் நாம் இனி நின்று கவனிக்கக் கூடாது' என்று எடுத்த உறுதி மொழியை இறுதிவரை நாட்டார் கடைப்பிடித்ததே இசை கற்கச் சென்றதன் பெரும் பயனாக அமைந்தது.

---

4. சோழநாட்டுப் புலவர்கள், சு.அ. இராமசாமிப் புலவர், ப.62

அறிஞர் கூட்டுறவும் செய்யுள் பொருளுணரும் இயற்கை ஆற்றலும்

தந்தையார் கல்வியறிவுடையவர் ஆதலின் அவரைப் பார்க்க வரும் புலவர்களோடு நாட்டாரும் அளவளாவும் வழக்கம் ஏற்பட்டது. மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டபின் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்டுச் சிறப்புக் கூட்டங்கள் நடத்திச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. தந்தையாருடன் நாட்டாரும் செல்வார். போதிய இலக்கண, இலக்கியப் பயிற்சி இல்லாதிருப்பினும் செய்யுட்களின் பொருளைக் கூடியவரையில் சரியாய் அறிந்து கொள்ளும் இயற்கை ஆற்றல் அவருக்கு இருந்தது. சான்றாக அப்பொழுது நடந்த இரு நிகழ்ச்சிகளைச் சுட்டலாம்.

1. நடுக்காவேரிக்கு வந்த புலவர் ஒருவர் "கற்றவரே மானாரி காயரா காசினிதேர்" என்னும் வெண்பாவின் அடி சரியான பொருள் தராததால் தவறு என்று கூறினார். அப்போது ந.மு.வே. "கல்தவர் ஏமால் நாரிகாய் அரா காசினி தேர்"[5] எனப் பிரித்துப் பொருள் கூறி அது சரியான வெண்பா அடிதான் என்று விளக்கினார்.

2. தொடக்கப்பள்ளிகளின் மேற்பார்வையாளரும் சாவித்திரி வெண்பா ஆசிரியரும் தமிழுணர்வு மிக்கவருமான ஐ.சாமிநாத முதலியார் என்பவர் செவ்வந்திப் புராணத்திலுள்ள, "கான வாரிசப் பொகுட்டுறை கடவுளும் **கனகத் தான வாரியும்** வலாரியும் காண்கிலாத் தலைவ" எனும் செய்யுளில் 'கனகத்தானவாரி' என்பதற்குரிய உண்மைப்பொருள் காணாது ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகப் பொருள்கூற நிறைவுறாது நாட்டாரிடம் கேட்டனர். உடன் அவர் 'கனகத்தானவ அரி' எனப் பிரித்து, 'இரணியாசுரனுக்குப் பகைவன்' எனப் பொருள் கூற, முதலியார் மிகவும் மகிழ்ந்து நாட்டாரிடம் மேலும் பற்றும் அன்புமுடையவராக ஆனார்; பண்டிதத்தேர்வெழுத வழிகாட்டியுமாக ஆனார் எனத் தெரிகின்றது.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வுகள்

பாலவநத்தம் ஜமீன்தார் பொன்னுசாமித் தேவரின் மகன் பாண்டித்துரைத் தேவர் தமிழ் வளர்க்கும் ஆர்வம் கொண்டு 24-5-1901ஆம் ஆண்டு மதுரையில் பாஸ்கர சேதுபதி மன்னர்

---

5. கல் - மாமேருமலை, தவர்-வில், ஏ-அம்பு, மால்-திருமால், நாரி-வில் நாண், காய் அரா-சினமுள்ள வாசுகி எனும் பாம்பு, காசினி-பூமி, தேர்-இரதம்.

தலைமையில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை நிறுவினார். அச்சங்கத்தின் உறுப்புகளாகப் பாண்டியன் புத்தகசாலை எனும் நூலகமும் 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' எனும் தமிழ்க் கல்லூரியும் நிறுவப்பட்டன. **'செந்தமிழ்'** எனும் மாதப் பத்திரிகையும் தொடங்கப்பட்டது. ஆங்கிலக் கலாசாலை மாணாக்கருக்குத் தமிழ் கற்கும் விருப்பு உண்டாதற் பொருட்டும், பிறர் தமிழில் புலமையடையும் பொருட்டும் மூன்று தனித்தமிழ்ப் பண்டிதத் தேர்வுகள் உருவாக்கப்பட்டு, வகுப்புகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு தேர்வுக்கும் இரு ஆண்டுகள் இக்கலாசாலையில் படிக்க வேண்டும். கலாசாலையில் பயிலாமல் தனியாகப் படித்தும் வந்து தேர்வு எழுதலாம் என்ற விதி இருந்தது. 1905 முதல் இத்தகு தனித்தமிழ்ப் பண்டிதத் தேர்வுகள் தொடங்கி நடந்து வந்ததாகத் தெரிகிறது.

நாட்டாரும் பிரவேச பண்டிதத்தேர்வும்

நாட்டார் மீது பேரன்பு கொண்டிருந்த ஐ.சாமிநாத முதலியார் நாட்டாரின் தமிழார்வத்தை உணர்ந்து அவரைப் பிரவேச பண்டிதர் தேர்வெழுதத் தூண்டுதலாக இருந்து உதவிகள் செய்தார். 'செந்தமிழ்' இதழில் வெளிவந்த பிரவேச பண்டிதத்தேர்வின் விதிமுறைகள், தேர்வுக்குரிய நூல்களின் பட்டியல் ஆகியவற்றை நாட்டாருக்கு அனுப்பி வைத்தார். இரண்டாண்டுகள் பயின்று எழுதவேண்டிய அத்தேர்வுக்கு 10 திங்கள் இடைவெளியே இருந்ததை நாட்டார் பார்த்தார். நூற்களைத் திரட்டிப் படித்து அவ்வாண்டிலேயே (1905) தேர்வை எழுதிவிடுவது என்று முடிவு செய்தார்.

நாலடியார், நான்மணிக்கடிகையை மனனம் செய்தார். நன்னூற் காண்டிகையுரை (ஆறுமுக நாவலர் பதிப்பு) யிலுள்ள சூத்திரங்களுடன் சான்றாக வரும் சொற்களையும் தாமே செய்யுட்களாகச் செய்து கொண்டு மனனம் செய்தார். விசாகப் பெருமாள் ஐயரின் அணியிலக்கணம் கிடைக்காது, இரவல் பெற்றுக் கையால் எழுதி வைத்துக் கொண்டு அனைத்து நூற்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார். பின்னர் பிஷப் ஹீபர் கல்லூரியான திருச்சி எஸ்.பி.ஜி.கல்லூரியில் தேர்வு நடந்தது. முதல் வகுப்பில் தேறிய இருவருள் ஒருவராக நாட்டார் இருந்தார். இதற்கு, மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவில் பரிசளிக்கப்பெற்றது. தந்தையுடன் மதுரை சென்ற நாட்டார் தமக்குரிய பரிசுடன், இலக்கணத்தில் முதன்மையாகத் தேறியதற்கான சிறப்புப் பரிசையும் பெற்றார். பரிசுத் தொகைகள் மூலம் அடுத்த தேர்வான பால பண்டிதத்தேர்வுக்குரிய நூல்களை வாங்கிக் கொண்டு தந்தையும் தனயனும் ஊர் திரும்பினர்.

நாட்டார் எழுதிய பால பண்டிதத் தேர்வு

பிரவேச பண்டிதத் தேர்வின் பின்னர் இரண்டு ஆண்டுகள் படித்தாலன்றி இத்தேர்வை எழுத இயலாது. தேர்வுக்குரிய நூல்களின் எண்ணிக்கை அவ்வளவு அதிகமாக இருந்தது. ஆயினும் நாட்டார் அவர்கள் ஒரே ஆண்டில் படித்து அடுத்த ஆண்டிலேயே தேர்வை எழுதிட முனைந்தார். ஊரிலோ கற்பிக்கும் தகுதியார் ஒருவரும் இல்லை. அது பற்றியெல்லாம் கவலையுறாது தம் அறிவு ஒன்றையே துணையாகக் கொண்டு நாட்டார் கற்றார். முன் தேர்வெழுதிய அதே கல்லூரியிலேயே இத்தேர்வும் நடந்தது. கல்லூரித் தமிழாசிரியர் பிச்சை இபுராஹீம் புலவர் மேற்பார்வையில் 1906இல் எழுதிய பால பண்டிதத் தேர்வில் நாவலர் ஒருவரே தேர்ச்சி பெற்றார். அதிலும் முதல்வகுப்பில் தேர்ச்சியுற்றார். தமிழ்ச் சங்க ஆண்டு விழாவின் போது பொற்பதக்கம் பரிசு பெற்றார். சங்கத்துக்கு வந்திருந்த புலவர் பலரோடும் அளவளாவிச் சொற்பொழிவுகளைச் செவிமடுத்து மகிழும் பேறும் பெற்றார்.

நாட்டாரும் பண்டிதத் தேர்வும்

முதலிரு பிரவேச, பால பண்டிதத்தேர்வுகளை முடித்த ந.மு.வே. இறுதித்தேர்வான பண்டிதத் தேர்வை 2 ஆண்டுகளில் முடித்துவிட உறுதிபூண்டார். இதற்கிடையில் திருமணம் முடித்துவிடப் பெற்றோர் முயன்றனர். ஐ. சாமிநாத முதலியார் அவர்கள் மூன்றாம் பண்டிதத் தேர்வையும் முடித்த பின்னர்த் திருமணம் முடிப்பதே நலம் என்று பெற்றோருக்கு எடுத்துக்கூறி, நாட்டாரிடமும் பண்டிதத் தேர்வை ஓராண்டுக்குள் எழுதி விடுமாறு வற்புறுத்தினார்.

வீட்டு மெத்தை மீது "தமிழவள் இருக்கை" என்ற தனியறையில் அமர்ந்து கணப்பொழுதும் வீணாக்காது பாடங்களைப் பயின்றார். தொல்காப்பியச் சூத்திரங்களை மனனம் செய்தார். உரையைப் படித்துணர்ந்து உள்வாங்கினார். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களைப் பழைய உரையுடன் படித்தார். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருக்குறள் உள்ள பாடப்பகுதிகளைப் பயின்றார். ஆசிரியர் உதவியின்றித்தாமே 2 ஆண்டுகள் படிக்க வேண்டியதை ஒரே ஆண்டில் படித்து முடித்தார். அன்னாரது அறிவு நுட்பத்தாலும் பேருழைப்பாலும் அது சாத்தியமானது. தேர்வு நூல்களில் ஒன்றான தருக்க சங்கிரக தீபிகையிலுள்ள உரையின் சிற்சில பகுதிகளில் ஐயம்

ஏற்பட அதனை விளங்கிக் கொள்ள மட்டும் தருக்க வல்லுநர் குப்புசாமி ராசு என்பாரிடம் சென்று ஐந்தாறு நாட்கள் தங்கி ஐயம் போக்கி வந்ததாகத் தெரிகின்றது.

தேர்வு எழுதப் புறப்படும் முன் வழக்கம் போல் சிவபிரான் திருக்கோயிலில் சென்று வணங்கி, நன்னிமித்தம் உண்டாக மகிழ்ந்து, தந்தையுடன் திருச்சி வந்து அதே எஸ்.பி.ஜி. கல்லூரியில் தேர்வு மேற்பார்வையாளர் பிச்சை இபுராஹீம் புலவர் பாராட்டுடன் 1907இல் தேர்வெழுதினார் நாட்டார். தேர்வில் இவர் ஒருவரே முதல் வகுப்பில் தேறித் தங்கத்தோடா பரிசு பெற்றார்.

பரிசு பெறத் தந்தையுடன் மதுரை சென்றபொழுது, உடன் வந்த பிச்சை இபுராஹீம் புலவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பேற்பட்டது. ஆண்டுவிழாவுக்குத் தலைமையேற்ற புதுக்கோட்டை மன்னரின் தம்பி தட்சிணாமூர்த்தி துரைராஜா பி.ஏ.பி.எல். அவர்கள் தங்கத்தோடா பரிசை நாட்டாரிடம் அளிக்கும் முன், சேய்மையிலிருந்த பாண்டித்துரைத்தேவர் விரைந்து வந்து அதனை வாங்கித் தாமே தம் கையால் நாட்டாருக்கு அணிவித்து மகிழ்ந்தார். அன்று முதல் ந.மு.வே. பண்டித ந.மு. வேங்கட சாமி நாட்டார் ஆனார்.

தங்கத்தோடா பரிசு பெற்ற நாட்டாரை 1908இல் நடுக்காவேரிக்கு வருகைபுரிந்த காஞ்சிகாமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகள் தாம் தங்கியிருந்த இடத்துக்கு வரவழைத்துப் பொன்னாடை போர்த்திப் போற்றி வாழ்த்தினார்.[6]

நாட்டாரின் திருமணம்

நாட்டார் பண்டிதத் தேர்வில் வெற்றிபெற்றவுடன் அதே ஆண்டில் அவருக்குத் திருமணம் செய்து வைக்கப் பெற்றது. பழைய உறவினராகிய செங்கிப்பட்டித் திருவாளர் சீனு மேற்கொண்டார் மகள் இந்திராணி அம்மாள் மனைவியாக அமைந்தார். திருமணம் பிலவங்க ஆண்டு ஆவணி மாதம் 24ஆம்தேதி அதாவது 1907 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இனிதாக நடத்தி வைக்கப் பெற்றது. அப்போது நாட்டாருக்கு வயது 23. இந்திராணி அம்மாளின் வயது 12 ஆகும். கணவருக்கு உற்ற வாழ்க்கைத் துணையாக இவ்வம்மையார் திகழ்ந்து நாட்டாரின் இல்லற வாழ்க்கைக்கு இனிமை சேர்த்தார் எனத் தெரிகின்றது.

---

6 தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள், குன்றக்குடி பெரிய பெருமாள், ப.396.

ஆற்றிய ஆசிரியர் பணிகள்

நாட்டார் பல இடங்களில் ஆசிரியப் பணி புரிந்திருக்கிறார். திருச்சி எஸ்.பி.ஜி. கல்லூரி, கோயம்புத்தூர் செயிண்ட் மைக்கேல் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவை அவர் பணி புரிந்த இடங்களாகும்.

ஏற்காத பணி

முதலில் அவருக்குப் புதுக்கோட்டை அரசர் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதர் பணிக்கு வருமாறு கல்லூரியிலிருந்து இராதாகிருஷ்ண ஐயர் மூலம் கடிதம் வந்தது. ந.மு.வே. வகுப்பில் பாடம் நடத்தித் தன் திறமையை வெளிப்படுத்தினார். பின்னர் உதவிப் பண்டிதர் பணியே காலியாக உள்ளதென்று கூறியதாலும் அவர்கள் குறிப்பிட்ட சம்பளத்தொகை மிகக் குறைவாக இருந்ததாலும் நாட்டார் அப்பணியை ஏற்காது திரும்பினார். ஏற்காத ஆசிரியர் பணியாக அது அமைந்தது.

திருச்சி எஸ்.பி.ஜி. கல்லூரிப்பணி

நாட்டார் பண்டிதத் தேர்வெழுதிய போது பால பண்டிதம், பண்டிதத் தேர்வுகளின் மேற்பார்வையாளராகத் திகழ்ந்த பிச்சை இபுராஹீம் புலவர் உடல்நலக் குறைவுற்றிருந்தார். அவர் தன் இடத்தில் அமர்ந்து பணிபுரியக்கூடிய தகுதியுடையவர் நாட்டார்தான் எனக்கூறித் தாம் பார்த்த தமிழாசிரியர் பணியில் நாட்டாரை அமர்த்தினார். 21-7-1908இல் பணியில் சேர்ந்த ந..மு.வே. பிச்சை இபுராஹீம் புலவர் மரணமுற்றதால் அப்பணியில் தொடர்ந்து நீடித்தார். எப்.ஏ, பி.பி.ஏ. வகுப்புகளுக்கு நாட்டார் வகுப்பு எடுத்தார் எனத் தெரிகிறது. கல்லூரித் தலைவர் 7.12.1908 இல் நாட்டாரைப் பணியிலிருந்து விலக்கினார். எஸ்.பி.ஜி. உயர்நிலைப்பள்ளிப் பண்டிதர் ஒருவருக்கு எஸ்.பி.ஜி. கல்லூரித்தமிழ்ப் பண்டிதர் பணியைத் தரவேண்டிய கடப்பாடு காரணமாகக் கல்லூரித்தலைவர் ரெவரண்டு ஏ.எப். கார்டினர் துரை இந்நடவடிக்கையை எடுத்ததாகத் தெரிகின்றது. உடன் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் நாட்டாருக்குத் தெரியாமலே நாட்டாரைப் பணியில் தொடர்ந்து நீட்டிப்புச் செய்யவேண்டும் என்று வற்புறுத்தி மனுச் செய்து கொண்டனர். நிலைமையை உணர்ந்த கல்லூரித் தலைவர் நாட்டாரை அழைத்து உயர்நிலைப் பள்ளிப் பண்டிதர் பணிக்கு விண்ணப்பிக்குமாறு கூற நாட்டார் விண்ணப்பிக்க விருப்பின்றி இருக்க அப்பணியிலும் வேறு ஒருவர் பணியமர்த்தம் செய்யப்பட்டார். எனவே பணியின்றி நடுக்காவேரி திரும்பினார் நாட்டார்.

கோயம்புத்தூரில் ஆற்றிய ஆசிரியர் பணி

ந.மு.வே. கோயம்புத்தூரிலுள்ள செயிண்ட் மைக்கேல் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணி ஒன்று உள்ளது என அறிந்தார். விண்ணப்பம் அனுப்பினார். முறைப்படி பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; பணியில் அமர்ந்து சிறப்பாகப் பணியாற்றினார். பள்ளித்தலைவர் அருட்தந்தை பவுலாஞ்சல், நாட்டாரிடம் மிக்க அன்பு பாராட்டுபவராக இருந்தார். ஆயின் முன்பு பணியாற்றிய எஸ்.பி.ஜி. கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் பணியில் சேரும் வாய்ப்பு வந்ததால் கோயம்புத்தூர் உயர்நிலைப் பள்ளிப் பணியை விட்டு விலக நேர்ந்தது.

எஸ்.பி.ஜி. கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் பணி

எஸ்.பி.ஜி. கல்லூரிக் காரியதரிசி அருளானந்தம், கணக்காசிரியர் எஸ்.ஜோசப் ஆகியோர் கல்லூரித் தலைவர் துரை அவர்களின் உடன்பாடு பெற்று நாட்டாருக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தனர். கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் பணியிலிருந்தவர் விலகுவதால் அப்பணியில் வந்து அமருமாறு கடிதம் கூறியது. நாட்டார் 15.1.1910 முதல் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் பணியேற்றார். ஆங்கில ஆசிரியர்கள் பெற்ற ஊதியம் போல் கொடுக்கப்படவில்லையெனினும் அக்காலத் தமிழாசிரியர்கள் பெற்றதை விடவும் கூடுதல் சம்பளம் நாட்டாருக்குக் கொடுக்கப் பட்டது என்பது தெரிகிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக அழைப்பு

எஸ்.பி.ஜி. கல்லூரியில் நாட்டார் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது 150-10-250 ஊதியத்தில் தமிழ்ச் சொற்பொழிவாளர் நியமன உத்தரவு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்தது. தாய், தந்தையரின் மூப்பு கருதியும் தொலைவு கருதியும் பணியை ஏற்க நாட்டார் தயங்கினார். இதே ஊதியத்தைத் தர எஸ்.பி.ஜி. கல்லூரி நிர்வாகம் இசைந்தால் கல்லூரியிலேயே பணியாற்ற விருப்பம் தெரிவித்த நாட்டாரின் விருப்பம் ஏற்கப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழக உத்தரவை ஏற்காது நாட்டார் திருச்சியிலேயே தங்கினார்.

திருச்சியில் நாட்டார் வதிந்த இல்லம்

திருச்சிக் கல்லூரிப் பணியின் போது நாட்டார் பல வாடகை வீடுகளில் தங்கி வசித்து வந்தார். பின்னர் மலைக்கோட்டைத் தெற்கு

வீதியில் தெற்குநோக்கிய சிறிய மனை ஒன்று வாங்கினார். சிரமப்பட்டு முயன்று சிறு வீடு கட்டினார். அவ்வில்லத்திற்குத் "திருநாவுக்கரசு தமிழகம்" எனப் பெயரிட்டு வசித்து வந்தார். அவ்வில்லத்தின் எதிர்ப்புறம் சைவ சித்தாந்த சபையும் தாயுமான சுவாமிகள் மடமும் இருந்தன எனத் தெரிகின்றது.

பெற்றோர் மறைவு

ந.மு.வே. தம் தாய், தந்தையாரைக் கண்போல் காப்பாற்றிப் போற்றி வந்தார் எனத் தெரிகின்றது. முதிய வயதில் அவர்களை அருகிலிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற காரணத்துக்காகவே அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணியையும் ந.மு.வே. மறுத்தார் எனத் தெரிகிறது. அது பெற்றோர் மீது அவர் வைத்திருந்த பேரன்பையும் பெருமதிப்பையும், பாசத்தையும் வெளிக்காட்டுவதாக உள்ளது.

> "மகன் தந்தைக்காற்று முதவி இவன்தந்தை
> எந்நோற்றான் கொல்லெனும் சொல்"

என்ற குறளுக்கு இலக்கணமாக ந.மு.வே. திகழ்ந்தமை தெரிகின்றது.

அன்னாரின் தந்தையார் வீ. முத்துச்சாமி நாட்டார் 15.6.1931இல் மறைந்தார். தாயார் தைலம்மாள் அடுத்த ஆண்டில் அதாவது 24.12.1932 இல் இறந்தார் எனத் தெரிய வருகின்றது.

பிஷப் ஹீபர் கல்லூரிப் (எஸ்.பி.ஜி.) பணி முடிவு

எஸ்.பி.ஜி. கல்லூரி பின்னாளில் பிஷப் ஹீபர் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்த புராட்டஸ்டெண்ட் ஆராய்ச்சிக்குழு பிஷப் ஹீபர் கல்லூரியை மூடிவிட்டுச் சென்னைத் கிறித்தவக் கல்லூரியை வலுப்படுத்தி வசதியான இடத்தில் அமைப்பது என முடிவு எடுத்தது. அதனால் 31.5.1933 இல் நாட்டாரின் கல்லூரி ஆசிரியர் பணி நிறைவு எய்தியது. திருச்சியில் டி.எம். நாராயணசாமிப் பிள்ளை தலைமையில் நாட்டாருக்குச் சிற்றுண்டி விருந்து நடத்தித் "திரிசிரபுரத்துத் தமிழ்ப் பண்டிதர்களும் அன்பர்களும் அளித்த அன்பின் பரிசு" எனப் பெயர் பொறித்த வெள்ளிக் கூசா பரிசளிக்கப் பெற்றது. நாட்டார் தம் இல்லம் திரும்பினார். கல்லூரியில் பணியாற்றியபோது அவர் எழுதிய ஆராய்ச்சி நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் வேங்கடம் முதல் குமரி வரையும் சென்று ஆற்றிய ஊதியங்கருதாச் சொற்பொழிவுகளும் பலப்பல.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் பணி

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து தமிழ்ச் சொற்பொழிவாளர் தேவை என்ற விளம்பரம் வந்தது. நாட்டார் அப்பணிக்கு விண்ணப்பித்தார். பல்கலைக் கழக நிறுவனர் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் நாட்டார் பணியில் சேரப் பெரு விருப்புடன் ஏற்பாடு செய்தார். 13.8.1933இல் பணியில் வந்து சேரக் கூறி உத்தரவு வந்தது. 16.8.1933இல் பணியில் சேர்ந்தார். தமிழ்ப் புலவர் வகுப்பு, இண்டர் மீடியட் பி.ஏ., தமிழ் ஆனர்ஸ் ஆகிய வகுப்புகளுக்கு ந.மு.வே. பாடம் எடுத்தார் எனத் தெரிகின்றது. 30.6.1940 வரையும் அதாவது தமது 56 வயது வரையும் பல்கலைக் கழகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். 22.7.1940 முதல் தஞ்சை நகரில் உறைவிடம் அமைத்து வாழ்ந்து வந்தார்.

கற்பிக்கும் திறனால் புகழ் பெற்றவர்

ந.மு.வே. யிடம் பயின்ற மாணாக்கர்கள் பலர் உயர் பதவிகள் வகிப்பவர்களாகத் திகழ்ந்தனர். அத்தகு மாணாக்கர்கள் தம் ஆசிரியப் பெருந்தகையின் கற்பிக்கும் திறன் பற்றிக் கூறியுள்ளனர்.

'நாட்டாரைய்யா அவர்கள் பாடம் நடத்தும் பொழுது ஊசி விழுந்தாலும் ஓசை கேட்கும். பாடல்களை அவர் இசையோடு பாடும் பொழுது பாடல்களின் அவலச்சுவை, பக்திச் சுவையால் அவர் விழிகளில் நீர் நிரம்பும். கேட்பவர்களும் அவ்வுணர்ச்சியை அடைவர். பாடல்களை அவ்வச் சந்தத்தில் பாடவல்லவர். அவர் பாடல்களைப் பதம் பிரித்துப் படிக்கும்பொழுதே பொருள் தெரிந்து விடும். செய்யுள் நயம் அவர்கூறும் நயத்தால் மேலும் நயம் பெறும். தமிழ் மொழியில் நீங்காத பற்றுண்டாக்கிய பெருமை அவரையே சாரும்' என்பது சான்றாகும்.

வகுப்பில் ஒன்பான் சுவைபடப் பாடம் எடுப்பதுடன் பெருந்தன்மை, பெரும்புலமை, வீண்பேச்சுப் பேசாமை, ஒழுக்கமுடைமை, தெய்வ பக்தி முதலிய நற்பண்புகளாலும் மாணவர்களுக்குச் சிறந்த முன் மாதிரியாக ந.மு.வே.விளங்கினார்.

தேர்வுக்குரிய பாடங்கள் மட்டுமல்லாது பிற பாடங்களையும் கற்குமாறு ஊக்கமூட்டுவார். மாணாக்கர் நலன் குறித்துக் கடவுளை வேண்டுதலும் செய்வார். நெடுங்காலம் கழித்தும் "யான் நாட்டாருடைய மாணாக்கன்" என்று சொல்வதில் மாணாக்கர் பெருமிதம் கொண்டனர்.

உடன் பணிபுரிந்த பேராசிரியர்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நாட்டாருடன் பணியாற்றிய தமிழ்ப்பேராசிரியப் பெருமக்கள்,

1. கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ., எம்.எல்
2. ச. சோமசுந்தர பாரதியார் எம்.ஏ., பி.எல்.
3. மகாவித்துவான் ரா. இராகவையங்கார்
4. ரா.பி. சேதுப்பிள்ளை பி.ஏ., பி.எல்.
5. பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்
6. சர்க்கரை இராமசாமிப் புலவர்

ஆகியோர் எனத் தெரிய வருகிறது.

கரந்தைப் புலவர் கல்லூரித் தலைமைப் பதவியேற்றல்

ந.மு.வே. தஞ்சையிலிருந்து கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த தமிழவேள் த.வே. உமா மகேசுவர பிள்ளை கேட்டுக் கொண்டதன் பேரில் அப்பொழுது தொடங்கப்பெற்ற கரந்தைப் புலவர் கல்லூரிக்கு ஊதியம் கருதாத் தலைவராக, (Honarary Principal) 2.7.1941 முதல் பணியாற்றினர் எனத் தெரியவருகின்றது. கல்லூரி மதிப்பியல் முதல்வராக இருந்து தொண்டாற்றியதால்தான் சென்னைப் பல்கலைக்கழகம் அக்கல்லூரிக்கு இசைவாணை வழங்கியது எனத் தெரிகிறது.

பல்கலைக் கழக உறுப்பினர் – தேர்வாளர்

1. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்க்குழு உறுப்பினராக ந.மு.வே. திகழ்ந்தார். இதன் மூலம் கல்லூரிப் பாடத்திட்டம் வகுத்தல், பாடநூல்கள் வைத்தல், வித்துவான் தேர்வுப் பாடத்திட்டம் அமைத்தல் ஆகிய பணிகளை நாட்டார் செய்து வந்தார் எனத் தெரிகிறது.

2. 1932 - 1934, 1942 - 1944 ஆகிய காலக்கட்டங்களில் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வாளராகத் திகழ்ந்தார்.

3. பல ஆண்டுகள் இப்பல்கலைக்கழகத்தின் இண்டர் மீடியட், பி.ஏ. தேர்வாளராகச் செயல்பட்டார்

4. ஆண்டுதோறும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வின் ஊதியமில்லாத் தேர்வாளராகத் திகழ்ந்தார். இத்தேர்விற்கு இலக்கியம், இலக்கணம், தருக்கம் தொடர்பான வினாத்தாள்களைத் தயாரித்தளித்தார்.

5. காசி இந்துப் பல்கலைக்கழகத்தின் தேர்வாளராக இருமுறை இருந்தார் என்றும் தெரிகின்றது.

தொடர்புடைய கழகங்களும் தமிழ்த் தொண்டும்

1. திருச்சித் தமிழ்ச் சங்கம்

தஞ்சையிலிருந்த கரந்தைத் தமிழ்ச் சங்கம் திருச்சியிலும் ஒரு கிளைச் சங்கத்தை மே, 1911 இல் தொடங்கியது. நாட்டார் இச் சங்க உறுப்பினராக இருந்து, சங்கம் மூலமாகச் சங்க உறுப்பினர் பலருக்கும் பாடம் நடத்தினார். குறள், புறம், பத்துப்பாட்டு, நன்னூல், தொல்காப்பியம் முதலியன பாடமாக நடத்தப்பட்டன. இராம நடேச பிள்ளை, ம. பெரியசாமிப்பிள்ளை, கூரத்தாழ்வார் முதலியார், என். துரைசாமிப்பிள்ளை, சுப்பராய முதலியார் முதலானவர்கள் பாடங்கேட்டவர்களுள் சிலராவர்.

சங்கத் தொடர்பின் பின்னர் வழக்கறிஞர், நிலக்கிழவர், கண்காணியார், பொறிவலாளர், ஆவணக்களரி, கல்லூரி, திருவாளர் போன்ற சொற்கள் நாட்டாரால் தமிழில் ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டன. திருமண அழைப்பு முதலாயின இவரால் நல்ல தமிழில் எழுதப்பட்டு வழக்கிற்குக் கொண்டு வரப்பட்டன.

2. திருச்சிராப்பள்ளி சைவ சித்தாந்த சபை

இச்சபை சரியாக நடைபெறாதிருந்தது. நாட்டாரின் திருச்சி வருகையின் பின்னர் இச்சபை சரியாக நடத்தப்பட்டது. நாட்டார் இச்சபையில் அடிக்கடிச் சொற்பொழிவுகள் நடத்தினார். பெரியபுராணம் போன்றவற்றைச் சபை உறுப்பினர்களுக்குப் பாடமாகவும் நடத்தினார்.

3. திருச்சிராப்பள்ளித் தமிழ்ப் பண்டிதர் மாநாடு

1923, 1924, 1925 ஆம் ஆண்டுகளில் மும்முறை தமிழ்ப் பண்டிதர் மாநாட்டை நாட்டார் நடத்தினார். 24.12.1940 இல் சென்னையில் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு நடத்தப்பட்டது. இப்பேரவையில் நாட்டாருக்கு "நாவலர்" என்ற பட்டம் வழங்கப் பட்டது. 1941, 1942 ஆம் ஆண்டுகளில் சங்க உதவித் தலைவராக இருந்த நாட்டார் 1943 இல் சங்கத் தலைவராக ஆனார்.

4. தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம்

1939 முதல் இக்கழக வெளியீடான 'செந்தமிழ்ச் செல்வி'யின் தலைவராக நாட்டார் திகழ்ந்தார் எனத் தெரிகின்றது. 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டுள்ளமை தெரிகின்றது.

5. சைவ சித்தாந்த மகாசமாஜம்

'சித்த்ாந்தம்' என்ற மாத இதழை இச் சமாஜம் வெளியிட்டது. இம் மாத இதழில் நாட்டார் சைவ சமயக் கட்டுரைகள் பலவற்றை எழுதினார். சமயச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார்.

தலைமை தாங்கிய கழகங்களில் சில

நாட்டார் தலைவராகத் திகழ்ந்த கழகங்களின் பெயர்கள் சில கீழே தரப்படுகின்றன.

1. திருநெல்வேலிச் சைவசித்தாந்த சங்கம்
2. சாத்தூர் தமிழ்ச் சங்கம்
3. குளித்தலைக் கம்பன் செந்தமிழ்ச் சங்கம்
4. கரந்தைத் தமிழ்ச் சங்கம்
5. திருச்சிராப்பள்ளி சைவ சித்தாந்த சபை
6. பூவாளூர்ச் சைவசிந்தாந்த சபை
7. பலவான்குடி மணிவாசக சங்கம்
8. மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை
9. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மாணவர் கழகம்
10. சைவ சிந்தாந்த மகா சமாஜம்
11. இளங்காடு மாணவர் செந்தமிழ்ச் சங்கம்
12. முருகன் செந்தமிழ்க் கழகம்
13. தென்காசி திருவள்ளுவர் கழகம்

நாட்டார் ஆற்றிய தமிழ்ப்பணி

பலன் கருதாப் பணிகள் பலவற்றைத் தமிழுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி நாட்டார் செய்து வந்தார்.

கல்லூரி மாணாக்கருக்கு ஆற்றிய தமிழ்ப்பணி

திருச்சியிலிருந்த மூன்று கல்லூரி மாணவர்களும் பயன் பெறுமாறு இவரும் சூசையப்பர் கல்லூரித் தமிழாசிரியர் அ. சிவப்பிரகாசம் பிள்ளையும் இணைந்து வாரத்தில் சில நாட்கள் ஒரு பொதுவிடத்தில் நன்னூல், திருக்குறள் போன்றவற்றைக் கற்பித்தனர். கி.ஆ.பெ. விசுவநாதம், திருப்பூர் வழக்கறிஞர் டி.ஆர். சுந்தரம் பிள்ளை ஆகியோர் கல்லூரி மாணாக்கருடன் பயின்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

தனித்தமிழ்க் கல்லூரி முயற்சி

நாட்டார் 1921இல் தனித்தமிழ்க் கல்லூரி நிறுவ முயற்சி செய்தார். அதற்காக வெளியிட்ட அறிக்கையின் சில கருத்துகள்: கல்விமுறை பிழைபாடுடையது. தாய்மொழியை விடுத்து வேற்று நாட்டு மொழியாற் கல்வி கற்கும் புதுமை இந்திய நாட்டில் மட்டுமே காணப்படுகிறது. மாணவர்களுக்கு இருக்க வேண்டிய நற்குண, நல்லொழுக்கம் அருகிவிட்டன. ஆசிரியர் - மாணவர் சம்பந்தம் உருக்குலைந்து விட்டது. நம் நாட்டுக் கல்விமுறையைத் திருத்துவது ஒவ்வொருவர் கடமையாகும்.

நாட்டார் 'திருவருட் கல்லூரி' நிறுவத் துணிந்து சில பகுதிகளில் கையொப்பமும் பெற்றார். பின்னர் வ.வே.சு. ஐயரின் 'குருகுலம்' கல்விச்சாலைக்கு ஏற்பட்ட தடையை நினைந்து முயற்சியைக் கைவிட்டார் எனத் தெரிய வருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக முயற்சி

தமிழர்களுக்குத் தனியே பல்கலைக்கழகம் தேவை என உணர்ந்து முயற்சி செய்தார். 23.8.1925 இல் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் பல்கலைக்கழகம் தொடங்கவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. 24.10.1925 இல் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் (Senate) கூட்டத்திலும் இது தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பின்னர் இராமநாதபுரம் இராமலிங்க சேதுபதி தலைமையில் குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. சர்.பி.டி. ராஜன் குழுச் செயலாளராக இருந்தார். குழு விடுத்த கேள்விகளுக்கெல்லாம் தக்க விடை நாட்டாரால் அளிக்கப்பட்டது. ஆயினும் மீனாட்சி தமிழ்க் கல்லூரியையும் மொழிப்பயிற்சிக் கல்லூரியையும் இணைத்துச் சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் அரசியலாரின் அனுமதி பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நிறுவியதால் தமிழ்மொழி, தமிழர் நாகரிக வளர்ச்சிக்கு அதுவே தக்கதாக அமையும் என்று கருதித் தமிழ்ப் பல்கலைக்கழக அமைப்பு முயற்சி கைவிடப்பட்டது.

ஆற்றிய சொற்பொழிவுகள்

'நாவலர்' என்ற பட்டத்துக்குத் தக நாட்டாரவர்கள் சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார் எனத் தெரிகிறது. தமிழ்நாட்டில் அவர் சொற்பொழிவாற்றிய இடங்கள் நூற்றுக்கணக்கானவை. கூறியன கூறாது இலக்கண வழுக்கள் இன்றி உயர்தனித் தமிழ் நடையில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்பவர்கள் அப்பொழிவைத் திருத்தமின்றி அப்படியே அச்சிட்டு விடலாம் என்று

கூறுவர். சொற்பொழிவு நிகழ்த்தும்போது நடத்தல், கையாட்டல், கனைத்தல், அசைதல் போன்ற வேண்டாச் செயல்களைச் செய்ய மாட்டார். பற்பல கழகங்களிலும் சொற்பொழிவாற்ற விரும்பி அழைப்பார்கள். நாட்டாரும் தம் உடல் உழைப்பு, நோய் என்ற எவற்றையும் கருதாது பல இடங்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றி வந்தார்.

நாவலர் சொற்பொழிவு எனக் கேள்வியுற்றால் தமிழன்பர்கள் தொலைதூரத்திலிருந்து நடந்தே வந்து சொற்பொழிவைச் செவிமடுத்துச் செல்வார்கள். தமிழ் இலக்கியப் பொருளை விரித்துக் கூறும் நயம் நினைந்து நினைந்து போற்றத்தக்கது. புதிய செய்தி இல்லாது, புதிய ஆய்வு இல்லாது நாவலரின் சொற்பொழிவு அமைவது இல்லை. பாமரர், பண்டிதர் என்ற இரு சாராரும் நெஞ்சங் கொள்ளுமாறு அமையும் நாவலரின் பேச்சாற்றல் அக்காலத்தில் பிரசித்தமானது.[7]

தொல்காப்பியம், யாப்பு போன்ற இலக்கணம், கலித்தொகை போன்ற சங்க இலக்கியம், வஞ்சி மாநகர் போன்ற இட ஆராய்ச்சி, இலக்கியத்தில் காணப்படும் இசைக்குறிப்புகள், ஒன்பான் சுவைகள், மனோன்மணீயம் போன்ற நாடக ஆராய்ச்சி, பிற்காலப் புலவர்களின் சொல்லாட்சி பற்றிய ஆராய்ச்சி என அவரது சொற்பொழிவுகள் பன்முகப்பட்டதாக அமைந்துள்ளன. பல்கலைக்கழகங்கள், மாநாடுகள், சபைகள் மற்றும் கொழும்பு போன்ற இடங்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றியுள்ளார். 1. சென்னைப் பல்கலைக்கழகம், 2. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 3. இலங்கை விவேகானந்தர் சங்கம், 4. திருப்பதி கீழ்க்கலை மாநாடு, 5. கலித்தொகை மாநாடு, 6. தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, 7. மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை, 8. ஞானியாரடிகள் மடம் 9. கரந்தைத் தமிழ்ச் சங்கம், 10. சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம் ஆகிய 10 இடங்களில் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றினார் எனத் தெரிகிறது.[8] திருச்சி வானொலியிலும் நான்கு ஆண்டுகள் தொடர்ந்து சொற்பொழிவாற்றினார். திருச்சி வானொலிச் சொற்பொழிவுகள் கட்டுரைகளாக இதழ்களிலும் வெளிவந்துள்ளன. இவர் ஆற்றிய சொற்பொழிவுகளும் வானொலிப் பேச்சுகளும் பின்னிணைப்பு 1-இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

---

7. தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள், குன்றக்குடி பெரிய பெருமாள், ப.397
8. கலைக் களஞ்சியம், தொகுதி 9, ப.512

எழுதிய ஆராய்ச்சி நூல்கள்

நாட்டார் மொத்தம் ஆறு ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளார். அக்காலக்கட்டத்தில் சிறந்த ஆய்வு நுல்களாக அவை பாராட்டப்பட்டன.

1. 1915 ஆம் ஆண்டு "**வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி**" என்ற நூலை எழுதி வெளியிட்டார். மு. இராகவையங்காரின் 'வேளிர் வரலாறு' என்ற நூல் இண்டர் மீடியட் வகுப்புப் பாடமாக வைக்கப் பட்டிருந்தது. அந்நூலின் முடிவுகள் தவறானவை என்று கருதி நாட்டார் வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி என்ற நூலை எழுதினார். நூற்பொருள் கரந்தைத் தமிழ்ச் சங்க மூன்றாம் ஆண்டு விழாவில் இவரால் சொற்பொழிவாகவும் நிகழ்த்தப்பட்டது. இவரது அறிவாராய்ச்சித் திறனை அனைவரும் பாராட்டினர்.

2. 1919 - "**நக்கீரர்**", 3. 1921 - "**கபிலர்**" என்ற இரு ஆராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டார். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள், காசி இந்துப் பல்கலைக்கழகங்களில் இவை பி.ஏ. வகுப்புப் பாடமாக வைக்கப்பட்டன.

4. 1923-ஆம் ஆண்டு "**கள்ளர் சரித்திரம்**" என்ற நூலை வெளியிட்டார். பண்டு உயர்நிலையிலிருந்து பின் கல்வி முதலியவற்றில் பின்தங்கி வந்த தம் மரபினர் பற்றிக் கூறுவதாக அந்நூல் அமைந்தது. அந்நூல் ஒரு மரபினர் குறித்தது எனினும் அனைவரும் அறிய வேண்டிய ஆராய்ச்சி நூலாக அது அமைந்திருந்தது.

5. 1926 ஆம் ஆண்டில் "**கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும்**" என்ற ஆராய்ச்சி நூலும்

6. 1928 ஆம்ஆண்டில் **சோழர் சரித்திரம்** என்ற நூலும் நாட்டாரால் எழுதி வெளியிடப்பட்டன.

எழுதிய ஆய்வுக் கட்டுரைகள்

நாட்டார் மொத்தம் 64 ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். ஆற்றிய வானொலிச் சொற்பொழிவுகளும் கட்டுரையாகியிருக்கின்றன. அந்தப் பதினொன்றையும் சேர்த்து 75 ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளமை தெரிகின்றது. அவற்றைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம்.

1. புலத்துறை முற்றிய சான்றோர் - 3
2. தலைமைப் பேருரைகள் - 6

3. வானொலிச் சொற்பொழிவுகளும்
கட்டுரைத் திரட்டும் (பல்பொருண்மை) - 15
4. இலக்கணம் - 14
5. இலக்கியமும் பண்பாடும் - 37

75
-----

75 ஆய்வுக் கட்டுரைகளும் 13 இதழ்களில் வெளியாகியுள்ளன. அவை: 1. செந்தமிழ் 2. தமிழ்ப் பொழில் 3. செந்தமிழ்ச் செல்வி 4. சித்தாந்தம் 5. தமிழர் 6. கலா சிந்தாமணி 7. விவேகோதயம் 8. பூரண சந்திரோதயம் 9. குமரன் 10. நச்சினார்க்கினியன் 11. தாய்நாடு 12. ஈழகேசரி 13. ஆனந்த போதினி. இவற்றுள் தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச் செல்வியிலேயே அதிகமான கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இதழ்களில் எழுதிய சமயம், இலக்கிய ஆராய்ச்சி பற்றிய கட்டுரைகள் சில கட்டுரைத்திரட்டு I, II என நூல்களாக வெளி வந்துள்ளன. பின்னிணைப்பு-2 காண்க[9]

ந.மு.வே. ஓர் உரையாசிரியர்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வேண்டுதலின்படி 1925இல் ஒன்பது நூற்களுக்கு உரை எழுதி முகவுரையுடன் வெளியிட்டார் எனத் தெரிகின்றது. அவையாவன: 1. இன்னா நாற்பது 2. களவழி நாற்பது 3. கார் நாற்பது 4. ஆத்தி சூடி 5.கொன்றைவேந்தன் 6. வெற்றி வேற்கை 7.மூதுரை 8. நல்வழி 9. நன்னெறி.

மேற்கூறிய கழக வேண்டுதலின் படி, 30.11.1925 இல் திருவிளையாடற்புராணத்துக்கு உரை எழுதினார். அ.மு. சரவண முதலியார் துணையுடன் இப்பணியைச் செய்ததாகத் தெரிகிறது. மற்றும் 13.9.1942 ஆம் ஆண்டு சிலப்பதிகாரத்துக்கு உரையும் இதே ஆண்டில் மணிமேகலையின் 26 காதைகளுக்கு உரையும் கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை துணையுடன் அகநானூற்றுக்கு உரையும் எழுதினார். பாகனேரி வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியாரின் வேண்டுகோளின்படி எழுதிய அவ்வுரைகள் பாகநேரித் தனவைசிய இளைஞர் சங்க வெளியீடாக அச்சிட்டு வெளியிடப்பட்டன. அகநானூறு மூன்று பாகங்களாக 1944-46 இல்

---

9. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக்கட்டுரைகள், நூலின் பின்னிணைப்பைப் பின்பற்றியது.

வெளியிடப்பட்டது என்று பதிப்பாண்டு வேறுபடவும் ஒரு கருத்து கூறப்படுகிறது.[10]

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வேண்டுதலின் படி மூன்று நூல்களுக்கு ந.மு.வே. உரைத்திருத்தம் செய்தார் எனத் தெரிகின்றது. 18.4.1925 இல் அகத்தியர் தேவாரத் திரட்டுக்கும் 4.9.1940 இல் தண்டியலங்காரத்துக்கும் உரைத்திருத்தம் செய்தார். கழக வெளியீட்டுக்காக 1940 இல் யாப்பருங்கலக்காரிகைக்கு உரைத்திருத்தம் செய்தளித்தார்.[11]

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை பதிப்பின் போது தம் ஆசிரியரும் திருவையாற்று அரசர் கல்லூரிப் பேராசிரியருமாகிய அரங்க வேங்கடசாமிப் பிள்ளை எழுதிய உரையொன்று கிடைத்ததென்றும் இவர் எழுதிய உரையை ந.மு.வேங்கசடாசாமி நாட்டார் பார்வையிட்டு ஊக்கப்படுத்தினார் என்றும் முன்னுரையில் உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.[12]

ந.மு.வே.யின் நாட்குறிப்பு எழுதும் பழக்கம்

நாட்டாரவர்கள் தவறாது நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை இறுதி வரை கடைப்பிடித்தவர் எனத் தெரிகின்றது. தமிழறிஞர்களும், ஆன்றோர்களும் இறந்த பொழுது நாட்குறிப்பில் இரங்கற் செய்திகளை எழுதி வைத்துள்ளமை மிக உருக்கமாக உள்ளது. 2.2.1942 அன்று ஞானியாரடிகள் மரணமுற்றபோதும் 30.4.1942 இல் உ.வே.சா. இறந்தபோதும் தம் நாட்குறிப்பில் இரங்கற் குறிப்புகளை எழுதி வைத்துள்ளார். மற்ற முக்கியச் செய்திகள் பலவற்றையும், அவர் மனம் தொட்ட நிகழ்ச்சிகளையும் குறித்துச் சென்றுள்ளார். 26.12.1941 அன்று கி.ஆ.பெ. விசுவநாதம் வீட்டில் தாம் உணவு உண்டதாகவும் உண்டபின் பத்தினி, குழந்தைகளுடன் தம் அடியில் பணிந்து வீழ்ந்து திருநீறு கேட்டதையும் வியந்து எழுதிவைத்துள்ளார். "தமிழ்ப் புலவர்களில் 'மகாமகோபாத்தியாயர்' 'டாக்டர்' என்ற இரு பட்டமும் பெற்றவர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களே" என்று 30.4.1944 அன்று நாட்குறிப்பாக எழுதி வைத்துள்ளார்.[13]

---

10. சுவடிக் கலை, புலவர் இரா. இளங்குமரன், பக்.267
11. மேற்படி, பக்.273
12. மேற்படி, பக்273
13. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், பக்.848

ந.மு.வே.யின் நண்பர் குழாம்

நாட்டார் மிகுநட்புக் கொண்டாடிய நட்டார்களாகப் பொ. பாண்டித்துரைத்தேவர், அரசஞ்சண்முகனார், ஐ. சாமிநாத முதலியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு.வி.க., ஞானியார் மாணவர் ம.ர. குமாரசுவாமி பிள்ளை, மறைமலையடிகள், மு. கதிரேசஞ் செட்டியார், டி.வி. சதாசிவப் பண்டாரத்தார், பண்டித அ. கந்தசாமிப்பிள்ளை ஆகியோர் அமைந்திருந்தனர்.

நாட்டாரின் மாணாக்கர்கள்

வீ. உலக ஊழியர் என்ற மாணவரைத் தம் இல்லத்திலேயே தங்க வைத்து உண்டி கொடுத்து ஆதரித்து வந்தார் எனத்தெரிகிறது. நாட்டாரது மாணாக்கருள் பொன்னம்மாள் பி.ஏ. டாக்டர் ஏ.சிதம்பரநாதன் செட்டியார், பூ. ஆலால சுந்தரம் செட்டியார், கோலாலம்பூர் தமிழ் நேசன் பத்திரிகை ஆசிரியர் கே. நரசிம்ம ஐயங்கார், கி.ஆ.பெ.விசுவநாதம், ம. பெரியசாமி பிள்ளை, சரவண ஆறுமுக முதலியார், எஸ்.ருத்ரபதி, அ.ச.ஞானசம்பந்தம், ந.ரா. முருகவேள், வ.சுப. மாணிக்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

நற்பண்புகள்

காய்தல், உவத்தல் இன்றி ஆய்ந்து உண்மை கூறுபவர், உண்மைக்கு மாறானதை நண்பர்கள், பெருமதிப்புடையார் கூறியும் ஏற்றுக் கொள்ளா இயல்பு, சைவசித்தாந்த நூற்களில் அழுத்தமான பயிற்சி, பெருமதிப்பு, சமயச் சார்பற்றவர், பிறப்பினால் உயர்வு, தாழ்வு கருதாதவர், செருக்கற்றவர், இனிமையாகக் கலந்து பழகும் மக்கட் பண்புடையார், அறம் செய்தலில் விருப்புடையவர், பயனில் சொல் பேசுதல், வீண் பொழுது போக்கல், பிறர் ஆக்கம் கண்டு பொறாமைப்படல் போன்ற தீய இயல்புகள் அணுக இடங்கொடாத பண்பாளராக ந.மு.வே. திகழ்ந்தார்.

இறைவனடி சேர்தல்

கரந்தைப் புலவர் கல்லூரித்தலைவராக நாட்டார் இருந்தபோது, குற்றேவல் புரிந்த மாணவர்களில் அரங்கநாதன் என்பவர் திருவாசகம் படிக்கப் படிக்க ந.மு.வே. கேட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று நாற்காலியிலிருந்து தலை துவண்டு தொங்கியது. மரணத்தின் பிடிக்கு அவர் ஆட்பட்டார். தன் அறுபதாவது வயதில் மணிவிழாக் கொண்டாட (8.5.1944) ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது 28.3.1944 அன்று காலை 9 மணியளவில்

அவர் உயிர் பிரிந்தது. நடுக்காவேரி கொண்டு சென்று அடக்கம் செய்தனர்.

கல்லறையில் தமிழ்ப் பொழில் ஆசிரியர் கே.சி.பெரிய சாமிப்புலவர் ஆற்றிய சொற்பொழிவு குறிப்பிடத்தகுந்ததாக அமைந்தது. 'கரந்தையில் டி.எம். நாராயணசாமிப் பிள்ளை தலைமையிலும் சென்னை கோகலே ஹாலில் ரா.பி. சேதுப்பிள்ளை தலைமையிலுமாகத் தமிழகமெங்கிலும் ஒரு நூறு இரங்கற் கூட்டங்கள் நிகழ்ந்தன.[14] ரூ.2000 பொருட்செலவில் நாட்டாருக்குக் கற்கோயில் ஒன்று எடுக்கப்பட்டது. 40ஆவது நாள் மண்டலபூஜையும் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் நாட்டில் தமிழ்ப்புலவர் ஒருவருக்காக முதன்முதல் எழுப்பப்பட்ட கற்கோயில் இது ஒன்றே. "ந.மு.வே. நாட்டார் கோயில்" என இன்றும் இது அழைக்கப்படுகின்றது. கோயில் பொறுப்பாளர் நாட்டாருடைய மகனார் வே. நடராசன். இன்றும் ஆண்டுதோறும் குருபூசை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ந.மு.வே. நாட்டார் பேரவை

ந.மு.வே. மறைவுக்குப்பின் தோற்றுவிக்கப்பட்ட 'ந.மு.வே. நாட்டார் பேரவை' அரிய தமிழ்ப்பணியாற்றி வந்தது. அறிஞர் பெருமக்களை அழைத்துச் சொற்பொழிவுகளை நடத்தியது. உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளின் சொற்பொழிவுப் போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்தது. தமிழ்நாட்டுத் தமிழ்க்கல்லூரிகளின் புலவர் மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கியது. தற்போது அப்பேரவை செயல்படாமல் உள்ளதெனத் தெரிகிறது.[15]

ந.மு.வேங்கடசாமி நாட்டார் கல்வி அறப்பணிக்கழகம்

தஞ்சையிலுள்ள இந்த அமைப்பு தமிழ்ப்பணிகள் பலவற்றைச் செய்து வருகின்றது. இக்கழகம் மூலமாக 1944 ஆம் ஆண்டு நாவலரின் 75 ஆய்வுக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 'நாட்டார் பதிப்பகம்' என்ற ஒன்று 1956இல் சென்னையில் இயங்கிவந்தது தெரிகிறது. ந.மு.வே.யின் மகனார் வே. நடராசன் அவர்களால் அப்பதிப்பகம் நடத்தப்பட்டது. தற்பொழுது அது இயங்கவில்லை என்று தெரிகிறது.[16]

---

14. தமிழ் இலக்கிய வரலாறு, மது.ச. விமலானந்தம், பக்733-734
15. மது.ச.விமலானந்தம் அவர்களை அணுகிக் கேட்டறிந்த கருத்து.
16. மது.ச. விமலானந்தம் அவர்களை அணுகிக் கேட்டறிந்த கருத்து.

நூற்றாண்டு விழா

ந.மு.வே. அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தஞ்சையில் தமிழ்நாடு அரசு 21.4.1984, 22.4.1984 ஆகிய இருநாட்களிலும் கொண்டாடியது.[17]

ந.மு.வே. நூல்களை ஆய்ந்து எம்.பில். பட்டம் பெற்றவர்கள்

ந.மு.வே.யின் 'சிலப்பதிகார உரைத்திறன்' பற்றி கோ. ஜெயமணி, 'அகநானூறு உரைத்திறன்' பற்றி புதுகைக் கல்லூரி பாலசுப்பிரமணியம், 'மணிமேகலை உரைவளம்' பற்றி பூண்டிக் கல்லூரி மனோகர் ஆகியோர் எம்.பில். பட்ட ஆய்வு செய்துள்ளனர். 'சிலப்பதிகாரத்தில் வேங்கடசாமி நாட்டாரின் உரைத்திறன்' பற்றி கு. வள்ளி நாயகம் மதுரைக்காமராசர் பல்கலைக் கழகத்தில் எம்.பில். பட்டத்துக்கு ஆய்வு செய்துள்ளார்.

முடிவுரை

ந.மு.வே. வாழ்க்கை வரலாறு தமிழுலகம் அறிந்து கொள்ள வேண்டிய வரலாற்றுச் சித்திரம். அவர் வாழ்ந்த வாழ்க்கையே தமிழாயிருந்தது. தமிழ் அவராயிருந்தது. ஆர்வமுடன் முயன்று, ஆசிரியரின்றிக் கற்று அறிஞராக ஆனவர் ந.மு.வே. இயல்பிலேயே அவருக்கிருந்த தமிழுணர்வால், தமிழறிவால் அது சாத்தியமானது. அவருடைய வாழ்க்கை வரலாறு ஒவ்வொருவரும் தம்மைத் தமிழறிஞராக உயர்த்திக் கொள்ள உதவும் ஊன்றுகோலாகும். தமிழெனும் சுடருக்கு ந.மு.வே. எண்ணெயாகப் பயன்பட்டு ஒளியூட்டியுள்ளதை அவர் வாழ்க்கை வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

---

17. தமிழ் இலக்கிய வரலாறு, பக்.733-734

பின்னிணைப்பு – 1

ஆற்றிய சொற்பொழிவுப் பட்டியல்

எண்	நாள்	தலைப்பு	இடம்	குறிப்பு
1	11.2.1930	தொல்காப்பிய ஆராய்ச்சி (பொதுத் தலைப்பு) நூலாசிரியர் வரலாறு	சென்னைப் பல்கலைக்கழகம்	அறிஞர் பாராட்டல்
2.	12.2.1930	எழுத்தாராய்ச்சியும் சொல்லாராய்ச்சியும்	”	”
3.	13.2.1930	தமிழ்ச் செய்யுட்களும் நூல்களும்	”	”
4.	14.2.1930	பொருளாராய்ச்சி (மண முறைகள்)	”	”
5.	மார்ச், 1939	பல சொற்பொழிவுகள்	கொழும்பு விவேகானந்தர் சபை	கொழும்பு அன்பர் அழைப்பால் அசஞா.வுடன் செல்லுதல்
6.	9.3.1940	கலித்தொகை பற்றிய அரிய சொற்பொழிவு	சென்னை மாநாடு	மாநாட்டின் தலைமைச் சொற்பொழிவு
7.	21.3.1940	வஞ்சிமாநகர் (ஆராய்ச்சிச் சொற்போர்)	அனைத்திந்திய பத்தாவது கீழ்த்திசை மாநாடு, திருப்பதி	– – –
8.	22.3.1940	”	”	

திருச்சி வானொலிப் பேச்சுகள்

எண்	நாள்	தலைப்பு
9.	21.6.1939	தமிழிலக்கியங்களில் காணப்படும் இசைப்பகுதிகள்
10.	29.10.1939	வீரச்சுவை
11.	1.12.1939	அவலச்சுவை
12.	16.12.1939	இன்பச்சுவை
13.	7.4.1940	நகைச்சுவை
14.	12.6.1940	பிற்காலப் புலவர்களின் சுடுசொல் ஆட்சி
15.	23.11.1940	யாப்பியல் அமையாச் செய்யுள்
16.	30.5.1941	தாய்மொழி
17.	10.10.1941	இளங்கோவடிகளும் இயற்கைப்புனைவும்
18.	21.8.1942	கலித்தொகை
19.	29.1.1943	மனோன்மணீயம்

பின்னிணைப்பு – 2

ஆய்வுக் கட்டுரைகள் அட்டவணை

அ. புலத்துறை முற்றிய சான்றோர்

எண்	கட்டுரை	இதழ்	தொகுதி	ஆண்டு
1.	அகத்தியர் வரலாறு	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 1	1923 சனவரி முதல் 1924 மார்ச்சு வரை
2.	பொய்கையார்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 2	1924 சூன் முதல் நவம்பர் வரை
3.	ஆளுடைய பிள்ளையார்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 4	1926 அக்டோபர் முதல் 1927 சனவரி வரை

ஆ. தலைமைப் பேருரை

எண்	கட்டுரை	இதழ்	தொகுதி	இதழ்	பக்கங்கள்	ஆண்டு
1.	கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் 21ஆம் ஆண்டு விழா	தமிழ்ப் பொழில்	துணர் 8	மலர் 3	81-99	1932-33
2.	துறையூர், தமிழ்ப் புலவர் மாநாட்டு வரவேற்புரை	தமிழ்ப் பொழில்	துணர் 8	மலர் 4	142-154	1932-33
3.	தஞ்சையில் நடைபெற்ற சைவர் மாநாடு சமயமும் தத்துவமும்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு12	பரல் 6	250-254	1932-34
				பரல் 7	300-304	
				பரல் 8	347-350	

4.	குழித்தலை, கம்பர் செந்தமிழ்ச் சங்கத்தின் 11ஆம் ஆண்டுவிழா	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு14	பரல் 9	417-422	1935-36
5.	தென்காசி திருவள்ளுவர் கழகத்தின் 12ஆம் ஆண்டு விழா	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு17	பரல் 3	113-119	1939-40
6.	சொல்லின் செல்வர்	தமிழ்ப் பொழில்	துணர்15	மலர் 7	255-258	1939-40
	சொல்லின் செல்வர்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 20	பரல் 4	121-124	1943

இ. வானொலிச் சொற்பொழிவுகளும் கட்டுரைத் திரட்டும்

எண்	கட்டுரை	இதழ்	தொகுதி	இதழ்	பக்கங்கள்	ஆண்டு
1.	முடங்கல்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 3	பரல் 9	401-405	1925-26
				பரல் 10	433-436	
2.	கல்வி	தமிழ்ப் பொழில்	துணர் 2	மலர் 9	459-470	1926-27
			துணர் 2	மலர் 10		1927-28
3.	வள்ளுவர் வாய்மொழி	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 5	பரல் 2	82-90	1939-40
4.	சுந்தரர் செந்தமிழ்	தமிழ்ப் பொழில்	துணர் 15	மலர் 12	453-459	1939-40
5.	அறிவுடை நம்பி	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 17	பரல் 1	3-7	1939-40

6.	*தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இசைப்பகுதிகள்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 17	பரல் 4	169-173	1939-40
	*தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இசைப்பகுதிகள்	தமிழ்ப் பொழில்	துணர் 15	மலர் 3	101-108	1939-40
7.	உக்கிரப் பெருவழுதி	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 17	பரல் 8	369-378	1939-40
8.	*சோக ரஸம் (அவலச் சுவை)	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 17	பரல் 9	437-442	1939-40
9.	*சிருங்கார ரஸம் (இன்பச் சுவை)	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 17	பரல் 10	465-470	1940-41
	*சிருங்கார ரஸம் (இன்பச் சுவை)	தமிழ்ப் பொழில்	துணர் 16	மலர் 4	151-157	1940-41
10.	*வீரச் சுவை	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 18	பரல் 1	20-27	1941-42
11.	*நமது தாய்மொழி	தமிழ்ப் பொழில்	துணர் 17	மலர் 4	80-84	1942-43
	*நமது தாய்மொழி	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 20	பரல் 10	365-372	1942-43
12.	*கலித்தொகை	தமிழ்ப் பொழில்	துணர் 18	மலர் 7	213-219	1942-43
13.	*மனோன்மணீயம்	தமிழ்ப் பொழில்	துணர் 18	மலர் 12	403-408	1942-43
14.	பசிப்பிணி மருத்துவன்					
15.	*பதிற்றுப் பத்து	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 21	பரல் 1	11-16	1943-44

குறிப்பு : 1,2,3,4,5,14 எண்ணுள்ளவை இதழ்களில் வெளிவந்தவை

* கட்டுரைகள் வானொலியில் பேசியவை.

ஈ. இலக்கணம்

எண்	கட்டுரை	இதழ்	தொகுதி	இதழ்	பக்கங்கள்	ஆண்டு
1.	இளம்பூரணம்	செந்தமிழ்	12	2	65-66	1913டிசம்பர் - 1914 சனவரி
2.	உவம விளக்கம்	செந்தமிழ்	12	9	336-343	1914 சூலை - ஆகஸ்ட்
3.	யாப்பருங்கல நூலாசிரியர் பெயர்	செந்தமிழ்	17	11		1920
4.	இலக்கண விளக்க உரையாளர் யார்?	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 2	பரல் 3	141-	1924 மார்ச்சு - ஏப்ரல்
				பரல் 4	171-	1924 ஏப்ரல் - மே
5.	இலக்கண விளக்க உரையாளர்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 2	பரல் 2	297-	1924 சூலை - ஆகஸ்டு
6.	மயக்க மறுப்பின் மேற் குறிப்பு	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 2	பரல் 9	12-15	1925-26
7.	தொல்காப்பியம்	தமிழ்ப் பொழில்	துணர் 1	மலர் 1	12-15	1925-26
8.	தமிழ் எழுத்துக்கள்	தமிழ்ப் பொழில்	துணர் 1	மலர் 4	131-135	1925-26
				மலர் 6	211-215	1925-26
9.	பெரிய புராணம் பொருளிலக்கணம்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 3	பரல் 6	262-265	1925-26
10.	தமிழின் சிறப்பியல்பு	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 5	பரல் 6	272-274	1927-28
			சிலம்பு 6	பரல் 3	141-147	1928-29
11.	திணை மயக்கம்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 5	பரல் 8	457-461	1927-28
12.	தொல்காப்பியர் கல்விப் பெருமையும் நூலமைப்புத் திறனும்	தமிழ்ப் பொழில்	துணர் 6	மலர்11,12	450-456	1930-31

13.	இளங்கோவடிகளும் பொருளிலக்கணமும்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 8	பரல் 10	605-610	1930 அக் - நவம்
14.	யாப்பியல் அமையாச் செய்யுள்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 18	பரல் 8	360-363	1940-41

உ. இலக்கியமும் பண்பாடும்

எண்	கட்டுரை	இதழ்	தொகுதி	இதழ்	ஆண்டு
1.	சீவான்மா	செந்தமிழ்	9	9	
2.	திருவள்ளுவரும் சமரச சன்மார்க்கமும்	செந்தமிழ்	10	11	பரிதாபி - புரட்டாசி
3.	புறநிலை வாழ்த்து	செந்தமிழ்	12	1	1913 நவம்பர் - டிசம்பர்
4.	மேற்கோள் விளக்கம்	செந்தமிழ்	12	9	1914 சூலை - ஆகஸ்ட்
5.	உரை நுட்பம்	செந்தமிழ்	16	2	1918 டிசம்பர் - சனவரி
6.	ஒரு குறட்பா	தமிழ்ப் பொழில்	துணர் 1	மலர் 11,12	1925-1926
7.	வள்ளுவர் கலித்துறை	தமிழ்ப் பொழில்	துணர் 1	மலர் 11,12	1925-1926
8.	கோயில்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 3	பரல் 8	1925 ஆகஸ்ட் - செப்டம்பர்
9.	சேக்கிழார் செய்யுள்மாட்சி	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 3	பரல் 1	1925 சனவரி - பிப்ரவரி
10.	தெய்வமணக்கும் செய்யுளெலாம்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 3	பரல் 4	1925 ஏப்ரல் - மே
11.	திருவிழா	தமிழ்ப் பொழில்	துணர் 2	மலர் 9,12	1926-27
12.	சிந்தாமணியின் நந்தாவொளிகள்	தமிழ்ப் பொழில்	துணர் 3	மலர் 1	1927-28

13.	பரஞ்சோதி முனிவரும் திருவிளையாடலும்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 5	பரல் 1	1927-28
14.	ஐயவினாவுக்கு விடை	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 5	பரல் 1	1927-28
15.	அளவைகள்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 5	பரல் 10	1927-28
16.	புறநானூற்றின் ஆராய்ச்சி	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 5	பரல் 11	1927-28
17.	குறிஞ்சிப் பாட்டின் உள்ளுறை	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 5	பரல் 12	1927-28
18.	பதிற்றுப்பத்து மூலமும் உரையும்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 6	பரல் 10	1928 அக்டோபர் - நவம்பர்
	”	”	”	பரல் 11	1928 நவம்பர் - டிசம்பர்
19.	மார்க்கண்டேயர் அல்லது முயற்சியின் வெற்றி	தமிழ்ப் பொழில்	துணர் 4	மலர் 1,2	1928-29
20.	சாத்தனார் பாத்திறல்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 6	பரல் 12	1928 டிசம்பர் 1929 சனவரி
			சிலம்பு 7	பரல் 2	1929
21.	பண்டைத் தமிழ்ச் சான்றோரின் வான நூற் புலமை	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 6	பரல் 7	1928 சூலை - ஆகஸ்ட்
				பரல் 8	1928 ஆகஸ்ட் - செப்டம்பர்
22.	இளங்கிளை	தமிழ்ப் பொழில்	துணர் 5	மலர் 4	1929-30
23.	சங்க நூல்களும் சைவமும்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 7	பரல் 5	1929 மே - சூன்
24.	புறநானூற்றில் கண்ட சில பழைய வழக்குகளும் வரலாறுகளும்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 8	பரல் 1	1930 சனவரி - பிப்ரவரி
25.	பரணிப் பெயர்க் காரணம்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 11	பரல் 6	

26.	ஆசிரியரும் மாணாக்கரும்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 11	பரல் 5	
27.	இந்தியை இந்தியாவுக்குப் பொது மொழியாக்குதல் பொருந்தாது	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 15	பரல் 12	
28.	வே.வே.ரெட்டியாரவர்கள் ஆராய்ச்சியின் செப்பமுடைமை	தமிழ்ப் பொழில்	துணர் 14	மலர் 1	1938-39
29.	தமிழ்நாட்டின் திருமடங்களும் திருஞானியார் திருமடமும்	தமிழ்ப் பொழில்	துணர் 15	மலர் 11	1939-40
30.	தமிழவேள் தனிமாண்பு	துன்பமாலை			
31.	தமிழில் கலைச் சொற்கள்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 19	பரல் 5	1941-1942 ஆவணி
32.	தொண்டைமான் இளந்திரையன்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 20	பரல் 1	1942-43
33.	சமய அணிகலன்	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 20	பரல் 8	1942 ஆனி
34.	பிற்காலப் புலவர்களின் 'சுடுசொல்' ஆட்சி	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 20	பரல் 9	1943 ஆடி
35.	இளவேனியிற் கவியின்பம்				
36.	கம்பர் காட்டும் ஒழுக்க நெறிகளில் சில				
37.	பரிமேலழகர்				
38.	கணம் புல்ல நாயனாரது திருப்பதி	செந்தமிழ்ச் செல்வி	சிலம்பு 21	பரல் 6	

உதவிய நூல்கள்

முதன்மை நூல்

1. தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர் (ந.மு.வேங்கடசாமி நாட்டார்) வே. நடராசன், நாட்டார் பதிப்பகம், சென்னை - 14, 1956

துணை நூல்கள்

1. தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், தொகுதி 2, மது.ச. விமலானந்தம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை - 5, 1987
2. சோழநாட்டுப் புலவர்கள், சு.அ. இராசாமிப் புலவர், கழக வெளியீடு, சென்னை - 1, 1978
3. தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள், குன்றக்குடி பெரிய பெருமாள், காமதேனு வெளியீடு, சென்னை - 33, 1996
4. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக் கட்டுரைகள், பதிப்பாசிரியர் பேராசிரியர் பி. விருத்தாசலம், தலைவர், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் கல்வி அறப் பணிக்கழகம், தஞ்சாவூர் - 7, 1944
5. அச்சும் பதிப்பும், மா. சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை -1, 1980
6. சுவடிக்கலை, புலவர் இரா. இளங்குமரன், பொன்முடி அச்சகம், சேலம், 1991
7. கலைக் களஞ்சியம், தொகுதி 9, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1963

ஆய்வேடு

சிலப்பதிகாரத்தில் வேங்கடசாமி நாட்டாரின் உரைத்திறன், கு. வள்ளி நாயகம், மதுரைகாமராசர் பல்கலைக்கழகம், எம்.பில்., பட்ட ஆய்வேடு, 1985

*****

பின்னிணைப்பு - 3

"ந.மு. வேங்கடசாமி நாட்டார்; இந்திராணி அம்மாள்"


1939ல் எடுத்த படம்




பொற்பதக்கம்



தங்கத்தோடா



'நாவலர்' பட்டம்


சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்
(திருநெல்வேலி)
முத்துசாமி நாட்டார் திருமகனார்
பண்டித வேங்கடசாமி நாட்டாரவர்களுக்கு
"நாவலர்"

நாட்டார் கோயில்



நன்றி

* படங்கள் அனைத்தும் 'தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியர்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

பதிப்புத் திறன்

மோ.கோ. கோவை மணி

பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழாசிரியராகப் பணியாற்றிப் பல நூறு மாணவர்களுக்குக் குருவாகத் திகழ்ந்தவர் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார். அறுபது ஆண்டுகளே (கி.பி.1884-1944) தமிழுலகில் வாழ்ந்தாலும் தமிழுலகம் உள்ள வரை நிலைபெற்று வாழும் சிறப்பினைப் பெற்றவர். தமிழாசிரியராகவும் வரலாற்றாசிரியராகவும் ஆராய்ச்சியாளராகவும் உரையாசிரியராகவும் தமிழுலகில் வீறுநடை போட்டவர் கவிஞராகவும் திகழ்ந்திருக்கின்றார் என்பது அதிகம் அறியப்பெறாத ஒரு செய்தியாகும்.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்கிக் கீழ்க்கணக்கில் நானாற்பதில் கார் நாற்பது (1923), களவழி நாற்பது (1924) என்பனவற்றிற்கும்; பிற்கால நீதி நூல்களில் ஆத்திசூடி (1950), கொன்றைவேந்தன் (1949), வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி (1950), நன்னெறி (1952) என்பனவற்றிற்கும்; திருவிளையாடற்புராணம் (மதுரைக்காண்டம்-1927, கூடற்காண்டம் 1928, திருவாலவாய்க்காண்டம் - (1931), சிலப்பதிகாரம் (1942), அகநானூறு (களிற்றியானைநிரை - 1943, மணிமிடைபவளம் - 1944, நித்திலக்கோவை - 1944), மணிமேகலை (1946) என்பனவற்றிற்கும் நாட்டார் உரைவரைந்திருக்கின்றார்.

நாட்டாரின் உரைப்பதிப்புகள்

- சங்க இலக்கியம்
  - அகநானூறு
- கீழ்க்கணக்குகள்
  - கார் நாற்பது
  - களவழி நாற்பது
- காப்பியங்கள்
  - சிலப்பதிகாரம்
  - மணிமேகலை
- புராணம்
  - திருவிளையாடற் -புராணம்
- நீதிநூல்கள்
  - ஆத்திசூடி
  - கொன்றை வேந்தன்
  - உலகநீதி
  - நறுந்தொகை
  - மூதுரை
  - நல்வழி
  - நன்னெறி

இவ்வுரைப் பதிப்புகளில் நாட்டார் எவ்வாறு வெளிப்படுகின்றார் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.

அ. நாட்டாரின் பதிப்பு நிலை

சுவடியிலுள்ளவற்றை இன்றைய காகிதத்தில் அச்சினால் பதிப்பிக்கப்பெற்றதைப் பழைய பதிப்பு, திருத்தப் பதிப்பு, ஆராய்ச்சிப் பதிப்பு என மூன்று வகைகளாகப் பாகுபடுத்தலாம்.

பல சுவடிகளை ஆய்ந்து, சிறந்த பாடத்தைத் தேர்ந்து சந்திகளைப் பிரிப்பதும், தெளிவுரை, குறிப்புரை, கருத்துரை, பதவுரை, விரிவுரை போன்ற அமைப்புகளுடன் நூலின் முழுத் தன்மையையும் ஆய்ந்து நூலில் காணப்படும் சிறப்புச் செய்திகள், நூலாசிரியர், உரையாசிரியர், பாட்டுடைத் தலைவர் ஆகியோர் வரலாறுகள், பாட்டு முதற்குறிப்பு அகரநிரல், அருஞ்சொற்பொருள் அகரநிரல், பதிப்பு வரலாறு போன்ற அமைப்புகளுடைய பதிப்பை 'ஆராய்ச்சிப் பதிப்பு' எனலாம். இம்மூன்று வகைகளில் நாட்டாரின் பதிப்புகள் அனைத்தும் மூன்றாவது வகையைச் சேர்ந்தவையாகத் திகழ்கின்றன. இவரின் பதிப்புகளை 'உரைப்பதிப்புகள்' என்றும் கூறுவர்.

ஆ. உரைப்பதிப்பின் தேவை

நாட்டார் தம்முடைய உரைப்பதிப்புகளுக்குச் (களவழி நாற்பது தவிர) சுவடிகளை ஆதாரமாகக் கொள்ளாமல் தமக்கு முன்னர் வெளியிட்ட அச்சுப் புத்தகங்களையே கொண்டிருக்கின்றார். இப்புத்தகங்களில் பதிப்பாசிரியர்கள், உரையாசிரியர்கள் கொண்ட பாடமும் திருத்தமும் பிழைபட இருப்பதைக் கண்டவர், அப்பதிப்பு களுக்கெல்லாம் ஒரு திருத்தமான ஆராய்ச்சிப் பதிப்பு, மக்களுக்குத் தேவைப்படும் நிலையில் அமையக் கூடிய உரைப்பதிப்பின் தேவையை உணர்கின்றார். இதன் பயனாகத்தான் இவரின் உரைப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

நாட்டாரது உரைப்பதிப்பில் முன் வரைந்த உரையாசிரியர்கள் எவ்வெவ்விடங்களில் ஒன்றுபடுகின்றனர், எவ்வெவ்விடங்களில் வேறுபடுகின்றனர் என்பதை எடுத்துக்காட்டி வேறுபடும் இடங்களில் இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று நூலாசிரியரின் பாடத்தை நிலை நிறுத்தவும் செய்திருக்கின்றார்.

சிலப்பதிகாரத்திற்கு உ.வே. சாமிநாதையர் 1892, 1920, 1927 ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் திருத்தப் பதிப்புகளைக் கொடுத்துள்ளார். மூன்றாவது பதிப்பு குறித்து அவர், "இதன் இரண்டாம் பதிப்பு 1920 ஆம் வருடத்தில் வெளியாயிற்று.

அதன்பின்பு செய்துவந்த ஆராய்ச்சியால் இதன் மூலமும் உரை முதலியனவும் சில திருத்தங்களைப் பெற்றுள்ளன". (சிலப்பதிகாரம், மூன்றாம்பதிப்பின் முகவுரை, ப,8) என்பதைக் காணும்போது ஒரு பதிப்பாசிரியரே ஒரு நூலுக்கு மூன்று பதிப்புகளைக் கொணர்ந்து திருத்தப்பாடங் கொண்டமை புலப்படுகின்றது. ஐயர் பதிப்பில் பாடங்கள் தெளிவடைந்து இருக்கும் என்று விட்டுவிடாமல் அவர் பதிப்புகளையும் அவருக்கு முந்திய பதிப்புகளையும் ஆய்ந்து நாட்டார் உ.வே.சா. பதிப்பிற்குப் பிறகும் திருத்தப் பதிப்பு ஒன்று வேண்டுவதன் அவசியத்தை உணர்த்துகின்றார். இதனை நாட்டார், "இந்நூலின் (சிலப்பதிகாரம்) மூலமும் உரைகளும் ஐயரவர்களால் பதிப்புத் தோறும் திருத்தம் பெற்றுள்ளவேனும், அவை பின்னும், திருத்தவேண்டிய நிலையில் இருந்தன" என்றவர், தாம் எழுதிய சிலப்பதிகார உரையில் தாம் மேற்கொண்ட நிலையினைப் பின்வருமாறு விளக்கிக் கூறுகின்றார்.

"இவ்வுரையின்கண், மூலத்தின் இன்ன பகுதிக்கு இது பொருள் என்று தேடி இடர்ப்படாவண்ணம் சொற்களைக் கிடந்தவாறே கொண்டுகூட்டின்றித் தனி மொழியாகவும் தொடர் மொழியாகவும் ஏற்ற பெற்றி எடுத்தமைத்துப் பொருள் கூறப் பெற்றுளது; அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் வேறுபடக் கொண்ட பாடங்களையும் பொருள்களையும் சீர்தூக்கிப் பார்த்து ஏற்பன கொள்ளப்பெற்றுள; ஒரோ வழி அவ்வேறு பாடுகளையும், உரையின் சிறந்த பகுதிகளையும் எடுத்துக் காட்டுதலும், பொருந்தாதனவெனத் தோன்றியவைகளைக் காரணங் காட்டி மறுத்தலும் செய்யப்பெற்றுள; அவ்வுரைகளால் விளக்கம்பெறாதன விளக்கவும் பெற்றுள; இன்றியமையாத இலக்கணங்களும் மேற்கோள்களும் ஆண்டாண்டுக் காட்டப் பெற்றுள" (சிலப். முகவுரை) என்கிறார்.

"உழைமுத லாகவும் உழையீ றாகவும்
குரல்முத லாகவுங் குரலீ றாகவும்
அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியல் மருதமும் பெருகியல் மருதமும்
நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி" (சிலப்.8:37–41)

என்னும் சிலப்பதிகார வரிகளுக்கு நாட்டார் தரும் விளக்கம் உரைப்பதிப்பின் தேவையை உணர்த்துகின்றது.

1. அகநானூறு

ஐந்து திணைக்குரிய ஒழுக்கங்களை 400 பாடல்களால் பாடப்பெற்றது அகநானூறு. இதுவொரு தொகுப்பு நூலாகும்.

இதனை 142 புலவர்கள் பாடியிருக்கின்றனர். இந்நூலின் முதல் அச்சுப்பதிப்பு 1920 ஆம் ஆண்டு இரா. இராகவையங்கார் அவர்களால் வெளியிடப்பெற்றுள்ளது. இதன் மறுபதிப்புகள் 1923, 1935ஆம் ஆண்டுகளில் முறையே வெளிவந்துள்ளன. அதன்பிறகு 1926 ஆம் ஆண்டு கோபாலையங்கார் களிற்றியானை நிரையை மட்டும் வெளியிட்டுள்ளார். இவ்விரு பதிப்புகளைக் கொண்டு நாட்டார் தம்முடைய சொற்பொருளுரையுடன் 1943, 1944ஆம் ஆண்டுகளில் முறையே களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவையை வெளியிட்டுள்ளார். இவ்வுரையினைக் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையின் உறுதுணையோடு செய்திருக்கின்றார். இவ்வுரைப் பதிப்பானது, "செய்யுட்களைப் பதம் பிரித்து, முதலில் தெளிவாகத் தலைப்புக் கொடுத்துப் பின்பு பொருள் சொல்லும் நெறிக்கு ஏற்ப முறைப்படுத்திப் பதவுரை கண்டு, அதன்மேல் முடிபும் விளக்கவுரையும் எழுதி, உள்ளுறை புலப்படுத்தி, மேற்கோள் இடங்களை விளக்கி, உரிய அடிக்குறிப்புகளுடன் இவ்வுரை தெளிந்து செல்கின்றது" என்பர். (மு. காசிவிசுவநாதன், அகநானூறு, பதிப்புரை, 1923)

நாட்டார் உரையின் தனிச்சிறப்பு என்னவென்றால் பாடற்பொருளுக்குத் தக்கவாறு பாடல் வரிகளை முன்பின்னாகப் பிரித்து ஆற்றொழுக்காகப் பொருள் செல்லுமாறு உரைவரைவதில் கைவரப்பெற்றவர். காட்டாக,

"திதலை மாமை தளிர்வனப் பழுங்கப்
புதலிவர் பீரின் எதிர்மலர் கடுப்பப்
பசலை பாய்ந்த நுதலே னாகி
எழுதெழில் மழைக்கண் கலுழ நோய்கூர்ந்
தாதி மந்தியின் அறிவுபிறி தாகிப்
பேதுற் றிசினே காதலந் தோழி
காய்கதிர் திருகலிற் கனைந்துகால் கடுகி
ஆடுதளி ரிருப்பைக் கூடுகுவி வான்பூக்
கோடுகடை கழங்கின் அறைமிசைத் தாஅம்
காடிறந் தனரே காதலர் அடுபோர்
வீயா விழுப்புகழ் விண்டோய் வியன்குடை
ஈரெழு வேளிர் இயைந்தொருங் கெறிந்த
கழுவுள் காமூர் போலக்
கலங்கின்று மாதவர்த் தெளிந்தவென் னெஞ்சே (அகம்.135)

என்னும் பரணரின் பாடலுக்கு நாட்டார் முதல் ஆறு வரிக்கான பொருளை இறுதியிலும் ஏனைய இறுதிவரையுள்ள வரிகளுக்குப்

பொருளை முதலிலும் தந்துள்ளார். இப்பாடலின் நாட்டார் உரை பின்வருமாறு:-

"(சொ.ள்.) 6. காதலந் தோழி - காதலையுடைய அழகிய தோழியே! 7-10. காதலர் - நம் காதலர், காய்கதிர் திருகலின் - காயும் ஞாயிறு தாக்குதலால், ஆடுதளிர் இருப்பை - அசையும் தளிரினையுடைய இருப்பை மரத்தின், கூடு குவி வான்பூ - இதழ் குவிந்த வெள்ளிய பூக்கள், கோடு கடை கழங்கின் - யானைமருப்பினாற் கடைந்து செய்த கழங்கினைப் போன்று, அறைமிசைத் தாஅம்- பாறைமீது பரவிக் கிடக்கும், காடு இறந்தனரே - காடு கடந்து சென்றனர் ஆதலின், 10-14. அவர் தெளிந்த என் நெஞ்சு - அவரைப் பிரியாரென்று தெளிவுற்றிருந்த என்மனம், அடுபோர் வீயா விழுப்புகழ் - அடும் போரினையும் நீங்காத சிறந்த புகழினையும், விண்தோய் வியன்குடை - வானை அளாவிய பெரிய குடையினையுமுடைய, கழுவுள்- கழுவுள் என்பானுடையதும், ஈர் எழு வேளிர் இயைந்து ஒருங்கு எறிந்த - பதினான்கு வேளிர் ஒருங்கு கூடித் தாக்கியதுமாகிய, காமூர்போல - காமூரைப்போல, கலங்கின்று - கலங்காநின்றது;

1-6. திதலை மாமை தளிர்வனப்பு அழுங்க - தேமலுடன் கூடிய எனது மாமை நிறமும் தளிர்போம்அழகும்கெட்டொழிய, புதல் இவர் பீரின் எதிர்மலர் கடுப்ப-புதர்களிற் படர்ந்த பீர்க்கினது புதிய மலரையொக்க, பசலை பாய்ந்த நுதலேன் ஆகி - பசலை பரந்த நெற்றியை யுடையேன் ஆகி, எழுது எழில் மழைக்கண் கலுழ- ஓவியம் வல்லார் பார்த்து எழுதுதற்குரிய அழகிய குளிர்ந்த கண் அழ, நோய் கூர்ந்து - துன்பம் பெருகி, ஆதிமந்தியின் அறிவு பிறிதாகி - ஆதிமந்திபோல அறிவு திரிந்து, பேதுற்றிசின் - யான் மயங்கியுள்ளேன்" என்னும் உரை அமைப்பைப் பார்க்கும் போது பொருளுக்குத் தகுந்தாற்போல் வரியை மாற்றிப் படிக்கும் நிலையை உருவாக்குகின்றார் எனலாம்.

2. கார் நாற்பது

மதுரைக் கண்ணங்கூத்தனாரின் 'கார் நாற்பது' வேந்தர்க்குத் துணையாகப் போர்புரியச் சென்ற தலைமகன் தலைமகளிடத்துக் 'கார் காலத்து மீண்டு வருவேன்' எனக் கூறிச் சென்றவன் காலத்தின் வரவில்லை. இதன் நிமித்தமாகத் தலைவி தோழியிடம் கூறுவதாகவும், தலைவன் பாங்கனிடம் கூறுவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூற்குப் பழைய பொழிப்புரை ஒன்றுண்டு. அது 28-39 வரையுள்ள பாடல்களுக்குக் கிடைக்கவில்லை. காலந்தோறும் இந்நூற்குப் பல உரைகள் எழுந்திருந்திருக்கின்றன. இவற்றில் பி.எஸ். இரத்தினவேலு முதலியாரின் விருத்தியுரை பலராலும் பாராட்டப்பெற்றது. நாட்டார் இப்பதிப்பையும் வேறுசில பதிப்புகளையும் கொண்டு 1923ஆம்

ஆண்டு ஓர் உரைப்பதிப்பை வெளியிட்டிருக்கிறார். இவ்வுரை பதவுரையும் விளக்கவுரையுமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலின் பொருளுக்குத் தகுந்தவாறு உள்தலைப்புக் கொடுத்தும் பாடவேறுபாடுகளை அடிக்குறிப்பாகக் கொடுத்தும் இருக்கின்றார். நூலின் இறுதியில் செய்யுள் முதற்குறிப்பு அகராதி தரப் பெற்றுள்ளது.

3. களவழி நாற்பது

பொய்கையாரின் இந்நூல் செங்கட்சோழனது போர்க்கள வெற்றியைப் பாடுவதாக அமைந்துள்ளது. இந்நூலுக்குப் பழைய பொழிப்புரையும் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் பதவுரையும் உண்டு. இப்பதிப்புகளையும் வேறு சில சுவடிகளையும் கொண்டு நாட்டார் களவழி நாற்பதிற்கு 1924ஆம் ஆண்டு உரை வரைந்திருக்கின்றார்.

இந்நூற்கு உரைவரைந்ததின் நோக்கத்தை நாட்டார், "இந்நூற்குப் பழையவுரை யொன்றுண்டு. அது செய்யுட் பொருளைப் பொழிப்பாக வெடுத்துரைப்பது; விசேடக் குறிப்பு யாதும் கொண்டிராதது. மற்று இதற்குச் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரவர்களால் பதப்பொருளும், இலக்கணக் குறிப்புகளுமாக எழுதப்பெற்ற உரையொன்றுண்டு. அதிலுள் இலக்கணக் குறிப்புகள் பெரும்பாலும் இக்காலத்துக்கு வேண்டப்பெறாதனவாயும், வழுவுள்ளனவாயும் தோன்றின. பதப்பொருளும் பலவிடத்துத் தவறான பாடத்தின் மேலெழுந்தும், மூலத்தோடு மாறுபட்டும் வழுவியிருந்தமை புலனாயிற்று. இவ்வேதுக்களாற்றான் நல்லிசைப் புலவர் செய்யுட்கு உரைகாணும் திறன் ஒரு சிறிதும் வாய்க்கப்பெறாத யானும் இதற்கோர் உரை யெழுதுமாறு நேர்ந்தது. என் சிற்றறிவிற்கெட்டியவாறு பழைய பொழிப்புரையை முற்றிலும் தழுவிப் பதப்பொருள் கூறியும், இன்றியமையாத மேற்கோள்களும், இலக்கணங்களும் காட்டியும் இவ்வுரையினை வகுத்தமைக்கலானேன். பல சுவடிகள் பார்த்துப் பாடவேற்றுமையுங் காட்டப்பெற்றுள்ளது" (ந.மு.வே., களவழி நாற்பது முகவுரை, பக்.7-8) என்கின்றார். பழைய பதிப்புகளில் நேர்ந்த பிழைகளைக் களைவதற்கு இவர்தம் பதிப்பு உதவியிருக்கின்றது எனலாம்.

மேலும், புறத்திரட்டில் 'களம்' குறித்த பத்துப் பாடல்களில் 9 பாடல்கள் 'களவழி நாற்பது' எனும் நூலில் இடம் பெற்றிருக்கின்றது.

> **"படைப்பொலிதார் மன்னர் பரூஉக்குடர் மாந்திக்**
> **குடைப்புறத்துத் துஞ்சு மிகலன் – இடைப்பொலிந்த**
> **திங்களிற் றோன்று முயல்போலுஞ் செம்பியன்**
> **செங்கண் சிவந்த களத்து"** **(புறத்திரட்டு, பா.1428)**

என்னும் பாடல் மிகைப்பாடல் என்று பலர் சேர்த்திருக்கின்றனர். ஆனால் நாட்டார் தம் உரைப்பதிப்பில் இப்பாடலை விடுத்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

4. சிலப்பதிகாரம்

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" (சிலப். பதிகம். 55-57)

என்ற மூன்று காரணங்களுக்காக எழுந்ததே சிலப்பதிகாரம். இச்சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரை, அடியார்க்கு நல்லாருரை என்ற இரண்டு பழைய உரைகள் உண்டு. அரும்பதவுரையானது, அருஞ்சொற்களின் பொருளை மட்டும் புலப்படுத்தி ஒரோவழி முடிவும் மேற்கோளும் காட்டிச் செல்வதாகும். அடியார்க்கு நல்லாருரையானது, முற்கூறிய அரும்பதவுரையைப் பெரும்பாலும் தழுவிச் சென்றும், சிலவிடத்துப் பதவுரையும் சிலவிடத்துப் பொழிப்புரையுமாகச் சென்றும், சொல்நயம், பொருள் நயங்களையும் அணிகளையும் இனிது புலப்படுத்தி, இலக்கணமும் மேற்கோளும் காட்டி விரிவாகச் செல்வதாகும்.

இப்பழைய உரைகள் இருந்த போதிலும் புகார்க்காண்டத்தை முதன்முதலில் மூலப்பதிப்பாக ஸ்ரீநிவாஸராகவாசாரியார் வெளியிட்டார். அதன் பின்னர்ச் சோடசாவதானம் சுப்பராய செட்டியார் 'புகார்க்காண்டம் உரையுடன்' வெளியிட்டிருக்கின்றார். அதற்குப் பிறகு நூல் முழுமைக்கும் திருந்திய பதிப்பாக உ.வே.சாமிநாதையர் அரும்பதவுரையையும் அடியார்க்கு நல்லாருரையையும் தம்முடைய குறிப்புரையையும் சேர்த்து 1892ஆம் ஆண்டு வெளியிட்டு இருக்கின்றார். இதன் மறுபதிப்புகள் ஐயர் காலத்திலேயே 1920, 1927 இல் வெளிவந்திருக்கின்றன. ஐயர் பதிப்பிற்குப் பிறகும் உரையில் திருத்தம் பெறவேண்டியதன் தேவையை உணர்ந்த நாட்டார் சிலப்பதிகாரம் முழுமைக்கும் உரை வரைந்திருக்கின்றார். இவ்வுரைப் பதிப்பு 1942ஆம் ஆண்டு வெளிவந்திருக்கிறது.

இவ்வுரைப் பதிப்பில் ஐயர் கொண்ட பாடங்களில் நாட்டார் சில இடங்களில் வேறுபடுகின்றார். காட்டாக,

"கிளைவழிப் பட்டன ளாங்கே கிளையும்" (சிலப்.அரங்.77)

என்ற வரிக்கு நாட்டார் "விளரிக்குத் துத்தம் அம்முறையே ஐந்தாவதாகலின் கிளை வழிப்பட்டனள் என்றார். கிளையும்-இளியும்;

குரலுக்கு இளி ஐந்தாவதாகலின் அதனைக் கிளையென்னும் பெயராற் கூறினார்; அன்றி, இளி யென்பதே எழுதுவோராற் கிளையெனத் திரிபுற்ற தெனலுமாம். அரும்பத வுரையாசிரியர் சொற்களை எஞ்சா தெடுத்துப் பொருள்கூறி முடிக்குங் கடப்பாடுடையரல்லர்; மற்று, அடியார்க்கு நல்லாரேஅங்ஙனம் உரைக்குங் கடப்பாட்டினர். ஆயின், அவர் எக்காரணத்தானோ இசைப்பகுதியில் முன்னவருரைத்த வற்றையே தாமும் உரைத்து, மூலத்திலுள்ள சொற்கள் பலவற்றிற்குப் பொருளும் முடிபும் தெரிக்காது போயினர்" (ந.மு.வே., சிலப். அரங். பக்.79) என்று கூறுவதிலிருந்து நாட்டாரின் பாடத்தெளிவு புலப்படும்.

5. மணிமேகலை

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையைச் சீத்தலைச்சாத்தனார் இயற்றினார். இரட்டைக்காப்பியங்களில் இரண்டாவதாக வைத்துப் போற்றப்பெறுவது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்னும் அறக்கருத்தினை மையமாகக் கொண்டு பௌத்த சமயக் கருத்துகளை நிலைநாட்டுவது. இந்நூல் பழையவுரை எதனையும் பெற்றிருக்கவில்லை. இக்காப்பியம் 1891ஆம் ஆண்டு திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையால் மூலம் மட்டும் வெளியிடப் பெற்றுள்ளது. இப்பதிப்பில் பல பிழைகள் இருப்பதைக்கண்ட உ.வே. சாமிநாதையர் இப்பதிப்பு நூலுடன் மேலும் பத்துச் சுவடிகளைக் கொண்டு பாடவேறுபாடு காட்டித் தாமே உரை வரைந்து 1898ஆம் ஆண்டு தம் முதற்பதிப்பைக் கொண்டுவந்துள்ளார். இதன் மறுபதிப்புகள் 1921, 1931இல் வெளிவந்திருக்கின்றன. உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த மணிமேகலை உரைப்பதிப்பைக் கொண்டு நாட்டார் மேலும் பல திருத்தங்களுடன் தம்முடைய உரைப்பதிப்பைக் கொடுத்துள்ளார்.

இதில் பதிகம் முதல் வஞ்சிமாநகர் புக்க காதை வரையுள்ள முதல் 26 காதைகளுக்கு நாட்டாரும், அதற்குப் பிறகுள்ள நான்கு காதைகளுக்கு ஒளவை சு. துரைசாமிப்பிள்ளையும் உரை வரைந்திருக்கின்றனர். இவ்வுரைப் பதிப்பைக் கழகம் 1985 ஆம் ஆண்டு வெளியிட்டிருக்கின்றது. செல்லூர்க்கிழார் செ.ரெ. இராமசாமிப் பிள்ளையின் ஆராய்ச்சி முன்னுரையுடனும், உரையாசிரியர்களின் அருஞ்சொற்பொருள் அகரவரிசையுடனும் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. நாட்டாரின் உரைப்பகுதியில் பாடவேறுபாடுகள் 9 உம், ஒளவை சு. துரைசாமிப்பிள்ளையின் உரைப்பகுதியில் பாடவேறுபாடுகள் 28உம் அமைந்திருப்பதைப் பார்க்கும் போது உ.வே. சாமிநாதையர் பாடத்தைப் பெரும்பாலும் நாட்டார்

தழுவியே உரை செய்திருக்கின்றார் என்பது புலப்படுகின்றது. இவ்வுரை பதவுரையாகவும் விளக்கவுரையாகவும் தேவையான இடங்களில் இலக்கணக் குறிப்புகளும் பெற்று விளங்குகின்றது.

6. திருவிளையாடற்புராணம்

சிவபெருமானின் திருவிளையாடல்களை எடுத்துரைக்கும் வகையில் செல்விநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பியின் 'திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்' இலம்பூர் வீமநாத பண்டிதரின் 'கடம்பவன புராணம்', வாயற்பதி அனதாரியப்பனின் 'சுந்தர பாண்டியம்', பரஞ்சோதி முனிவரின் 'திருவிளையாடற் புராணம்' ஆகிய நூல்கள் எழுந்திருக்கின்றன. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தைப் பழைய திருவிளையாடற் புராணம், நம்பி திருவிளையாடற் புராணம், வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணம் என்றெல்லாம் அழைப்பர். நம்பியின் திருவிளையாடற் புராணத்திற்கும் பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத்திற்கும் வேறுபாடுகள் பல உண்டு. இவ்வேறுபாடுகளை நாட்டார் தம்முடைய பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராண உரைப்பதிப்பு முகவுரை (பக்.8-9)யில் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

பரஞ்சோதியாரின் திருவிளையாடற்புராணத்திற்கு இராமலிங்க சுவாமி பிள்ளை 1801ஆம்ஆண்டு ஓர் உரை எழுதி இருப்பதாகத் தெரிகின்றது. இவ்வுரையே இந்நூலுக்கு முதல் உரையாகவும் அமைகின்றது. அடுத்து, யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் மூலப்பகுதியை மட்டும் வெளியிட்டிருக்கின்றார். இப் பதிப்புகளைத் தொடர்ந்து சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரின் உரையுடனும், ஈக்காடு இரத்தினவேலு முதலியார் பொழிப்புரையுடனும், இராமசாமிப் பிள்ளை என்னும் ஞானசம்பந்தப் பிள்ளையின் மதுரைக்காண்ட பொழிப்புரை யுடனும் என இந்நூற்கு உரைப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. இப்பதிப்புகளைக் கொண்டு நாட்டார் மதுரைக்காண்டம் (1927), கூடற் காண்டம் (1928), திருவாலவாய்க் காண்டம் (1931) என மூன்று காண்டங்களுக்கும் உரை எழுதி வெளியிட்டுள்ளார்.

இவர்தம் உரைப்பதிப்பு எவ்வாறமைந்துள்ளது என்பதை நாட்டார் "மூலத்தின் வேறுபட்ட பாடங்களுட் சிறந்ததெனத் தோன்றுவதை அமைத்துக் கொண்டு பிறவற்றைப் பாடபேதமாக அமைத்திருக்கின்றேன். இந்நூல் செய்யுட்களின் இடர்ப்பட்ட

சொற்பொருண் முடிபுகளை ஒழுங்குபடுத்துவது, இன்றியமையாதவும் ஒத்த கருத்துள்ளவுமாகிய பிற நூன் மேற்கோள்களை யெடுத்துக்காட்டி விளங்கவைப்பது முதலியவற்றில் எவ்வளவு அருமுயற்சியெடுத்துக் கொண்டிருக்கவேண்டும் என்பதும், இவ்வுரை எவ்வளவு திருத்தம் பெற்றுள்ளதென்பதும் நடுநிலை முதலிய உயர்குணங்களுடையராய் ஒத்து நோக்கும் அறிவுடையாரெவர்க்கும் நன்கு புலனாமாகலின்" (மதுரைக் காண்டம், முகவுரை, ப.14) என்று கூறுகின்றார்.

> "வேத வந்தமுந் துளக்கற மெய்ப்பொருள் விளங்கும்
> நாத வந்தமுங் கடந்ததோர் நடுநிலைப் பொருளின்
> பாத வந்தனைப் பத்தியின் பாலராய்ப் பயில்வோர்
> மாத வந்தரு பயனெனத் தழைத்துபல் வளனும்"
>
> (மதுரை.திருநகர்.97)

என்னும் பாடலுக்கு நாட்டார் பின்வருமாறு உரை கூறுகின்றார்.

"(இ-ள்.) வேத அந்தமும் - வேத முடிவையும், துளக்கு அற - கலக்கமின்றி, மெய்ப்பொருள் விளங்கும் - மெய்ப்பொருள் விளங்குதற் கேதுவாகிய, நாத அந்தமும் - நாத முடிவையும், கடந்தது - கடந்ததாகிய, ஓர் - ஒப்பற்ற, நடுநிலைப் பொருளின் - நடுநிலைப் பொருளாகிய இறைவனுடைய, பாதம் - திருவடிகளை, வந்தனை - வணங்குதலையுடைய , பத்தியின் பாலராய்ப் பயில்வோர் - அன்பின் பகுதியை யுடையவராய் ஒழுகுவார்க்கு, மாதவம் தருபயன் என - அச்சிவ புண்ணியந் தருகின்ற பயன் தழைப்பதுபோல், பல் வளனும் தழைத்த - பல வளங்களும் (அங்கு) தழைத்தன எ-று.

வேத அந்தம் - உபநிடதம். நாத அந்தம் - நாத தத்துவத்தின் முடிபு; நாதம் - தத்துவங்க ளெல்லாவற்றினும் தலையாயது; நாத தத்துவத்தைத் தரிசித்தவர்க்கு மெய்ப்பொருள் விளங்கு மென்பார். 'மெய்ப் பொருள் விளங்கு நாதவந்தம்' என்றார்: விளங்கு மென்பதனை இடைநிலை விளக்கமாகக் கொண்டு வேத வந்தமும் என்பதனோடும் இயைத்துரைத்தலுமாம். இறைவன் பாச ஞானம் பசு ஞானங்களைக் கடந்தவ னென்பார் வேத வந்தமும் நாத வந்தமும் கடந்த என்றார். நடுநிலைப் பொருள் - எள்ளினுள் எண்ணெய்போல எங்கும் கலந்துள்ள பொருள். தழைத்த : அன்பெறாத பலவின்பால் முற்று'' என்பதனால் நாட்டாரின் உரைத்தன்மை வெளிப்படுகிறது.

7. ஆத்திசூடி

பிற்கால ஔவையாரால் இயற்றப்பெற்றது ஆத்திசூடி. இது, மிக்க இளம் பருவத்தினர்க்கு மனத்தில் உயர்ந்த நீதிகளைப் பதியவைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மிகச்சிறிய சொற்றொடர்களால் இயற்றப்பெற்றுள்ளது. இந்நூல் தொடக்கநிலை கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பாடமாக இருந்தும், இருந்துகொண்டும் இருக்கின்றது. 1868ஆம் ஆண்டு H.W. லாரி என்பவரால் இந்நூலின் மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது. அது தொடங்கி இன்றுவரை 100க்கும் மேற்பட்ட பதிப்புகளில் மூலமாகவோ மூலமும் உரையுமாகவோ இந்நூல் வெளி வந்திருக்கின்றது. இந்நிலையில் நாட்டாரின் ஆத்திசூடி உரை 1950ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

“ஆத்திசூடி உரைப்பதிப்புகள் வேறு பல இருப்பினும், இப்பதிப்பு மூலபாடம் தனியே சேர்க்கப்பெற்றும், பதவுரையும் பொழிப்புரையும் திருத்தமாக எழுதப்பெற்றும் சிறந்து விளங்குவது காணலாம்” (ந.மு.வே.,ஆத்திசூடி, முகவுரை, ப.4) என்ற கருத்துப்படி ஆத்திசூடி மூலப்பகுதி தனியாகவும், மூலமும் உரையும் தனியாகவும் என முறையே இவர்தம் பதிப்பில் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. இவரது ஆத்திசூடி உரைக்கு ஓர் சான்று,

“93. மெல்லினல்லாள் தோள்சேர்

(பத.) மெல் – மெல்லிய, இல் – (உன்) மனையாட்டியாகிய, நல்லாள் – பெண்ணுடைய, தோள் – தோள்களையே, சேர்–பொருந்து

(பொழி.) பிற மாதரை விரும்பாமல் உன் மனைவியுடன் சேர்ந்து வாழு.
‘மெல்லிய டோள் சேர்’ என்றும் பாடம் ”

என்றவாறு இவர்தம் உரை அமைந்திருப்பதைக் காணலாம்.

8. கொன்றைவேந்தன்

ஆத்திசூடியைப் போல இதுவும் இளம் வயதினர் கற்கவேண்டிய நீதிகளை உணர்த்துவது. இதனையும் பிற்கால ஔவையார் தான் இயற்றியிருக்கின்றார். மிகச் சிறிய சொற்றொடரால் ஆத்திசூடி அமைய, மிகப் பெரிய சொற்றொடரால் கொன்றை வேந்தன் அமைந்துள்ளது. இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்

தொல்காப்பியம் - செய்யுளியல் உரையில் மேற்கோளாகக் காட்டிய சிறப்பினைப் பெற்றது. 1868ஆம் ஆண்டு எச்.டபிள்யூ. லாரியால் இந்நூலின் மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது. அதுதொடங்கி இன்றுவரை 100க்கும் மேற்பட்ட பதிப்புகளில் மூலமாகவோ உரையுமாகவோ இந்நூல் வெளிவந்திருக்கின்றது. இந்நிலையில் நாட்டாரின் கொன்றைவேந்தன் உரை 1949ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

ஆத்திசூடியைப் போலவே கொன்றைவேந்தனும் மூலப்பகுதி தனியாகவும் மூலமும் உரையும் தனியாகவும் என முறையே இவர்தம் பதிப்பில் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. இவரது கொன்றை வேந்தன் உரைக்கு ஓர் சான்று,

"3. இல்லற மல்லது நல்லற மன்று.

(பத.) இல்லறம் –(மனையாளொடு கூடிச் செய்யும்) இல்லறமானது,

நல் அறம் – நல்ல அறமாகும், அல்லது – இல்லறமல்லாத துறவறமானது, அன்று – நல்ல அறமன்றதாகும்.

(பொழி) வீட்டிலிருந்து மனைவியுடன் கூடிச் செய்யும் இல்லறமே நல்லறமாகும்; துறவறம் நல்லதன்று. (இல்லறம் எளிதிற் செய்யத் தகுந்தது. துறவறம் எளிதிற் செய்யக் கூடாதது.)"

என்றவாறு இவர்தம் உரை அமைந்திருக்கக் காணலாம்.

9. உலகநீதி

உலகநாதனாரின் 'உலகநீதி' எனும் நூல் யாவரும் கடைப்பிடிக்கவேண்டிய சிறந்த நீதிகளை உணர்த்துவது. இது, பெரும்பாலும் பேச்சுவழக்கு நடையிலேயே அமைந்திருக்கின்றது. 1868ஆம் ஆண்டு எச்.டபிள்யூ. லாரியால் மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது. அதுதொடங்கி இன்றுவரை இந்நூல் 100க்கும் மேற்பட்ட பதிப்புகளில் மூலமாகவோ மூலமும் உரையுமாகவோ வெளிவந்திருக்கின்றது. இந்நிலையில் நாட்டாரின் உலகநீதி உரை 1949ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

உலகநீதியில் அமைந்துள்ள ஒவ்வொரு தொடரின் இறுதியிலும் 'வேண்டாம்' என்பது 'வேண்டும்' என்பதன் எதிர்மறையாக இடம்பெற்றிருக்கின்றது. இதனைச் சிலர் 'வேண்டாம்' என்பதை 'வேண்டா' என்று மகர ஒற்று (ம்) நீக்கிப் பதிப்பித்திருக் கின்றனர். ஆனால் நாட்டார் மகர ஒற்று சேர்த்து 'வேண்டாம்' என்றே பதிப்பித்துள்ளார். "ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்" என்பதனால் இதனை உணரலாம்.

இந்நூலுக்கு நாட்டார் பதவுரையும் பொழிப்புரையும் என இருவேறு உரைகளைத் தந்துள்ளார். மேற்காணும் வரிக்கு நாட்டார் "(ப.ரை) ஓதாமல் - (நூல்களை) கற்காமல், ஒருநாளும் - ஒருபொழுதும், இருக்கவேண்டாம் - (நீ) வாளா இராதே.

(பொ.ரை) எக்காலத்திலும் இடைவிடாது கல்வி கற்க வேண்டும்" என்கின்றார்.

10. நறுந்தொகை

அதிவீரராம பாண்டியரின் நறுந்தொகை என்னும் வெற்றிவேற்கையானது பழந்தமிழ் நூல்களிலுள்ள நீதிக் கருத்துகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. 1868ஆம் ஆண்டு எச்.டபிள்யூ. லாரியால் மூன்றாம் பதிப்பு வெளியிடப்பெற்றுள்ளது. அது தொடங்கி இன்றுவரை 100க்கும் மேற்பட்ட பதிப்புகளில் மூலமாகவோ மூலமும் உரையுமாகவோ இந்நூல் வெளிவந்திருக்கின்றது. இந்நிலையில் நாட்டார் 1924ஆம் ஆண்டு நறுந்தொகையின் உரைப்பதிப்பை வெளியிட்டு உள்ளார்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தனைப் போலவே நறுந்தொகையும் மூலப்பகுதி தனியாகவும், மூலமும் உரையும் தனியாகவும் என முறையே இவர்தம் பதிப்பில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. நறுந்தொகை உரைப்பதிப்பின் தன்மையை நாட்டார், "இதிலுள்ள நீதிகளெல்லாம் தொன்னூல்களிற் காணப்படுவனவே யெனினும், ஒரு சில புறநானூறு, நாலடியார் முதலியவற்றின் செய்யுள்களோடு சொல்லினும் பொருளினும் பெரிதும் ஒற்றுமையுற்று விளங்குகின்றன. அவை உரையில் அங்கங்கே காட்டப்பட்டுள்ளன. இந்நூல் முன் பலரால் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. அப்பதிப்புகள் ஒன்று ஒன்றனோடு பெரிதும் வேறுபட்டுள்ளன. அவற்றிற் காணப்படும் பாட வேறுபாடுகள் எண்ணிறந்தன. வாக்கியங்களின் முறையும் பலவாறாகப் பிறழ்ச்சி யடைந்துள்ளது. 'அதனால்' 'என்பது' போலுஞ் சொற்கள் தனிச்சீராக வேண்டாத இடங்களிலெல்லாம் வைக்கப்பட்டுள்ளன. இப்பதிப்பில் இவை பலவற்றையும் கூடிய வரையில் திருத்தம் செய்து, இன்றியமையாத பாடவேறுபாடு களையும் காட்டிப், பதவுரை, பொழிப்புரைகளுடன் சிறப்புக்குறிப்புகளும் திருந்த எழுதியிருப்பது காணலாகும். 'வாழிய நலனே வாழிய நலனே' என்னும் வாக்கியம் சில பதிப்புகளில் ஓரியைபுமின்றி நூலின் நடுவே வைக்கப் பட்டுள்ளது. ஒரு பதிப்பில் அஃது இறுதியில் அமைக்கப் பட்டுள்ளது. இப்பதிப்பிலும் அங்ஙனமே வாழ்த்தினை இறுதியில் அமைத்துள்ளோம் என்று கூறுவதைக் காணலாம்.

11. மூதுரை

ஔவையாரின் மூதுரை எனும் வாக்குண்டாமானது பல நூல்களில் அமைந்த நீதிக்கருத்துகளின் சாரமாக அமைந்துள்ளது. 1868 ஆம் ஆண்டு எச்.டபிள்யூ. லாரியால் மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது. அது தொடங்கி இன்றுவரை 100க்கும் மேற்பட்ட பதிப்புகள் மூலமாகவோ மூலமும் உரையுமாகவோ இந்நூலுக்கு வெளிவந்து இருக்கின்றன. இந்நிலையில் நாட்டார் 1925ஆம்ஆண்டு மூதுரைக்கு ஓர் உரை வரைந்து வெளியிட்டிருக்கின்றார். இவ்வுரைப் பதிப்பை நாட்டார் பதவுரை, கருத்துரை என்ற முறையில் அமைத்திருக்கின்றார். ஒவ்வொரு பாடலுக்கும் பொருளுக்கேற்ற வாறு 'பாடற்றலைப்பு' கொடுத்திருக்கின்றார். இறுதியில் பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை, அருஞ்சொற்கள், மூதுரை முத்துகள் இடம்பெற்றிருக்கின்றன.

"அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்" (மூதுரை, பா.4)

என்னும் பாடலைத் தொல்காப்பிய உரையாளர்கள்வெண்பாவின் இடையிலும் முச்சீரடி வரும் என்பதற்கு மேற்கோளாகக் காட்டிய சிறப்பினைப் பெற்றது இந்நூல் என்று தம்முடைய முகவுரையில் நாட்டார் குறிப்பிடுகின்றார்.

12. நல்வழி

ஔவையாரின் நல்வழியானது பல பெரிய நீதி நூல்களில் இடம்பெற்றிருக்கக் கூடிய நீதிக்கருத்துகளை எடுத்தியம்புகின்றது. இதிலுள்ள செய்யுட்கள் பல மெய்ந்நூல்களின் முடிந்த கருத்துகளை விளம்புவனவாக அமைந்துள்ளன. 1868ஆம் ஆண்டு எச்.டபிள்யூ. லாரியால் இந்நூலின் மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து பல பதிப்புகள் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் நாட்டாரின் நல்வழி உரை 1950ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

இவ்வுரைப் பதிப்பை நாட்டார் பதவுரை, கருத்துரை என்ற முறையில் அமைத்திருக்கின்றார். ஒவ்வொரு பாடலுக்கும் பொருளுக் கேற்றவாறு 'பாடற்றலைப்பு' கொடுத்திருக்கின்றார். நூலின் தொடக்கத்திலேயே பாட்டு முதற்குறிப்புத் தரப்பெற்றுள்ளது. இவரின் வேறு எந்த உரைப்பதிப்பிலும் இல்லாத அமைப்பு இது.

13. நன்னெறி

சிவப்பிரகாசரின் நன்னெறியானது இன்றியமையாத நீதிகளை அழகிய உவமைகளுடன் எளியவர்க்கும் விளங்கும்படி இயற்றப்பெற்றதாகும். எச்.டபிள்யூ. லாரியால் 1868ஆம் ஆண்டு மூன்றாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. அது தொடங்கி இந்நூல் பல பதிப்புகளைப் பெற்றுள்ளது. இந்நிலையில் நாட்டாரின் நன்னெறி உரை 1952ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

இவ்வுரைப் பதிப்பை நாட்டார் பதவுரை, கருத்துரை என்ற முறையில் அமைத்திருக்கின்றார். ஒவ்வொரு பாடலுக்கும் பொருளுக் கேற்றவாறு 'பாடற்றலைப்பு' கொடுத்திருக்கின்றார். இறுதியில் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை இடம்பெற்றுள்ளது.

ஆக, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் மேற்காணும் 13 நூல்களுக்கும் பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, விளக்கவுரை, கருத்துரை என்றவாறெல்லாம் உரை வரைந்து சிறந்த உரையாசிரியராகத் திகழ்ந்திருக்கின்றார் என்றால் அது மிகையாகாது.

ஈ. சிறப்புக் கூறுகள்

நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரைப்பதிப்புகளில் பல்வேறு வகையான சிறப்புக் கூறுகள் பொதிந்துகிடக்கின்றன. கால ஆராய்ச்சி, பாடற்றலைப்பு, மேற்கோள் அமைப்பு, மேற்கோள் நூல்கள், முதற்பதிப்பின் தன்மை சுட்டுதல், பாடத்திருத்தம், இருபொருள் சுட்டுதல், முன் வந்ததைச் சுட்டுதல், உறவு முறைகளைச் சுட்டுதல், வேற்றுரை நூல் சுட்டுதல், ஆய்வுப் போக்கு, ஒரே நூலில் மீண்டும் வரும் தொடர்கள், இலக்கணக் குறிப்புகள் எனப் பல்வேறு வகைகளில் இவரின் சிறப்புக் கூறுகளைக் கண்டு இன்புறலாம்.

1. கால ஆராய்ச்சி

ஒரு நூல் எந்தக் காலத்தைச் சார்ந்தது என்பதைத் தக்க சான்றுடன் நாட்டார் நிறுவுகின்றார். இலக்கியச் சான்றுகளை வைத்துக் கொண்டு நல்வழி எனும் நூல் கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்பதை நாட்டார், "இந்நூலின்கண் (நல்வழி) திருவைந்தெழுத்தும், திருநீறும் சிறப்பாக எடுத்தோதப்படுவதும், இறுதிச் செய்யுளில் திருக்குறள், திருநான்மறை முடிவு, தேவாரம் முதலிய சைவத் திருமுறைகள் என்னும் இவையெல்லாம் ஒத்த கருத்துடையன எனக் கூறப்படுவதும் பிறவும் ஆக்கியோரின் சமயத்தையும், உண்மை நூலுணர்வையும் புலப்படுத்துவனவாகும்.

மூவர் தமிழை எடுத்தோதியதிலிருந்து இந்நூல் தோன்றிய காலம் 9ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகுமென்பதும் விளக்கமாம்" (நல்வழி, முன்னுரை, ப.3) என்று நிறுவுகின்றார்.

2. பாடற்றலைப்பு

நாட்டாரின் நீதிநூற் கொத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை ஆகிய மூன்றும் முறையே 'அறம்செய விரும்பு', 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்' என்ற தொடர்கள் பாடலாக அமைந்திருப்பது போல, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய மூன்று நூல்களுக்கும் பாடற்றலைப்பு கொடுத்துள்ளார். உரைப்பகுதியில் (நீதிநூற் கொத்து) ஒருநூலின் பாடற் பகுதியே தலைப்பாக அமைந்திருப்பதையும், பாடற் பொருளுக் கேற்றவாறு நாட்டார் அவர்களால் உருவாக்கப்பெற்ற புதிய பாடற்றலைப்பு அமைந்திருப்பதையும் காணமுடிகின்றது.

முகமன் எதிர்பாராமல் உதவுக, வன்சொல்லும் இனிதாதல் உண்டு, இனிய நெறியறிந்து பெறுக, செல்வம் பயன்படுத்துவார்க்கே உரியது, நட்பிற் பிரியாமை நன்று, காதலர் ஒருமை, கல்விச் செருக்கு விடுக, சினத்தைக் காத்துக் கொள்க, சார்பின் வலி, தன்னலங் கருதாமை, புலன்களால் வரும் புன்மை, உடம்பில் உயிர் அமைப்பு, அன்பின் உதவுக, செல்வச் செருக்கு விடுக, அன்பில்லார்க்குச் செல்வம் பயனில்லை, மேலோர் அன்புடையார்க்குத் தாமே உதவுவர், வறுமையிலும் உதவி, இன்சொல், நற்குணம், பிறர் துன்பங்கண்டு உள்ளங் கசிதல், அறிவிலார் செருக்கு அறிஞர்முன் அடங்கும், பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை, மனவுறுதி நெகிழலாகாது, கீழோர் பிறர் குற்றமே பேசுவர், கீழோர் சேர்க்கை ஆகாது, கல்விப் பெருமை கருதுக, கைம்மாறு கருதாது உதவுக, வெறுப்பிலும் உதவுவர் மேலோர், இடுக்கண் அஞ்சாது உதவுக, காலத்தில் அறஞ்செய்க, பிறர் துயரந் தாங்குக, மெய்யுணர்ந்து உதவுக, பெரியோர் போற்றுதல் வேண்டார், பெரியோர் பழிக்கு அஞ்சுவர், மேன்மக்கள் நல்லோரை விரும்புவர், தக்கார்க்கே உதவி செய்க, தற்புகழ்ச்சியால் தாழ்வு அடைவர், தக்கார் தொடர்பு நலம்பெருக்கும், தகாதார் தொடர்பில் தீமை உள்ளது, தக்காரைப் போற்றிக் கொள்க என முறையே நன்னெறிப் பாடல்களுக்குத் தலைப்பு அமைந்திருப்பதைக் காணும்போது நீதிநூற் கருத்துகளைத் தெளிவுபடுத்த நாட்டார் கொண்ட முயற்சிகளில் இதுவும் ஒன்றாகத் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது. காட்டாக,

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று" (மூதுரை, பா.8)

என்னும் பாடலுக்கு 'நல்லார் தொடர்பின் நலம்' என்று பாடற்றலைப்பு கொடுத்திருப்பது நீதிநூற் கருத்துகளில் நாட்டாருக்குள்ள ஈடுபாட்டை உணர்த்துகின்றது எனலாம்.

3. மேற்கோள் அமைப்பு

இலக்கிய, இலக்கண உரையாசிரியர்கள் உரைப்பகுதியில் பிற நூல்களின் ஒப்புமைப் பகுதிகளை மேற்கோள்களாகச் சுட்டுவது இயல்பு. 'என்றார் பிறரும்', 'என்பன போல', 'எனவும் கூறுவன காண்க' என்று உரையாசிரியர்கள் மேற்கோள் சுட்டும் இடத்தைச் சுட்டுவர். நாட்டாரின் உரைப் பதிப்புகளில் 'என்னும் கோவையாரால் உணர்க', 'என்பது திணைமாலை நூற்றைம்பது', 'என்னும் நற்றிணையானும் அறிக', 'எனக் குறுந்தொகையும் . . . எனப் புறநானூறும் கூறுதல் காண்க', 'என்று திருவாசகம் கூறுதல் காண்க', 'எனச் சிவஞானசித்தி கூறுவது காண்க' ஆகிய தொடர்கள் நூற்பெயரைச் சுட்டிய மேற்கோள்களாக அமைந்திருக்கின்றன.

காட்டாக,

"ஆர்ப்பெழுந்த ஞாட்பினு" (களவழி நாற்பது, பா.17) எனத் தொடங்கும் பாடலுக்கு நாட்டாரின் 'சாறு-விழா; இதனைச் 'சாறுதலைக் கொண்டென' என்னும் **புறப்பாட்டானும்**, 'சாறயர்களத்து' என்னும் **முருகாற்றுப்படையானும்** அறிக. கார்த்திகை நாளில் நிரை நிரையாக விளக்கிட்டு விழாக் கொண்டாடும் வழக்கம் மிக்கிருந்தது. இதனை, 'குறுமுயன் மறுநிறங் கிளர மதிநிறைந், தறுமீன் சேறும் அகலிருள் நடுநாள், மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப் - பழவிறன் மூதூர்ப் பலருடன் துவன்றிய, விழவுபட னயர வருகதி லம்ம' என்னும் **அகப்பாட்டானறிக**. 'துளக்கில்கபா லீச்சரத்தான் றொல்கார்த் திகைநாள்...... விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்' என்பது **திருநெறித் தமிழ்மறை**. கார்த்திகைக்கு மலையில் விளக்கிடுவது 'குன்றிற் கார்த்திகை விளக்கிட்டன்ன' என்று **சிந்தாமணியிற்** கூறப் பெற்றுள்ளது" என்ற உரையால் உணரலாம்.

'என்னும் பதிற்றுப்பத்தும் அதன்உரையும் நோக்குக', 'என்னும் சிந்தாமணியின் உரையை நோக்குக' ஆகிய தொடர்கள்

உரைநூற்பெயரைச் சுட்டிய மேற்கோள்களாக அமைந்திருக்கின்றன. காட்டாக, "யானைமேல் யானை" (களவழி நாற்பது, பா.8) எனத் தொடங்கும் பாடலுக்குள் நாட்டார், "மாய்ப்ப - மறைக்க; இஃது இப் பொருட்டாதலை 'களிறு மாய்க்குங் கதிர்க்கழனி' என்னும் மதுரைக்காஞ்சியடி உரையானறிக" என்றதால் உணரலாம்.

'என்பர் நச்சினார்க்கினியர்', 'என்றும் கூறுவர் இளம்பூரணர்', 'பரிமேலழகர் உரைத்த உரையானறிக' ஆகிய தொடர்கள் உரையாசிரியர்களின் பெயரைச் சுட்டிய மேற்கோள்களாக அமைந்திருக்கின்றன. காட்டாக, "இளையரு மீர்ங்கட்" (கார் நாற்பது, பா.22) எனத் தொடங்கும் பாட்டுக்குள் நாட்டார், "இளநலம் என்புழி நலம் வடிவுமாம். வளம் வருவாயாதலை 'வயத்தக்காள் வாழ்க்கைத்துணை' என்பதற்குப் பரிமேலழகர் உரைத்த உரையானறிக" என்று குறிப்பிடுவதால் உணரலாம். இவையன்றி, 'இதனைக் காண்க', 'என வருவதுங் காண்க', 'என வருதல் காண்க', 'என்றாராகலின்', 'என்பதிற்போல', 'என்றார்', 'என்றார் பிறரும்', 'என', 'எனவும்' என்று சுட்டுதலைக் கூறலாம்.

சிற்சில இடங்களில் மேற்கோள் பாடல்கள் எடுக்கப்பெற்ற நூல்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் பாடலைமட்டும் குறித்துச் சென்றிருக்கின்றார். திருவிளையாடற்புராணம் - இந்திரன் பழிதீர்த்த படலத்தின் 65ஆவது பாடலுக்கு உரை கூறுமிடத்து,

> **"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
> **கணமேயுங் காத்த லரிது'**

என்பவாகலின் விளைத்தலோடும் ஆகியென்றார். மாசுணம் - பெரும்பாம்பு. இவ்வரலாறு,

> **'ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து**
> **வேந்தனும் வேந்து கெடும்'**

என்பதற்கு எடுத்துக் காட்டாதல் காண்க" என்றும்; சிலப்பதிகாரம் வழக்குரை காதை (வரி9-15) க்குப் பொருள் கூறப்புகும் நாட்டார் "தான் பெருந்தேவி யாகலான், அப் பெருமிதந் தோன்ற, யாம் உரைத்தும் என்றாள். பெருந்தேவியைத் தம் பிராட்டி எனவும் வழங்குவர். முன்னர்க் கூறியவற்றையே மீட்டுங் கூறினாள், அவற்றாற் றுன்பம் வருமென்பதனை உணர்த்துதற் பொருட்டு; என்னை? 'கூறியது கூறினுங் குற்ற மில்லை, வேறொரு பொருளை விளக்கு மாயின்' என்பவாகலான்" என்றும் கூறுவதிலிருந்து இது எந்த நூற்பாடல் என்று யூகிக்க வேண்டிய நிலையையும் உருவாக்கித் தருகின்றார்.

திருவிளையாடற்புராணம், கார் நாற்பது, களவழி நாற்பது ஆகியவற்றின் உரைப்பகுதிக்குள் இடம்பெறும் மேற்கோள்கள் நூற்பெயரை மட்டும் பெற்றுப் பாடலெண் பெறாமல் இருப்பதைக் காண்கின்றோம். ஆனால், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றின் உரைப் பகுதிக்குள் இடம்பெறும் மேற்கோள்கள் மேற்கோள் எண் பெற்று அடிக்குறிப்பில் விளக்கம் பெற்றிருப்பதைக் காண்கின்றோம். இந்நிலைகளைப் பார்க்கும்போது காலத்திற்கேற்ப நாட்டார் மேற்கோள் சுட்டும் தன்மையில் மாறுபட்டு நின்றிருக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

4. மேற்கோள் நூல்கள்

நாட்டார் உரைப்பதிப்புகளில் பல்வேறு வகையான நூல்களில் இருந்து மேற்கோள்கள் காட்டப்பெற்றிருக் கின்றன. ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி ஆகியவற்றையும்; ஐஞ்சிறு காப்பியங்களில் நீலகேசி, சூளாமணி ஆகியவற்றையும்; இதிகாசங்களில் கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகியவற்றையும்; சங்க இலக்கியங்களில் எட்டுத் தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகியவற்றையும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும்; இலக்கண நூல்களில் தொல்காப்பியம், திவாகரம், வீரசோழியம், சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு, இறையனார் அகப்பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, பன்னிருபாட்டியல், நன்னூல் ஆகியவற்றையும்; புராண நூல்களில் பெரிய புராணம், பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பிரபுலிங்கலீலை, தணிகைப்புராணம், சோணசைல புராணம், கந்தபுராணம், சேக்கிழார் புராணம் ஆகியவற்றையும்; திருமுறைகளில் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருக்கோவையார், திருவிசைப்பா ஆகியவற்றையும்; சாத்திர நூல்களில் சிவஞான சித்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகியவற்றையும்; பிற காப்பியமான பெருங்கதையையும்; உரைகளில் தொல்காப்பியம்-இளம்பூரணம், தொல்காப்பியம்-நச்சினார்க்கினியம், தொல்காப்பியம்-பேராசிரியம், இறையனார் களவியல் உரை, திருக்குறள் பரிமேலழகர் உரை, இறையனார் அகப்பொருள் உரை ஆகியவற்றையும்; சிற்றிலக்கியங்களில் கலிங்கத்துப் பரணி,விக்கிரம சோழனுலா ஆகியவற்றையும்; பிற்கால நீதி நூல்களில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, மூதுரை, நல்வழி, நன்னெறி, நறுந்தொகை, அறநெறிச்சாரம், நீதிநெறி விளக்கம் ஆகியவற்றையும்; பிறவகை நூல்களில் மதிவாணன் நாடகத் தமிழ் நூல், கனா நூல், புறப்பாட்டு, இராம நாடகம், பட்டினத்தார் பாடல்கள்,

தனிப்பாடல்கள், திருவள்ளுவ மாலை, திருவள்ளுவப் பயன் ஆகியவற்றையும் நாட்டார் தம்முடைய உரைப்பதிப்புகளில் மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். இவற்றையெல்லாம் பார்க்கும் போது நாட்டாரின் அறிவுத் திறன் வெளிப்படுவதை உணரலாம்.

5. முற்பதிப்பின் தன்மையைச் சுட்டுதல்

நாட்டார் தமக்கு முன் பதிப்பிக்கப்பெற்ற பல பதிப்புகளை ஒப்பு நோக்கி அவற்றின்கண் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை உணர்ந்து சிறந்த பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் கைகண்டவர். வேறு நூல்களில் மிகுதியாகக் காணப்படக்கூடிய, இடைச் செருகலான பகுதிகளைக் கூட நாட்டார் அடிக்குறிப்பாகக் காட்டியிருப்பது அவர்தம் பதிப்பு நெறியைச் சுட்டுகின்றது எனலாம். காட்டாக, ஆத்திசூடியில் 'கோதாட்டொழி', என்பதன் பின் துன்பத்தை நீக்கு என்ற பொருளில் 'கௌவை யகற்று' என்பது சில பதிப்புகளில் இடம்பெற்றிருக்கின்றது. இதை நாட்டார் ஏற்றுக்கொள்ளாமல் அடிக்குறிப்பில் காட்டியிருக்கின்றார். மேலும், சில பதிப்புகளில் தொடர்கள் முன்-பின்னாகச் செல்லும் விதத்தையும் சுட்டிச் செல்கின்றார்.

"பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்" (நறுந். 18)

"சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்" (நறுந். 19)

ஆகிய இரண்டும் சில பதிப்பில் 'சிறியோர்' என்பது முன்னும் 'பெரியோர்' என்பது பின்னும் எனக் காணப்படுகின்றன என்று முற்பதிப்புகளில் காணக்கூடிய அமைப்பைத் தம்முடைய உரைப்பதிப்புகளில் காட்டிச் செல்கின்றார்.

6. பாடத்திருத்தம்

பல பதிப்புகளைக் கண்ணுற்ற நாட்டார் தவறான பாடத்தைத் திருத்தம் செய்வதும், இருக்கின்ற பாடம் இதுவாக இருந்தால் சிறப்பாக இருக்குமென்றும் கூறுகிறார். காட்டாக,

"மன்றுபறித் துண்ணேல்" (ஆத்திசூடி, 23)

என்பது நீதிமன்றத்திலே இருந்துகொண்டு இலஞ்சம் வாங்கி வாழாதே என்று பொருள்படும். ஆனால், "மண்பறித் துண்ணேல்" என்று பாடமிருந்தால் பிறர் நிலத்தைக் கவர்ந்து வாழாதே என்பதாகும் என்று கூறுகின்றார். மேலும்

"எழுக்க டந்ததோ ளுருத்திர வுலகமென் றியாரும்"

எனத் திருவிளையாடற் புராணம் திருநகரச் சிறப்பு 100:1இல் வருவதை "உருத்திர னுலகம்" எனப் பாடங் கொள்ளுதல் சிறப்பு என்றும் கூறுகின்றார்.

7. இருபொருள் சுட்டும் தன்மை

ஒரு தொடருக்கு - ஒரு பாடலுக்கு ஒருபொருள் என்று அமையாமல் இருவேறு பொருள்களைச் சுட்டிக்காட்டும் போக்கை நாட்டாரின் உரைகளில் காணமுடிகின்றது. அவற்றுள் சிலவற்றை நுகர்வோம்.

"ஙப்போல் வளை" (ஆத்திசூடி, 15) என்பதற்கு,

அ. 'ங' என்னும் எழுத்தானது தான் பயனுடையதாயிருந்து பயனில்லாத ஙா முதலிய தன் வருக்க எழுத்துக்களைத் தழுவிக் கொள்ளுதல் போல, நீ பயனுடையவனாயிருந்து உன் இனத்தார் பயனில்லாதவராயினும் அவரைத் தழுவிக்கொள்.

ஆ. ஙா முதலிய பதினோரெழுத்தும் எந்தச் சொல்லிலும் வருவதில்லை. ஙகரத்தின் பொருட்டே அவற்றையும் சுவடியில் எழுதுகிறார்கள். இனி இதற்கு ஙகர வொற்றானது அகரவுயிர் ஒன்றையே தழுவுவது போல நீ ஒருவனையே தழுவு என மாதர்க்குக் கூறியதாகவும் பொருள் சொல்லலாம் என்றவாறும்;

"காப்பது விரதம்" (ஆத்திசூடி, 33) என்பதற்கு,

அ. பிற உயிர்களுக்குத் துன்பஞ் செய்யாமல் (அவற்றைக்) காப்பாற்றுவதே தவமாகும்.

ஆ. தான் செய்யத் தொடங்கிய தருமத்தை விடாமற் செய்வதே விரதம் என்றவாறும்;

"சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்" (கொன்.35) என்பதற்கு,

அ. பொருளுடையவர் அறமும் இன்பமும் ஆகிய மற்றைப் பேறுகளையும் பெறுவர்.

ஆ. முயற்சியுடையவர் பொருள் பெறுவர், களங்கமற்றவர் நல்வழியை அடைவர் என்றவாறும்;

'துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு' (கொன்.41) என்பதற்கு,

அ. கணவர்க்குத் துன்பம் வந்தபோது மனம் பதையாத மகளிர், அவர் வயிற்றில் நெருப்பாவர்.

ஆ. மடியில் நெருப்பு என்பதற்கு உடையிற் கட்டிய நெருப்பை யொப்பர் என்றவாறும்;

"நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை" (கொன். 50) என்பதற்கு,

அ. நிலைபெறக் கற்றலாவது சொல்லுஞ் சொல் தவறாமையாம். கற்றவர்கள் பயனின்றி யொழியாது நிலைபெறும் சொற்களைச் சொல்லுதல் வேண்டும்.

ஆ. சொல் திறம்பாமை என்பதற்கு வாக்குறுதியிற் பிறழாதிருத்தல் என்றவாறும்;

"நல்லிணக்கம் இல்லாரோ டிணங்க வேண்டாம்" (உலகநீதி,2:2) என்பதற்கு,

அ. நல்லிணக்கம் இல்லார் என்றமையால், தீயவரின் இணக்கமுடையவரென்று கொள்க.

ஆ. நட்பிற்குரிய நல்ல பண்பில்லாதவர்களுடன் நட்புச் செய்யவேண்டும் என்றவாறும்;

"கண்ணழிவு செய்துயர் காட்ட வேண்டாம்" (உலகநீதி,9) என்பதற்கு,

அ. பிறர் செய்யும் நற்காரியத்தைத் தடுக்கவேண்டாம்

ஆ. சேர்ந்திருப்போரைப் பிரிக்கவேண்டாம் என்றவாறும்;

"கல்லின் மேலிட்டகலம்" (மூதுரை, 15:4) என்பதற்கு,

அ. கல்லின் மேலே போடப்பட்ட மட்கலம் போல

ஆ. கல்லின் மேலிட்ட கலம் என்பதற்குக் கல்லின் மேலே தாக்கிய மரக்கலம் என்றவாறும்;

"இழுக்குடைய பாட்டிற்கு இசைநன்று சாலும்" (நல்வழி,31) என்பதற்கு,

அ. இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று. இலக்கண வழுக்களையுடைய செய்யுளினும் (அஃதில்லாத) வழக்கு நல்லது.

ஆ. பழுதுடைய பாடலைக் காட்டிலும் பாடல் கலவாத வெற்றிசையே சிறப்பு என்றவாறும் நாட்டார் இருபொருளனவாக உரைவரைந்திருப்பது அவரின் உரைத்திறனை வெளிப்படுத்துகின்றது எனலாம்.

8. முன் வந்திருத்தலைச் சுட்டுதல்

ஒரே நூலில் தொடர்புடைய கருத்துகள் பலவிடங்களில் வருவனவற்றையும் நாட்டார் தம்முடைய உரைப்பதிப்பில் சுட்டிச் சென்றிருக்கின்றார். காட்டாக,

> **“கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்**
> **பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய**
> **வரிக்குயில் பாட மாமயில் ஆடும்**
> **விரைப்பூம் பந்தர் கண்டுளஞ் சிறந்தும்”**
>
> **(மணிமேகலை,19:57–60)**

என்னும் பாடலடிகளுக்கு உரை வரையுமிடத்து, ‘குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய, வெயினுழை பறியாக்குயினுழை பொதும்பின், மயிலாடரங்கின்’ (மணிமேகலை, 4:3-6) என முன்னர் வந்திருத்தல் அறியற்பாலது எனக் குறிப்பிடுகின்றதை உணரலாம்.

9. உறவு முறைகளைச் சுட்டுதல்

நாட்டாரின் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றின் உரைப்பதிப்புகளில் இடம்பெறக் கூடிய காப்பிய மாந்தர்களின் உறவுமுறைகளை உரைப் பகுதிக்குள் பல்வேறு இடங்களில் சுட்டிச் செல்கின்றார். அதாவது,

இருநிதிக்கிழவன்	- மாசாத்துவான்	(சிலப். 1:34)
இளங்கோவேந்தன்	- நெடுங்செழியனுக்கு இளங்கோவாகிய வேந்தன்	(சிலப். 16:193)
சாலினி	- வேட்டுவ மகளாகிய தேவராட்டி	(சிலப். 12:7)
சித்திராபதி	- மாதவியின் நற்றாய்	(மணி. பதி. 35)
வயந்தமாலை	- மாதவியின் தோழி	(மணி. பதி.36)
மாதவி	- மணிமேகலையின் தாய்	(மணி. பதி. 36)
மணிமேகலை	- கோவலனுக்கு நாடகக் கணிகையாகிய மாதவி வயிற்றில் பிறந்தவள்; இக்காப்பியத்தின் தலைவி	(மணிபதி.44)
சம்பாதி	- கழுகரசன்; சடாயுவினுடன் பிறந்தவன்	(மணி.3:53)
கௌசிகன்	- சுதமதியின் தந்தை	(மணி. 7:112)
செங்குட்டுவன்	- இளங்கோவடிகளின் தமையன்	(மணி.26:77)

என்றவாறு காப்பிய மாந்தர்களின் உறவு முறைகளை விளக்கியுரைக்கின்றார்.

10. ஆய்வுப் போக்கு

நாட்டார் உரைப்பதிப்பானது வினாவிடையாகவும், ஒப்பீடாகவும், திருத்தப் பாடமாகவும் எனப் பலநிலைகளில் அமைந்திருக்கின்றது. புகார்க் காண்டம் வேனிற் காதையில் அகநிலை மருதம், புறநிலை மருதம், அருகியின் மருதம், பெருகியின் மருதம் என்ற நான்கினைப் பற்றி விளக்கம் கூறும் பகுதியின் அடிக்குறிப்பில் இவை நான்கும் பழைய பதிப்புகளில் பிழைபட்டிருந்தவை ஓர் அறிஞரால் திருத்தப்பட்டன (தமிழ்ப் பொழில், துணர் 17, ப.70). சிறுபான்மை ஈண்டு எம்மாலும் திருத்தப்பட்டன என்று சுட்டித் தாம் செய்த திருத்தத்திற்குக் காரணம் உரைக்கின்றார்.

மதுரைக் காண்டம் வஞ்சினமாலையில் இறுதியாக உள்ள 'பொற்பு' என்று தொடங்கும் வெண்பா இளம்புலவர் யாராலோ எழுதிச் சேர்க்கப்பெற்றது. பொருட்சிறப்பில்லாதது என்று எடுத்துரைக்கின்றார்.

மதுரைக்காண்டம் அழற்படு காதையில் சில பகுதிகளுக்கு உரை வரையவில்லை. இதனை நாட்டார் [ ] இக்குறியீட்டினுட்பட்ட ஐந்து பகுதிகள் கந்தியார் போலும் ஒருவரால் பாடி இடைமடுக்கப் பட்டன ஆகலின், அவற்றிற்கு உரை எழுதப்படவில்லை என்று கூறுகின்றார். "குறியீட்டுக்குட்பட்ட பகுதிகளில் ஒருசொற்கேனும் அரும்பத உரையாசிரியர் பொருள் காணப்படாமையானும் அவை இளங்கோவடிகள் இயற்றியன அல்ல என்பதும், பின்னுள்ள யாரோ ஒருவரால் இயற்றிப் புகுத்தப்பட்டன ஆகுமென்பதும் நன்கு துணியப்படும்" என்று இயம்புதல் மூலம் இவரது கண்டு துணியும் ஆற்றலைத் தெளிவாக உணரலாம்.

அரும்பத உரையாசிரியர் கருத்துகளை 53 இடங்களுக்குக் குறையாமல் எடுத்தாண்டும், ஒரு சில இடங்களில் மறுத்தும், உரை கண்டுள்ள நாட்டார், அடியார்க்கு நல்லார் கருத்துகளை 51 இடங்களுக்குக் குறையாமல் எடுத்தாண்டும் பல இடங்களில் அவர் உரையை மறுத்தும் தமது உரையைச் செம்மையாக்கி உள்ளார். பொதுவாக, நாட்டார் உரையில் அரும்பதவுரையாசிரியரின் கருத்தை மறுத்தல் என்பது குறைவாகவும், அடியார்க்கு நல்லாரின் கருத்தை மறுத்தல் என்பது அதிகமாகவும் இருப்பதைக் காணமுடிகின்றது.

ஊர்காண் காதையில், "வேற்றுப்புலம் படர ஓசனிக்கின்ற" (சிலப்.14:124-125) என்ற வரிகளுக்கு விளக்கம் தருமிடத்து, 'ஓரோர்

தேயங்கட்கு ஓரொரு காலம் மாறி நிகழ்தலின் வேற்றுப் புலம் படர வென்றார் என்னும் அடியார்க்குநல்லார் உரை தமிழ்கூறு நல்லுலகத்திற்குப் பொருந்துவதன்று'' என்று மறுத்தவர் அவ்விடத்திருந்தும் அகலவென்பார் "வேற்றுப் புலம் படர" என்று விளக்கம் தருகிறார்.

"சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே"

(திருவிளை. காப்பு, 1)

எனும் பாடலுக்கு நாட்டார் சிறந்த ஆய்வுரை ஒன்றை வழங்கியுள்ளார். அதாவது, "மதுரையம்பதி, சத்திபீடம் அறுபத்து நான்கனுள் முதன்மையாகலானும், அருளாகிய சத்தியை உணர்ந்தே சிவத்தை உணரவேண்டும் என்ப ஆதலானும், இந்நூலாசிரியர்க்குப் பராசத்தியார் காட்சிதந்து இதனைப் பாடுமாறு அருள் புரிந்தனராதலானும் சத்தியாய் எனத்தொடங்கப்பெற்றது" என்ற ஆய்வுரையைத் தருகின்றார்.

"ஏழாண் டியற்றியோர் ஈரா றாண்டிற்
சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி" *(சிலப். 3:10–11)*

என்னும் அரங்கேற்று காதை வரிகளில் இடம்பெற்றிருக்கும் 'மன்னர்' என்பதற்கு நாட்டாரின் ஆய்வுரை சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. 'மன்னன்' என்பதுசோழன் கரிகாற்பெருவளத்தானைக் குறிக்கின்றது என்று அரும்பதவுரை யாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் உரைக்க நாட்டார் கரிகாலன் அல்ல சோழ மன்னன் ஒருவன் என்று எடுத்தியம்புகின்றார். அதாவது, "ஈண்டுக் கரிகாலன் என்று பெயர் கூறப்படாமையானும்,

"செருவெங் காதலின் திருவமா வளவன் . . . . .
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்" *(சிலப். 5:90–94)*

என இந்திரவிழவூரெடுத்த காதையினும்,

"மன்னன் கரிகால் வளவன்நீங் கியநாள்
இந்நகர் போல்வதோர் இயல்பின தாகி" *(மணி.1:39–40)*

என மணிமேகலை யுள்ளும் கரிகாலன் வடதிசைக்கட் படையெடுத்துச் சென்றமை கூறப்பட்டிருத்தலன்றி, நிகழ்காலத்தில் வைத்து அவன் யாண்டுங் கூறப்படாமையானும், மதுரைக் காண்டத்திறுதிக் கட்டுரையில் பாண்டியன் நெடுஞ்செழியனையும்,

வஞ்சிக் காண்டத்திறுதிக் கட்டுரையில் சேரன் செங்குட்டுவனையும் கிளந்தோதும் அடிகள் புகார்க்காண்டத் திறுதிக் கட்டுரையில் சோழனொருவனையும் பெயர் குறித்துக் கூறாமையானும் கரிகாலன் அப்பொழுதிருந்தானென்று துணிதல் சாலாதென்க" (ந.மு.வே., சிலப்பதிகாரம், ப.50) என்கின்றார்.

11. ஒரேநூலில் மீண்டும் வரும் தொடர்கள்

ஒரு நூலில் வந்த தொடர் மீண்டும் அதே நூலில் வேறொரு இடத்தில் வருவனவற்றையும், ஒரே பொருளன மீண்டும் ஒரே நூலில் வருவனவற்றையும் கூட நாட்டார் தம்முடைய உரைப்பதிப்புகளில் சுட்டிச் செல்கின்றார்.

"ஆரஞு ருற்ற வீரபத் தினிமுன்" (சிலப்.பதி.42) என்பது,

"ஆரஞு ருற்ற வீரபத் தினிமுன்" (சிலப்.அழற்படு.155) என்பதும்,

"வாரொலி கூந்தல்நின் மணமகன் றன்னை" (சிலப்.பதி.50) என்பது,

"வாரொலி கூந்தல்நின் மணமகன் தன்னை"
(சிலப். கட்டுரை, 173) என்பதும்,

"முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்" (சிலப்.10:கட்.1) என்பதும்,

முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்" (சிலப்.23:கட்.1) என்பதும்,

என வந்த தொடரே மீண்டும் வந்துள்ளமையைப் பல இடங்களில் சுட்டிச்செல்லும் நாட்டார் ஒரே பொருள் அமைந்த தொடர்களையும் சுட்டிச் சென்றிருக்கின்றார்.

"அல்லை யீதல்லை யீதென மறைகளு மன்மைச்
சொல்லி னாற்றுதித் திளைக்குமிச் சுந்தர னாடற்"
(திருவிளை. கடவுள்வாழ்த்து, 29:1-2)

மறைகள் அன்மைச் சொல்லினாற் கூறி இளைத்தலை இவ்வாசிரியரே,

"பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல உள்ள மதியின்
பேதங் களல்ல வினையன்றி நின்ற பிறிதல்ல வென்று பெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடன் மறுகிற்
பாதங்க ணோவ வளையிந்த னாதி பகர்வாரை யாயு மவரே"
(திருவிளை. கூடற். 10:1)

என்று குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டுகின்றார். இவ்வாறு நாட்டார்தம் உரைப்பதிப்புகளில் இத்தன்மை வெளிப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

12. இலக்கணக் குறிப்புரைத்தல்

பழைய உரையாசிரியர் மரபில் நின்று, நாட்டார் பல இடங்களில் சொற்களுக்கும் பாடல்களுக்கும் இலக்கணக் குறிப்புத் தந்துள்ளார். பொருள் மயக்கம் ஏற்படாமல் இருக்கத் தேர்ந்த பொருள் இதுவென உணர்த்த உரையாசிரியர்கள் இலக்கணக் குறிப்புத் தருவதை மரபாகக் கொண்டுள்ளனர். இவ்வடிப் படையிலேயே நாட்டார் உரைப்பதிப்புகளில் இலக்கணக் குறிப்புகள் அமைந்திருக்கின்றன.

அ.அணியிலக்கணம்

"புண்ணி யம்புரி பூமிபா ரதில்வரு போகம்
நண்ணி யின்புறு பூமிவா னாடென்ப நாளும்
புண்ணி யம்புரி பூமியு மதில்வரு போகம்
நண்ணி யின்புறு பூமியு மதுரைமா நகரம்"

என்னும் பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத் திருநகரச் சிறப்பின் பாடல் 103இல் சொல்லும் பொருளும் முன் வந்தனவே பின்னும் வருதலின் இது சொற்பொருட் **பின்வருநிலையணி** என்கின்றார்.

"எழுக்க டந்ததோ ளுருத்திர யுலகமென் றியாரும்
வழுத்த நின்றவீர் நகர்வயி னும்பரின் மாண்ட
விழுத்த கும்பல செல்வமும் வியந்துபார்த் துள்ளத்
தழுக்க றாமையா லின்னமு மமரர்கண் ணுறங்கார்"

என்னும் பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத் திருநகர்ச்சிறப்பின் பாடல் 100இல் அமரர்க்கு இயல்பான கணுறக்க மின்மையைப் பொறாமையால் வந்ததெனக் கவி தன்கருத்தை யேற்றிக் கூறுதலின் இது **தற்குறிப்பேற்ற அணி** என்கின்றார்.

"கடம்பின், குழல்செய் வண்டு" (திருவிளை. திருநகர். 95:2-3) என்பது கடம்பிலுள்ள வண்டினைக் கடம்பின் வண்டு என்றார். ஆகலின்இது **தொடர்புயர்வு நவிற்சியணி** என்று கூறுகின்றார்.

ஆ. பகுதிப்பொருள் விகுதி (அது)

"ஊக்கம<u>து</u> கைவிடேல்" (ஆத்திசூடி 6)
"குணம<u>து</u> கைவிடேல்" (ஆத்திசூடி 36)
"தானம<u>து</u> விரும்பு" (ஆத்திசூடி 55)

இ. ஆகுபெயர்

"வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்' (உலக.1) -'வாகு'
"மாற்றானை யுறவென்று நம்பவேண்டாம் (உலக.3) - 'உறவு'
"வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்"
(உலக.6) - 'வாய்'
"கண்ணழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்" (உலக9) -'கண்'

ஈ. தம், தன் சாரியை

'பொருவார்தும் போர்க்களத்திற் போக வேண்டாம்' (உலக7) - 'தம்'
"செய்தநன்றி யொருநாளும் மறக்க வேண்டாம்" (உலக.8) - 'தன்'

உ. பிற வகை

சுழியா - செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் (நறுந்.77)

ஒழிவது - வியங்கோள் (நறுந்.77)
ஞயம் - நயம் என்பதன் போலி (ஆத்தி. 17)
வாழ்த்தாய் - முன்னிலை ஏவலொருமை வினைமுற்று (உலக. 1)
ஓடும் - பெயரெச்சம் (உலக. 8)
சென்றோர் - வினைப்பெயர் (சிலப். 10:220)
இந்நெறிக்கு - உருபு மயக்கம் (சிலப். 10:64)
உயிர்த்தனன் - முற்றெச்சம் (சிலப். 13:45)
எள்ளும் - உவமவுருபு (மணி.பதி.1)
அரைசு - இடைப்போலி (மணி. 15:44)
வீடலியான் - வினைத்திரிசொல் (மணி.19:32)
செய்தவத்தாட்டியை - இன்னிலையிற் படர்க்கை (மணி.23:64)
தீயழல் - ஒரு பொருளிருசொல்; கொடிய அழலுமாம் (மணி. 2:53)
இடவயின் - வயின் ஏழனுருபின் பொருட்டு (மணி. 15:4)
இதனொடு - உருபு மயக்கம் (மணி. 13:55)
கொண்டாங்கு- இதில் 'ஆங்கு' என்பது அசை (மணி. பதி.16)
கொண்டீங்கு - இதில் 'ஈங்கு' என்பது அசை (மணி.பதி.19)

என்ற நிலைகளிலெல்லாம் இலக்கண விளக்கங்களை நாட்டார் குறிப்பிடுகின்றார்.

உ. பாடவேறுபாடுகள்

பழமையான சுவடிகளைச் செப்பம் செய்து இக்காலத் தேவைக்கேற்ப வெளியிடுவதும், வெளிவந்த சுவடிப்பதிப்புகளுக்குத்

தக்க உரை வரைந்து பாடத் தெளிவுடன் வெளியிடுவதும் பதிப்புப் பணியின் ஒரு கூறாகும். படியெடுப்பவர்களால் நேர்ந்த பிழைகளைக் கூட உரையாசிரியர்கள் தங்களின் உரைத்திறனால் அவற்றைக் களையும் போக்குடையவர்கள். ஏனையோர் பதிப்புகளில் காணப்படக் கூடிய பாடவேறுபாடுகளையும் அடிக்குறிப்பாகவும், எனவும் பாடம்,' என்பது பாடம், என்றும் பாடம், எனப் பாடம் என்றவாறாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். இவர் பெரும்பாலும் (களவழி நாற்பதில் மட்டும் சுவடிகளை வைத்துப் பாடவேறுபாடு காட்டியிருக்கின்றார்) அச்சு நூல்களுக்கிடையே காணப்படக் கூடிய பாடவேறுபாடுகளையே காட்டுகின்றார். இவ்வகையில் இவரது பதின்மூன்று உரைப்பதிப்புகளில் 1368 பாடவேறுபாடுகள் சுட்டப்பெற்றுள்ளன. சுவடி மற்றும் அச்சு நூல்களில் பாடவேறுபாடு சுட்டுதல் எவ்வளவு கடினம் என்பதை மு.கோ. இராமன், "பதிப்பிக்க எடுத்துக்கொள்ளும் ஏடு நூலாசிரியன் கையாண்ட மூலச்சுவடியாக இருக்க வாய்ப்பில்லை. அது வழி வழியாகப் பலர், பலகாலத்தில் பிரதி செய்த பிரதிகளில் ஒன்றாகவே இருக்கும். அதில் அவ்வப்பொழுது எழுதுவோரால் ஏற்படும் பிழைகளும் பாட பேதங்களும் பல இருக்க வாய்ப்புண்டு. இப்போது அதைப் பதிப்பிப்பதற்காகப் படி எடுக்கையில், ஏட்டில் இருக்கும் எழுத்து முறைகளை அறியாததாலும், யாப்பு-பாட்டியலில் ஆழ்ந்த புலமை இன்மையாலும், ஏட்டில் உள்ள எழுத்தை வேறோர் எழுத்தென மயங்கிப் பிரதி செய்வதாலும் பலபிழைகள் நேரிடுகின்றன. ஏட்டில் இருந்தாலாவது ஒருவகையில் இவ்விதம் இப்பகுதி இருக்கலாம் என ஊகிக்க இடம் உண்டு. **அச்சிடப்பெற்ற நூலில் அவ்விதம்** ஊகிக்கவும் இயலாது" (சுவடியியல் பயிற்சி கையேடு, ப.7) என்று கூறுகின்றார்.

அச்சுநூற் பதிப்புகளைக் கொண்டே நாட்டார் இவ்வளவு பாடவேறுபாடுகளைக் காட்டித் திருத்தம் செய்திருக்கின்றார் என்றால் அவரின் புலமையை என்னவென்று சொல்வது. இவரது உரைப்பதிப்புகளில் காணப்படக் கூடிய பாட வேறுபாடுகளின் வகைகள் பலவாகும். அவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கே காண்போம்.

1. பாடலாசிரியர் பெயர் வேறுபாடு

நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அகநானூற்றுக்குச் சிறந்த உரைப்பதிப்பைத் தந்துள்ளார். இந்நூல் 142 புலவர்களால் பாடப்பெற்றது என்றும், மூன்று பாடல்களுக்குப் பாடலாசிரியர்

பெயர் தெரியவில்லை என்றும் நாட்டார் கூறுகின்றார். இப்பாடலாசிரியர் பெயர்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களைத் தம்முடைய உரைப்பதிப்பில் நாட்டார் தெளிவாக்கியிருக்கின்றார். இவ்வகையில் 47 பாடலாசிரியரின் பெயர்கள் திருத்தம் பெற்றிருக்கின்றன. இனி வரும் பாடவேறுபாடு குறிப்புகள் எல்லாம் முதலில் வருவன நாட்டாருடைய பாடமாகவும் அடுத்ததாக வருவன ஏனையோருடைய பாடமாகவும் கொள்ளல் வேண்டும். அகநானூற்றுப் பாடலாசிரியர்களின் பாடவேறுபாடு பின்வருமாறு:

உலோச்சனார் - பொருந்தில் உளங்கீரனார் (20)

நல்வெள்ளியார் - நல்லொளியார் (32)

வெள்ளாடியனார் - வெண்வட்டியார், வேளாவட்டனன் (29)

குன்றியனார் - சேரமானந்தையார் (41)

குடவாயிற் கீரத்தனார் - உறையூர்ச் சல்லியங் குமரனார் (44)

வண்ணப்புறக் கந்தரத்தனார் - வண்ணப்புறக் கல்லாடனார் (49)

கருவூர்ப் பூதஞ்சாத்தனார் - கருவூர்ப்பூதனார் மகனார் கொற்றனார் (50)

பெருந்தேவனார் - கடுகு பெருந்தேவனார் (51)

நொச்சி நியமங்கிழார் - மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் (52)

மாற்றூர்கிழார் மகனார்- கொற்றங்கொற்றனார் நொச்சிநியமங்கிழார் (54)

செல்லூர்க் கோசிகன் கண்ணனார் - செயலூர்க் கோசங் கண்ணனார் (66)

நோய்பாடியார் - நொய்ப்பாடியார் (67)

மருங்கூர்க்கிழார் பெருங்கண்ணனார் - நக்கீரர் (80)

ஈழத்துப் பூதன் தேவனார் - ஏறத்துப் பூதன் தேவன் (88)

மாமூலனார் - ஔவையார், குடவுழுந்தனார் (97)

மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தன் - மதுரைப் பாலாசிரியன் (102)

உறையூர் முதுகூத்தனார் - முதுகூற்றனார் (137)

காவன் முல்லைப் பூதரத்தனார் - காவன்முல்லை மழுக்கரத்தனார், காவன்முல்லைப் பூக்கரத்தனார், காவன்முல்லைப் பூச்சாத்தனார் (151)

முள்ளியூர்ப் பூதியார் - முன்னியூர் வழுதியார் (173)

செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார் -
செல்லூர் இளம்பொன்சாத்தன் கொற்றன்,
உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தன் கொற்றன் (178)

கருவூர்க் கண்ணம்பாளனார் - கருவூர்க் கண்ணம்பாணனார்,
கண்ணன் பரணனார் (180)

பொதும்பில் கிழான் வெங்கண்ணனார் - வெங்கண்ணன் (192)

உலோச்சனார் - நக்கீரர் (200)

ஆவூர்க்கிழார் மகனார் கண்ணனார் -
ஆவூர்கிழார் மள்ளனாகனார் (202)

தாயங் கண்ணனார் - தையங் கண்ணனார்,
இதையங் கண்ணனார் (213)

ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் -
ஆவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன் (224)

பேயனார் - கழார்க்கீரன் எயிற்றியார் (234)

கொடியூர்கிழார் மகனார் - குடிக்கிழார் மகனார் (243)

மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் -
மதுரை மருதங்கிழார் மகனார் வெண்ணாகனார் (247)

நக்கண்ணையார் - திண்பொற் கோழிக் காவிதி மகன்
கண்ணனார் நக்கணன் (252)

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் - கபிலர்(254)

இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார் -
இருங்கோக் கண்ணனார் (279)

விற்றூற்று மூதெயினனார் - முத்தூற்று மூதெயினனார் (288)

வடமவண்ணக்கண் பேரிசாத்தனார் - பெருஞ்சாத்தன் (305)

கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார் - கருவூர் கதப்பிள்ளைச்
சாத்தனார் (309)

மதுரைப்பண்டவாணிகன் இளந்தேவனார் - மதுரைப்
பண்டவாணிகன் ஈழன்றேவனார் (328)

உறையூர் முதுகூத்தனார் - உறையூர் கூற்றனார் (329)

மதுரைக் கூத்தனார் - மதுரைக் கடாரத்தனார், மதுரைக்
கோடரத்தனார், மதுரைக் கந்தரத்தனார் (334)

நரைமுடி நெட்டையார் - நிரைமுடி நெட்டையார் (339)

மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் - மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனார் (334, 353)

அஞ்சியத்தை மகள் நாகையார் - அஞ்சிலாந்தை மகள் நாகையார், அஞ்சிலாந்தை மகளார் (352)

தங்காற் பொற்கொல்லனார் - தங்கால் முடக்கொற்றனார், தங்கால் முடக்கோவனார் (355)

மதுரை மருதனிளநாகனார் - மதுரை மருதங்கண்ணனார் (358)

இடையன் சேந்தங் கொற்றனார் - இடையன் செங்கொற்றனார் (375)

மாறோக்கத்துக் காமக்கனி நப்பாலத்தனார் - மாறோகம் காமக்கனி நப்பாலத்தனார் (377)

ஒக்கூர் மாசாத்தியார் - குடவாயிற் கீரத்தனார் (384)

காவனி முல்லைப் பூதனார் - பூதத்தனார் (391)

2. உருபு வேறுபாடு

"அணிநகர் சாந்தி செய்வது குறித்தான்
அண்ணலா ரறிந்திது செய்வார்" (திருவிளை.3:41:4)

வேறு : "அணிநகர் சாந்தி செய்வது குறித்தான்
அண்ணலா ரறிந்தது செய்வார்"

இங்கு அறிந்திது, அறிந்தது என்ற இரண்டும் ஒருபொருள் தருகின்றன. அண்ணலார் அறிந்து இது செய்வார் என்பதும், அண்ணலார் அறிந்து அது செய்வார் என்பதும் 'இது', 'அது' என்று வேற்றுமை உருபான் வேறுபடுவதை அறியலாம். செய்ய வேண்டியதை அறிந்ததன் பின் செய்வதைவிட, செய்யவேண்டுவதை அறிந்து செய்வது தான் சிறந்தது என்று பாடங்கொண்டு 'அறிந்திது' என்பதைச் சிறந்த பாடமாகக் கொண்டுள்ளார் நாட்டார்.

"விழுமி தாகிய விதியினும் விலக்கினு மடியைத்
தழுவு தொண்டர்கண் மைந்தர்கள் சாதகர் பாசங்"
(திருவிளை. திருநகர்.90)

வேறு: "விழுமி தாகிய விதியினும் விலக்கினு மடியில்
தழுவு தொண்டர்கள் மைந்தர்கள் சாதகர் பாசங்"

இங்கு அடியை, அடியில் என்ற இரண்டும் சிவபெருமானது திருவடியைச் சுட்டுகின்றன. இத்தொடரை அடுத்து வரும் 'தழுவு' என்றதைப் பார்க்கும்போது, சிவபெருமானின் திருவடியில் தழுவு என்று சொல்வதைவிடச் சிவபெருமானின் திருவடியைத் தழுவு என்று சொல்வதே பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. எனவே, நாட்டார் 'அடியை' என்ற பாடத்தைத் தெரிவு செய்திருக்கின்றார் எனலாம்.

3. உருபு மிகை

"சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர்புனைந்து"
(சிலப். 1:7:1)

வேறு: "சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டு மலர்புனைந்து"

இங்குக் கோட்டின், கோட்டு என்ற இரண்டில் 'இன்' என்னும் உருபு மிக்கிருக்கின்றது. கோடு என்றால் யாழ் என்பது பொருள். கோட்டின் மலர், கோட்டு மலர் என்பன முறையே யாழின் மலர் என்றும், யாழ் மலர் என்றும் ஆவதைக் காணலாம். யாழ் மலர்புனைந்து என்பதைவிட யாழின் மலர்புனைந்து என வருதலே சிறந்தது. அதனால்தான் நாட்டார் 'கோட்டின்' என்ற உருபு ஏற்ற பாடத்தைக் கொண்டுள்ளார் போலும். இதேபோல,

அளவை நீடாது - அளவையினீடாது *(அகம். 254:18)*
தனிமையானே - தனிமையினானே *(அகம்.294:16)*
அரசனது பொருள் - அரசனருள் பொருள்
(திருவிளை.30:12:2)
கற்பின் மிக்கெழு - கற்பு மிக்கெழு *(திருவிளை. 44:30:1)*
பொற்பின் மிக்குள - பொற்பு மிக்குள *(திருவிளை.44:30:4)*

போன்றவையும் இடம்பெற்றிருப்பதைச் சுட்டிச்செல்கின்றார்.

4. ஒருமை – பன்மை வேறுபாடு

உழந்திவை - உழந்திது *(திருவிளை. 17:9:3)*
காண்பான் - காண்பார் *(திருவிளை. 23:15:4)*
புரிவது - புரிவன *(திருவிளை. திருநகர். 15:4)*

5. அன் – அர் வேறுபாடு

நந்தன் வெறுக்கை - நந்தர் வெறுக்கை *(அகம்.251:5)*
களைந்தார் - களைந்தான் *(திருவிளை.3:31:4)*

மீனவர் - மீனவன் (திருவிளை. 4:14:4)
மீனவன் - மீனவர் (திருவிளை. 50:20:4)
வானவன் - வானவர் (திருவிளை. 49:28:2)

6. ஆண்பால் – பெண்பால் வேறுபாடு

இவளிது செயலே - இவனது செயலே (அகம். 158:18)
மேலான் ஒற்றி - மேலாள் ஒற்றி (அகம். 263:7)
எவ்வமாற்றுவான் - எவ்வமாற்றுவாள்
(திருவிளை. திருநாட்.2:3)

7. சுட்டுச்சொல் வேறுபாடு

அந்த - இந்த (திருவிளை. திருநகர். 109:1)
இதன் பெருமை - அதன் பெருமை (திருவிளை.தலைவி.5:5)
அதனை - இதனை (திருவிளை. 1:27:3).
இதுகொண்டு - அதுகொண்டு (திருவிளை. 31:13:2)

8. பொருள் வேறுபாடு

சினமிகு முருகன் - சீர்மிகு முருகன் (அகம். 59:11)
கொழுமுகை யவிழ - கொழுமுகையுடைய (அகம்.217:9)
பிறந்ததற் கொண்டும் - பிறந்ததற் கொன்றும் (அகம்.219:8)
வாங்குசினை மலிந்த - வாங்குசினை கொய்த (அகம்.221:7)
பண்பில் வாழ்க்கை - அன்பில் வாழ்க்கை (அகம். 245:6)
யாங்காகுவள் கொல்தானே - யாங்காகுவல் கொல்யானே
(அகம். 260:11)
புலாஅற் கையர் - புலராக் கையர் (அகம்.265:18)
பாஅயப்புது - பராஅயபுது (அகம். 266:2)
பெரும்படை - பசும்படை (அகம். 309:10)
வனைகழை - விளைகழை (அகம். 309:13)

9. சொல் மிகுதி

நுடங்க வெழுந்தெழுந்து - நுடங்க எழுந்து (அகம்.28:9)
எயினன் - வன்மை யெயினன் (அகம். 181:7)
என் மயங்கினர் - என் மயங்கினர் நம் (அகம்.293:14)
வெள்ளறிவுரையிற் குற்றம் - வெள்ளறிவுரை சொற் குற்றம்
(திருவிளை. கட. 26:2)

10. எழுத்து இடமாற்றம்

சிவலிங்கமொன்று முள - சிவலிங்கமுமொன்றுள
(திருவிளை. தலைவி. 1:4)

11. சொல் இடமாற்றம்

“மனுமுறை நெறியின் - மனுநெறி முறையின் (வெற்றி. 75:3)”

*“வலக்கால் புனைகழல் கட்டினும் இடக்கால்
தனிச்சிலம்பு அரற்றுந் தகைமையள்
- இடக்காற் றனிச்சிலம் பரற்றினும் வலக்காற்
புனைகழல் சுட்டுந் தகைமையள்” (சிலப். 2:23:9-10)*

*“ஏந்தித், தாம்பூங் கோதை ஊதுவண் டிரீஇ
மென்பிணி யவிழ்ந்த அரைநாள் இரவிவண்
நீவந் ததனினும்
- ஏந்தி, மென்பிணி யவிழ்ந்த தாம்பூங்
கோதை, ஊது வண்டிரிய வழிப்பணை
முயங்கிய, நீவந் ததனினும்” (அகம். 298:11-14)*

12. தொடர் இடமாற்றம்

*“அடுக்க நின்றகுண் டோதர னகட்டிடை வடவை
மடுக்க வுன்னினா னதுவந்த வயிற்றெரி பசியாய்த்
தொடுக்க வாலமுண் டாங்குடல் சோர்ந்து
-அகட்டிடை யழலை யிடுக்கண செய்திடு
வடவைபோ லெரிவுற நினைத்தான் துடைக்கு
மால முண்டாங்குடன் சோர்ந்து” (திருவிளை.7:10:1-3)*

*“சிந்தத் தருக்கழிந் தச்சந் தோற்றற்
குரியகா ரணத்தா னாம முக்கிர வரும னென்பார்
- சித்தத் தக்க காரணமே யன்றி
உரியதன் பெயர்க்கு மேற்பவுக் கிரவரும னென்றான்”
(திருவிளை.11:26:3-4)*

13. குறில் நெடில் வேறுபாடு

*இருவகிர் ஈருளின் - இருவகிர் இருளின் (அகம். 294:8)
நீடிய வேய்படு - நீடிய வெய்படு (அகம். 295:3)
தோன்று குயிலெழுத்து - தொன்று குயிலெழுத்து (அகம்297:8)
படத்துட் - படாத்துட் (சிலப். 1:7:1)
இன்றோள் தாராய் - ஈன்றோட்டாராய் (அகம். 165:8)
மறமிகு - மாமிகு (அகம். 197:7)
கரவல் - காவல் (அகம். 298:18)
மரந்தை - மாந்தை (அகம். 376:18)
தெற்றுவதாயிற் - தேற்றுவதாயிற் (அகம். 387:17)*

14. எழுத்துத் திரிதல்

ஓரினத்தின் எழுத்திற்குள் மாற்றம் பெறுவது எழுத்துத் திரிவு என்பர்.

கொக்கின நிரை - கொக்கின் நிரை (அகம். 120:3)
உறுகண் மழவர் - உறு கணமழவர் (அகம். 121:11)
கள்வன் - களவன் (அகம். 235:11; 246:2)
நல்குவர - நல்குவர் (அகம். 357:12)
அருளின்றி - அருளின்று (அகம். 235:16)
வலத்தன்மை - வலித்தன்மை (அகம். 243:11)
நறுவிரை - நறுவரை (அகம். 269:9)
நீங்கி - நீங்க (அகம். 345:1)
நனைந்த - நினைந்த (அகம்.351:11)
பசந்து தோன்ற - பசந்து தோன்றி (திருவிளை.22:27:4)
நோக்கா - நோக்கி (திருவிளை. 22:28:4)
மிலைந்து - மலைந்து (அகம். 182:1)

15. எழுத்து மிகுதி

இகழ்ந்தேன் - இழந்தேன் (அணி. 13:81)
பொருதுகளத் தொழிய - பொருகளத் தொழிய (அகம்199:20)
மடக்கிக் கிளையொடு - மடக்கிளையொடு (அகம். 248:3)

16. எழுத்துக் குறைவு

அறிவுமாயின் - அறியுநமாயின் (அகம். 243:12)
கொண்டன் மாமலை - கொண்டகன் மாமலை (அகம்262:17)
துஞ்சி இன்றும் - துஞ்சினை யின்றும் (அகம். 296:4)
ஆகொள் - ஆடுகொள் (அகம். 372:11)
பல்சினை உதிர்வை - பல்சினை யுதிர்பவை (அகம்.393:6)
காமனற்றேவியும் - காமன்றன்றேவியும் (திருவிளை.26:3:3)

17. ஒற்று மிகுதி

கண்ணீருள் நனைந்து - கண்ணீரு நனைந்து (திருவிளை.6:19:3)
குடர்கொண்டு - குடர்கொடு (களவழி. 34:3)
நெறிப்படு - நெறிபடு (திருவிளை. திருநகர். 105:3)
நாகநாட்டு - நாகநாடு (திருவிளை. 1:3:3)
மனித்த வேடம் - மனித வேடம் (திருவிளை. 30:39:4)
நூற்று நூறு - நூறு நூறு (திருவிளை. 50:22:1; 50:28:1-4)

18. ஒற்றுக்குறைவு

படிவமாகி - படிவமாக்கி (திருவிளை. கடவுட். 8:1)
பெரிய அம்மா - பெரியள் அம்மா (அகம். 198:12)

பலபாராட்ட - பலர் பாராட்ட (அகம். 254:2)
நீராசனக்கலம் - நீராஞ்சனக்கலம் (திருவிளை. 5:142:4)
உவப்புற - உவர்ப்புற (திருவிளை. திருநகர்.53:1)
நெறிகொடு - நெறிக்கொடு (திருவிளை. 1:35:2)

19. 'ய' மிக்கும் குறைந்தும் வருதல்

உயர்நிலைய - உயர்நிலை (கார். 38:1)
துவன்றிய - துவன்றி (அகம். 141:10)
வெரீஇய - வெரீஇ (அகம். 141:19)
தைஇய -தைஇ (அகம்.181:17)
நீவிய - நீவி (அகம். 283:1)
படப்பை நண்ணி - படப்பை நண்ணிய (அகம்.146:4)
உறீஇ - உறீஇய (அகம். 325:15)
நசைஇ - நசைஇய (அகம். 327:9)

20.எழுத்து மாற்றம்

க - த : கண் கமழ் - தண் கமழ் (அகம். 153:17)
கோடு தோய் - தோடு தோய் (அகம். 166:15)
மாடத் தெழுதணி - மாடக்கெழுதணி (அகம்.167:14-15)
விரவுமொழிக் கட்டூர் - விரவுமொழித்தகட்டூர் (அகம். 212:14)
மாதருங் கொடுத்திட - மாதருந் தொடுத்திட (திருவிளை. 10:3:3)
விடுவகை - விடுவதை (திருவிளை. 26:35:3)

ண - ந : வெண்ணுனை - வெந்நுனை (அகம். 109 : 7)
மாணகர் - மாநகர் (அகம். 124:6)

ண - ன : துணிகொள - துனிகொள (அகம். 119:15)
பணைத்தாள் - பனைத்தாள் (அகம். 373:3)
வட்டவாண் - வட்டவான் (திருவிளை. 16:24:1)
எண்ணாவஞ்ச - என்னாவஞ்ச (திருவிளை. 39:26:3)
பணிந்து - பனிந்து (திருவிளை. 40:67:4)

த - க : சூத்தம் - சூக்கம் (திருவிளை. மூர்த்திவி. 22:2)
உடனாத - உடனாக (திருவிளை. மூர்த்திவி. 30:1)
தடம்பொழில் - கடம்பொழில் (திருவிளை.மூர்த்திவி.34:3)

த - ந : நிலைத்த - நிலைந்த (அகம். 175:15)
குளகருத்த - குளகருந்த (அகம். 217:2)
நிமிர்த்து வரும் - நிமிர்ந்து வரும் (திருவிளை.4:10:2)

விருத்தூண் - விருந்தூண் (திருவிளை. 11:33:3)
ஏகுதற்கு - ஏகுநர்க்கு (அகம். 283:8)

த - ற : புனன்மலி புதவிற் - புனன்மலி புறவிற் (அகம்.326:11)
சாத்தினார் - சாற்றினார் (திருவிளை.மூர்த்திவி.4:4)

ந - த : சினந்திருந்தார் - சினத்திருந்தார் (உலக. 3:3)
களைந்தொழிந்த - களைந்தொழித்த (அகம்.24:2)
பையணந்தன்ன - பையணர்த்தன்ன (அகம். 154:6)
நெகிழ்ந்த - நெகிழ்த்த (அகம். 169:13)
தெளிந்த - தெளித்த (அகம். 214:9)
சிதர்ந்தவை போல - சிதர்த்தவை போல (அகம்.304:2)
கனையெரி நிகழ்ந்த - கனையெரி திகழ்ந்த (அகம்.379:19)

ந - ன : செந்நெறி - சென்னெறி (திருவிளை. 3:32:1)
மாநிறப் - மானிறப் (அகம். 319:1)
பூணநூல் - பூணனூல் (திருவிளை.11:27:4)

ம - ப : தமனிய - தபனிய (திருவிளை. தலவி. 23:2)

ய - ப : முகமன் செய்யத் - முகமன் செப்பத் (திருவிளை.15:35:3)

ர - ள : நீரானி - நீளாளி (திருவிளை. 32:17:1)

ர - ற : சேரலர்க்கு - சேரலற்கு (அகம்.209:14)
ஊரல் அவ்வாய் - ஊறலவ்வாய் (அகம். 326:1)
இவனுந்தேருங் - இவனுந்தேறும் (திருவிளை.39:10:1)

ல - வ : வரலரி தென்னாய் - வரவரி தென்னாய் (அகம். 217:12)

ல - ழ : குத்திப் புகலொடு - குத்திய புகழொடு (அகம்.251:17)
தலைக்கூட்டு - தலைக்கூட்டு (அகம். 383:8)

ழ - ள : கண்ணோக்கொழிக்கும் - கண்ணோக்கொளிக்கும் (அகம். 234:8)

மறைகழி - மறைகளி (திருவிளை. 17:13:4)

ழ - ற : மழவர் - மறவர் (அகம். 309:2)

ள - ண : பாசெள்ளி - மாசெண்ணி (திருவிளை.17:36:3)

ள - ல : ஒன்றிற் கொள்ளாய் - ஒன்றிற் கொல்லாய் (அகம். 123:14)

தளைமாற்றி - தலைமாற்றி (அகம். 366:3)
வள்ளுகிர் - வல்லுகிர் (அகம். 362:5)
வேட்டாள் - வேட்டால் (திருவிளை. 11:9:1)
கண்டாவளி - கண்டாவலி (திருவிளை.21:18:1)

ள - ழ : மூள்கிய - மூழ்கிய (அகம். 234:4)
முளைவளர் - முழைவளர் (அகம். 332:1)

ள - ன : இளமழை - இனமழை (அகம். 198:17)
உள்ளி - உன்னி (அகம். 377:12)

ற - த : கறீஇ - கதீஇ (அகம். 337:14)

ற - ர : இறங்க - இரங்க (அகம். 194:8)
நிறம்பார்த்தொடுங்கிய - நிரம்பா தொடுங்கிய (அகம்.332:3)
கூறாத் - கூராத் (திருவிளை. 38:6:1)

ற - ன : தோற்றி - தோன்றி (களவழி. 19:2)

ன - ண : தன்கடல் - தண்கடல் (அகம். 13:1)
துனைதரு தண்கார் - துணைதரு தண்கார் (அகம். 85:13)
கனைவிசை - கணைவிசை (அகம். 121:13)
தன் புனல் - தண் புனல் (அகம். 216:2)
பனைமருள் - பணைமருள் (அகம். 238:5)
பனியலை - பணியலை (அகம். 272:6)
வானிலாச் - வாணிலாச் (திருவிளை. திருநகர்.59:3)
நன்பன்றனை - நண்பன்றனை (திருவிளை.42:25:3)
நன்பகற்போது - நண்பகற்போது (திருவிளை.4:57:4)

ன - ந : எஞ்சினான்மறை - எஞ்சிநான்மறை (திருவிளை. திருநக.83:4)
புழுக்கி னெய்க்கனி - புழுக்கி நெய்க்கனி (அகம்.136:1)
தினையென நோனாது - தினையென னோனாது (அகம்.348:11)
கரையிலானிரை - கரையிலாநிரை (திருவிளை. திருநக. 60:2)
பஞ்சினாண் - பஞ்சிநாண் (திருவிளை. திருநக.83:3)

ன - ள : தருமார் மன்னர் - தருமார் மள்ளர் (அகம்.67:12)
மான - மாள (திருவிளை. 5:98:3)

ன - ற : முன்பகல் - முற்பகல் (களவழி. 1:3)
பின்பகல் - பிற்பகல் (களவழி. 1:3)

இவைபோன்ற இருபது வகைகளில் நாட்டார் தம்முடைய உரைப்பதிப்புகளில் பாடவேறுபாடுகள் சுட்டிச் செல்கின்றதைக் காண்கின்றோம். இவரின் 1368 பாடவேறுபாடுகளும் தனியாய்வாகச் செய்யும் திறன் பெற்றவை. இவ்வகைகள் அன்றி மேலும் பல வகைகளாகப் பகுத்துப் பாடவேறுபாடுகளைக் காணும் நிலையில் இவர்தம் உரைப்பதிப்புகளில் அமைந்துள்ள பாடவேறுபாடுகள் திகழ்கின்றன.

முடிவுரை

நாட்டாரின் உரைப்பதிப்புகள் வெளிவந்த நிலையைப் பார்க்கும் போது நாட்டார் காலத்தில் வெளிவந்தவை (அகநானூறு, கார் நாற்பது, களவழி நாற்பது, சிலப்பதிகாரம், திருவிளையாடற் புராணம், நறுந்தொகை, மூதுரை), நாட்டார் காலத்திற்குப் பின் வெளிவந்தவை (மணிமேகலை, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, நல்வழி, நன்னெறி) என்று பிரித்துக் காணலாம். இந்நிலையைப் பார்க்கும்போது நாட்டாரின் உரைகள் வேறு என்னென்ன உள்ளன என்று பார்க்க வேண்டியுள்ளது. தற்பொழுது அவரின் மகன் தஞ்சை - நடுக்காவேரியில் வாழ்ந்து வருகின்றார். அவரை அணுகிய போது தந்தையாரின் உரைப் பதிப்புகள் சிலவும் கடிதங்கள் பலவும் வெளிவராமலிருக்கின்றன என்றார். இவற்றையும் பெற்று வெளியிட்டால் தமிழுலகில் நாட்டாரின் பரப்பு விரிவடையும் எனலாம்.

கழக வெளியீடுகள் எதுவும் சுவடிப்பதிப்புகள் இல்லை என்ற ஒரு கருத்து பொதுவாக நிலவுகின்றது. "கழகம் வெளியிட்ட பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் யாவும் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆய்வு செய்து வெளியிடப்பெறவில்லை என்பது உண்மை, ஆனால், அவை முன்னமே வெளிவந்துள்ள மூலப்படிகளையும் உரைப் படிகளையும் திருத்தப்பாடங் கண்டு புத்துரை விளக்கங்கள் எழுதி வெளியிடப்பட்டவையாகும்'' (வ. சுப்பையாபிள்ளை, செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 45, ப.556). ஆனால் நாட்டார் சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு களவழி நாற்பதிற்குப் பாடத்திருத்தம் செய்ய அவற்றினைக் கழகம் வெளியிட்டிருக்கின்றது. இதனைக் காணும் போது கழகம் பற்றிய கருத்து நாட்டாரால் பொய்யாகிறது எனலாம்.

'பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால் கொண்டவர் ஆறுமுக நாவலர், சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை; கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர்' என்று திரு.வி.க. குறிப்பிடுவார். நாட்டாரின் 13 உரைப்பதிப்புகளையும் உற்று நோக்கும்போது உ.வே.சா. அமைத்த நிலையத்தை அவர் அலங்காரம் செய்து பொலிவடையச் செய்திருக்கின்றார் என்றால் மிகையாகாது.

ஒரு சிறந்த பதிப்பாசிரியர் தம்முடைய பதிப்பில் என்னவெல்லாம் செய்திருப்பாரோ அத்தனை அமைப்பு முறைகளையும் நாட்டார் தம்முடைய உரைப் பதிப்புகளில் செய்து காட்டியிருக்கின்றார். இதனால் பதிப்புலகில் இவர் ஓர் அணையா விளக்காகத் திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.

அருஞ்சொற்பொருள் அகராதி, இலக்கணக் குறிப்புகள், மேற்கோள்விளக்கப் பாடல்கள் எனச் சிறப்பாகக் குறிப்பிடுவனவற்றைப் பின்னிணைப்பாகக் கொடுக்காமல் உரைக்குள்ளேயே சுட்டிச் சென்றிருப்பது ஒரு குறையாகவே தோன்றுகின்றது.

ஒரு பதிப்பு மட்டும் கண்ட நூல்கள் பல இருக்க, நாட்டாரின் உரைப் பதிப்புகள் மட்டும் மீண்டும் மீண்டும் மறுபதிப்புகள் தோன்றிக்கொண்டே இருப்பதைப் பார்க்க முடிகின்றது. ஒரு பதிப்பு மிகச்சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்றால் அது எத்தனை மறுபதிப்புகளைப் பெற்றிருக்கின்றது என்று பார்க்கவேண்டும். இந்நிலையில் நாட்டாரின் உரைப்பதிப்புகள் பெரும்பாலும் மறுபதிப்புகள் பெற்றவையே. எனவே, அவர் பதிப்புலகில் தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றார் என்று கூறினால் அது வெறும் புகழ்ச்சியன்று.

துணைநின்ற நூல்கள்

1. அகம். களிற்றியானை நிரை, ந.மு.வே. (உரை), கழகம், 1943
2. அகம். மணிமிடைபவளம், ந.மு.வே. (உரை), கழகம், 1944
3. அகம். நித்திலக்கோவை, ந.மு.வே. (உரை), கழகம், 1944
4. ஆத்திசூடி, ந.மு.வே. (உரை), கழகம், 10ஆம் பதிப்பு, 1979
5. உலகநீதி, ந.மு.வே. (உரை), கழகம், 9ஆம் பதிப்பு, 1977
6. களவழி நாற்பது, ந.மு.வே. (உரை), கழகம், 6ஆம் பதிப்பு, 1975
7. கார் நாற்பது, ந.மு.வே. (உரை), கழகம், 6ஆம் பதிப்பு, 1981
8. கொன்றைவேந்தன், ந.மு.வே. (உரை), கழகம், 12ஆம் பதிப்பு, 1980
9. சிலப்பதிகாரம், உ.வே.சா. (பதி.), தமிழ்ப்பல்கலைக்கழக நிழற்படப் பதிப்பு, 1985
10. சிலப்பதிகாரம், ந.மு.வே. (உரை), கழகம், 2ஆம் பதிப்பு, 1999
11. சுவடியியல் பயிற்சி கையேடு, மு.கோ. இராமன், உ.த.நி. சென்னை, 1982
12. திருவிளையாடற்புராணம்-மதுரைக்., ந.மு.வே. (உரை), கழகம்,1927
13. திருவிளையாடற்புராணம்-கூடற்., ந.மு.வே. (உரை), கழகம், 1928
14. திருவிளையாடற்புராணம்-மதுரைக்.,ந.மு.வே. (உரை), கழகம், 1931
15. ந.மு.வே. நாட்டார் கருத்தரங்க மலர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2002.
16. நல்வழி, ந.மு.வே. (உரை), கழகம், 10ஆம் பதிப்பு, 1980
17. நறுந்தொகை, ந.மு.வே. (உரை), கழகம், 16ஆம் பதிப்பு, 1981
18. நன்னெறி, ந.மு.வே. (உரை), கழகம், 8ஆம் பதிப்பு, 1979
19. மணிமேகலை, உ.வே.சா.(பதி.), உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, ஏழாம் பதிப்பு, 1981
20. மணிமேகலை, ந.மு.வே. (உரை), கழகம், 1985
21. மூதுரை, ந.மு.வே. (உரை), கழகம், 19ஆம் பதிப்பு, 1981

*****

உரைத்திறன்

இரா. காசிராசன்

இந்திய விடுதலைக்கு முன்னர் வாழ்ந்து மறைந்த தமிழ்ப் பேராசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர் ந.மு.வேங்கடசாமி நாட்டார். பழந்தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட நாட்டார் சைவ சமய ஈடுபாடு மிக்கவர். பழ.மு.காசிவிசுவ நாதன் செட்டியாரின் வேண்டுதலுக்கும் தூண்டுதலுக்கும் இணங்கப் பல தமிழ் நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

நாட்டார் அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவிளையாடற்புராணம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இன்னாநாற்பது, இனியவை நாற்பது ஆகியவற்றிற்கும் உரை எழுதியுள்ளார். ஔவையின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை ஆகியவற்றிற்கும் பிற நீதி நூல் சிலவற்றிற்கும் உரை வகுத்துள்ளார். இவை கழக வெளியீடாக வந்துள்ளன. அகநானூறு களிற்றியானை நிரை, மணிமிடைபவளம், நித்திலக் கோவை என மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இவ்வுரை நாட்டாராலும், கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையாலும் இணைந்து எழுதப்பட்டுள்ளது. இதேபோன்று மணிமேகலை உரையும் ஔவை.சு. துரைசாமி பிள்ளையுடன் இணைந்து எழுதி வெளியிடப்பட்டுள்ளது. மணிமேகலையைப் பொறுத்தவரை முதல் 26 காதைகள் வரை நாட்டாரும், பின்னுள்ள நான்கு காதைகளுக்கு ஔவை.சு. துரைசாமி பிள்ளையும் உரை எழுதியுள்ளனர். இதுபோன்ற குறிப்பு அகநானூற்று உரைக்கு இல்லை; எனவே இது இருவரும் இணைந்து எழுதியதாகக் கருதப்படுகிறது; நாட்டார் உடல் நலமின்மையால் மணிமேகலையின் இறுதிப்பகுதிக்கு உரை எழுத இயலாது போக, ஔவை எழுதினார் என்ற குறிப்புக் காணப்படுகிறது.

நாட்டார் உரையானது, அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், இளம்பூரணர் போன்ற பழந்தமிழ் உரையாசிரியர்களின் மரபைப் பின்பற்றியதாக அமையினும், அவற்றிலிருந்து சற்றே எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது;

இவ் எளிமையும் கூடப் பேராசிரியர் மு.வ. போன்றவர்களிடம் காணப்படுகிற எளிமையன்று. ஆறுமுகநாவலர் போன்ற பழைய பண்டிதர் நடையிலேயே அமைவது குறிப்பிடத்தக்கது. பழந்தமிழ் உரையாசிரியர்தம் மரபைப் பின்பற்றினாலும் அவர்களிடம் காணப்படுகிற செறிவு, ஆழம், பல்துறைப் புலமை முதலான நாட்டாரிடம் குறைவே என்பது தெளிவு. இதற்கான அடிப்படைக் காரணம் காலச் சூழல் மற்றும் உரையின் தேவை அல்லது பயன்பாடே எனலாம். பெரும்பாலும் நாட்டாரது உரை அவர்காலப் புலவர் மற்றும் வித்துவான் பட்டப்படிப்பு மாணவர்களை முன்னிறுத்தியே எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனை அகநானூற்றுப் பதிப்பில் தெளிவாகக் குறிப்பிடுகிறார் பதிப்பாசிரியர் பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியார்.

"செய்யுட்களைப் பதம் பிரித்து, முதலில் தெளிவாகத் தலைப்புக் கொடுத்துப் பின்பு பொருள் செல்லும் நெறிக்கு ஏற்ப முறைப்படுத்திப் பதவுரை கண்டு அதன்மேல் முடிபும் விளக்கவுரையும் எழுதி, உள்ளுறை புலப்படுத்தி, மேற்கோள் இடங்களை விளக்கி, உரிய அடிக்குறிப்புகளுடன் இவ்வுரை தெளிந்து செல்கின்றது. பல்கலைக் கழகத்தின் 'வித்துவான்' தேர்வுக்கு இந்நூலின் 'களிற்றியானை நிரை' என்னும் முதற்பகுதி பாடமாக இருத்தலின் இப்போது அது மட்டும் உரையுடன் ஒரு தனிப்புத்தகமாக வெளியிடப்பெறுகின்றது" என்கிறார் பதிப்பாசிரியர்.

நாட்டார் பல நூல்களுக்கு உரைஎழுதினார் எனினும் அவை அனைத்திலும் ஒரே வகையான உரைமரபு பின்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அகநானூற்றைப் பொறுத்தவரை சொற்பொருள், முடிபு, விளக்கவுரை, மேற்கோள் என்ற அமைப்புப் பின்பற்றப்படுகிறது. சிலப்பதிகார உரை சொற்பொருள் விளக்கவுரை (விளக்க உரை என்று குறிப்பிடாமலேயே எழுதப்பட்டிருத்தல்), முடிப்புரை என்ற நிலையில் அமைகின்றது. அதோடு சிலம்பும் மேகலையும் தொடர்நிலைச் செய்யுள் ஆதலின் ஒவ்வொரு காதைத்தொடக்கத்திலும் ஒரு முன்னுரை - அதாவது அக்காதையின் பொருட்சுருக்கம் -இடம்பெறுகின்றது. சிலம்பின் யாப்பு வேறுபாடு கருதி, ஒவ்வொரு காதையும் இன்னவகைப் பாடல் என்பதும் குறிக்கப் பெறுகின்றது. மணிமேகலை உரையமைப்பு சொற்பொருள், விளக்கவுரை, சொற்பொருள், முடிபுரைத்தல் என அமைகின்றது.

இவ்வுரைகளில் சொற்பொருள் - எனக்குறிக்கப்படுவது கருத்துரையே. சிலம்பு, மேகலையில் இப்பகுதி 'சொற்பொருள்' எனக் குறிப்பிடப்படாது, ஒருகுறிப்பிட்ட பகுதியின் கருத்துரையாகவே அமைகின்றது. இக்கருத்துரைகள் சொல்லுக்குச் சொல் பொருள் தரும் சொற்பொருள் நிலையிலேயே தரப்படுகின்றன. அருஞ்சொற் பொருள் விளக்கமல்ல இப்பகுதி; அருஞ்சொற்பொருள் விளக்கவுரைப் பகுதியிலேயே இடம்பெறுகின்றது. அகநானூற்று உரையில் பாட்டு முதற்குறிப்பு அகராதி மற்றும் ஆசிரியர் பெயர் அகராதி இடம் பெறுகின்றன. அதே நேரத்தில் சிலம்பு, மணிமேகலையில் இடம்பெறும் அருஞ்சொல் முதலியவற்றின் அகரவரிசை இடம்பெறவில்லை.

பழந்தமிழ் இலக்கிய உரை

சிலம்பு உரை 1942 இலும் 1945 இல் நாட்டார் மறைவிற்குப் பின்னர் அகநானூறு உரையும் வெளிவந்துள்ளன. மணிமேகலை உரையும் பின்னரே வெளிவந்துள்ளது.

1. சொற்பொருள் பகுதி, பாடல் வரிகளைப் பொருள் முடிபுக்கு ஏற்பப் பகுத்துக் கொண்டு, சொல்லுக்குச் சொல் பொருள் கூறும் முறையில் ஒரே சொற்றொடராக அமைகின்றது. இம்முறை ஏனை உரைகளிலும் ஒரேமாதிரியாகவே அமைகின்றது.

எடு: **"வான் கடல் பரப்பில் தூவற்கு எதிரிய – பெரிய கடற்பரப்பில் எழும் திரைத் திவலைகளை ஏற்றுக்கொண்ட; மீன் கண்டன்ன– விண்மீனைக் கண்டாலொத்த, மெல் அரும்பு ஊழ்த்த – மெல்லிய அரும்புகள் மலர்ந்த, முடவுமுதிர் புன்னை – முடம்பட்ட முதிர்ந்த புன்னைமரத்தின், தடவுநிலை மாசினை – பெரிய நிலையுடைய கரிய சினையில், புள் இறை கூரும் மெல் அம் புலம்ப – புட்கள் மிகத் தங்கியிருக்கும் மென்னிலமாகிய கடற்கரைக்குத் தலைவனே" (அகம்.10)**

இவ்வுரையில் சொற்களைப் பிரித்து உரை கூறும் மரபு பின் பற்றப்பட்டுள்ளது. இம்முறை அனைத்து உரைகளிலும் காணப்படுகின்ற ஒரு மரபு. அதோடு இவ்வுரைப் பகுதியை மட்டும் தனியே எடுத்து எழுதினால் அது ஒரு தொடர் அமைப்பில் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

'பெரிய கடற்பரப்பில் எழும் திரைத்திவலைகளை ஏற்றுக் கொண்ட, விண்மீனைக் கண்டாலொத்த, மெல்லிய அரும்புகள் மலர்ந்த, முடம்பட்ட முதிர்ந்த புன்னை மரத்தின் பெரிய

நிலையுடைய கரிய சினையில், புட்கள் மிகத்தங்கியிருக்கும் மென்னிலமாகிய கடற்கரைக்குத் தலைவனே" என்று ஒரு நீண்ட தொடராக எச்சங்களையும் வேற்றுமை உருபுகளையும் கொடுத்து நிறைவு செய்கிறார்; இவ்வகையில் (அகம்.10) இப்பாடல் உரையை மூன்று தொடர்களாக்குகிறார்.

இத்தகைய 'சொற்பொருள் உரை' 'பதவுரை' என ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நறுந்தொகை, நன்னெறி, இன்னாநாற்பது, கார் நாற்பது - ஆகியவற்றில் குறிக்கப்பெறுகின்றது.

2. 'முடிபு' கூறல்: அகநானூறு, சிலம்பு, மணிமேகலை ஆகியவற்றின் உரையில் அவ்வவ் இலக்கியப் பாடலில் இடம்பெறும் சொற்களைத் தொகுத்து ஒரு பொருள் முடிபு காணும் முறை பின்பற்றப்படுகிறது. அகநானூற்றில் எல்லாப் பாடல் உரைகளிலும் 'முடிபு' என்று தலைப்பிட்டே எழுதும் முறை காணப்படுகிறது. ஏனை உரைகளில் இத் தலைப்பு இன்றி அமைகின்றது இப்பகுதி.

எடு. தோழி! நம் தலைவர், 'தையல்! நின் வயிற் பிரியலம் யாம் எனக்கூறி, நுதல் பசப்பூர, நாம் அழத் துறந்தனராயினும் சொற்பெயர் தேஎத்த சுரன் இறந்தோராய அவர், காவிரிப் பட்டினத்தன்ன செழுநகர் நல்விருந் தயர்மார் ஏமு விழுநிதி, எளிதினில் எய்துக" – (அகம் : 205 உரை).

சிலம்பில், 'இருட்படாம் போக நீக்கி ஒளிகதிர்பரப்பச் சொரிந்து ஆடிப்பெயர வான்பலி யூட்ட, மண்டப மன்றியும் மன்றத்தும் பலியுறீஇ ஏற்றிச் சாற்றி எடுத்து ஈண்டிக் கொள்கென ஆட்டக் களிசிறந்த வியலுளாங்கண் திரிதருமறுகில் உண்டுகொல் என்று ஆட்டி விலக்கி உறீஇப் புக்க கணவர் நடுங்கு நாள் உருத்தனவாகிய கருங்கண்ணும் செங்கண்ணும் விழா நாளகத்து இடத்தினும் வலத்தினும் துடித்தன என வினைமுடிக்க (சிலப்: காதை 5) அதே நேரத்தில் எல்லாக் கதைகளுக்கும் இத்தகைய முடிப்புரை சிலம்பில் இடம்பெறவில்லை. வேனில் காதை, கனாத்திறம் உரைத்த காதை, காடுகாண் காதை முதலானவற்றில் இத்தகைய முடிப்புரை இல்லை. இதே நிலைதான் மணிமேகலை உரையிலும் காணப்படுகிறது. பல காதைகளுக்கும் இத்தகைய முடிப்புரை உண்டு.

"மணிபல்லவத்தில் தெய்வம் நீங்கிய பின்னர் மணிமேகலை நோக்கித் திரிய, தீவ திலகை தோன்றி 'யார் நீ' என்றலும், 'கேளாய் என் வரவு இது; பயன் இது; 'அன்னாய் நீ யார்' என்றலும் தீவ திலகை உரைக்கும்; உரைப்பவள் என்றுரைத்தலும், மணிமேகலை

விரும்பிப் பீடிகையைத் தொழுது வணங்கிக் கூடி வலஞ்செய்து நிற்றலும், அவள் கையிற் பாத்திரம் புகுந்தது; புகுதலும் மகிழ்வெய்தி, 'வாழ்த்தல் என் நாவிற்கு அடங்காது' என்றாள், என்றலும் ஆயிழை முன்னர்த் தீவதிலகை உரைக்கும்'; உரைப்பவள் கண்டனை' என்றலும் மணிமேகலை 'சுரத்தல், காண்டல் வேட்கையேன்' என அவளுரைப்ப, மணிமேகலை வணங்கி ஏத்தி வலங்கொண்டு எழுந்து மயங்குவோள் முன்னர் வந்து தோன்றிக் களைந்து கூறும்; கூறுகின்றவள் தொழும் என, தொழுது ஏத்திய அவரொடும் இளங்கொடி எழுந்தனள் என வினை முடிவு செய்க" - மணி : பாத்திரம் பெற்ற காதை.

மணிமேகலை முடிப்புரை பல தொடர்களில் அமைகிறது. அகம் மற்றும் சிலப்பதிகாரத்தில் இப்பகுதி ஒரே தொடரில் மட்டுமே அமைகின்றது. இம்முடிப்புரை மூல நூல் சொற்களைத் தொகுத்து - பொருள் தொடர்புடன் அமைகின்ற ஒரு தொகுப்புரையாக அமைகின்றது.

மேற்கோள்: இப்பகுதி அகநானூற்று உரையில் மட்டுமே இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம் - பொருளதிகார அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், செய்யுளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல் ஆகிய அகப்பொருள் மரபு சார்ந்த நூற்பாக்களுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர் ஆகியோர் தம் உரைக்குச் சான்றாதாரமாக எடுத்தாண்ட அகநானூற்றுப் பாடல் வரிகள் இவை எனத் தொகுத்து இங்கு ஒவ்வொரு பாடல் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களால் மேற்கோள் காட்டப்படாத பாடல்களில் இப்பகுதி இல்லை; இவற்றோடு இறையனார் களவியல் உரையாசிரியரும் சில பாடல்களை மேற்கோள் காட்டியுள்ளார். அவையும் இப்பகுதியில் நாட்டாரால் சுட்டப்பெறுகின்றன.

எடு : நோயும் இன்பமும் (தொல். பொருள்.2) என்னும் சூத்திர உரையில் 'கை கவியாச் சென்று. . . . என் நெஞ்சு', இஃது உறுப்புடையது போல் உவந்துரைத்தது' என்று நச்சினார்க்கினியரும் 'மரபே தானும் (தொல். செய்:80) என்னுஞ் சூத்திர உரையில் இச்செய்யுளை எடுத்துக்காட்டி, 'என்றவழி குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஏற்றபொருள் தத்தம் மரபிற்றாய்ப் பலவும் வந்தன கண்டுகொள்க' என்று பேராசிரியரும் கூறினர் (உரை: அகம்: 9)

'கனவும் உரித்தால் அவ்விடத் தான' (தொல். கற்.5) என்னும் சூத்திரத்து, காமம் இடையீடுபட்டுழித் தலைவனும் தலைவியும் கனாக் காண்டலும் உரித்து எனக் கூறித் தலைவன் கனாக் காண்டற்கு இச்செய்யுளை எடுத்துக் காட்டினார் இளம்பூரணர் (உரை: அகம் : 39).

உள்ளுறை: நாட்டார் தம் அகநானூற்று உரையில் மட்டுமே பாடல்களில் வரும் உள்ளுறையை எடுத்துரைக்கிறார். உள்ளுறை என்பது அகப்பாடல் மரபு என்பதாலும், இப்பகுதி பாடலாக வைக்கப்பட்டதாலும், இவ் அகநானூற்று உரையில் வரும் உள்ளுறைகளைச் சுட்டிச் செல்கிறார் எனலாம். பிற உரைகளில் இது பற்றிய குறிப்பு இல்லை.

> 'வேங்கை நுண்தாது கலவத்து உறைப்ப, மஞ்ஞை அணிமிக்கு ஆடும் என்றது' – தலைவனது மார்பின் சாந்தம் நம் ஆகத்திற் பொருந்துமாறு முயங்குதல் கூடின், நாம் எழில் சிறந்து மகிழ்ச்சியுறுவோம் என்றவாறு. உயர்ந்த சந்தனத்தின் கிளை தீண்டத் தேனிறால் தொங்கும் என்றது, பல்லாற்றானும் ஒப்புமையுடைய உயர்ந்த தலைவனும் தலைவியும் கூடி இல்லறம் புரிதல் யாவர்க்கும் இன்பம் பயப்பதாம் என்றபடி' (அகம்: 242)

என்று பாடலில் வரும் உள்ளுறைப் பொருளை எடுத்துரைக்கிறார் நாட்டார். அதோடு பிற ஆசிரியர் கொண்ட உள்ளுறைப் பொருளையும் ஒரோவிடத்துச் சுட்டிச் செல்கிறார்.

"நிறைச்சூல் யாமையைக் காமம் நிறைந்த தலைவியாகவும், அது அடும்பங்கொடியை அறுத்து அதனை வெண்மணற் பக்கத்தே சேர்த்தது - தலைவி தன் தாயர், தன் ஐயர் பாலுள்ள அற்புத் தளையை அறுத்து அவ்வன்மைத் தலைவன் பக்கலிலே சேர்த்த தன்மையாகவும், அதுதான் ஈன்ற முட்டையை மறைத்துப் புதைந்தது - தலைவி தான் ஒழுகிய களவொழுக்கத்தைப் புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்து வைத்த தன்மையாகவும், அம்முட்டை புலவு நாறியது - அக்களவு வெளிப்பட்டு அலர் எழும் தன்மையாகவும், அம் முட்டையைக் கணவன் (ஆண்யாமை) பார்ப்பாகும் அளவும் ஓம்பியது - அக் களவு ஒழுக்கத்தைத் தலைமகன் வரைய வந்து மாட்சியைப் படுத்தும் துணையும் இடையீடின்றிக் குறிவழி ஒழுகித் தலைமகளை ஓம்பின தன்மையாகவும் உள்ளுறை உவமம் கொள்க, என்பர் இராசகோபால ஐயங்கார்' (அகம் : 160).

விளக்கவுரை : விளக்கவுரைப்பகுதியில் தான் பழைய உரையாசிரியர் முதல் அண்மைக்கால உரையாசிரியர் வரை அனைவரும் தங்கள் புலமையைக் காட்டுவர். இலக்கண, இலக்கியப் புலமை, பல்துறைச் செய்திகள், நிகண்டுகளை அறிந்து பொருள் கூறும் தன்மை, தத்துவம் மற்றும் சமயச் சிந்தனைகள், உலக மற்றும் செய்யுள் வழக்குச் செய்திகள் ஆகிய அனைத்துச் செய்திகளையும் உள்ளடக்கும் பகுதியாக அமைவது விளக்கவுரைப் பகுதியேயாம். இவ்விளக்கவுரை அகம், சிலம்பு, மணிமேகலை ஆகிய உரைகளில் இடம் பெறுகின்றது. இங்கு அருஞ் சொற் பொருள் கூறுதல், பாடல் கருத்துரை வழங்குதல், பாடலில் இடம்பெறும் முக்கியமான சொல் தொடர், மற்றும் கருத்துகள் பிற இலக்கியங்களில் இடம்பெறுகின்ற ஒப்புமைப் பகுதிகள், 'யாதன் உருபிற் கூறிற் றாயினும், பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும்' என்ற அடிப்படையில் கவிதையில் இடம் பெறும் உருபு மற்றும் இலக்கணக் குறிப்புகளை எடுத்துரைத்தல், மூல நூலில் இடம்பெறும் பாடபேதங்களைச் சுட்டிஅவற்றிற்கான விளக்கம் தருதல், சொற்களைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு கூட்டிப் பொருள் முடிபு காட்டல் முதலான பழைய உரையாசிரியர்களின் மரபினை இம்மூன்று உரைகளிலும் பின்பற்றுகிறார் நாட்டார். சிலப்பதிகார உரையில் மட்டும் முந்தைய உரையாசிரியர்களான அரும்பதவுரையார், அடியார்க்கு நல்லார் உரைகளை ஏற்பதும் மறுப்பதுமான போக்குச் சிலவிடங்களில் இடம் பெறுகின்றது. சிலப்பதிகார விளக்கவுரை முழுக்க முழுக்க முந்தைய உரையாசிரியர்களைத் தழுவியே அமைகின்றது; மணிமேகலையின் தத்துவப் பகுதியாக, பின்னைய நான்கு காதைகளும் நாட்டார் உரை இன்றி அமைவதால் - அவரது தத்துவச் சிந்தனை இவ்வுரையில் வெளிப்படவில்லை எனலாம்.

சொற்பொருள் தருதல் : பொதுவாக அருஞ்சொல்லுக்குப் பொருள் தருவதே இப்பகுதியில் இடம்பெறுவதாயினும் சிலவிடங்களில் எளிய சொல்லுக்குக்கூட பொருள் தருகின்ற சூழல் ஏற்பட்டு விடுகிறது. சிலபோது எளிய தமிழ்ச்சொல்லுக்கு வடமொழிப் பொருள் தரும் முறையும் உரையாசிரியர்களிடம் காணப்படுகிறது. வடமொழிச் சொல் உலக வழக்கில் மிகுதியும் பயன்படுத்தப்பட்டமையும், உரையாசிரியர்கள் தங்கள் வடமொழிப் புலமையை வெளிப்படுத்தும் நோக்கமும் இதற்குக் காரணங்கள் எனலாம்.

நிழத்தல்	-	மெலிதல்	(அகம்: 47)
சுடர்	-	பந்தம்	(" 153)
அறன்கடை	-	பாவம்	(" 155)
திருக்குலம்	-	சூரியகுலம்	(மணி.பக்.5)
ஆணு	-	அன்பு	(" ")

அந்தி விழவு	-	சீபாலி	(சிலப். 464)
புதவம்	-	கதவு	(” 476)
முத்தீ	-	ஆகவணீயம், காருகபந்தியம் தக்கிணாக்கினி (சிலப். 479)	

இவ்வாறு பல வடமொழிச் சொற்கள் நல்ல தமிழ்ச் சொல்லுக்கு மாறாகச் சொற்பொருள் நிலையில் தரப்படுகின்றன. இது உரையாசிரியர்களின் இயல்பாகவே அமைகின்றது.

கருத்துரை: அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றின் உரைகளில் கருத்துரை என்ற ஒன்று தனியாகத் தரப்படவில்லை; விளக்கவுரைப் பகுதியிலும் இது இடம்பெறவில்லை; நீதிநூல் உரைகளில் பொழிப்புரை என்ற பெயரில் இது இடம் பெறுகின்றது. பதவுரையே கருத்துரையாக அமைதலின் இங்குத் தரப்படவில்லை எனலாம்.

ஒப்புமைப் பகுதி : விளக்கவுரைப் பகுதியில் இது முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது; பழந்தமிழ் உரைகளிலும் இப்பகுதிக்குத் தனியிடம் உண்டு. உரையாசிரியர்களின் புலமைத் திறனை வெளிப்படுத்தும் பகுதியே இது. தாம் கொண்ட பொருளுக்கு - கருத்துக்கு அரண் சேர்க்கும் வகையில் இவ்வொப்புமைப் பகுதியை மேற்கோளாக எடுத்துக் கூறுவர் உரையாசிரியர். இப்பகுதி இலக்கிய வரியாகவோ இலக்கண நூற்பாவாகவோ அல்லது பிற துறை சார்ந்த செய்தியாகவோ அமையலாம்.

எடு: நெஞ்சறப் பெற்ற – தன்னுயிர் தான் அறப்பெற்றானை (268) என்றார் திருவள்ளுவரும்; ‘சிறுமுதுக் குறைவி’ – சிறு முதுக்குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்’ என்றார் இளங்கோ அடிகளும்; அகம் : 17 உரை.

‘பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி’ (மணி. 9)

– இத்தொடர் முழுவதும் சிலம்பில் இடம்பெறுவது காண்க.

‘முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம்” - என்பதன் உரையில்

‘பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்’ - என்றார்

என்று வள்ளுவர் குறளை எடுத்துரைக்கிறார் (சிலப்: 21 : 3-4 - உரை)

மூலநூல் வரிகளின்றி அதன் கருத்துகளும் கூட (வன்னிமரம், மடப்பள்ளி - திருவிளையாடல் புராணக்கருத்து - சிலப் : 21 - 4-6-உரை) ஒப்புமையாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

இலக்கணக்குறிப்புரைத்தல் : இதுவும் பழைய உரையாசிரியர்களின் உரை மரபைப் பின்பற்றியதே எனலாம். கவிதையின் பொருள்கோளுக்காகவே இவ் இலக்கணக் குறிப்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன. அதுவும்கூடப் பொருள் தெளிவுக்காக - மூல நூலில் இலக்கண மரபுகள் மீறப்பட்டுள்ள இடங்களுக்கு மட்டுமே - இவற்றை எடுத்துரைக்கின்றனர் உரையாசிரியர்கள். கவிதைப் பொருளை நுகரும் வாசகன் பொருள் மயக்கம் ஏற்பட இலக்கியத்தைக் கற்றுப் பிழையான பொருளை உணர்ந்து கொள்ளக் கூடாது என்ற எச்சரிக்கை விடுத்தலாக இப்பகுதி மிகுதியும் அமைகின்றது.

எடு : அகம்: கொளா – கொள்ள எனத் திரிக்க (அகம் : 19)
இன்று – இன்றி – வினை எச்சக்குறிப்பு முற்று (அகம்:66)
பலரும் – உம் அசை; மன் – கழிவின்கண் வந்தது (70)

மணி: கொண்டாங்கு, கேட்டீங்கு – ஆங்கு, ஈங்கு என்பன அசைகள் (மணி : பக். 5)

பாத்தூண் – பகுத்து > பாத்து என்பதன் மரூஉ (9)

சிலப்: நாளால் (1:41) – நாளில் – வேற்றுமை மயக்கம்
நாம (1:8) – 'நாம்' எனும் உரிச்சொல் திரிந்தது.
மகனை (20.58) – 'ஐ' இடைச்சொல் (சாரியை)
யாரை – ஐ, அசைநிலை; வாடிய > வாட்டிய என விகாரமாயிற்று (23:18–19)

பாடபேதவிளக்கம் : அகநானூற்றில் பாடபேதங்கள் சிலவே குறிக்கப்பட்டாலும் அவற்றிற்கு உரை விளக்கம் தந்ததாகத் தெரியவில்லை. ஒரோவிடத்து மட்டும் உரையில் இப்பாடபேதம் "கொளா - கொள்ளவெனத் திரிக்க;' 'கொள்ள' வென்றே பாடங்கோடலுமாம்' (அகம் : 5) எனச் சுட்டப்பெறுகின்றது. மணிமேகலையிலும் பாடபேதம் பற்றிய குறிப்பு காணப்பட்டாலும் (அங்கைப் பார்க்க > செங்கப் பாத்திரம் - 9) அவற்றிற்கான விளக்கம் இடம்பெறவில்லை. சிலப்பதிகாரத்திலும் பாடபேதம் சுட்டுவது என்பது அரிதாகவே காணப்படுகிறது. பழைய உரையாசிரியர்கள்,

உ.வே.சாமிநாத ஐயர் எனப் பிறர் எடுத்துக்காட்டியுள்ள பாடவேறுபாடுகள் மிகுதியாக இருப்பினும், நாட்டார் உரையிலோ அல்லது பதிப்பிலோ இவை இல்லை என்றே சொல்லலாம். ஒருசில இடங்களில் பிறர் பாடம் மறுக்கும் நிலையில் மட்டுமே அமைகின்றது.

எடு: வாரொலி கூந்தலைப் பேரியற் கிழத்தி (சிலப்:2:84)

i) "கூந்தலையுடைய பேரியற் கிழத்தி எனினும் அமையும் என அடியார்க்கு நல்லார் கூறுதலின் கூந்தலைப் (கண்ணகி) பேரியற் கிழத்தி (கோவலன் தாய்) எனப்பிறர் பாடம் கொண்டமை பொருந்துவதன்று"

ii) பேரிற் கிழத்தி (பேரியற் கிழத்து), அறப்பரிகாரம் (அறப்பரிசாரம்) என்பதும் அரும்பதவுரையாசிரியர் கொண்ட பாடம் (சிலம் : 2:84) அறப்பரிகாரம் (சுறப்பரிசாரம்) என்பதும் அரும்பதவுரையாசிரியர் கொண்ட பாடம்.

iii) நிலைஇய – நிலீஇயர் என்று பாடம் கொண்டு நிற்பதாக என்றுரைப்பர் அரும்பதவுரையார்.

சொற்களைச் சிதைத்துப் பொருள் முடிபு காட்டல் : இலக்கியப் படைப்பில் மூல நூலார் எடுத்தாண்ட சொற்களின் வரிசைக்கிரமத்தைத் சிதைத்து, சேர்த்து, பிரித்துக் கொண்டு கூட்டி உரை வழங்கும் முறையில் தனித்து நிற்பவர் நச்சினார்க்கினியர். எனவேதான் 'உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர்' என்ற அடை மொழியுடன் 'பிச்சுப் பிடிங்கி நச்சினார்க்கினியர்' என்றும் அழைக்கப்படுகிறார். இத்தகைய வேலையை நாட்டாரும் செய்கிறார். ஆனால் நச்சர் மற்றும் பழந்தமிழ் உரையாசிரியர் அளவுக்கு நாட்டார் வெற்றி பெற்றார் எனக் கூறுதற்கில்லை. சில சான்றுகள் வருமாறு:

"ஒட்டிய ஆவி எனவும் பொதினி யாங்கண் சொல்லிய
சொல் எனவும் கூட்டுக" (அகம் : 1)

"இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி
மடமொழி தொழுது வீழ்ந்தனள் என மாற்றுக" (சிலப்:20:81)

சொல்வருவித்தல் : பண்டை உரைமரபைப் பின்பற்றிச் சொல்வருவித்தல் என்பதும் நாட்டாரின் உரையில் இடம் பெறுகின்றது. இப்பகுதி சிலம்பு உரையில் மட்டுமே சிறப்பிடம்

பெறுகின்றது. 'ஆக' எனும் ஒருசொல் வருவிக்க (சிலப்.: 2:48); செய்து (பதி : 31-36) போந்து (சிலப் : 23-48) எனச்சொல் வருவித்துப் பொருள் கூறும் மரபு அமைகின்றது.

இவையன்றி மூல நூலில் ஆளப்படும் உவமை இன்ன வகையினது என்றும் அதில் வெளிப்படுகின்ற மெய்ப்பாடு என்ன என்றும் சுட்டுகிற மரபு காணப்படுகின்றது. சிலப்பதிகார உரையைப் பொறுத்தவரை பழைய உரையைத் தழுவியே நாட்டார் உரை செல்கின்றது என்றாலும் ஒருசில இடங்களில் அரும்பதவுரை மற்றும் அடியார்க்கு நல்லார் உரையை மறுக்கின்ற போக்கும் காணப்படுகிறது.

எடு : கோட்டம் – அருகன் கோயில் (அடி : பதி) – கோட்டம் எனப் பலகோயிலைக் குறிப்பிடலாம் 'கோட்டம்' என்பதற்கு அருகன் கோயில் என்று பொருள் கணித்தல் பொருந்தாது.

பலவிடங்களில் நல்லார் உரையை எடுத்துரைத்தாலும், அரும்பதவுரையாரைப் போற்றுவது போல நாட்டார், நல்லாரைப் போற்ற வில்லை; இன்னும் சொல்லப்போனால் அடியார்க்கு நல்லாரைக் காழ்ப்புணர்வுடன் நோக்குவதும் உரைவழி அறியமுடிகிறது. இதன் அடிப்படைக் காரணம் நல்லார் சமண சமயத்தவராதல் வேண்டும் என்று நாட்டார் கொண்டதாகலாம். இளங்கோ, குட்டுவன், அரும்பதவுரைகாரர் ஆகியோரைச் சைவ சமயத்தினராகக் காணும் நாட்டார் நல்லார் சமயம் பற்றிக் குறிப்பிடாது விட்டுவிடுகிறார். இது நாட்டாரின் சைவப்பற்றை வெளிப்படுத்துமே யன்றி, உண்மை உணர்த்தும் அறிவாராய்ச்சி ஆகாது.

நீதி நூல் உரை

நாட்டார் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இன்னா நாற்பது (1924), இனியவை நாற்பது, கார் நாற்பது (1942) ஆகியவற்றிற்கும் ஔவையாரின் ஆத்திச்சூடி (1950), கொன்றைவேந்தன் (1949) நல்வழி (1950) மூதுரை ஆகிய நூல்களுக்கும், அதிவீர ராம பாண்டியரின் நறுந்தொகைக்கும் (1941) துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் (1949) இயற்றிய 'நன்னெறி'க்கும் (1952) உலக நாதனார் இயற்றிய 'உலக நீதிக்கும்' உரை எழுதியுள்ளார். இவற்றில் 'இனியவை நாற்பது'க்கான நாட்டார் உரை கிடைக்கவில்லை. இந்நீதிநூல்களுக்கு ஏன் உரை எழுதினார் என்பது விளங்கவில்லை. மிக எளிய ஔவை நூல்களுக்கெல்லாம் உரை எழுதியதன் தேவை என்ன என்பதும் விளங்கவில்லை. இவற்றில்

பல ஆசிரியரின் மறைவிற்குப் பின்னரே வெளிவந்துள்ளன. இவை எல்லாவற்றிற்கும் நாட்டார் முகவுரை எழுதியுள்ளார். சிலவற்றிற்குப் பாட்டு முதற்குறிப்பு அகராதியும், அருஞ் சொற்கள் அகராதியும் எழுதியுள்ளார்.

இந்நீதிநூல்களின் முன்னுரையில் ஆசிரியர் வரலாறு, நூல் எழுந்த சூழல், ஆசிரியரின் பிற நூல்கள் பற்றிய விவரம் ஆகியன சுருக்கமாகத் தரப்படுகின்றன. கார்நாற்பது ஆசிரியர் கண்ணங்கூத்தனார், இன்னா நாற்பது ஆசிரியர் கபிலர் - இவர்களைச் சங்கப் புலவர்களாக ஏற்கும் நாட்டார், ஒளவையாரைப் பிற்காலத்தவராகக் கொள்கிறார். இது வெறும் கருத்துத் தெரிவிப்பே தவிர ஆய்வுரையன்று; அதேபோன்று 'இவரது சமயம் சமணமோ பௌத்தமோ அல்ல' எனக் கூத்தங்கண்ணனார் பற்றிக் கூறுவதற்கு நாட்டாருக்குள்ள சைவப் பற்றும் புறச்சமய வெறுப்புமே காரணமாகின்றன. இன்னா நாற்பதும் இனியவை நாற்பதும் ஒன்று மற்றொன்றைப் பார்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கும் நாட்டார் எது, எதைப் பார்த்து எழுதப்பட்டது என்ற ஆராய்ச்சிக்குச் செல்லவில்லை. நாட்டார் உரை எழுதிய இந்நீதிநூல்கள் அனைத்திற்கும் முன்னைய உரை இருந்ததைக் குறிப்பிடுபவர், பலவற்றிற்கு அவ்வுரை யாரால் எழுதப்பட்டது என்ற விவரம் தரவில்லை. இவற்றை எல்லாம் பார்க்கிறபோது, இந்நீதிநூல் உரைகளும் பாடநூல்களுக்காக எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

கார் நாற்பது, இன்னா நாற்பது முகவுரைகளின் பெரும்பகுதி ஒரே மாதிரி அமைகின்றன. குறிப்பாகப் பதினெண் மேற்கணக்கு - கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய விளக்கம், கீழ்க்கணக்கின் எண்ணிக்கையில் உள்ள சிக்கல், கைந்நிலையா, இன்னிலையா என்ற சர்ச்சை - இரண்டிலும் ஒரே மாதிரி அமைகின்றன.

இவ் இரு நூல்களின் உரையமைப்பு கூடப் பிற நீதி நூல் உரைகளிலிருந்து மாறுபட்ட நிலையில் ஒரே மாதிரியாக அமைகின்றன. இந்நீதிநூல் முகவுரையில் கபிலரைப்பற்றியும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பற்றியும் மட்டுமே விரிவாக எழுதுகிறார்.

'இன்பத்தின் காரணத்தை அறிந்து மேற்கொள்ளுதலினும் துன்பத்தின் காரணத்தை அறிந்து அதனின் நீங்குதல் முதற்கண் செயற்பாலதாகலின் கபிலர் துன்பத்தின் மூலங்களைத்

தொகுத்துரைத்தார்' என நாட்டார் குறிப்பது 'இருத்தலியல்' வாத நிலைப்பாட்டை நினைவுகூர்கிறது. இத்தத்துவம் இன்பம் நிலையானதா, துன்பம் நிலையானதா; இருள் நிலையானதா, ஒளி நிலையானதா என்பதான கேள்வியை முன்வைத்து இருண்மையே நிலையானது; துன்பமே நிலையானது என முடிவுரைக்கும்.

இனி இன்னா நாற்பது, கார் நாற்பது உரை அமைப்பைக் காணலாம். இவை பதவுரை, விளக்க உரை என ஒரேஅமைப்புடையன; விளக்கவுரைப் பகுதி 'விளக்கவுரை' எனச் சுட்டப் படாது இருவுரைகளிலும் தரப்படுகிறது. இவ்விளக்கவுரை ஒரே மாதிரியாக 1. மேற்கோள் காட்டல், 2. சொற்பொருள் தருதல் 3. பாடபேத உரை கூறல் 4. இலக்கணக் குறிப்புரைத்தல் 5. முடிப்புரை தருதல் என அமைகின்றது.

1. மேற்கோள் மூலநூலில் வரும்சொல், தொடர் மற்றும் கருத்துகளுக்கு இணையான பகுதிகள் பிற நூல்களில் வருவதை இருநூல் உரைகளின் ஒவ்வொரு பாட்டுக்கும் தவறாது எடுத்துக் காட்டுகிறார். 'ஈதற் பொருட்டும் பகைவர்த் தெறுதற் பொருட்டும் பிரிந்த தலைவனைக் கார்கால மழை கொண்டுவந்து சேர்க்கும்' (கார் :7) என்ற பாடல் உரையில்., அறஞ் செய்தற்கும் பகைதெறுதற்கும் பொருள் காரணம் ஆதலை,

"அரிதாய அறன்எய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும் ....
தருமெனப் பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்"

என்னும் பாலைக் கலியானும் அறிக" என மேற்கோள் காட்டுவார். இம் மேற்கோள் பாடல்கள் இன்னநூலில் உள்ளன எனக்குறிக்கும் நாட்டார் அவை எத்தனையாவது பாடல் என்பதைக் குறிப்பிடவில்லை.ஆனால் இன்னா நாற்பதில் மட்டும் பின்னிணைப்பில் 'மேற்கோள் விளக்கப் பாடல்' என விவரம் தருகிறார்.

2. சொற்பொருள்: அருஞ்சொற்பொருளன்றிச் சில எளிய சொற்களுக்கும் பொருள் உரைத்தல் காணப்படுகிறது.

எடு: அயிர்மணல் – இளமணல்; ஆவது நுண்மணல் (கார்.3)
ஆலி – நீர் திரண்ட கட்டி (கார் : 3)
வேளாண்மை – உபகாரம் – (இன்னா : 36)

இவற்றில் நல்ல தமிழ்ச் சொல்லுக்கு மாறான வடமொழிச் சொல் இடம் பெறுதலும் குறிப்பிடத்தக்கது. சிலபோது பதவுரைக்கு

மாறான பொருள் பொருத்தமும் இச் சொற் பொருள் விளக்கத்தில் இடம்பெறுதல் உண்டு

எழில் (ஏறு) – எழுச்சியுடைய ஆண் எருமை (பதவுரை)
– எழில் – அழகுமாம்;

சேண் – ஆகாயம் (ப.உ.); தூரமும் ஆம் (கார் :31)

பாடபேத உரை : எல்லாவிதமான பாடவேறுபாடுகளுக்கும் உரை விளக்கம் தரவில்லை. ஒருசில இடங்களில் மட்டுமே - அதுவும் இரு பாடங்களும் பொருள் பொருத்தமுடைய பகுதிகளில் மட்டுமே இவ்வுரை அமைகின்றது.

எடு: மெல்லவும் தோன்றும் – மழை மென்மையாகத் தோன்றும்; எல்லியும் என்பது பாடமாயின் இரவிலும் எனப் பொருள் கொள்க (கார் : 24)

துறை அறியான் நீரிழிந்து – துறையை அறியாதவன் நீரில் இறங்கிச் செல்லுதல்

அறியாநீர் – என்பது பாடமாயின் அறியப்படாத நீர் என்க (இன்.37)

இலக்கணக்குறிப்புரைத்தல்

பிற இலக்கிய உரைபோன்று இக்கீழ்க்கணக்கு நூல்களிலும் இலக்கணக் குறிப்புரைத்தல் மிகுதியாக இடம்பெறுகின்றது. இவையும் மூல நூலை வாசிக்கும் வாசகன் இடர்ப்படாவண்ணம் இவ்வாறுதான் வாசித்துப் பொருள் கொள்ள வேண்டும் என்ற முறையிலேயே குறிப்பிடுகிறார். மூல நூலாரின் இலக்கண வரம்பு மீறல் இங்கு இலக்கணக் குறிப்பாகத் தரப்படுகின்றது.

எடு : திருபாக்கு – வினை எச்சம் (கார் : 11)
சாயல் – உரிச்சொல் (" 12)
ஏம்>ஏமம் – இடைக்குறை (" 13)

முடிப்புரை தருதல்

இதுவும் பழைய உரையாசிரியர் மரபைப் பின்பற்றியதே. இது எல்லாவிடத்தும் இடம்பெறவில்லை. ஒருசில பாடல்களுக்கு மட்டுமே தருகிறார்.

எடு : 'பாதிரி வாட, ஆலிபுரள, வானம் வளி போழ்ந்து ஒருத்தி திறத்து எழும் என வினை முடிவு செய்க' (கார் : 3)

ஔவையாரின் நீதிநூல்கள்

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை ஆகிய நான்கின் உரைகள் பதவுரை, பொழிப்புரை என ஒரே அமைப்புடையன. இங்குப் பதவுரை தருகிறபோது பலவாறு வடசொல் பயன்பாடு அமைகின்றது. "அறன் - தருமம்; சினம் - கோபம்; தந்தை - பிதா; தாய் - மாதா; நன்றி - உதவி; என எழுதுவார். 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் (கொன். 4) என்பதற்கு 'உலோபிகள் தேடிய பொருளைத் தீயோர் அபகரித்துச் செல்வர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஒரே பாடத்திற்கு இருவேறு பொருள் தருதலும் உண்டு.

எடு : உடையது விளம்போல் – உன்னுடைய பொருளைப் பிறர் அறியும்படிச் சொல்லாதே; உன்னுடைய பொருள் அல்லது கல்வி முதலிய சிறப்பை நீயே புகழ்ந்து பேசவேண்டா – (ஆத் : 5)

ஆம் – அசை (நல் :7); அழகும் என்பதில் உம்மை தொக்கது (மூ:3) 'ஓ' – இரண்டும் எதிர்மறை (மூ:6)
என இச்சிறு நூல்களிலும் இலக்கணக் குறிப்புத்தரும் போக்கு அமைவது குறிப்பிடத்தக்கது. என்றாலும் இவற்றில் ஆழமான பொருளை ஆசிரியர் தேடவில்லை என்றே தோன்றுகிறது.

நறுந்தொகை உரை பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை என அமைகின்றது. "பழைய பதிப்பில் பல பிழைகளும் பாடபேதங்களும் இருப்பதால், இப்பதிப்பில் இவை பலவற்றையும் கூடிய வரையில் திருத்தம் செய்து இன்றியமையாத பாடவேறுபாடுகளையும் காட்டி, பதவுரை பொழிப்புரைகளுடன் சிறப்புக் குறிப்புகளும் திருந்த எழுதியிருப்பது காணலாகும்" என்று இவ்வுரை முன்னுரையில் குறிப்பிடுகிறார் நாட்டார். சிறப்புரையில் சொற்பொருள் தரல், இலக்கணக் குறிப்புரைத்தல், மேற்கோள் காட்டல் இடம்பெறும்.

'அடினும் பால்பெய்து கைப்பு அறாது பேய்ச்சுரைக்காய்' என்பதன் உரையில் 'உப்பொடு நெய் பால் தயிர்காயம் பெய்தடினும், கைப்பறாபேய்ச் சுரையின் காய்' என்ற நாலடியார் பாடலை எடுத்துக் காட்டுவர். 'குலமகட்கு அழகு கொழுநனைப் பேணுதல்' (நறுந் : 12) என்பதற்கு, 'குலமகட்கு அழகாவது தன் கணவனை வழிபடுதல் / பூசித்தல்' என உரை கூறுவது இயல்பாக இல்லை. இதனை எண்ணியோ என்னவோ விளக்கவுரையில் 'பேணுதல்'- என்பதற்கு

உண்டி முதலியவற்றால் உபசரித்தல் என்றும் பொருள் கொள்ளலாம்' என்கிறார்.

நன்னெறி உரை பதவுரை, கருத்துரை என்ற அமைப்பில் மட்டுமே அமைகின்றது; ஒருசில இடங்களில் 'அசை' நிலைகளை மட்டும் இலக்கணக் குறிப்பாகத் தருகிறார். உலகநீதி உரை பதவுரை, பொழிப்புரையாக அமைந்தாலும், மேற்கோள் காட்டல் ('தன்நெஞ்சறிவது பொய்யற்க' என்றார் திருவள்ளுவர் - 2), இலக்கணக் குறிப்புரைத்தல்(குறவருடை - குறவருடைய எனப் பெயரெச்சம் குறைந்து நின்றது - பா:1; நஞ்சு - பாம்பிற்கு ஆகுபெயர் - பா:2; இல்வாய் என்பது வாயில் என்றாகி வாசல் என மருவிற்று - பா:3; பாடபேதம் கூறல் (சினந்திருந்தார் - சினத்திருந்தார்) ஆகிய கூறுகளையும் உள்ளடக்கியுள்ளது.

முடிவுரை

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரையை நோக்குகிறபோது, அவருக்குப் பழந்தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலையில் இருந்த ஆழ்ந்த ஈடுபாடும் புலமையும் தெரியவருகிறது. அதோடு இவருரைகள் அனைத்தும் பாட நூல்களை மையமிட்டே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற உணர்வும் எழுகிறது. நாட்டாருக்கு இலக்கணத்தில் குறிப்பாகத் தொல்காப்பியத்தில் நல்ல பயிற்சியும் புலமையும் ஈடுபாடும் இருந்திருக்கிறது என்பது தெரியவருகிறது. தொல்காப்பிய மூலம் மட்டுமன்றி அனைத்து உரைகளும் அவருக்கு ஆழமாகத் தெரிந்திருக்கிறது என்பதையும் அவரது உரையால் அறியமுடிகின்றது. காரணம் ஏனைய பழந்தமிழ் உரையாசிரியர்களைக் காட்டிலும் மிகுதியான இலக்கணக் குறிப்புகளைத் தந்திருப்பதே எனலாம். இவை மூல நூலாரின் இலக்கண வரம்பு மீறலை நியாயப் படுத்துகிற முறையில் தவறான வாசிப்பு முறையை வாசகன் ஏற்படுத்திக் கொள்ளா வகையில் தரப்பட்டனவே எனலாம்.

*****

திறனாய்வுத் திறன்

கஸ்தூரி நாகராஜன்

ஆழ்ந்த அறிவுடைய தமிழ்ப்புலவர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் பிஷப்ஹீபர் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், ஆகிய கல்வி நிறுவனங்களில் பணியாற்றியவர்; சிறந்த உரையாசிரியராகவும், திறனாய்வாளராகவும் விளங்கியுள்ளார். "இலக்கியத் திறனாய்வாளன், ஓர் இலக்கியத்தை நன்கு கற்றுத் தனது கூர்ந்த அறிவினாலும், அக்கலையை அனுபவிக்கத் தனக்குள்ள தனிப்பட்ட உணர்வினாலும் நன்கு ஆய்ந்து, அவ்விலக்கியத்தின் குறைவு, நிறைவுகளை மதிப்பிட்டு அது சிறந்தது என்றோ, மட்டமானது என்றோ கூறுபவனாவான்." என்கிறார் இலக்கியக்கலை என்னும் நூலில் அ.ச. ஞானசம்பந்தன்.

இலக்கியத்தைத் திறனாய்வு செய்கின்றவர், அவ்விலக்கியத்தை ஆர்வத்துடனும் நடுநிலைமையுடனும் கற்க வேண்டும் என்பர். இதற்கு விதிவிலக்கு அல்லர் நாட்டார். இவர் சங்க இலக்கியம், காப்பியம், நீதி நூல்கள், புராணம், இலக்கணம் என்று அனைத்தையும் ஆழமாகக் கற்று இலக்கிய உலகிற்குத் தம் பங்கைக் காணிக்கையாக்கி யுள்ளார்.

நுண்மாண் நுழைபுலமுடைய நாட்டார் இலக்கியத் கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளாரே தவிரத் தம் கருத்தை ஏற்றிக் கூற வேண்டும் என்ற மனநிலையுடையவர் இல்லை என்பதை அவர் படைப்புகள் சான்றாக நின்று பறை சாற்றுகின்றன. நாட்டார் ஓர் இலக்கியவாதியாக இருந்துள்ளாரே ஒழிய சமுதாயவாதியல்லர். எனவே, இலக்கிய விளக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார். புதிய கருத்துகளுக்கு வடிவம் தந்துள்ளார்.

திறனாய்வாளனுக்கு முயற்சி, உண்மை, நடுவுநிலைமை, மெய்யறிவு, கற்பனை ஆகியன வேண்டும் என்று டாக்டர். ஜான்ஸன் எடுத்தியம்பியுள்ளார். 1940இல் வாழ்ந்த இலக்கியவாதிகள் இலக்கியங்களைக் கற்பதையே தங்கள் கடனாகக் கொண்டு இலக்கிய ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்து மகிழ்ந்தார்கள். இலக்கியம் கற்பதே ஒரு யோகநிலை என்று கூறும் நாட்டார், உரை எழுதும் போது

தமக்கு முன்பு உள்ள உரைகளை ஒப்பிட்டுத் தம்முரை சிறந்தது என்று முடிவு கூறியுள்ளார். பாராட்டுமுறைத் திறனாய்வினையும் அவரிடம் காணமுடிகின்றது. வரலாற்று முறைத் திறனாய்விற்கும் முக்கியம் தந்துள்ளார். நயம் பாராட்டு முறையும் இவரிடமுள்ளது.

ந.மு. வேங்கடசாமி நாட்டார் 1920-1940க்குள் பல இலக்கியங்களைத் திறனாய்வு செய்துள்ளார். ஆழ்ந்த அறிவும், தெளிந்த ஞானமும் கொண்ட நாட்டார் தமிழ் இலக்கியத் திறனாய்வுலகில் ஒரு விடிவெள்ளியாகத் திகழ்ந்துள்ளார். இலக்கியத்தைச் சுவைத்துத் தம் அனுபவத்தைப் பல படைப்புகளாக்கியுள்ளார்.

"ஒரு நூலை, அதன் மதிப்பை, அதன் தன்மையைக் கொண்டே அளவிட வேண்டும். நூலைத்தான் மதிப்பிட வேண்டுமே ஒழிய, நூலாசிரியனின் கருத்துகளில் தலையிட்டு, அவனைத் தடைப்படுத்த எண்ணக்கூடாது. நூலாசிரியனுக்கும், விமர்சகனுக்கும் நூல் ஒன்றுதான் தொடர்புச் சங்கிலியாக வேண்டும்." (இலக்கிய விமர்சனம், ப. 16) என்னும் கருத்திற்கு ஏற்ப, நாட்டார் எவ்விலக்கியத்தைத் திறனாய்வு செய்ய முயன்றாரோ அவ்விலக்கியத்தைப் பல்கோணங்களிலும் ஆய்ந்து உண்மையை வெளியிட்டுள்ளார்.

திறனாய்வு என்பது குறிப்பிட்ட இலக்கியத்தை அல்லது இலக்கியங்களை அல்லது குறிப்பிட்ட படைப்பாளியைப் பற்றிப் பேசுகிறது. (தி.சு. நடராசன், திறனாய்வுக் கலை, ப. 2). ஒரு திறனாய்வாளன் ஒரு நூலைத் திறனாய்வு செய்வதற்கு முன்பு தன்னறிவை வளர்த்துக் கொள்வது மிக இன்றியமையாதது. திறனாய்வாளன் நிறைந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்; அவ்வறிவை நூலறிவால் மட்டுமே பெறமுடியும் என நாட்டார் கருதுகின்றார். (நமு. வேங்கடசாமி நாட்டார் கட்டுரைத் திரட்டு, ப. 3).

தொல்லோர் வழி நின்று அவர்கள் கற்றறிந்த உண்மைகளைக் கற்றுத் தேர்ந்து அவற்றினை அடித்தளமாக்கிக் கொண்டு திறனாய்வு செய்யும் திறனாய்வாளர்களே வெற்றி பெற முடியும் எனக் கருதுகின்றார். (மேலது, ப. 4).

கல்வியால் விளையும் இன்பம் பெரிது என்று விளக்கப்போந்த நாட்டார் சிந்தாமணி, கம்பராமாயணம், திருக்கோவையார், தேவாரம், பெரியபுராணம், தணிகைப்புராணம், தஞ்சைவாணன்கோவை, திருக்குறள் ஆகிய இலக்கியங்கள் கூறும் கல்வி இன்பத்தையெல்லாம் ஒப்பிட்டு எழுதியுள்ளார். இம்முறை,

திறனாய்வாளனுக்குப் பரந்துபட்ட அறிவு இருத்தல் வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது.

கல்வி அறிவுடைய திறனாய்வாளர் தவஞ்செய்பவர்க்குச் சமம் என்கிறார். (மேலது, ப. 11). நூலறிவு பெறப் பல நூல்களை நாடும் போது மன ஒருமைப்பாடு, வாய்மை, அன்பு, அருள் ஆகியன தோன்றும். கல்வியுடையார் அறம் வளரும் செழு நிலனாதல் தேற்றம் என்பார் (மேலது, ப. 11).

இரவு பகல் உழந்து தேடி அறிவைப் பெருக்க வேண்டும். பல நூல்களையும் பயின்று அவற்றின் பொருளை நுண்ணிதின் ஆராய்தல் மேன்மை பயக்கும். நூலாராய்ச்சியும் நுண்ணறிவும் ஒன்றற்கொன்று துணையாக நிற்றல் அவசியம். நன்கு ஆய்ந்து பொருண்மை வேண்டல் வேண்டும். கருத்தை அறிதலுடன், அவை ஒன்றற்கொன்று மறுதலையாய வழி, அவற்றுள் மெய்ம்மையை உணர்தல் வேண்டும். உண்மைப் பொருளை உணர்தலே திறனாய்வின் நோக்கமாகும். ஆய்வு மக்களின் அறிவை வளர்ப்பது. திறனாய்வு தமிழ்நாட்டிற்கு வந்த புதியமுறையல்ல. தொன்று தொட்டு வழக்கிலுள்ள பழைய முறையாகும். இதற்குத் தொல்காப்பியர் சூத்திரங்களே சான்றாகின்றன.

முறையான கல்வி உடையவர்களே ஆராய்ச்சியாளர். ஆராய்ச்சி வல்லுநர் எனத் தம்மை மதிக்கவேண்டும் என்பதற்காகப் படைப்பாளனைக் குற்றம் கூறுவதும் அல்லது போற்றுவதும் முறைமையன்று. விருப்பு வெறுப்பின்றி உண்மைப் பொருள் காண வேண்டும் என்னும் நோக்கத்துடன் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். (மேலது, ப. 22).

ஓர் ஆய்வாளர் ஆய்வு செய்யும் போது இலக்கியம் தோன்றிய காலத்திற்கும் முதன்மை கொடுத்து ஆய்வு செய்ய வேண்டும். அப்போதுதான் ஆய்வு முழுமை பெற்றதாகும் என்பதை உணர்ந்து நாட்டார், "நூலின் பொருளை உள்ளவாறுணர்தற் பொருட்டே அதன் காலத்தை வரையறுத்துணர்தல் வேண்டும், காலத்தை நோக்க வேண்டுவதின்றென்பது அறியாமையாம்" (மேலது, ப. 24) என்கிறார்.

இங்ஙனம், "கல்வி" என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் ஆய்வு பற்றியும் ஆய்வாளன் திறம் பற்றியும் பேசுகின்றார். அறிவு நுட்பம் மிகுதியும் பெற்றவராகவும், ஆழ்ந்த கல்வியுடையவராகவும், நிறைந்த நூலறிவு விளங்கப் பெற்றவராகவும்

ஆய்வாளர் விளங்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். கல்வி என்பது காலம் கடந்தது. நூலறிவு சார்ந்தது, பெயர்க்குப் பின் பட்டங்களை நீட்டமாக எழுதுவதற்கு மட்டும் பயன்படுத்துவது அன்று என்னும் கருத்துடையவர்; நூல்களைத் தேடிக் கற்று ஒவ்வொரு திறனாய்வாளரும் சிறந்த அறிவுக்குரியவராகத் திகழ்ந்தால்தான் திறனாய்வு சிறப்பாக அமையும் என்கிறார்.

வள்ளுவர் வாய்மொழி என்னும் தலைப்பில் கருத்துகளை விளக்கும் நாட்டார், 'ஆராய்ச்சி முறையிலே, அவருடைய காலம், இடம், சிறப்பு, மதம் என்பன குறித்து எமக்குத் தோன்றுவனவற்றைச் சுருக்கமாகக் கூறுதும்" என்கின்றார். திருவள்ளுவர் காலத்தைக் கூறமுயன்ற நாட்டார் இரட்டைக் காப்பியங்களின் காலத்தைக் கொண்டு வள்ளுவர் கி.பி. முதல் நூற்றாண்டில் விளங்கினவராவர் எனக் கூறுகின்றார். தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாத ஒன்றைக் கண்டறியும் முறைமையை இங்குப் பின்பற்றுகின்றார்.

வள்ளுவம் என்பது தொன்மைக்குடி; அக்குடியினர் சோதிடத்தில் வல்லவர்கள். வள்ளுவர், படையெழுச்சி நாள், மணநாள், மன்னன் பிறந்த நாள் என்னும் இப்பெரு நாட்களிலே முரசெறிந்து தெரிவிப்பர். இத்தகைய குடியில் தோன்றியவர் வள்ளுவர் என்ற முடிவினைக் கூறுகின்றார். அதே போன்று வள்ளுவர் சமயம், சைவசமயம் என்று கருதுகின்றார். சமயம் கடந்தவர் வள்ளுவர் என்னும் கருத்தே மேலோங்கி நிற்கும் போது, நாட்டார்

> "சைவ சமய நெறித்தலைவர் சிலர் திருக்குறளைத் தங்கள் சமய நூற் பொருண்மைக்கு மேற்கோளாக எடுத்துக் காட்டுதலும், சைவ தவ வடிவமாகத் திருவுரு நிறுவி வழிபடப் பெறுதலும், நாயனார் என்று பெயர் தந்து தமிழ் மக்களால் வழங்கப் பெறுதலும் போல்வன சைவரென்னும் ஆட்சியின் பாலவாம்" (மேலது ப. 31) என்கிறார்.

வள்ளுவரை, ஒவ்வொருவரும் தாங்கள் சார்ந்திருந்த சமயத்திற்குட்படுத்திக் கூறுவதில் பெருமைகண்டது போன்று நாட்டாரும் தாம் சார்ந்த சைவசமயத்திற்குட்படுத்தி வள்ளுவரைக் காணுவது ஒரு பொதுவானத் திறனாய்வுக் கோட்பாடு என்றே கூற வேண்டும்.

வள்ளுவரின், குறட்பாக்களின் சிறப்புகளை விளக்கும் நாட்டார், சுருங்குதல், விளங்குதல், இனிதாதல் என்ற பண்புகளை வள்ளுவத்தில் காணுகின்றார். உலகியலுணர்வின் நிறைவினை வெளிப்படுத்தும் போது,

"தொடிப்புழுதி கஃசா வுணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப்படும்"

என்னும் உழவின் நுணுக்கத்திற்கு முதன்மை வழங்குகிறார். திறனாய்வாளன் தாம் வாழும் சமுதாயத்தின் வரவேற்பு, தேவை, அறிமுகம் ஆகியனவற்றை மனத்திற் கொண்டு அதற்குத் தகத் தன் ஆய்வை மேற்கொள்ள வேண்டும். தஞ்சை மண்ணில் பிறந்து வளர்ந்த நாட்டார் உள்ளத்தில் உழுதொழில்நுட்பக் குறள் எழுச்சியை உருவாக்கியுள்ளது.

ஒருவர் "சுந்தரர்" பற்றி எழுதுகின்றார் என்றால் அவரது பக்தி மார்க்கத்தையும், இறைவுணர்வையும் தெள்ளத்தெளிய எடுத்தியம்புவதிலேயே முழுக் கவனம் செலுத்துவார். ஆனால், நாட்டார் சுந்தரரின் "நுணங்கிய கேள்வித்திறன்" குறித்து ஆய்வு செய்வது வியப்புக்குரியது. சுந்தரர் கல்வித்திறனைக் கூறும் போது அவரது பரந்து பட்ட ஊர்ப்பெயராய்வினை வெளிக் கொணர்கின்றார். பதிகள், அப்பதிகளுள் அமைந்த உள்நாடுகளைக் காட்டும் திறத்தை விளக்குகிறார். "மருகல் நாட்டு மருகல், கொண்டல் நாட்டுக் கொண்டல், குறுக்கை நாட்டுக் குறுக்கை, வெண்ணிக் கூற்றத்து வெண்ணி, நாங்கூர் நாட்டு நாங்கூர், நறையூர் நாட்டு நறையூர், மிழலை நாட்டு மிழலை, வெண்ணி நாட்டு வெண்ணி, பொன்னூர் நாட்டுப் பொன்னூர், புரிசை நாட்டுப் புரிசை, வேளூர் நாட்டு வேளூர், விளத்தூர் நாட்டு விளத்தூர்" (மேலது, ப. 42) என்பன சான்றுகள். சோழ நாட்டு உட்பிரிவுகள் சுந்தரர் வாழ்ந்த காலத்தில் எங்ஙனம் இருந்தன என்பதைக் காட்டும் நாட்டார் தற்காலத்தில் நடைபெறும் ஊர்ப்பெயராய்விற்கு ஒரு முன்னோடி எனலாம்.

இறைவன் இன்பத்தில் மூழ்கி மகிழ்ந்த சுந்தரர் கல்வியின்பத்திலும் மகிழ்ந்த பேற்றினைக் காட்டுகிறார். அதற்குக் "கற்ற கல்வியினும் இனியனை", "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்", "பண்ணார் இன்றமிழாய்" என்பனவற்றை ஆதாரமாக்குகிறார். சுந்தரருக்குக் கல்வியில் இன்பம் இருந்ததால்தான் அடியவர்கள் வரலாற்றில் ஆர்வம் இருந்தது என்பது நாட்டார் கருத்து.

"திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகம் ஒன்றே தம்பிரான் தோழரின் பேராராய்ச்சியைப் புலப்படுத்தும் கருவியாதல் அமையும். பற்பல நிலங்களில் பல்வேறு காலத்திருந்த நாயன்மார் பலரையும் ஒருங்கே முதற்கண் அறிவிப்பது இப்பதிகமேயன்றோ?

திருத்தொண்டர் பலருடைய வரலாறுகளையும் முதன் முதல் அறிந்து கொள்வதற்கு எவ்வளவு சிறந்த ஆராய்ச்சி நிகழ்ந்திருக்க வேண்டும். அடியார்களின் வரலாறுகளைச் செவ்வன் அறிந்திருப்பினன்றி, அவர்கள்பால் அன்பும், அவர்களைப் பரவுதற்கண் ஆர்வமும் மனவெழுச்சியும் நிகழாவன்றே? எனவே, திருத்தொண்டத் தொகையானது அடியார்களின் வரலாற்றை விளங்க உரைத்திலதேனும், வன்றொண்டப் பெருந்தகை நன்கனம் அறிந்திருந்தாராதல் தேற்றம்" (மேலது ப. 42) என்கிறார்.

ஒரு திறனாய்வாளன் ஆய்வின் எல்லையை வகுக்கும் போது, பிறரில் தாம் எவ்வாறு மாறுபட்டவனாகத் திகழவேண்டும் என்பதை முடிவு செய்வது அவசியம். நாட்டார் ஒருவரைத் திறனாய்வு செய்யும் போது தன் தனித்துவம் வெளிப்படும் வகையில் தம் நோக்கையும், அணுகுமுறையினையும் அமைத்துக் கொண்டுள்ளார். சுந்தரர் ஆய்வுத் திறனைக் கண்டு மகிழ்வது என்பது ஒரு வித்தியாசமான தனிநிலையே. சுந்தரர், அடியவர் வரலாற்றினைத் தொகுப்பதற்கு முன் அவர் தேடுதல் பணியை மேற்கொண்ட திறம், அறிந்துகொள்வதில் ஆர்வம், அவர்களிடம் அன்பு, பிறர் அறியத் தூண்டுதல் போன்ற ஆய்வுநெறிகளைச் சுந்தரரிடம் நாட்டார் காணுகின்றார். ஆய்வு என்பது இன்று தோன்றிய ஒன்று அன்று; அது தொன்மையானது. இலக்கியத் திறனாய்வாளரை இறையடியவர்களிடமும் காணலாம் என்பது நாட்டார் கருத்து. நாம் ஒரு திறனாய்வாளராகத் திகழ்கிறோம் என்றால் மற்றொரு திறனாய்வாளரை இலக்கிய உலகிற்கு அறிமுகப் படுத்துகின்றோம் என்பதாகும். சுந்தரரின் திருத்தொண்டர் தொகை பெரியபுராணமாக விரிந்தது என்றால் ஓர் ஆய்வின் சுருக்கம் மற்றொரு ஆய்வின் பெருக்கத்திற்கு வழி வகுக்கவேண்டும். ஒரு கண்டுபிடித்தலினின்றும் பல உண்மைகளைக் கண்டறிவதே விஞ்ஞான ஆய்வு. அது போன்றதே இலக்கிய ஆய்வும். ஒன்றின் தொடக்கம் மற்றொன்றின் பரிணாமமாக இருக்க வேண்டும் என்று நாட்டார் கருதிச் சுந்தரர் என்ற இறையடியாரை இலக்கிய உலகின் திறனாய்வாளராக அறிமுகப்படுத்தியுள்ளார்.

நற்றிணை 15, குறுந்தொகை 230, அகநானூறு 28, புறநானூறு 199 ஆகிய பாடல்களைப் பாடிய அறிவுடைநம்பியைத் திறனாய்வு செய்ய முயன்ற நாட்டார் அறிவுடைநம்பியின் தன்னுணர்வு வெளிப்படும் இடங்களை மட்டும் ஆய்வு செய்கின்றார். மற்றும் ஒரு படைப்பாளர் தம் மெய்வரலாற்றினைத் தம்

படைப்பில் வெளிப்படுத்துவது தவறு இல்லை என்ற கருத்தாக்கத்தை முன் வைத்துள்ளார் (மேலது, ப. 61).

ஆய்வாளர்களுக்கு முதன்மை வழங்கும் போக்கு நாட்டாரிடம் காணப்படுகிறது. கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் என்றும், முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக இருந்து தமிழை ஆராய்ந்தனர் என்றும் கூறும் கருத்துகளை மேற்கோளாகக் கொண்டு உக்கிரப் பெருவழுதி காலத்தை ஆய்வு செய்துள்ளார். அகநானூறு என்னும் நெடுந்தொகையைத் தொகுப்பித்தவன் என்பதால் அப்பாட்டுகள் அனைத்தும் பாடப் பெற்ற பின்னர் இவன் வாழ்ந்திருத்தல் ஒரு தலை. மற்றும் இவனொடு ஒத்தகாலத்தவரான சேரமான் மாவெண்கோ சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி, ஐயூர் மூலங்கிழார், உலோச்சனார், பாண்டரங்கண்ணனார் முதலிய புலவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதி. யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் முதலிய அரசர்களும், நக்கீரனார், மருதனிள நாகனார், கூடலூர் கிழார், மாங்குடி கிழார் முதலிய புலவர்களும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதி. உக்கிரப் பெருவழுதி, அவனுடன் ஒருங்கிருந்த மாவெண்கோ, பெருநற்கிள்ளி என்னும் சேர சோழ மன்னர்களையும் ஔவையார் பாடியுள்ளார். அகநானூற்றைத் தொகுத்தவர் உப்புரிகுடிகிழார் மகன் உருத்திரசன்மர்.

உக்கிரப்பெருவழுதி பாடிய பாடல்கள் அகநானூற்றில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றும் உள்ளன எனும் கருத்துகளைச் சான்றாகக் கொண்டு உக்கிரப் பெருவழுதிக் காலத்தைக் கி.பி. 2ஆம் நூற்றாண்டு என்று முடிவு செய்கின்றார்.

தமிழாராய்ச்சியிற் சிறந்து விளங்கிய மு.இராகவையங்கார் "பொய்கையார்" என்னும் தலைப்பில் "செந்தமிழ்" முதல்தொகுதி ஆறாம் பகுதியில் வெளியிட்டுள்ள ஆய்வுக் கட்டுரைக்கு நாட்டார் "பொய்கையார்" என்னும் தலைப்பிலேயே மறுப்புக் கட்டுரை எழுதியுள்ளார். "பொய்கையார்", "பொய்கையாழ்வார்", ஆகிய இருவரும் ஒருவரல்ல என்று ஆராய்ந்து நிறுவியுள்ளார். "ஒரு பெயரினராயினும் இருவர் என்று கொள்ளப்படுவோரை ஒருவர் என்று நாட்டலுறின் அவர்க்குள் காலம், இடம், குடிப்பிறப்பு, பண்பு முதலியவற்றில் ஒருமைப்பாடு காண வேண்டியது இன்றியமையாததாகும்" என்கிறார்.

பொய்கையாழ்வார், திருவெஃகாவில் தோன்றியவர். இவர் திருவந்தாதி, தொல்காப்பிய உரையில் எடுத்துக் காட்டப் பட்டிருப்பதால் அவரைச் சங்க காலத்தவர் என்று துணிந்து கூறமுடியாது. பின்னர்த் தோன்றிய எத்தனையோ பல நூல்களிலிருந்து உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். எனவே, மேற்கோள் ஒன்றை ஆதாரமாகக் கொண்டு பொய்கையாழ்வாரைச் சங்க காலத்திற்குக் கொண்டு செல்வது பொருந்தாது என்கிறார்.

பொய்கையார் தோன்றிய இடம் தொண்டி. பொய்கையார் மானிடம் பாடும் புலவர். பொய்கையாழ்வார் இறைவனைப் பாடியவர்.

"மாயவனை யல்லாது வாழ்த்தாது கையுலகம்
தாயவனை யல்லது தான்தொழா"

என்கிறார் பொய்கையாழ்வார். மற்றும்,

"பாடினினும் நின்புகழே பாடுவன் –சூடினும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவேன்"

என்று மானிடம் பாடேன் என்கிறார். ஆக, இருவரும் ஒருவர் என்று இருவரின் குணநலம் கொண்டு ஒப்பிடும் போதும் பொருத்தப்பாடில்லை என்று கருதுகின்றார். கோச்செங்கணானைத் திருமங்கையாழ்வார் தம்முடைய திருநாறையூர் திருப்பதிகத்தில் பாடியுள்ளார் என்றாலும் அவ்வரசன் சிவனடியார்களுள் ஒருவரே. திருமங்கையாழ்வார் மானுடனைப் பாடியுள்ளதால் பொய்கையாரையும் பொய்கையாழ்வாரையும் ஒருவராகக் கருதுவது முறையன்று.

"பெரியார் பலரும் தாம் தாம் தோன்றிய காலத்துக்கும் ஏனைச் சார்புகட்கும் ஏற்ப வெவ்வேறு நெறிப்பாடும், கொள்கையும் உடையவராகின்றனர். சைவ சமயக் குரவர்களையாதல், வைணவ சமயத்து ஆழ்வார்களையாதல் ஏனைக் காலத் தேனையரொடு ஒப்புமைப்படுத்துரைத்தல் சிறிதும் தகாது என்பது என் கருத்து" (செந்தமிழ்ச் செல்வி ப. 262) என்கிறார்.

ஒவ்வொரு காலத்தில் தோன்றும் கொள்கைக்கு ஏற்ப இலக்கியங்கள் தோன்றுகின்றன. படைப்பாளர்களும் தங்களுக்கென்று தனி நெறியினை வகுத்துக் கொள்கின்றனர். எனவே, காலமும், அதன் அடிப்படையில் தோன்றும் கொள்கையும் ஆய்விற்கு அடிப்படை ஆதாரமாகின்றன.

களவழிபாடிய பொய்கையார் வேறு. தனிச்செய்யுட்கள் பாடிய பொய்கை முனிவர் வேறு. முத்ற்றிருவந்தாதி பாடிய பொய்கையாழ்வார் வேறு என்பது நாட்டார் கருத்து.

இன்னிலை பாடிய பொய்கையார் யார் என்கிற ஆய்வும் அக்காலத்தில் எழுந்துள்ளது. "பொய்கையார் பாடிய இன்னிலை முற்றிற்று" என எழுதப்பட்டுள்ளது கொண்டு வஉ. சிதம்பரம்பிள்ளை அவர்கள், இன்னிலையியற்றினார் பொய்கையார் என்னும் பொய்கையாழ்வாரே என்று குறித்து, களவழி நாற்பது பாடிய பொய்கையார் அவரின் வேறாவார் என்கிறார் செந்தமிழ்ச் செல்வியில்.

நாட்டார் யாப்பருங்கலவிருத்தி 93ஆம் சூத்திர உரையில் எடுத்துக் காட்டிய மூன்று செய்யுட்களில் ஒன்று இன்னிலைச் செய்யுளாகும். அதில், "என்றித் தொடக்கத்துப் பெருஞ்சித்திரனார் செய்யுளும், ஒளவையார் பத்தினிச் செய்யுளும் முதலாக உடையன" எனக் கூறியுள்ளார். எனவே, இன்னிலை பலரால் பாடப்பட்ட தொகை நூல் என்பது நாட்டார் கருத்து. "மதுரையாசிரியரால் தொகுக்கப்பட்ட இன்னிலை நாற்பத்தைந்து" என எழுதியிருப்பதால் பொய்கையார் ஒருவரால் இன்னிலை எழுதப்பட்டது என்ற கருத்துப் பொருத்தமற்றது என்பர்.

பொய்கையார், பொய்கையாழ்வார் இருவரும் ஒருவரல்ல என்னும் கருத்தை மறுத்துரைக்கப் பிறப்பு, குணம், காலம் முதலியனவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆய்வு செய்து, தம் கருத்தை நிலை நாட்டுவதில் தயக்கம் காட்டா மாண்பு வெளிப்படுகிறது.

கார்நாற்பது, களவழி நாற்பது, இன்னா நாற்பது, இனியவைநாற்பது ஆகியனவற்றிற்கு உரை எழுதிய நாட்டார் ஒவ்வொரு நூலுக்கும் முகவுரை எழுதியுள்ளார். முகவுரையில் நூல் எழுதிய ஆசிரியர் பெயர்க்காரணம், காலவரலாறு, தனித்திறன் ஆகியனவற்றிற்கு முக்கியத்துவம் தந்துள்ளார். களவழி நாற்பது பாடிய பொய்கையார் பற்றிச் செந்தமிழ்ச் செல்வியிலும் கூறியுள்ளார். களவழி நாற்பது நூல் தோன்றிய வரலாற்றினை ஆய்வு செய்துள்ளார்.

"சேரமான் கணைக்காலிரும்பொறையைப் பற்றிக் கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடி வீடுகொண்ட களவழி நாற்பது'' (மேலது ப. 365) என்று

கூறப்படுகிறது. இதற்குக் கலிங்கத்துப் பரணி விக்கிரமசோழன் உலா ஆகியனவற்றைச் சான்றாகக் கொள்கின்றார்.

புறநானூற்றுச் செய்யுள் 74இல் "சேரமான் கணைக்காலிரும் பொறை சோழன் செங்கணானோடு போர் செய்து, தோல்வியுற்று, சிறையிற் கிடந்து, தண்ணீர் தாமதமாகத் தரப்பட அதை, உண்ணாமல் துஞ்சினான்" என்று குறிப்புள்ளது. ஆனால், களவழி நாற்பது பாடிய உடன் "சிறைவிட்டரசளித்தான்" என்ற கருத்தும் உள்ளது. இருமுரண்பட்ட கருத்துகளையும் ஆய்வு செய்த நாட்டார், "தண்ணீர் பெறாது துஞ்சிய சேரன் ஒருவன்". சிறை நீக்கப்பட்டு அரசுபெற்றவன் வேறொரு சேரன் என்ற முடிவுக்கு வந்துள்ளார். சேரமான் கோக்கோதை மார்பனைப் பொய்கையார் பாடிய பாட்டுகள் இரண்டு புறநானூற்றில் உள்ளன. நற்றிணையில் ஒரு பாட்டுள்ளது. இவ்வேந்தனைக் கணைக்காலிரும்பொறை சிறையிட்டிருக்க வேண்டும். அவன் பொருட்டுப் பொய்கையார் களவழி நாற்பது பாடியிருக்கலாம் என்ற ஆய்வு முடிவினை வெளிப்படுத்தியுள்ளார். ஒரு சிக்கலை எடுத்துக் கொண்டு, அச்சிக்கலுக்குரிய முடிவினை வெளிப்படுத்துதலை நாட்டார் ஆய்வில் காண முடிகிறது.

பொய்கையார் பாடிய களவழி நாற்பது கி.பி.250 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டது என்று கூறும் நாட்டார், செங்கணான் காலத்தைக் கடைச்சங்கம் என்கிறார். செங்கணான் கழுமலம், வெண்ணி, அழுந்தை ஆகிய இடங்களில் செய்த போரினைக் குறிப்பிடுகிறார். திருத்தொண்டத்தொகை, திருமங்கையாழ்வாரின் திருநாறையூர்ப்பதிகம், தேவாரம் ஆகியனவற்றையும் சான்றாகக் கொண்டுச் செங்கணானைப் பற்றிய முழுவிவரத்தைத் தருவது திறனாய்வாளரின் ஆழமான நுண்ணறிவுக்கு ஓர் எடுத்துக் காட்டெனலாம்.

தமிழ்ப்புலவர் வரலாற்றில் அகத்தியரைப் பற்றிப் பேசும் நாட்டார் அகத்தியரை, ஆரியர், தமிழர் என்று பாகுபடுத்திக் காணும் முயற்சியில் ஈடுபட விரும்பவில்லை. ஒரு சான்றோரின் செயல்திறனைக் காணுதலே திறனாய்வின் நோக்கமாக இருத்தல் சிறப்பு மிக்கதாகும் எனக் கருதுகின்றார்.

"நம் பெருமக்கள் பல்லோரானும் தமிழ் முனி என்று பாராட்டப் பெற்ற அகத்தியனாரை நாமும் அங்ஙனம் கூறுவதால்

எய்தற்பாலதோர் இழுக்கில்லையென்க" (செந்தமிழ்ச் செல்வி ப. 13) என்கிறார்.

பல்வேறு காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் அகத்தியர் காலத்தைப் பற்றிக் கூறும் நாட்டார் "தவயோக சித்தி பெற்ற பெரியார் பல்லாயிரம் ஆண்டுகளேயல்ல பல்லூழிக் காலம் வாழ்ந்திருத்தல் கூடுமென்பது யோகநூற்களின் துணிவு. அகத்தியரோ சித்தர் குழாத்திற்கெல்லாம் தலைவராவர். அப்பெரியாரது வாழ்நாளை அறுதியிட்டுக் கூறப்புகுவது எம்மனோர்க்கு அடாததொன்றாகலின் அதனை இம்மட்டில் நிறுத்தும்" (மேலது, ப. 14) என்கிறார்.

காரணகாரியம் கூறமுடியாத நிகழ்வுகளைப் பற்றிய விமர்சனத்தில் திறனாய்வாளன் மிகவும் பக்குவமாக நடந்து கொண்டு, ஒரு கருத்துத் தோன்றியுள்ள மண்ணின் பண்பாட்டிற்கு ஏற்ப விமர்சனத்தைக் கொண்டு செல்வதே ஏற்புடைத்து.

பன்னிருபாட்டியலில், "அகத்தியர் பாட்டியல்" என்று ஒரு பகுதி உள்ளது. அது அகத்தியரால் எழுதப்படவில்லை என்பது நாட்டார் கருத்து.

இதற்கு, "சிதைவெனப்படுமே" என்னும் மரபியற் சூத்திர உரைக்குரிய பேராசிரியர் கருத்தையும், "விருந்தேதானும்" என்னும் செய்யுளியற் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் கூறும் உரையினையும், இலக்கண விளக்கப் பாட்டியலுரைகாரர், 'வித்தாரகவியை" என்னும் சூத்திர உரையில் கூறும் செய்தியினையும் அடிவேராகக் கொண்டு, "அகத்தியர் பாட்டியல்" அகத்தியரால் செய்யப்படவில்லை என்று உறுதியளிக்கிறார்.

திவான்பகதூர் எஸ்.பவானந்தம் பிள்ளையின் பேரகத்தியத் திரட்டு என்ற நூலைத் திறனாய்வு செய்து, "நூற்று அறுபத்து நான்கு சூத்திரங்கள் உள்ளன. அவை, பேர் அகத்தியம் எனப்படுகின்றன. ஆனால், அகத்தியனார் இயற்றியது இல்லை" (மேலது, ப. 376) என்று முடிவினைக் கூறியுள்ளார்.

பேர் அகத்தியத்திலுள்ள சில சூத்திரங்களை எடுத்துக் கொண்டு அவை தொல்காப்பியர் கூறும் இலக்கண முறையினின்றும் முரண்படும் இடங்களைச் சுட்டுகிறார்.

தொல்காப்பியனார் சகரம் ஒன்பது உயிரொடும், ஞகரம் மூன்று உயிரொடும், யகரம் ஆகாரவுயிர் ஒன்றொடும்

முதலாமென்று கூறியிருப்ப, இப்பேர் அகத்தியச் சூத்திரங்களில் அவை முறையே, பன்னிரண்டும், நான்கும், ஆறும் ஆகிய உயிர்களுடன் முதலாமெனக் கூறப்பட்டுள்ளன.

"ஙகரமவ் வேற்றுச் சுட்டு வினாவொடாம்" என்று ஙகரம் முதலாமாதலும் கூறப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து, அது மிக்க அணிமைக் காலத்தவராம் யாரோ ஒருவரால் நன்னூல் எழுத்தியலிற் கூறப்பட்டுள்ள இலக்கணங்களையே பெரும்பாலும் எடுத்தும், அவற்றிற் சிலவற்றைத் திரித்தும், சில வடமொழிப் பெயர்களையும் சந்திகளையும் பகுத்தும் எழுதப்பட்டதாகுமென ஓர்ந்து கொள்ளலாம்" (மேலது, ப. 379) என்கிறார்.

தொன்மைக் காலத்தில் புகழுடைய சான்றோர் பெயர்களைத் தங்கள் படைப்பை ஆக்கியோனாக எழுதிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். எனவே, தொடக்கக்கால ஆய்வில் படைப்பாளன் யார் என்பதைக் கண்டறிந்து வெளியிடுவதும் ஒரு திறனாய்வாக இருந்துள்ளது. அதே போன்று ஒரு நூல் கூறும் கருத்து ஏற்புடைத்தா என்பதைக் கண்டறிவதற்கு முதல் நூலுடன் ஒப்பிட்டு அறியும் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒருவரைப் பற்றிய விமர்சனம் எம்முறையில் அமையப் பெற வேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நாவுக்கரசர் என்னும் கட்டுரையைச் சான்றாகக் கூறலாம் (நாவுக்கரசர் ப. 94-96). நாட்டார், சமயக்குரவர்களுள் ஒருவராகிய நாவுக்கரசரின் விளக்க ஆய்வுக் கட்டுரையைக் கீழ்க்காணும் அமைப்பில் திறனாய்வு செய்துள்ளார்.

1. திருநாவுக்கரசர் வாழ்க்கை வரலாறு
2. ஆளுமைத்தன்மை
3. நாவுக்கரசரின் படைப்புத்திறன்
4. நாவுக்கரசரின் படைப்பில் மையக்கருத்து

ஓர் ஆய்வாளன் ஒரு படைப்பையோ அல்லது படைப்பாளனையோ விமர்சனம் செய்யும்போது ஏட்டில் இருப்பதை அப்படியே விளக்கிச் செல்வது மட்டும் விளக்க ஆய்வாக அமைந்து விடாது; திறனாய்வாளனின் விளக்கமும் (Interpretation) கட்டாயம் இடம் பெறவேண்டும். ஓர் இலக்கியத்தில் பொதிந்து அல்லது மறைந்து கிடக்கும் ஆழமான மையக் கருத்தினைத் தேடிக் கண்டறிவது அவசியம் என்பதை நாட்டார் தம் படைப்புகளில் காட்டியுள்ளார்.

நாவுக்கரசர் பல பதிகங்கள் பாடியிருப்பினும் பல தலங்களைச் சென்று தரிசித்திருந்தாலும், நாவுக்கரசர் சமணம் சார்ந்து அதன் பின் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளையும், இறுதியில் "எண்ணுகேன் என்சொல்லி யெண்ணுகேனோ" என்று திருத்தாண்டகமும், "உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்றும் திருப்புகலூரில் பாடி நண்ணரிய சிவானந்த ஞானவடிவாயின கருத்துடன் முடிக்கின்றார். சமணத்தினின்று சைவம் மீண்டது, ஞானசம்பந்தருடன் கொண்ட தொடர்பு, அப்பூதியடிகள் சந்திப்பு, திருவையாற்றில் கயிலைக் காட்சி ஆகியனவற்றையே நாட்டார், நாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றில் முதன்மையானவை என்று கருதியுள்ளார். ஒரு திறனாய்வாளன் எக்கருத்தை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற அனுபவம் உடையவனாக இருத்தல் நன்று என்பதை அவர் ஆய்வின் வழி அறியமுடிகிறது.

ஒருவர் வாழ்க்கை வரலாற்றினைக் கூறியவுடன் ஆய்வு முழுமை பெற்று விடாது. அவ்வரலாற்றின் வழி வெளிப்படும் தனிமனித ஆளுமையை எடுத்தியம்ப வேண்டும் என்பதை நாட்டார் ஆய்வு வழி அறிய வாய்ப்புள்ளது. நாவுக்கரசரின் ஆளுமைகளாகச் சால்புடைமை, தொண்டு, தவம், ஞானம் என்னும் நான்கையும் நாட்டார் குறிப்பிடுகின்றார்.

"இதுகாறும் நாவுக்கரசர் வரலாற்றினின்று அவரது சால்பு, தவம், தொண்டு, ஞானம் என்பவற்றை எம் அறிவு சென்றவாறு சிறிது ஆராய்ந்தோம்" (மேலது, ப. 99) என்கிறார்.

நாவுக்கரசர் தேவாரப் பாடல்களின் வழி இறை, உயிர், கட்டு என்னும் முப்பொருளியல்புகளும், நெறிகளும், அந்நெறிகளிற் சென்று கட்டு நீங்கினார் நீர்மையும் ஆகிய சைவசித்தாந்தச் செழும் பொருள் யாவும் அறியப்படும் (மேலது, ப. 101) என்கிறார்.

சைவசமய நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் சமயக்குரவர்கள் நால்வரின் வாழ்க்கையிலும் உண்டு. "அம்முறையே வாக்கரசர் பாக்களுள்ளே சரியையாகிய அடிமை நெறியன்றி மற்றைய நெறிகளும் தெற்றென விளங்குதல் கண்கூடு" என்று கூறுபவர், நான்கு நெறிகளும் அவர் தேவாரப் பாடல்களில் வெளிப்படுவதை,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலு
மெம் பிரானுடை கோயில்"
"தேனுடை மலர்கள் கொண்டுதிருந்தடி பொருந்தச் சாத்தி"
"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்"
"நானெனிற் றானே யென்னும் ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்"

என்று தொடங்கும் பாடல்களுள் (மேலது, ப. 102) விளக்குகின்றார்.

சமயக்குரவர்களிடம் ஒரு சைவநெறி மேலோங்கி நிற்கும் மற்ற நெறிகளும் அவர்களிடம் ஆழ்ந்து கிடக்கும் என்னும் நம்பிக்கையுடையவராக உள்ளார். ஒரு நெறியினின்றும் மற்ற நெறிகளையும் அடைவதுதான் மனப்பக்குவம் என்பதால் நாட்டார் அனைத்துச் சைவநெறிகளும் நாவுக்கரசரிடம் எங்ஙனம் நிறைந்துள்ளன என்பதைக் காட்டுகின்றார்.

நீதி நூல்களுக்கு உரை எழுதிய நாட்டார் ஒவ்வொரு நூலின் முகவுரையிலும் பாடிய புலவர்களின் வரலாற்றினை விளக்குகின்றார். ஔவையார் காலத்தை ஆய்வு செய்யும் நாட்டார்

"முன்னௌவை கலிவருட மூன்றாவதாயிரத்தாள்
பின்னௌவை நான்காவ தாயிரத்திற் பிறந்தியயாள்"

என்னும் புலவர் புராணத்தைச் சான்றாகக் கொண்டு சங்ககால ஔவையாரையும் நீதி நூல்கள் ஔவையாரையும் வேறுபடுத்துகின்றார். (நீதி நூற்கொத்து, ப. 3).

நீதிநெறிகளை இளம்பருவத்திலேயே கற்றுத் தேர்ந்து நன்னடத்தை உடையவர்களாக இளைஞர்கள் மாறவேண்டும் என்னும் நோக்கத்துடன் சிறு தொடராகப் பாடப்பெற்றுள்ள திறனை முகவுரையில் பாராட்டுகின்றார். (மேலது, ப. 2).

நறுந்தொகை பாடிய அதிவீரராம பாண்டியன் குறித்த வரலாற்றினை முகவுரையில் ஆய்வு செய்துள்ளார். அதிவீரராம பாண்டியன், தென்காசி பாண்டியன், இவன் காலம் கி.பி. 11, 12ஆம் நூற்றாண்டு எனச் சிலரும், 15ஆம் நூற்றாண்டு எனச் சிலரும் கூறுவர் என்று முடித்து விட்டார். அதிவீரராம பாண்டியன் காலம் இதுதான் என்று திட்டவட்டமாகக் கூறமுன்வரவில்லை. திறனாய்வாளனுக்குப் போதிய சான்றுகள் கிடைக்காதபோது பிறர் கருத்தை அப்படியே எழுதிச் சென்று விடுதலுமுண்டு. சரியான ஆதாரமில்லாமல் ஒரு கருத்திற்கு வலு சேர்ப்பது இயலா ஒன்றாகும்.

அதிவீரராம பாண்டியன் எழுதிய நூல்களைப் பட்டியல் இட்டுக் காட்டுகின்றார். "தமிழில் இவர் இயற்றிய நூல்கள் நைடதம், கூர்மபுராணம், இலிங்க புராணம், காசிகாண்டம், வாயுசங்கிதை, திருக்கருவை அந்தாதிகள், நறுந்தொகை முதலியன. இவர் தமையனார் வரதுங்கராமபாண்டியர் சிறந்த புலவராய்த் தமிழ்ப் பிரமோத்தர காண்டம் முதலிய நூல்கள் இயற்றியுள்ளார். அதிவீரராமனின் மனைவியாரும் சிறந்த புலமையுடையார்" (மேலது, ப. 1-2) என இலக்கிய வரலாற்றுக்கு வலுவூட்டுகின்றார். நாட்டார் காலத்திய இலக்கிய வரலாறு எழுதும் ஆய்வுப் போக்கு, அழிந்து போகாமல் பல இலக்கியங்களைக் காப்பாற்றுகின்றன. மற்றும் அறிமுகமாகாத இலக்கியங்கள் பெயரளவில் நாட்டார் போன்றோர் படைப்பிலக்கியங்களில் இடம் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

நன்னெறி ஆசிரியர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் வாழ்க்கை வரலாற்றினை முகவுரையில் விரிவாகக் கூறியுள்ளார். சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நூல்கள், அவர் பின்பற்றிய வீரசைவநெறி, இலக்கணம் பயின்ற தருமபுரவாதீனத்து வெள்ளியம்பலவாணர் தம்பிரான் பற்றிய செய்தி, தம் ஆசிரியர் விருப்பத்திற்கிணங்கத் திருச்செந்தூரில் "நிரோட்டக யமகம்" பாடி அப்புலவரைத் தம் ஆசிரியருக்கு அடிமையாக்கியது, அண்ணாமலை ரெட்டியார் நட்பு என்று பல செய்திகளை நாட்டார் கூறுவதினின்றும் எல்லோரும் அறிந்த ஔவையாருக்குக் கொடுக்காத விளக்கத்தைச் சிவப்பிரகாச சுவாமிகளுக்குக் கொடுக்கிறார். பலரும் அறிந்ததைச் சுருக்கியும் அறியாததை விரித்தும் கூறும் திறன் புலப்படுகிறது.

நன்னெறி வெண்பா நாற்பதையும் கடற்கரை மணலில் சிவப்பிரகாச சுவாமிகள் எழுத அதனைக் கருணைப் பிரகாசர் என்பவர் ஏட்டில் எழுதினார் என்னும் குறிப்பையும் தருகின்றார் (மேலது, நன்னெறி முகவுரை, ப. 2).

"இந்நூலின் ஒவ்வொரு பாக்களும் மக்கட்கு இன்றியமையாத நீதிகளை அழகிய உவமைகளுடன் கூறுவனவாகும். உவமைகளெல்லாம் யாவராலும் அறியப்பட்டனவாகவும் அமைந்து, கற்போர்க்கு வியப்பும் மகிழ்ச்சியும் விளைவிப்பனவாகும், மக்களின் உடலுறுப்புகளாகிய கண் முதலியவற்றின் இயல்புகளை ஒன்பது பாக்களிலும், ஞாயிறு, திங்கள், கடல், காற்று முதலிய இயற்கைப் பொருள்களையும், நெல், வாழை, பசு முதலிய பயிற்சி மிக்க பொருட்களையும் வேறு பல பாக்களிலும் உவமையாக அமைத்து

இருப்பது இளைஞர்கட்குக் கல்வி பயில்விப்பதில் இவ்வாசிரியர்க்குள்ள திறப்பாட்டை நன்கு விளக்கும்" (மேலது, ப. 5) என்கிறார். நன்னெறி இலக்கியத் திறனைக் காட்டும் நாட்டார் உவமைத் திறனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் திறன் புலப்படுகின்றது.

வள்ளுவர் வாய்மை என்னும் தலைப்பில் குறள் கூறும் உவமையை விமர்சனம் செய்கின்றார். "குறளில் கூறப்பட்டிருக்கும் உவமைகளை யாரால் விலை மதிக்கலாகும்? " நவிறொரு நூனயம் போலும்", "அறிதோ றறியாமை கண்டற்றால்", "தம்மிலிருந்து தமது பாத்துண்டற்றால்", "எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோல்" என்னும் உவமைகள் பலமுறை சிந்தித்து இன்புறற்குரியவை" (கட்டுரைத் திரட்டு, ப. 35) என்கிறார்.

கலித்தொகை மாண்பு என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரையில்,

"முல்லைக் கலியிலே, வெள்ளை, காரி, குரால், சேய், சுரிநெற்றிக்காரி, செம்மறு வெள்ளை, ஏந்தியிற்குரால், பல்பொறிப்புகள் என்றிங்ஙனம் நிறம் பற்றி ஏறுகளுக்குப் பெயர் கூறி, அவற்றில் பலராமன், கண்ணன், முக்கண்ணான், முருகன் என்னும் கடவுளர்களையும் அவர்கள் தரிசித்துள்ளனர். வளை, மறு, உடை முதலியவற்றையும் பொருந்த வைத்து உவமங் கூறியிருப்பது பாராட்டுந் திறத்தது" (கலித்தொகைச் சொற்பொழிவுகள், ப. 15) என்கிறார்.

அறிவுடை நம்பி பாடிய அகம் 28இல் அமைந்துள்ள உவமைச்சிறப்பினை விளக்கி இன்பம் காண்கின்றார்.

"கிளியோட்டும் கொடிச்சியின் குரலைக்கிளியின் குரலெனக் கருதி, ஏனைக்கிளிகளும் தினையின்கட் போதரும் ஆதலின், தமர்காவலை விலக்குவர் போலும்; ஆகலின் மால்வரை நாட, தாழ்க்காது இவளை வரைந்து கொள்வாயாக" (கட்டுரை திரட்டு, ப. 64) என்னும் கருத்தை விளக்கி இக்கருத்திற்கு ஒப்பான கபிலர் பாடிய ஐங்குறுநூற்றுப் பாடலை,

"கொடிச்சியின்குரல் கிளிசெத் தடுக்கத்துப்
பைங்குர லேனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மால்வரை நாட வரைந்தனை கொண்மோ"

என ஒப்பிட்டு மகிழ்கின்றார்.

"காற்றினால் தூற்றப்படும் நுண்மணற் பரப்புக்கு நுடங்கும் துகிலை உவமை கூறியிருப்பது இயற்கையொடு பொருந்தி யுள்ளமை காண்க. கடல் கொழித்து ஒதுக்கிய எக்கர் மணலிற் சிலவற்றைக் காற்று அள்ளித் தூற்றுதல் போல, நின்னால் நீக்கப்பட்ட எம்மை ஊரார் அலர் தூற்றுவர்" என்னும் உள்ளுறை உவமையினையும் விளக்குகின்றார். இலக்கிய நயத்தை விமர்சனம் செய்யும் நாட்டார் உவமை விளக்கத்திற்கு முதன்மை கொடுக்கின்றார். கவிஞரின் கற்பனை நயத்தைப் பாராட்டுதல் நாட்டாரின் திறனாய்வுப் போக்குகளுள் ஒன்று என்றால் மிகையன்று.

தமிழர்களின் வான நூல் புலமையை மிகச் சிறப்பாகக் காட்டியுள்ளார். ஆழமான நுட்பமிக்க கருத்தாழத்தை அக்கட்டுரையில் காண முடிகிறது. தெளிந்த வானநூற் புலமையும், பல நூல்களை அறிந்து செய்திகளைத் திரட்டிய உழைப்பின் மேன்மையும் பாராட்டிற்குரியன.

இருபத்தேழு நாண்மீன்களின் தமிழ்ப் பெயர்களைப் பட்டியலிட்டுள்ளார்.

அசுவினி	–	இரலை, புரவி, ஏறு, யாழ், தலைநாள், மருத்துநாள்
பரணி	–	காடுகிழவோள், தாழி, அடுப்பு, முக்கூட்டு
கார்த்திகை	–	சுறுமீன், சுழல், ஆரல், அளக்கர்
உரோகிணி	–	பண்டி, உருள், வையம், ஊற்றால்
மிருகசீரிடம்	–	மாழ்கு, மன்றலை, மும்மீன், நரிப்புறம், பாலை, வெய்யோன்.
திருவாதிரை	–	செங்கை, யாழ், இறைநாள்
புனர்பூசம்	–	கழை, கரும்பு, ஆவணம், ஏரி
பூசம்	–	கொடிறு, வண்டு, காற்குளம், வியாழனாள்
ஆயில்யம்	–	அரவினாள், கௌவை
மகம்	–	வேள்வி, வேட்டுவன், கொடுறுகம், வாய்க்கால்
பூரம்	–	எலி, கணை
உத்திரம்	–	மானேறு, கதிர்நாள்
ஹஸ்தம்	–	கைம்மீன், களிறு, ஐவிரல்
சித்திரை	–	நெய்மீன், பயறு, அறுவை, நடுநாள்
ஸ்வாதி	–	விளக்கு, வீழ்க்கை, வெறுநுகம், மரக்கால், காற்றினாள்
விசாகம்	–	முறம், முற்றில், சுளகு, காற்றினாள்
அனுஷம்	–	பனை, புல், தேள், நட்புநாள்
கேட்டை	–	துளங்கொளி, தழல், வல்லாரை

மூலம்	-	அன்றில், வில், குருகு, கொக்கு, தேட்கடை
பூராடம்	-	உடைகுளம், முற்குளம், நீர்நாள்
உத்திராடம்	-	ஆடி, கடைக்குளம்
திருவோணம்	-	உலக்கை, முக்கோல், மாயோனாள்
அவிட்டம்	-	பறவை, காக்கை
சதயம்	-	நீர்நாள், செக்கு, குன்று, போர்
பூரட்டாதி	-	முற்கொழுங்கால், நாழி
உத்திரட்டாதி	-	மன்னன், அறிவனாள், பிற்கொழுங்கால்
ரேவதி	-	நாவாய், தொழு, பஃறி, ஆணாள், கடைநாள்

இலக்கியத்தில் வழங்கிவரும் நாண்மீன்களின் தமிழ்ப் பெயர்களைக் கண்டறிந்து வெளியிட்ட நாட்டார் "எத்தகைய கலைகளையும் வேற்று மொழியின் கலப்பின்றியே தமிழின்கண் இயற்றுதல் சாலும்" என்கிறார். தற்காலத்தில் பிறமொழிக் கலப்புகள் மிகுந்திருப்பதுடன், அறிவியல் கருத்துகளைத் தமிழாக்கம் செய்யும் முயற்சி பெரும் முயற்சியாக இருக்கின்ற காலக் கட்டத்தில் நாட்டார் கருத்து வழிகாட்டியாக அமைகின்றது.

கூடலூர் கிழார் தூமகேது தோன்றியதால் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்னும் சேரவேந்தன் துஞ்சினான் என்று புறநானூறு 229ஆம் பாடலில் கூறுகின்றார். இப்பாடலில் கூறப்பட்டுள்ள நாண்மீன் இருப்பிடத்தை விளக்கி வரைகின்றார்.

"மேடவிராசி பொருந்திய கார்த்திகை நாளின் முதற்காலின்கண், நிறைந்தஇருளையுடைய பாதியிரவின் கண், முடப்பனைபோலும் வடிவையுடைய அனுடநாளின் அடியின் வெள்ளிமுதலாகக் கயமாகிய குளவடிவு போலும் வடிவையுடைய புனர்பூசத்துக் கடையின் வெள்ளி எல்லையாக விளங்கப், பங்குனி மாதத்தினது முதற் பதினைந்தின்கண், உச்சமாகிய உத்தரம் அவ்வுச்சி யினின்றும் சாய, அதற்கு எட்டா மீனாகிய மூலம் அதற்கெதிரே எழா நிற்க, அந்த உத்திரத்திற்கு முன் செல்லப்பட்ட எட்டா மீனாகிய மிருகசீரிடம் துறையிடத்துத் தாழ, கீழ்த்திசையிலும் வடதிசையிலும் போகாது, கடலாற் சூழப்பட்ட பூமிக்கு விளக்காக மிக்க தீப்பரக்கக் காற்றாற் பிதிர்ந்து கிளர்ந்து வானத்தி னின்றும் ஒரு மீன் விழுந்தது" (மேலது, ப. 88) என்னும் பொருளை எழுதி விளக்குகின்றார்.

வையையாற்றைச் சிறப்பித்துக் கூறும் பதினோராம் பரிபாட்டின்கண் கார் காலத்து மழை பெய்தல் கூறும் வழி, அப்பொழுது கோட்கள் நின்ற நிலைமையை நல்லந்துவனார்

விளக்குகிறார். அப்பாடலையும் தமிழர்தம் வானநூற் புலமைக்கு எடுத்துக் காட்டாக்குகிறார்.

ஆவணித்திங்கள் அவிட்ட நாளில், வெள்ளி இடபத்தையும், செவ்வாய் மேடத்தையும், புதன் மிதுனத்தையும், ஆதித்தன் சிங்கத்தையும், வியாழன் மீனத்தையும், சனியும், மதியும் இராகுவும் மகரத்தையும், கேது கடகத்தையும் சேர இராசி மதியினைத் தீண்ட அகத்தியன் என்னும் மீன் தன்னிடத்தைக் கடந்து மிதுனத்தைப் பொருந்தக் கார் காலத்தில் சையமலைக்கண் மழை பெய்ய அதனால் வையையாற்றில் நீர் பெருக்கெடுத்து ஓடும் என்று கூறப்பட்டுள்ளது.

கோள்களுக்கும் மனித வாழ்க்கைக்கும், கோள்களுக்கும் இயற்கை வளத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதைப் பண்டைத் தமிழர் உணர்ந்திருந்த செய்தியை நாட்டார் விளக்கிக் காட்டுகின்றார். சங்க மக்களின் அறிவியல் ஆற்றலை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். திறனாய்வு என்பது இலக்கிய விமர்சனம் மட்டுமல்ல, இலக்கிய அழகினைப் படம் பிடிப்பது மட்டுமல்ல, ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியினையும் வாழ்வினையும் விளக்குவதுமாகும்.

இலக்கிய நயங்களைக் கூறும் திறனாய்வாளர்கள் சுவைகளையும் பேசுவார்கள். இலக்கியத்திற்குச் சுவை இன்றியமையாதது. எனவே, நாட்டார் வீரச்சுவை, அவலச்சுவை, இன்பச்சுவை மூன்றும் பற்றி விளக்குகின்றார். இலக்கிய எடுத்துக் காட்டுகளுடன் மூன்று சுவைகளையும் ஆய்வு செய்யும் நாட்டார் புறநானூறு, காப்பியங்கள் ஆகியனவற்றைச் சான்றுகளாகக் காட்டிச் செல்கின்றார். கலித்தொகை மாண்பு கூறும் நாட்டார் கருத்துப் பொருள், காட்சிப் பொருள் இரண்டையும் விளக்குகின்றார். முதற்பொருள், கருப்பொருள் ஆகியவற்றைக் காட்சிப் பொருள் என்றும்; உரிப்பொருளாகிய புணர்தல், பிரிதல் முதலிய அகத்தே தோன்றும் உணர்ச்சி வகைகளைக் கருத்துப் பொருள் என்றும் பிரித்துக் கலித்தொகை மாண்பினை விளக்குகின்றார்.

இறையனாரகப் பொருளாசிரியர், "உலகத்துப் பொருள்தான் இரண்டு வகையாலுணர்த்தப்படும். உண்மை மாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படுவனவும், உண்மையும் பிழம்பு முணர்த்தப்படுவனவுமென" என்னும் கருத்தையும் தம் கருத்திற்கு அரண் சேர்க்கின்றார்.

"பொறிகளாற் காண்டற் குரியவாகிய இயற்கைப் பொருள்கள் பலவற்றின் திறங்களையும் நுனித்தறிந்து கூறுவதிலும்,

கருத்துப் பொருளாம் அன்பு முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதிலும், சங்கப் புலவர்களின் வித்தகக் கவித்திறம் எத்துணையும் பாராட்டற்குரியதாம்" (கலித்தொகை மாண்பு, ப. 9) என்று கூறியுள்ளார்.

கலித்தொகை புலனெறிவழக்கையே பொருளாக உடையது. செய்யுட்களெல்லாம் சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை போலத் தழைந்து இன்பம் பயக்கும் ஓசை நயமுடையன; உவமங்களின் மாட்சியொன்றே இதனை இணையற்ற சிறப்பினதாக்கும் என்று பொதுவான கலித்தொகை மாண்புகளைத் தொகுத்தளித்துள்ளார்.

மக்களின் மனநிலை, ஒழுக்கம், முதலிய பண்புகளுக்கு மரம், பூ முதலிய பருப்பொருள்களையும், பருப்பொருள்களுக்கு அப்பண்புகளையும் உவமையாக அமைத்திருக்கும் அழகு இதனிற் போல இத்துணை மிகுதியாக வேறெங்கும் காண்டலரிது என்று கலித்தொகையின் இலக்கிய நயத்தைப் பேசும் நாட்டார் பரத்தமையைப் பற்றிக் கூறும் புலவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதன் நோக்கம் தலைவியின் கற்பை வலியுறுத்தலேயாகும் என்கிறார்.

நாட்டார் காலத்தில் செய்யுட்களுக்கு உரை எழுதுவதும் ஒரு வகையான திறனாய்வு முறையே. ஒவ்வொரு சொல்லுக்கும் பொருளும், விளக்கமும் கூறும் முறை அவரது உரைத்திறனில் காணப்படுகின்றது.

மரபுக்குட்பட்ட திறனாய்வு நாட்டாரால் பின்பற்றப் பட்டுள்ளது. கருத்து விளக்கம், அது தோன்றிய பண்பாட்டு மரபிற்குட்பட்டிருத்தல் அவசியம். பண்பாட்டு மீறலோ, மரபு மீறலோ நாட்டார் திறனாய்வில் காணப்படவில்லை. மற்றும், ஓர் இலக்கியவாதியாக இருந்து, இலக்கிய வட்டத்தினின்றும் மீறாமல் தம்மைப் பாதுகாத்துக் கொண்டுள்ளார். எந்த இயக்கத்திற்கும் கட்டுப்படவில்லை. சொந்தக் கருத்தினையோ, சார்ந்திருக்கும் கொள்கையையோ புகுத்த வேண்டும் என்ற ஆர்வமே இல்லாமல் முழுமையாக இலக்கிய நயத்திற்கும் விளக்கத்திற்கும் வரலாற்றிற்கும் முதன்மை தந்துள்ளார்.

கண்ணகி எழுவகைப் பத்தினிப் பெண்டிரைக் கூறும் போது சோழ நாட்டில் ஒரு பட்டணத்திலிருந்து மதுரைக்குச் சென்ற வணிகனொருவனும், அவன் மாமன் மகளாகிய கன்னியும் திரும்புறம்பயத்தில் வந்து இரவு தங்கியபொழுது வணிகன் அரவு

தீண்டி இறந்தமையின் அக்கன்னி புலம்பி அழுதலை அப்பதிக்கண் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தப்பிரான் கேட்டு இரங்கித் தமது அருணோக்கத்தால் அவனை உயிர்ப்பித்தார் என்றும், "வைப்பூரிலுள்ள தாமன் என்னும் வணிகன் மகளிர் எழுவரில் இளையவளாகிய கன்னியும், அவள் அத்தை மகனும் வழிக் கொண்டு வந்து திருமருகல் என்னும் பதியில் தங்கியக் காலை அவன் அரவு கடித்திறந்தமைக்காற்றாது அக்கன்னி புலம்பியழுததனை அப்பதிக்கண் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தப் பெருமான் கேட்டு அவனை உயிர்ப்பித்தார்" என்றும் கதைகள் வழங்குகின்றன. "வன்னி மரமும் மடைப்பள்ளியும் சான்றாக முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்" என்றே இளங்கோவடிகள் பாடியுள்ளார். அதற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் கதை கூறி விளக்குகின்றனர்.

சிலப்பதிகாரக் காலத்திற்குப் பிற்பட்டவர் ஞானசம்பந்தர். வணிகரின் கதையை ஞானசம்பந்தருடன் தொடர்பு படுத்திக் கூறும் போது காணும் முரண்பாட்டை அறிந்த நாட்டார் அது புராணக் கதைகளின் தாக்க முரண்பாடு என்கிறார்.

கருத்து முரண் படைப்பாளரிடம் ஏற்படாத போதும் அதைத் திறனாய்வு செய்யும் திறனாய்வாளர் அல்லது உரையாசிரியர் முரண்பாடு தோன்றாமல் விழிப்பாக இருத்தல் வேண்டும்.

பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணத்திற்கு உரை எழுதிய நாட்டார் தொடர்புடைய புராணக் கதைகளை விளக்கும் முறையைப் பின்பற்றியுள்ளார். "யானை எய்த படலத்தில்" 41-ஆவது பாடலுக்கு விளக்கம் தரும்போது பிரகலாதன் கதையினையும் நரசிங்கமூர்த்தி இரணியனைக் கொல்ல வந்த வரலாற்றினையும் விரிவாகக் கூறுகின்றார். அதே போன்று, கம்பராமாயணச் செய்யுட்களையும் சான்று காட்டுகின்றார். இவ்வாறு எந்த இடத்திற்கு விளக்கம் தேவையோ அங்கு விரித்துரைத்தல் பின்பற்றப்படுகிறது.

சோழர் வரலாறு கூறும் நாட்டார் "வரலாறுகள் ஆங்கிலத்தில் எழுதப்படுவதால் தமிழர் வரலாறு எங்கோ ஒரு மூலையில் சிறியதாகப் பேசப்படுகிறது. தமிழ் மாணவர்கள் தமிழக வரலாற்றினை முழுமையாக அறிய வேண்டும்" என்பதற்காகவே சோழர் வரலாறு எழுதப்பட்டதாகக் கூறுகின்றார்.

சோழரின் பழமைக்குச் சான்றாக மணிமேகலை - பதிகம், சிலப்பதிகார மங்கல வாழ்த்துக் காதை, திருநாவுக்கரசு நாயனார்

திருத்தாண்டகத்து ஒரு பதிகம், சங்கப் பாடல்கள் ஆகியனவற்றை ஆதாரமாகக் கொள்கின்றார். பாரத அரி வமிசம் துணை கொண்டு அரசப் பரம்பரையின் தோற்றம் கூறுகின்றார். திருமால் உந்தியில் பிரமன் தோன்றினான் என்று தொடங்கி ஆக்கிரீடன் மக்கள் பாண்டியன், கேரளன், சோழன், சேரன் என்போர் என்று முடிக்கின்றார்.

மனு, சிபி, தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன், கரிகாலன், கிள்ளிவளவன், நலங்கிள்ளி, தித்தன், பெருங்கிள்ளி, நல்லுருத்தரன், கோப்பெருஞ்சோழன், கோச்செங்கட்சோழன் ஆகிய சங்க காலச் சோழ மன்னர்கள் பற்றிய செய்திகளை விளக்குகின்றார். நாட்டாரின் சோழர் வரலாறு, இலக்கியங்கள் வரலாற்றினை அறிய மூலாதாரமாக உள்ளன என்பதைக் காட்டுவதாக உள்ளது.

சங்க காலச் சோழர் தலைநகரம் உறையூர், காவிரிப்பூம்பட்டினம், நாடு, கூற்றம், கோட்டம் எனப் பிரிக்கப்பட்டிருந்தது. குறிச்சி, பாடி, ஊர், குடி, பழி, பாக்கம், பட்டினம், நகர் என்பன ஊர்களுக்கு வழங்கும் பெயர்கள். எண்பேராயம், ஐம்பெருங்குழு இருந்தன.

துகிலுக்குச் சங்க காலத்தில் பல பெயர்கள் இருந்துள்ளன. அவை: கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரகம்பி, கரியல், பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பெருங்கலம், இந்திர காளியம், பஞ்ச பாரதீயம், பஞ்சமரபு போன்ற இசைத்தமிழ் நூல்கள் இருந்தன என்கிறார். பரதம், குணநூல், கூத்தநூல், முறுவல், சயந்தம், செயிற்றியம், பரதசேனாபதீயம், மதிவாணனார் நாடகத் தமிழ் நூல் என நாடகத் தமிழ் நூல்கள் இருந்தன என்று கூறுகிறார்.

சங்க காலச் சோழர் வரலாறு, பண்பாடு ஆகிய இரண்டினையும் தம் வரலாற்று நூலில் எடுத்தியம்பியுள்ளார். சங்க காலத்தில் கல்வெட்டுகள் சான்று இல்லாததால் இலக்கியங்களே அவர்க்குச் சான்றுகளாக உதவுகின்றன.

கள்ளர் சரிதம் என்ற நூலையும் எழுதியுள்ளார். தஞ்சை மாவட்டத்தில் வாழும் கள்ளர் இனத்தவர்களுக்குரிய பட்டப் பெயர்களையும் அதற்குரிய காரணங்களையும் தெளிவாக எழுதியுள்ளார். அந்நூல் ஓர் இன வரலாற்று நூல் என்றால் மிகையன்று.

இலக்கண விளக்க உரையாளர் யார்? என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரை ஒரு விவாதக் கட்டுரை எனலாம்.

"செந்தமிழ்ச் செல்வியின் சிலம்பு 2-இல் இலக்கண விளக்கவுரையாளர் யார்? என்னும் தலைப்பின் கீழ் யான் எழுதிய கட்டுரையினையும், பிறர் அதற்கெழுதிய மறுப்புரையினையும், அதனை மறுத்து என் கொள்கையை நிறுவுதற்குப் பின் யான் எழுதியதனையும் என் கொள்கையை ஆதரித்துப் பின்னும் ஒருவர் எழுதியதனையும் தமிழன்பர் பலர் படித்தறிந்திருப்பர், என்கொள்கை வழுவில்லாததென்பதனை நான் கூடியவரையில் விளக்கிக் காட்டியிருக்கிறேன். ஆனால், என் கொள்கையினை யாவரும் ஒத்துக் கொள்ள வேண்டுமென நான் நினைத்தவனல்லேன். ஆராய்ச்சி செய்து கொள்ளுவார் கொள்க. தள்ளுவார் தள்ளுக" என்று எழுதியுள்ளார்.

"இலக்கண விளக்க உரையாளர் யார்" என்னும் தலைப்பில் செந்தமிழ்ச் செல்வி 2ஆம் சிலம்பு, 3,4 பரல்களில் கருத்துகளை நாட்டார் எழுதியுள்ளார். அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 2 பரல்கள் 5-6இல் எழுதியுள்ளார்.

"இலக்கண விளக்க உரைச் சமாதானம்" என்னும் தலைப்பில் எழுதிய இலங்கை ஆ. ஆறுமுகம் பிள்ளை,

> "தமிழகத்து மறைந்துள்ள பொருள்களையெல்லாம் வெளிப்படையிற் காண வேண்டும் என்னும் விருப்பால் நூலாராய்ச்சி செய்து வரும் ஸ்ரீமான் வேங்கடசாமி நாட்டாரவர்கள் "இலக்கண விளக்க வுரையாசிரியர் யார்?" என ஆராய்ச்சி செய்து அவ்வுரை நூலாசிரியரதன் றெனவும், சதாசிவ நாவலரியற்றிய தெனவும், வரைந்துள்ளதும்; அதற்கு வேறொரு நண்பர் ஸ்ரீமான் சிதம்பர ராமலிங்கபிள்ளையவர்கள் "நூலாசிரியரே உரையாசிரியர்" என மறுப்பெழுதியதும்; செல்வி நேயர் யாவரும் அறிந்ததே. இவ்விருவர் கொள்கைகளையு மாதாரமாகக் கொண்டும், வேறு சில ஆதாரங்கள் கொண்டுஞ் சமாதானங் கூறுதும்"

என்கிறார்.

இலக்கண விளக்க நூலை எழுதிய வைத்தியநாதர் பற்றிக் கூறும் நாட்டார் "வைத்திய நாத நாவலர் இலக்கண விளக்க நூலைத் தம்முடைய தனிவாக்கினாற் கூறினாரல்லர். அவர் பெரும்பாலும் பவணந்திமுனிவர், தொல்காப்பியர் முதலியோர் கூறிய சூத்திரங்களைத் தழுவிச் சூத்திரமும், இளம்பூரணர், சேனாவரையர்,

நச்சினார்க்கினியர், மயிலைநாதர் முதலியோர் கூறிய உரைகளைத் தழுவி உரையும். . . . செய்து முடித்தனர்” என்று எழுதியுள்ளார்.

ஒருவர் முன்னூலையும் உரையையும் எடுத்தாள்வது தவறு அன்று. ஆனால் எடுத்தாளப்பட்ட பகுதியைக் கட்டாயம் சுட்டுதல் வேண்டும் என்று நாட்டார் தம் ஆய்வில் வலியுறுத்துகின்றார்.

“இன்ன நூல் உரைகளினின்றும் அவையெடுக்கப்பட்டன என்பதும் காணப்படாத நிலையில் முழுப்புகழும் இகழும் அவரையே சார்வனவாகும். இவ்வாற்றால் இலக்கண விளக்க நூலாரும், அதன் உரையாளரும் முன்னூல் உரைகளிலிருந்து வேண்டும் பகுதிகளை யெடுத்தமைத்துக் கொண்டனராயினும் அவை அவர்களின் கருத்துகளென்றே கோடல் வேண்டும்” என்று கூறுகின்றவர், இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத நாவலர் செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டுகின்றார். நாட்டார் காலத்தில் ஓர் இலக்கியம் படைத்தவரையும் உரை எழுதியவரையும் கண்டறிவதே ஓர் ஆய்வாக இருந்தது தெளிவாகின்றது.

உரை எழுதுதல், படைப்பாளரின் காலத்தை அறிதல், இலக்கிய நயங்களை விமர்சனம் செய்தல், தமிழர் வரலாறு, இன வரலாறு, வாழ்க்கை வரலாறு போன்ற வரலாறுகளை அறிதல் ஆகியன நாட்டாரின் திறனாய்வுத் திறனாக இருந்துள்ளன.

*****

தமிழ்ப் பண்பாடு

அரு. மருததுரை

உயர்ந்த ஒழுக்கத்தைப் பண்பாடு என்று கூறுகின்றோம். செம்மையான வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றுதலை ஒழுக்கம் என்கிறோம். ஒழுக்கம் மக்களைப் பண்பாட்டில் மேம்பாடுடைய வர்களாக மாற்றுகின்றது. மனித இனத்தின் நாகரிக வளர்ச்சியை வெளிக்காட்டும் ஒளியான பண்பாடு வாழ்வினைச் செழுமை யடையுமாறு செய்கின்றது. செழுமையான வாழ்வியல் பின்புலத்தி லிருந்து பண்பாட்டினைப் புலப்படுத்தும் இலக்கியங்கள் முகிழ்க்கின்றன. இலக்கியங்கள் பண்பாட்டினைப் பதிவுசெய்து வைப்பதோடு அடுத்த தலைமுறையினர்க்கும் பண்பாட்டினை எடுத்துச் செல்கின்றன. அவ்வகையில் தமிழ் இலக்கியங்களும் காலந்தோறும் நமது தமிழ்ப் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாத்து வருகின்றன. தமிழறிஞர்கள் பண்பாட்டினை அனைவரும் அறியத் தக்கவகையில் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழறிஞர்களில் முதிர்ந்த புலமைச் சிறப்பும் வளமான பட்டறிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் குறிக்கத்தக்கவராவார். நாவலர் தமிழ்ப் பண்பாட்டின் வடிவாக வாழ்ந்தவர். எழுத்திலும் பேச்சிலும் செயலிலும் பண்பாட்டுருவாக வாழ்ந்து நிலைத்தவர். அவர்தம் கட்டுரைகள் வழிநின்று தமிழ்ப் பண்பாட்டினை இக் கட்டுரை சிந்தித்தமைகின்றது.

பண்பாட்டுக் கூறுகள்

மனித வாழ்வியலின் அனைத்துக் கூறுகளிலும் பண்பாடு வெளிப்படுகின்றது. எனினும் மொழி, கல்வி, இசை, வீரம், குலம், சமயம், வழிபாடு, திருவிழாக்கள், வழக்காறுகள் வழியாகச் சிறப்பாகப் பண்பாடு புலப்படுகின்றது. நாவலர் தம் வாழ்நாளில் பண்பாட்டு வடிவாக வாழ்ந்தார் என்பதனை அவரது வரலாறு காட்டுகின்றது. ஆய்வுலகில் அவரது ஆய்வுகளின் வாயிலாகவும், ஆய்வு நெறிகளின் வாயிலாகவும் பண்பாட்டு முறைமைகளாக இன்றளவும் நாவலர் நின்று வாழ்ந்து வருகின்றார். தமிழாய்வு நெறியில் அவரது ஆய்வு நெறி ஆய்வுப் பண்பாட்டினை நமக்குக்

காட்டுகின்றது. தமிழர்தம் ஆய்வுப் பண்பாட்டிற்கும் காட்டாகவும் விளங்குகின்றது எனலாம்.

ஆய்வுப் பண்பாடு

இன்றைய ஆய்வுலகில் மிகவும் தேவைப்படுவது ஆய்வுப் பண்பாடு. ஆராய்ச்சியாளர்கள் பிறரது கருத்தை மேற்கோளாகக் கொள்ளாமல் தன்வயப்படுத்துதலும் சிலர் அப்படியே தம் கருத்து போன்றும் எழுதுகிற நிலைகளைக் காண்கின்றோம். ஆய்வாளர்கள் தங்களுடைய நிலை, தகுதி ஆகியவற்றை அறியாது ஆராய்ச்சியில் ஈடுபடுதலும் எதையும் மறுத்துப் பேசுவதையே பெரும் தகுதியாகவும் ஆராய்ச்சியாகவும் கொள்வதுமான நிலைகள் ஆய்வுலகில் காணப்படுகின்றன. ஆய்வுலகிலும் பண்பாடு பேணப்பெறுதல் வேண்டும் என்பதில் நாவலர் மிகுந்த ஆர்வம் கொண்டு செயல்பட்டார். அத்துடன் அவரது கட்டுரைகளில் தக்காங்கு ஆய்வுப் பண்பாட்டுச் செய்திகளைப் பதிந்துள்ளார்.

ஆய்வாளரின் தகுதி

ஆய்வாளர்களுக்குரிய தகுதிகளாக நாவலர் சிலவற்றைக் கட்டுரைகளில் குறித்துள்ளார். அவற்றில் குறிக்கத்தக்கதும் தலையானதுமாகிய கருத்து ஆய்வாளர் தம் தகுதியை முதலில் உணர்தல் ஆகும். "ஆராய்ச்சியுரைகள் எழுதுவோரைக் குறித்தும் சிறிது கூறுதல் வேண்டும். ஆராய்ச்சியை மேற்கொள்வோர் தாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கு இயைபுள்ள பலவற்றையும் நன்கு கற்றறிதல் வேண்டும். பண்டை நூற்களின் கருத்துகளை நுனித்துணர்தல் வேண்டும்' (நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக் கட்டுரைகள், ப.80) என்று குறிப்பிட்டுள்ளார். ஆராய்ச்சியாளர்கள் தமிழியலை ஆய்விற்கு மேற்கொள்ளும் போழ்து பண்டை நூல்களை நன்கு அறிந்து கொண்டதற்குப் பின்னரே ஈடுபடுதல் வேண்டும். இன்றைய தமிழாராய்ச்சியாளர்கள் மேற்போக்கான நிலையினிலே செயல்படுகின்றனர். ஆழ்ந்த இலக்கியப் புலமையின்றித் தமிழாராய்ச்சியில் ஈடுபடுவோர்க்கு நாவலர் குறிக்கும் ஆய்வாளரின் தகுதி மிகவும் குறிக்கத்தக்க தொன்றாகும்.

ஆய்வாளரின் நோக்கு

ஆய்வுப் பார்வை என்பது எதனையும் எதிர்நிலையில் நின்று நோக்குதலே என்று பலர் எண்ணுகின்றனர். முரண்பட்ட கருத்துகளைத் தம் எழுத்துத் திறமையால் விளக்குவதை, நிறுவுவதை

ஆய்வு நோக்கமாகக் கொண்டு ஆய்வில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். தமிழாய்வு நோக்கினைப் பற்றி நாவலர், "காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே'' என ஆன்றோர் விதித்துள்ளார். உண்மைப்பொருள் காணவேண்டும் என்பதே ஆராய்ச்சி செய்வாரின் நோக்கமாக இருக்க வேண்டும்" (மேலது ப. 119) என்று கூறுகின்றார். ஒரு பொருளின் மீது காய்தல் உவத்தல் இன்றி, நடுநிலை நின்று உண்மைகாணவேண்டும் என்பதனை ஆய்வாளர் முதன்மை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

அடுத்து, "இக்காலத்து ஆராய்ச்சி செய்வோர் சிலர் பண்டு தொட்டுவரும் கொள்கைகளுக்கு மாறுபட்டு உரைத்தலே ஆராய்ச்சியாமெனவும். . ." என்று (மேலது, ப.81) கூறுகிற கருத்தும் சிந்தனைக்குரியது. பழமையை மறுத்தலை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சியும் ஆராய்ச்சியாகாது என்பது நாவலரின் கருத்தாகின்றது.

மேலும், "தமிழாராய்ச்சி செய்வோர்கள் தமிழைப் புறம் பழித்தும் தமிழ் மக்களை இழிவுபடுத்தியும் காட்டவேண்டுமென்ற நோக்கத்துடன் ஆராய்ந்தால் அது மிகவும் கொடுமையானதாகும்" (மேலது ப.119) என்று கூறுகின்றார். ஆய்வாளர்களுக்குரிய நோக்கு எத்தன்மையதாக அமைய வேண்டும் என்பதனை நாவலர் மேற்சுட்டியாங்கு விளக்குகின்றார்.

ஆய்வுப் பயன்

ஆராய்ச்சி என்பது சமூகப் பயன்களை நல்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். "தாம் அரிதின் உணர்ந்த பொருள்களை ஏனையோர் எளிதின் அறிந்து பயனெய்துமாறு உரைத்தலோ, எழுதுதலோ செய்து போதரல் வேண்டும்" (மேலது ப. 160) என்பது நாவலரின் கருத்து. தமிழ் உலகும் ஏனையோரும் அறிந்து பயன்கொள்ளத்தக்க நிலையில் ஆய்வுப் பயன் அமைதல் வேண்டும் என்று விளக்குகின்றார்.

உண்மைப் பொருள்களைக் காணவேண்டும் என்ற விழைவுடன் ஆய்வினைத் தொடங்குதல் வேண்டும். ஆய்வு விளைவுகளை எண்ணிப் பார்த்தல் வேண்டும். தமிழை இழிவுபடுத்தும் நோக்கினை மனத்திற்கொண்டு ஆய்வினை மேற்கொள்ளுதல் கூடாது என்ற கருத்துகள் அன்று மட்டுமன்றி இன்றும் என்றும் ஆய்வாளர்கள் நெஞ்சில் நிறுத்த வேண்டிய ஆய்வுப் பண்பாடுகளாம். இவற்றை உளம் கொண்டவர்கள் ஆய்வில்

வெற்றி பெறுவதோடு தமது இனத்திற்கும் தொண்டு செய்தவர்களாவர்.

நாவலரின் ஆய்வுப் பண்பாடு

> "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல்" *(குறள் 664)*

என்பது திருக்குறள். சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து காட்டிய நாவலரின் ஆய்வுப் பண்பாடு அனைவராலும் ஒப்பப் போற்றக் கூடியதாகும். ஆய்வுக் கட்டுரையில் கருத்துகளை மறுக்கின்ற போழ்து பண்பாடு பேணப்பெறுதல் இன்றியமையாதது. மாற்றுக் கருத்துகளை நாகரிகமாக மறுத்துத் தன் கருத்தை நிறுவுதல் வேண்டும். இந்தப் பயிற்சி உள்ளத் தெளிவும் கருத்தில் ஆழமும் மொழி, இனத்தில் பற்றும் உடையவர்க்கே சிறப்பாக வாய்க்கும். மற்றவர் கருத்து உடன்பாட்டிற்குரியதன்றாயின் தக்காங்கு உரிய ஏதுக்களைக் காட்டி மறுக்க வேண்டும். அவ்வாறின்றி உணர்வு வயப்படும் நிலையே பெரிதும் காணப்படுகின்றது. ஆனால் நாவலரின் அணுகுமுறை ஆய்வுப் பண்பாட்டை அனைவரும் உணரும் வகையில் அமைந்துள்ளது.

இலக்கண விளக்கவுரை வரலாறு பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள அவரது கருத்துகளும் நடையமைப்பும் இவண் காட்டாக அமைகின்றன. "இலக்கண விளக்கவுரை வரலாறு பற்றி எம்முடன் மாறுபட்டெழுதுவோர் அனைவரும் சிவஞானமுனிவர்பால் தமக்குள்ள அளவு கடந்த அன்பினாலே, அப்பெருமான் எழுதியவற்றுள் யாவரும் ஒரு சிறு பிழையும் காணல் தகாதெனுங் கருத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளார் களென்பது அவற்றைப் படிப்போர்க்குப் புலனாகும். முனிவரது பேரறிவினையும் கல்வியின் பல துறையிலும் விரிந்து சென்ற அவரது புலமைத் திறத்தினையும் தமிழ் மொழிக்கும் சைவசமயத்திற்கும் அவர் செய்துள்ள அளவுபடாத உதவிகளையும் நினையுங்கால் நம்மனோர்க்கு அவர்பால் வரம்பற்ற அன்புண்டாவதிலும் வியப்பொன்றுமில்லை. இவ்வாற்றால் எமக்கும் அவர்பால் அன்புளதென்றே நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் பிறரது அன்பிற்கும் எமது அன்பிற்கும் வேற்றுமை இருத்தல் கூடும். மயக்க மறுப்புடையார் எம்மைக் குறித்துச் சற்று வன்மையான சொற்களை வழங்கி வந்திருப்பினும் அவை சீரிய தமிழ்ச் சொற்களாக விருத்தலாலும்

எம்மை நண்பரென்று பாராட்டி யிருத்தலாலும் பெரிதும் உவகையே எய்துகிறோம். நண்பர்கள் எம் கருத்தினை உள்ளவாறறிந்து கொள்ளவில்லையென்றும் யாம் கூறாவொன்றையும் கூறியதாக வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்கின்றார்களென்றும் இவை சிறு பிழைகளேயாதலால் யாம் அவர்கள்பாற் சார்ந்திருக்க முடியவில்லை. . ." என்று கட்டுரை (மேலது, ப.291) தொடர்கின்றது. மேற்கண்ட நாவலரின் ஆய்வு நடை, மாற்றாரின் கருத்தினை நயமுடன் மறுக்கின்ற முறைக்குச் சான்றாக அமைகின்றது.

நாவலரை வன்மையான சொற்களைப் பயன்படுத்தி இழிவு செய்த நிலையிலும் அவற்றை மனங் கொள்ளாது தம் கருத்தினைத் தக்காங்கு ஆய்வுக் கட்டுரைகளில் நிறுவிச் சென்றுள்ளார். மேலும் தம்மை வன்மையான கடுஞ்சொற்களால் தாக்கினாலும் தாக்குதற்குப் பயன்பட்டமொழி தமிழ்மொழியே என்பதனால் உவகையெய்துகின்றார். இது நாவலரின் உயரிய பண்பாட்டினை வெளிப்படுத்துகின்றது. அதோடு மட்டுமன்றி மாற்றாரை மறுக்கும் முறைமையை, பண்பாட்டைக் கற்றுக் கொடுப்பதாகவும் கொள்ளலாம். ஆய்வு மட்டுமன்றி வாழ்வின் அனைத்து நிலைகளிலும் மிகச் சிறந்த பண்பாட்டினை மேற்கொண்டொழுகினார்.

நாவலர் தமக்குக் கிடைத்த விருதுகள், பட்டங்கள், பதவிகள் ஆகியவற்றால் மிக மகிழ்ந்து தம்நிலையினின்று மாறிட வில்லை. மாறாக அவர் பெருக்கத்துள் வேண்டும் பணிவு என்பதற்கேற்ப வாழ்ந்தார். புலவர் கல்லூரிக்கு முதல்வராகப் பொறுப்பேற்ற ஞான்றும் இன்னோரன்ன பணிப்பதவிகளை ஏற்ற நிலையிலும் அவரது மனநிலை எவ்வாறு இருந்தது என்பதற்கு, "இச் சங்கத்தின் தலைவரும் அமைச்சரும் முதலாய அறிஞர்கள் தம்மொடு நெடுநாட் பழகிய என் இயல்பினை அறிந்திலரெனக் கூறுதல் பிழையாம் என்பேன். இனி இதனைப் பாரித்துரைத்தலை விடுத்து என்னையும் இந்நிலையில் இருக்கப் பணித்த அவர்களது பேரன்பிற்கும் அவ்வன்பிற்கு உறுதுணையாக நின்ற இறைவனது திருக்குறிப்பிற்கும் கையடையனாகி அவை இயக்கும் வழி இயங்குதலே கடப்பாடெனக் கருதுகின்றேன்" (மேலது ப.70) என்ற நாவலரின் கூற்று இவண் காட்டாகின்றது. மேலும் அவரது தனி மனிதப் பண்பாட்டினைப் புலப்படுத்துவதாகவும் அமைகின்றது. ஆய்வு நெறியிலும் தனி மனித வாழ்விலும் தமிழ்ப் பண்பாட்டினைப் பேணிய நாவலர் கட்டுரைகளில் ஏனைய பண்பாட்டுக் கூறுகளையும் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளார்.

மொழி

உலகில் எந்த நாட்டினர்க்கும் அவரவர் தாய்மொழி உயரிய மொழியாகின்றது. தாய்மொழியைப் பேணாத நாட்டினையும் மக்களையும் உலகில் காணவியலாது. ஒரு மொழி அரசியலால் செல்வாக்கு அடையலாம். பொருளாதாரத்தால் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய மொழியாகலாம். ஆனால் பண்பாட்டு ஆய்வாளனுக்கு மேற் சுட்டிய அனைத்தையும் கடந்து மொழிகள் பற்பல செய்திகளை வழங்குகின்றன. மொழி பண்பாட்டின் வெளியீடாக அமைகின்றது. நெடிய மனித குல வரலாற்றின் எண்ணப் படிவமாக விளங்குகின்றது. பண்பாட்டுக் களஞ்சிமாகத் திகழ்கின்றது.

ஒரு மொழியின் சிறப்பினைக் காட்டுவது இலக்கணம். இலக்கணம் என்பது முறைமை. மொழியின் இயக்கத்தை முறைமைப் படுத்திச் செல்வது இலக்கணம். மேலும் அம் மொழிபேசும் மக்களின் பண்பாட்டைக் காட்டுகின்றது. இதனை நாவலர் விளக்கும் போழ்து, "மொழியானது ஆதியில் வழக்கும் செய்யுளுமாக வளர்ச்சியுற்று வரும் பொழுது அவற்றின் சொற்கள் இடந்தோறும் நாள்தோறும் வடிவு திரிந்தும் பொருள் வேறுபட்டும் செல்வது இயல்பாகலின் அவற்றை அங்ஙனமே விட்டுவிடின் எண்ணிலாத மாற்றங் களுக்குட்பட்டு முன்பின் தொடர்பின்றி மொழியுமென்பது கருதி அக்காலத்து நன் மக்களின் வழக்கினையும் செய்யுளையும் நன்கு ஆராய்ந்து பேரறிஞர்கள் இலக்கணம் வகுப்பாராயினர்" (மேலது பக்.112-113) என்று சுட்டிச் சென்றுள்ளார். இக்கூற்று இலக்கணத்தின் நோக்கினையும் முன்னோர் மொழிமீதும் எதிர்காலத்தின் மீதும் கொண்டிருந்த உணர்வினையும் விளக்குகின்றது. மொழியினை இலக்கணம் இலக்கியம் என்று இரண்டு நிலைகளில் விரிவாக நோக்கலாம்.

தமிழ்மொழியின் சிறப்பினை நாலவர் பலவாறாக விளக்கியுள்ளார். "தமிழானது பகுத்தறிவுடைய மக்கள் முதலிய உயிரை உயர்திணை என்றும் பகுத்தறிவில்லாத உயிரையும் உயிரில் பொருளையும் அஃறிணை என்றும் அறிவு பற்றிப் பாகுபாடு செய்திருப்பது போல வடமொழி செய்யவில்லை. வேறு எம்மொழியும் செய்யவில்லை. இவ்விருவகைப் பெயர்களே தமிழ் மக்களின் உயரிய அறிவையும் கொள்கையையும் தமிழின் தனி மாண்பினையும் விளக்கப் போதியனவாகும்" (மேலது, ப.316) என்ற நாவலரின் கருத்து நம் தமிழ் மொழியின் சிறப்பினைப் புலப்படுத்துவதாகின்றது. சங்க நாளிலேயே தமிழ் இராமாயணம்

ஒன்று வழங்கியதாக நாவலர் குறிப்பிடுகின்றார். கம்பர் தமிழ் நூல்கள் வாயிலாகவும் கண்கூடாக அறிந்த தமிழர்களுடைய நாகரிகம், பண்பாடு பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் இராமாயணத்தில் வெளிப்படுத்தியுள்ளார் (மேலது, ப.574) என்ற கருத்தும் சிந்தனைக்குரியது.

நாவலர் மொழியின் தன்மையினைக் குறிப்பிடும் போழ்து, "உலகிலுள்ள யாதொரு மொழியும் தோன்றிய நாள்தொட்டு ஒரே தன்மையாய் இருந்து வருவதன்று. ஓர் குழவி பிறந்து வளர்ந்து உயர்நிலையடைவது போன்றே மொழியும் தோன்றி வளரும் இயல்பினதாகும். அது வழக்காறற்ற நிலையை எய்தின் ஒரு கால் அது ஒரே தன்மையை உடையதாகலாம். வழக்காறுடைய உயிருள்ள மொழிகள் யாவும் காலப்போக்கிற்கேற்ப வேறுபடுதல் இயல்பே. தமிழ் இவ்விதிக்கு விலக்கானதன்று (மேலது, பக்.231-232) என்று கூறியுள்ளார். ஆகவே, கால மாறுதல்களுக்கேற்ப நெகிழ்வுத் தன்மை கொண்டு மொழி வளர்கின்றது, வாழ்கின்றது எனலாம். எனினும் பிறமொழிச் சொற்களை இலக்கியம் படைத்தோர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது நாவலரின் கருத்து. இலக்கியம் படைத்தோர் பெரிதும் மொழித் தூய்மையைப் பேணினர் என்பது இவண் சிந்தனைக்குரியது.

மொழியில் பிறமொழி இனத்தவர் கலப்பால் சொற்கள் கலந்திட வாய்ப்புண்டு எனினும் தமிழ்மொழி எங்ஙனம் காலத்தை வென்று நிலைபெற்றது என்பதனை நாவலர் சிறப்பாக விளக்கியுள்ளார். பிற தென்மொழிகள் மிகுதியாக வடமொழிச் சொற்களையும் விதிகளையும் வரம்பின்றி ஏற்றுக் கொண்டு தம் பழைய வடிவினை இழந்து விட்டன. ஆனால் தமிழ் தனது தூய வடிவினை இழக்காமல் விளங்குகின்றது. அத்துடனின்றி நம் தமிழ்மொழி அடிப்படையான தனது இலக்கணத்தினின்றும் பிறழவில்லை (மேலது, ப.233) என்பதும் நாவலரின் கருத்தாகும்.

பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துதல் குறித்து நாவலர் தெளிவான கருத்தினைக் கொண்டிருந்தார். மொழி என்பது பண்பாட்டின் சின்னம் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். பிறமொழிச் சொற்களைத் தேவையெனில் பயன்படுத்துவதில் தவறில்லை என்று கூறுகின்றார். "பிறமொழிச் சொற்களை எடுத்துக் கொள்வது குற்றமின்றாயினும் அவற்றை வரம்பின்றிப் புகுத்துவதானது தமிழின் தூய்மையையும் அழகையும் சிதைத்து அதன் தொன்று தொட்ட மாண்பினைக் கெடுப்பதாகும் என்பதனைக் கருத்திலிருத்தல் வேண்டும். இக் காலத்துப் புதிய

கலைகள் பலவும் எழுதுதற்குச் சொற்கள் பல வேண்டுமென்பது உண்மையாயினும் அதன்பொருட்டுத் தமிழினைத் துருவியாராய்ந்து வேண்டுஞ் சொற்களைக் காண்டலும், அவை போதாவிடத்துத் தமிழ்ப் பகுதியினின்று புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளுதலும், இன்றியமையாத வழிப் பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளுதலுமே அறிவும் ஊக்கமும் முயற்சியும் உடையார்க்கு அழகாவனவாம். அந் நெறியே கலைப் பயிற்சியை எளிதாக்குவதுமாம்" (மேலது, ப.233-234) என்று கூறுவதோடு பிறமொழிச் சொற்களை இரவல்பெறும் நிலை ஏற்படின் தமிழியல்புகளுக்கேற்ற ஓசையினவாகத் திரித்துக் கொள்ளுதல் வேண்டும் என்று விளம்புகின்றார். தமிழ் மொழியும் அதன் இலக்கணமும் நமது பண்பாட்டுப் பெட்டகமாக விளங்குவதைப் பல்வேறு எடுத்துக்காட்டுகள் வாயிலாக நிறுவியுள்ளார்.

நாவலர் தமிழிலக்கணப் பெருமையினைப் பலவாறாக வெளிப்படுத்தியுள்ளார். இலக்கணத்தில் எழுத்துகளுக்கு உயிர், மெய் என்று பெயரிட்டிருப்பதும் சொல்லையும் பொருளையும் உயர்திணை அஃறிணையென்று பாகுபடுத்தியிருப்பதும் ஆகிய இவற்றிலிருந்தே தமிழ் மக்களின் நாகரிக நிலையையும் தத்துவவுணர்வையும் குறிப்பாக அறியக் கூடும் என்ற (மேலது, ப.316) நாவலரின் கருத்துச் சான்றாக அமைகின்றது. நமது இலக்கியங்களும் இலக்கணங்களும் தமிழ்ப் பண்பாடு நாகரிகம் ஆகியவற்றின் ஒப்பற்ற அடையாளங்களாகத் திகழ்கின்றன என்று வாய்ப்புக் கிடைக்கும் போழ்தெல்லாம் நிறுவுகின்றார். தமிழ்மொழியின் சிறப்புகளையும் அதன்வழி வெளியாகும் பண்பாட்டுக் கூறுகளையும் நாவலர் கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் விரிவாக விளக்கியுள்ளார். மொழியுணர்வும் இலக்கியப் புலமையும் குறைந்து வரும் இந்நாளில் நாவலரின் கருத்துகளையும் சிந்தனைகளையும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படப் பயன்கொள்ளுதல் காலத் தேவையாக அமைகின்றது.

கல்வி

நம்முடைய தமிழர்கள் காலந்தோறும் கல்வியின் மேன்மையினை உணர்ந்து போற்றி வந்துள்ளனர். பண்பாட்டில் கல்வி சிறப்பிடத்தைப் பெறுகின்றது. "தமிழ்நாட்டில் கல்வி சிறந்து விளங்கிய காலங்களிலெல்லாம் தமிழர்கள் அறனும் மறனும் ஆற்றலும் மிக்கோராகத் திகழ்ந்தனர். பிறர் கண்டு உட்குமாறு பெருமதிப்புடன் வாழ்ந்தனர். வேளாண்மை முதலான தொழில்கள் நாட்டில் பல்கிப் பெருகி வளர்ந்தன" (மேலது, ப.70) என்பது

நாவலரின் கருத்தாகும். இக் கல்வியைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் பங்கு மிகவும் குறிக்கத்தக்கதாகும். "முன்னேர் செல்லும் வழிப் பின்னேர் செல்லும்" என்பது முதுமொழி. பண்பாட்டினைப் பயிற்றுவிக்கும் களமாகக் கல்விக் கூடங்கள் திகழவேண்டும். பள்ளிகளிலும், கல்விக் கழகங்களிலும் ஆசிரியர்களின் வழி நடத்துதலில் மாணவர்கள் எதிர்கால வாழ்வில் பண்பாட்டினைக் காப்பவர்களாக வளர்ப்பவர்களாக நிலை நிறுத்துபவர்களாக விளங்க வேண்டும்.

ஆசிரியரும் மாணவரும் என்ற கட்டுரையில் தமிழர் கல்வியிற் பெற்றிருந்த மேன்மைகளைப் பலபடியாக விவரித்துள்ளார். அதில் ஆசிரியர் பண்பாட்டினை விளக்கிய நாவலர் "ஆசிரியரென்போர் பண்டமாற்றுச் செய்யும் வணிகரையும் தாம் பெறும் சம்பளத்திற்கேற்ப வேலைசெய்யும் கூலித் தொழிலாளர் அல்லது உத்தியோகஸ்தரையும் போன்றவரல்ல ரென்பதும் புனித சிந்தையும் புனித ஒழுக்கத்தையு முடையவராய்த் தம்மைச் சார்ந்தாரையெல்லாம் புனிதராக்கி வாழ்விக்கும் பேரருளாளர் என்பதும் விளக்கமாகின்றன" (மேலது, ப.485) என்று குறித்துள்ளார். ஆசிரியர்களின் சிறப்பினைப் பண்பாட்டுப் பெருமையினை நாவலர் விளக்கமாக இலக்கியச் சான்றுகள் வாயிலாக வெளிப் படுத்தியுள்ளார்.

மேலும், "ஒரு ஆசிரியன் தவறி நடப்பானாயின், அவன் தான் கெடுவதன்றி உலகத்தையும் கெடுப்பவனாகின்றான்" (மேலது, ப.487) என்ற நாவலரது கூற்று அனைத்து ஆசிரியர்களும் மனத்தில் கொள்ள வேண்டியதாகும். நாவலர் ஆசிரியர்களின் குறைகளையும் சுட்டிக் காட்டியுள்ளார். மாணவர்களின் இயல்பறியாமல் தண்டனை வழங்கும் ஆசிரியர்களைப் பிசாசுகள் எனவும் சாடுகின்றார் (மேலது, ப.486). பேராசிரியர்கள் கணக்காயர் என்று அழைக்கப் பெற்றமையும் அரசர்கள் முதல் குடிமக்கள் ஈறாக அனைவரும் ஆசிரியர்கள்பால் வைத்திருந்த மதிப்பினையும் பழந்தமிழ் இலக்கியச் சான்றுகள் வழியாகக் கட்டுரைகளில் நாவலர் நிறுவித் தமிழர்கள் கல்விப் பண்பாட்டில் சிறந்தமையை விளக்கியுள்ளார்.

தமிழிசை

தமிழர்தம் பண்பாட்டில் முகிழ்த்துத் தோன்றி வளர்ந்துச் செழித்துள்ள தமிழிசையைப் பலரும் திட்டமிட்டே புறந்தள்ளுகின்ற நிலை தமிழகத்தே நிலவுகின்றது. தமிழர்கள் இசையினைக் காலந்தோறும் போற்றி வளர்த்துள்ளனர். இறைவனை

இசையால் வணங்கினர் போற்றினர். இறைவனை இசைவடிவாகக் கண்டனர். மிகப் பழங்காலந் தொட்டு இசைவாணர்கள் இசையை முறைப்படுத்தி வந்துள்ளனர். நிலத்திற்கேற்ற இசையும் இசைக் கருவிகளும் பண்ணும் பாடலும் கூத்தும் என வகுத்துக் கொண்டு வாழ்ந்தவர்கள் தமிழர்கள். தமிழோடு தமிழிசையும் இயல்பாகவே வளர்ந்து வளம் பெற்றதை விரிவாக ஆராய்ந்து நாவலர் வெளிப்படுத்தியுள்ளார்.

இயல்பான இயற்கையான இசையாக வளர்ந்த தமிழிசை வளர்ச்சியைத் தக்க சான்றாதாரங்களுடன் நாவலர் விளக்கியிருப்பது அனைவரும் படித்துப் பரப்பும் தகையது. இசைப் பாடல்களின் தொன்மை குறித்தும் மிக விளக்கமாக நாவலர் ஆராய்ந்துள்ளார். பழந்தமிழிசை மற்றும் இசைக் கருவிப் பட்டியல்களையும் பழந்தமிழ் நூல்கள் வழிநின்று விளக்கியுள்ளார்.

தமிழர்களின் வாழ்வில் இசையும் பாடலும் இணைந்தே கலந்துள்ளன. சிறுவர், சிறுமியர், பெண்கள், பெரியவர்கள் விளையாட்டுகளானாலும் இசையுடன் பாடல்கள் நிறைந்துள்ளன. வாழ்வியல் சடங்குகள் வழிபாட்டுச் சடங்குகள் ஆகியவற்றில் இசையும் இசைக்கருவிகளும் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்கள் இசைக்கருவிகள் மற்றும் இசைக்கலைஞர்களைப் பற்றிய செய்திகளைப் பதிவு செய்து வைத்துள்ளன. எனவே தமிழிசை என்பது புதியதோ புதுமை இயக்கமோ அன்று. நம்முடைய இசையை இசைத் தொன்மையினை இசைப் பாட்டினை நிறுவ வேண்டிய நிலையில் தமிழர்களும் தமிழ்ச் சமுதாயமும் தள்ளப்பட்டிருக்கின்றோம். தமிழறிஞர்களும், தமிழாராய்ச்சியாளர்களும் தமிழிசையை மீட்டெடுத்து நமது இசைப்பண்பாட்டினை நிறுவ வேண்டிய கடப்பாடுடையவர்களாவர்.

இசையைப் பற்றி நாவலர் குறிக்கும் போழ்து, "பலவகையான கூத்துகளோடு வரிப்பாடல்கள் பாடப்பட்டன. கொற்றி, பிச்சி, சித்து, சிந்து, ஆண்டி, அம்மனை, பந்து, கழங்கு, உந்தி, தோள் வீச்சு, சாழல், தெள்ளேணம் முதலிய எண்ணிறந்த கூத்துவகைகளும் அவற்றிற்குரிய பாடல்களும் பயிற்சியில் இருந்தன. அவை பெரும்பாலும் மகளிருடைய விளையாட்டுகளாக விளங்கின. மற்றும் மகளிர் கிளியோட்டுவ்தும் பாட்டு, சாந்திடிப்பதும் பாட்டு, உழத்தியர் நாற்று நடுவதும், களை பறிப்பதும் பாட்டு. இவ்வாறு எல்லாச் செயல்களும் பாட்டுகளோடு நிகழ்ந்தன. இவற்றால் முற்காலத்தில் தமிழகத்திலிருந்த ஆடவரும் மகளிரும் இசையும், கூத்தும், ஆகிய இவ்விளையாட்டுகளால் களி சிறந்து உடம்பும்

உள்ளமும் தழைத்திருந்தனர் என்னும் உண்மை புலனாகும் என்க" (மேலது ப.196) என்று கூறுகின்றார். நாட்டுப்புற மக்களிடையே இன்றளவும் நிலைபெற்றுள்ள பல்வேறு இசைவடிவங்கள் இலக்கியங்களிலும் பதிவாகி நம் தமிழ் இலக்கியங்களை வளப்படுத்தியதோடன்றி நாகரிகப் பண்பாட்டினையும் பேணிக் காத்து வருகின்றன. தமிழிசைத் தோற்றப் பின்னணியை நாவலர் விரிவாக விளக்கி இசை வளர்ந்த வளர் நிலைகளைப் புலப்படுத்துகின்றார்.

இசை நுணுக்கங்கள் இசை மரபுகள் என அனைத்தினையும் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இசைப் பகுதிகள் எனும் கட்டுரையில் ஆய்ந்துள்ளார். மேலும், "மக்களுடைய உள்ளக் கிளர்ச்சியாகிய வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், வெகுளி, நகை, சாந்தம் என்பவற்றை மெய்ப்படத் தோற்றுவிக்கும் கவிதைகள் எல்லாம் இசையமைதி உடையவை". (மேலது, ப.198) என்று கூறுகின்றார். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் உள்ள உணர்ச்சியாகிய சுவைகளுக்கு இலக்கணம் கூறப்பட்டிருத்தலின் அக்காலத்திலேயே அத்தகைய செய்யுட்கள் மிக்கிருந்தனவாதல் வேண்டும் (மேலது, ப.198) என்று வலியுறுத்துகின்றார். இசைப்பாடல்கள் பல நிலைகளில் பல்வேறு சூழல்களில் தமிழர்களிடையே பயில்வில் பொலிவுற்றமையை இக்கட்டுரையில் சுட்டியுள்ளார். இசை என்பது தமிழர்தம் வாழ்வியலோடு இணைந்துள்ள இசையாக வளம்பெற்று வளர்ச்சி யடைந்துள்ள பான்மையை அவரது ஆராய்ச்சி வெளிக்காட்டியுள்ளது.

வீரம்

வீரத்தின் விளைநிலமாக விளங்கியது தமிழகம். பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழர்தம் வீரத்தினைப் பலவாறாகப் பதிவு செய்துள்ளன. ஆண்களின் வீரவுணர்வுகளை மட்டுமன்றிப் பெண்களின் வீரவுணர்வுகளையும் பழந்தமிழ் இலக்கியங்கள் விரித்துரைக்கின்றன. போர்க்களத்தே சென்று எதிரிகளிடம் பொருவது மட்டுமன்று வீரம். மனித வாழ்வில் அனைத்து நிலைகளிலும் வேண்டப்படுவது வீரம். நாவலர் தொல்காப்பியத்தினை மேற்கோள்காட்டி வீரத்திற்கு விளக்கம் நல்கியிருப்பது குறிக்கத்தக்கது. "தொல்காப்பியர் ஒவ்வொரு சுவையும் தோன்றுதற்கு மூலமான பொருள்கள் நன்நான்கு எனக் கூறுகின்றனர். அவர் வீரம் என்பதனைப் பெருமிதம் என்னுஞ் சொல்லாற் குறிக்கின்றனர். யாவரோடும் ஒப்ப நில்லாது மேம்பட்டு நிற்றலின் பெருமிதம் என்னும் சொல்லால் வீரம் குறிக்கப்படுகின்றது. கல்வி, தறுகண்,

இசை, கொடை என்ற நான்கும் பற்றிப் பெருமிதம் பிறக்கும் என அவர் கூறியுள்ளார். எனவே, போர்ச் செயலிற் காட்டும் ஆண்மையை மட்டுமே அவர் வீரம் எனக் கொண்டிலர் என்பது பெறப்படும். இந் நான்கினுள்ளும் படை வீரமும் கொடை வீரமும் இலக்கியங்களிற் பலவிடத்து ஒருங்கு கூறப்பட்டுள்ளன" (மேலது பக்.221-222) என்ற விளக்கம் வீரம் என்பது படைப்போர் வீரம் மட்டுமன்று என்பதனைத் துலக்கமாக எடுத்து இயம்புகின்றது. மேலும் இக்கூற்றினைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார்.

தமிழர்களின் தலையாயப் பண்பாக விளங்குவது வீரப் பண்பு. அவ்வீரத்தினை அறத்துறை வழுவிப் போர்புரிந்து காட்டிலர். அறத்திற்குட்பட்டுப் போர் புரிந்தமையை எம்மொழி இலக்கணத்திலும் காணப்படாத இலக்கணமான நமது பொருளிலக்கணம் உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது. பகைவர் இரந்து கேட்பாராயின் தன் உயிரையே கொடுக்கும் உயர்ந்த நோக்கினையும் தக்க மேற்கோள்வழி விளக்கியுள்ளார்.

தமிழ் அரசர்களின் போர்முறையொன்றே தமிழர்களின் உயரிய நாகரிகத்தைக் காட்டுதற்குப் போதியதாகும். இவர்களது போர்முறைகளும் வழக்கங்களும் பிற நாட்டவர்களாலும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என நாவலர் கூறுகின்றார். போர் நிகழ்ச்சிகளுக்கேற்ப மலர்களைச் சூடும் முறையும் தமிழர்தம் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றது. வான்மீகி முனிவர் இராமாயணத்தில், நம் போர்வீரர் தென்னாட்டவரைப் போலத் தலைக்கு மலர்களை அணிகின்றனர் என்று பரதன் கூறுவதாகக் கூறியிருப்பது தமிழருடைய பண்பாடு ஆரியரால் விரும்பி ஏற்றுக் கொண்டிருப்பதைத் தெளிவுபடுத்துகின்றது (மேலது, ப.319) என்று நாவலர் விரிவாக விளக்கியுள்ளார்.

தமிழ் முதுகுடிப் பிறந்த மகளிரின் வீர வாழ்க்கையினையும் பாடல்வழி விளக்கி மகளிரின் வீர மேம்பாட்டினைப் புலப்படுத்தியுள்ளார். நாவலர் வீரத்தினைப் பற்றிக் கூறுமிடத்து ஒருவன் கொடுப்பதை மறுத்தலும் வீரத்தின் பாற்படும் என்று கூறுகின்றார். வீரம் என்பது பகைக்கு அஞ்சாது செயலாற்றும் வினை மட்டுமன்று. கொடையை மறுக்கும் திறனும் வீரமாகும் என்பது நாவலரின் கருத்து, "இனி கொடையே யன்றி இதனைக் கொள்க வென்று ஒருவன் வலிதிற் கொடுக்கவும் அதனைக் கொள்ளேன் என்று மறுப்பின் அஃதும் வீரத்தின் பாற்படுவதேயாகும். பழைய சங்கப் புலவர்களிடம் இத்தகைய

பெருமித உணர்ச்சி ததும்பியிருந்தமை அன்னோர் பாட்டுகளால் அறியக் கிடக்கின்றது". (மேலது, ப.223) என்ற நாவலரின் கூற்று பழந்தமிழ்ப் புலவர்களின் மாண்பினைக் கூறி விளக்குதல் சிந்தனைக்குரியதாகும்.

வீரத்தைப் படைவீரம் கொடைவீரம் எனப் பகுத்து விளக்கியுள்ளார். படைவீரம் போர்க்களத்தில் அறத்துடன் செயல்படுத்தப்பட்டது. வேல் நோக்கிப் பகைவன் இமைக்கு வானாயின் அதுவே தோல்வி எனக் கருதும் பண்பாட்டினை உடையவர் தமிழர். கொடையெனின் உயிரினையும் கொடுக்கத் தயங்காத தறுகண்மை, அத்துடன் கொடையினை மறுக்கும் பண்பு ஆகியன வீரத்தின் பாற்படும் என்ற நாவலரின் கருத்துகள் வீரத்தின் விளக்கவுரைகளாகத் திகழ்கின்றன.

தமிழிலக்கியங்கள் பண்டைத் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் கூறாகத் திகழ்ந்த வீரத்தினைப் பதிவு செய்திருக்கின்றன. எனினும் அவற்றை உலகோர் அறிய உரிய விளக்கம் தந்து அனைவரிடமும் கொண்டு சென்று மக்களை விழிப்படையச் செய்தவர் நாவலர். இவர் வீரத்தை நோக்கிய ஆய்வு நோக்கு அனைவரின் சிந்தனைக்கும் புதிய ஒளியைத் தருகின்றது எனலாம்.

குலப்பாகுபாடு

தமிழர்களிடையே செய்தொழில் அடிப்படையில் பிரிவுகள் அமைந்திருந்தன. ஒவ்வொரு தொழிலும் அதனதன் அளவில் மக்களின் வாழ்வுத் தேவைக்கு அடிப்படையாகின்றது. தொழிலில் உயர்வு தாழ்வு என்பது இல்லை. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் மற்றும் பிற உணவுத் தேவைக்குரிய உற்பத்தித்தொழில்கள் என்றவாறு நாட்டில் பல தொழில்கள் நடைபெற்றன. இத்தொழில்களைச் செய்பவர் களிடையே தகுதிநிலை வேறுபாடுகளைப் பழந்தமிழர் காணவில்லை. ஆனால் தமிழர்களின் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் புறம்பாகத் தோன்றியவர்களின் சூழ்ச்சியினால் தமிழர்ப் பண்பாடு நாணத்தக்க வகையில் மாறிவிட்டது. ஆகவே, உண்மையான தமிழர்தம் பண்பாட்டை விளக்கும் நிலையில் குலப்பாகுபாடு பற்றி நாவலர் விளக்கியுள்ளார்.

நாவலர் காலத்தில் கோயில் நுழைவுப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இன்றுவரையிலும் இச்சிக்கல் தொடர்கின்றது. நாவலர் இச் சிக்கலை முன்வைத்துக் குலப்பாகுபாடு குறித்து விளக்குகின்றார். "சமயத்தைப் பற்றி முற்ற உணராதார்களிடையே

உருவான கொள்கை மனிதரிடையே ஏற்றத்தாழ்வு காண்பது. சாதி என்று மக்களைப் பிரித்தாலும் போக்கு நடைபேற்று முறையில் ஏற்பட்ட சில கட்டுப்பாடுகள் அல்லது சட்டதிட்டங்கள். சமயங்களோ உயிர்களின் கடைத்தேற்றத்திற்குரிய நெறிகள். உடல் பற்றுக் கோடாகத் தோன்றிய சாதி உயிரின் ஈடேற்றத்தைக் குறிக்கோளாகவுடைய சமயத்திற் புகுந்து சில மக்களை அதற்குரியரல்லாராக்குதல் முறையாகுமா? (மேலது, ப.108) என்று நாவலர் வினவுகின்றார். உலகியல் நடைபேற்று முறையில் தொழில் பிரிவுகள் தோன்றின. ஒவ்வொரு தொழிலும் அதனதன் அளவில் மக்கள் வாழ்வுத் தேவைக்கு அடிப்படையாகின்றது. ஒன்றினை உயர்த்தியும் ஒன்றினைத் தாழ்த்தியும் கூறுதல் முறையன்று. ஆகவே, தொழில் அடிப்படையாகப் பிரிந்த குலங்களும் சாதிகளும் உயிரின் கடைத்தேற்றத்திற்கு எவ்வகையில் தடையாகும்" என்ற நாவலரின் வினா பலரது சிந்தனைகளைத் தூண்டித் தெளிவு படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

குலப்பாகுபாட்டினால் தமிழர்களின் பண்பாடு சிதைக்கப்பட்டுவிட்டது. குலப்பாகுபாடு மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்குகின்றது. தமிழகப் பண்பாட்டுச் சின்னங்களாக விளங்குவன தமிழகத் திருக்கோயில்கள். அக் கோயில்களைக் கைப்பற்றிக் கொண்டுத் தமிழுக்குப் புறம்பான நாகரிகப் பண்பாடுடையவர்கள் ஆதிக்கம் செலுத்திவருகின்றனர். குலப் பாகுபாட்டினைக் கொண்டாடும் தமிழினம் தன் பண்டைப் பண்பாட்டை மறந்து அடிமையாகிக் கிடக்கின்றது. இவர்கள் தமிழர்களைப் பிளவுபடுத்தி அவர்களது கோயிலுக்குள்ளேயே அவர்களை நுழைய விடாமல் தடுத்துவரும் தீம்பினை நாவலர் வன்மையாகக் கண்டிக்கின்றார். "இன்றிருப்பதைப் போன்று பண்டைநாளிற் கோயில் அமைப்பில்லை. இயற்கையாக மரம், மலை, வெட்டவெளி, என்று கோயில்கள் அமைந்திருந்த நாள்களில் இப்படி ஏதேனும் தடை இருந்ததா?" (மேலது ப.108) என்ற கேள்வியை எழுப்பி மக்களைச் சிந்திக்கத் தூண்டியுள்ளார். தமிழர்களுடைய சிறந்த பண்பாட்டுப் பங்களிப்பு அல்லது கொள்கை, பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்பது. இதனைத் தமிழர்களின் அடிப்படையான உயிர்நாடியான கொள்கை என்று நாவலர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மேலும் சமய நூல்களிலும் குலப்பாகுபாடு போற்றப் பெறவில்லை. அனைவரையும் ஒப்ப மதிப்பதே உண்மையான சமயமாக இருக்கமுடியும் என்பது நாவலரின் கருத்தாக அமைகின்றது. இறைவனை அடைதற்குத் தமிழரின் சமயங்கள்

தடையாக இருந்ததில்லை. அவ்வாறிருக்க இக்குலப் பாகுபாடுகளின் நோக்கத்தை அறியாது இழிவு படுத்தும் பண்பினை நாவலர் சாடுகின்றார். ஆகவே, தமிழ்ப் பண்பாட்டில் குலப்பாகுபாடு என்பது ஏற்றத்தாழ்வினைக் கற்பிக்கும் பாகுபாடன்று. அது தொழில் அடிப்படையானது. எந்த வகையிலும் உயர்வு தாழ்விற்கு உரியதல்ல. எத் தொழிலும் மனிதவாழ்வியல் இயக்கத்திற்குத் தேவையாக விளங்குவதே என்பது தமிழர்தம் பண்பாடு என்பதை நாவலர் வலியுறுத்தி விளக்கியுள்ளார்.

சமயம்

சமயம் பண்பாட்டின் அங்கமாகத் திகழ்கின்றது. மக்களுக்கு வாழ்க்கையில் பற்று ஏற்படச் செய்வதில் சமயத்திற்கு மிக இன்றியமையாத பங்கு உண்டு. மனத்தினைப் பக்குவப்படுத்தி வாழ்க்கையில் நம்பிக்கையைச் சமயம் வளர்க்கின்றது. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நிலையில் சிறப்புடையது. சமயத்தைப் பற்றி நாவலர் தெளிவான விளக்கத்தினைத் தந்துள்ளார். “மன்பதைகள் உய்ந்திடுதல் வேண்டிக் கடவுளருள் பெற்ற பேரறிவுடைய பெருமக்கள் கண்ட நெறியே சமயம் எனப்படுவது. அது கடவுள் வகுத்தது எனலும் அமைவுடைத்தே. உலகில் சமயம் என்பது இன்று நேற்று உண்டானது அன்று. பல்லாயிரம் ஆண்டுகளாகவே உள்ளது. சமயத் தொடர்பு சிறிதும் இல்லாத நாட்டினரையோ கூட்டத்தினரையோ நாம் ஒருபோதும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இடத்தாலும் காலத்தாலும் பல்வேறு குழுவினராகப் பிரிந்த மக்களின் அறிவுச் செயல்களில் வேறுபாட்டிற்கேற்பவும் நெறிவகுத்தோர்களின் அகக் காட்சிகளுக்கேற்பவும் சமயம் பலவாயின. எல்லாச் சமயங்களும் மக்கள் உயர்நிலை அடைய வேண்டுமென்னும் பெருநோக்க முடையனவே. அவையாவற்றிற்கும் பொதுவான அறங்களும் ஒழுக்க நெறிகளும் உள்ளன” (மேலது, ப.98) என்பது சமயம் பற்றிய நாவலரின் மனவெளிப்பாடு. சமயம் என்பது மக்களை உயர் நெறிக்கு அழைத்துச் செல்லும் அமைப்பு. இடத்திற்கும் மக்களுக்கும் ஏற்ப நெறிகள் மாறலாம் எனினும் நோக்கம் ஒன்று என்பது நாவலரின் கருத்து.

தமிழகத்தேயும் பண்டு பல சமயங்கள் நிலவி வந்தன. எனினும் தொன்மைச் சமயமாகவும் முதன்மைச் சமயமாகவும் நாவலர் கருதுவது தமிழ்ச் சைவத்தையேயாகும். இதனைக் கட்டுரைகளில் சான்றுகள் காட்டி விளக்குகின்றார். ‘. . . . பல சமயங்களும் மலிந்து கிடந்தனவாயினும் சிவசமயமானது

முதன்மையுடையதாகக் கொள்ளப்பெற்று வந்ததென்பது மேற்காட்டியவற்றிலிருந்து நன்கு புலனாகும். யாண்டும் சிவன் முதலில் வைத்துக் கூறப்படுதலேயன்றிப் "பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்" என முதற் கடவுளுக்கு இன்றியமையாத இலக்கணத்தை வேறுபிரித்துக் கூறப்படுதலும் காண்க" (மேலது, ப.384) என்ற நாவலரின் கருத்தும் சிந்தனைக்குரியது.

பழங்காலத்தில் சிவனை வழிபட்டவர்கள் திருமாலையும் வழிபட்டு வந்துள்ளனர். பிற்காலத்தைப் போன்று கடவுள் சமய வேறுபாடுகளை மக்கள் கொள்ளவில்லை என்பது நாவலரின் கருத்து. மேலும் சிவனையே முழுமுதற்கடவுளாகக் கொண்டிருந்தனர் என்று கருதுகின்றார். பழங்காலத்து மக்கள் ஐம்படைத்தாலி அணிந்திருந்தனர். திருமாலைக் காக்கும் கடவுளாகக் கொண்டிருந்ததனால் அதனடிப்படையில் திருமாலின் வளை, திகிரி, தண்டு, வாள், வில் எனும் ஐந்து படைகளின் உருவமைத்த ஐம்படைத் தாலியை அணிந்து கொண்டனர் என்று குறிப்பிடுகின்றார்.

இதுவன்றியும் மக்கள் பொது நிலையில் சிவபெருமானுடன் இயைபுடைய ஆனேறு அதன் இரண்டு பக்கத்திலும் வாள், மழு ஆகிய உருவங்கள் அமைக்கப் பெற்றிருந்த அணிகலன்களை அணிந்தமையையும் கட்டுரையில் விளக்கியுள்ளார். சிவ சமயத்தவர்களும் குழந்தைகளுக்குக் காப்பு அணியாகத் திருமாலின் ஐம்படைத்தாலி எனும் அணிகலனை அணிந்து வந்த செய்தியைப் பக்தி இலக்கியங்களை மேற்கோளாகக் காட்டி நிறுவியுள்ளார். "சைவ மக்கள் எல்லாரும் திருமாலிடத்து அன்புடையராகவே ஒழுகி வந்தனர். அது சமயப் பற்றிற்கு மெலிவு தருவதாகக் கருதப்படவில்லை" (மேலது, ப.531) என்று கூறுகின்றார். சமயத்தில் மக்கள் கொண்ட பண்பாட்டுப் பொதுமைச் சிறப்பினை நாவலர் விளக்கிக் காட்டுகின்றார்.

சிவசமயமே தமிழகத்தின் தொன்மையான சமயம் என்ற கருத்தினைக் கொண்ட நாவலர் பல்வேறு சான்றுகளைக் கொண்டு அதனை நிறுவுகின்றார். பண்டைத் தமிழக மக்கள் சமயத்தைப் பொறுத்த அளவில் பாகுபாடின்றி வாழ்ந்தனர் என்று பண்டைத் தமிழர் சமயப் பண்பாட்டினை விளக்கியுள்ளார்.

வழிபாடு

வழிபாடு மக்களையும் கடவுளையும் இணைக்கின்ற நெறிமுறையாக அமைகின்றது. உலகையும் வாழ்வினையும்

படைத்தளித்த இறைவனுக்குத் தாம் காட்டும் நன்றியுணர்வின் அடையாளமாக வழிபாட்டினைக் கொள்ளலாம். தமிழ்ப் பண்பாடுகளில் தலை சிறந்து விளங்குவது நன்றியுணர்வேயாகும். மக்களிடையே ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் நன்றியறிதலைப் போல் இறைவனுக்கு மக்கள் காட்டும் நன்றியுணர்வினை வழிபாடாகக் கொள்ளலாம். நன்றியறிதலின் நிலையில் வழிபாடு வழக்கில் நிலவுகின்றது. மக்கள் கடவுளர் மாட்டுக் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடான வழிபாட்டைத் தமிழர்கள் தங்கள் வாழ்வில் அங்கமாகக் கொண்டுள்ளனர்.

வழிபாட்டு முறையில் தமிழர்கள் உருவவழிபாட்டினைக் கொண்டிருந்தனர். பழந்தமிழ் இலக்கியங்களிலும் கடவுளின் வடிவ அமைப்புகள் விவரிக்கப்பட்டுள்ளன. வழிபாட்டில் உருவ வழிபாடு மிக இன்றியமையாததாக அமைகின்றது. வழிபாட்டிடங்களில் கடவுள் உருவம் எழுதியமையும் படிமங்களைப் போற்றியமையையும் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. உருவ வழிபாடு மிகத் தொன்மையானது. நாவலரும் உருவ வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். உருவ வழிபாடு குறித்து நாவலர் குறித்துள்ள கருத்துகள் சிந்தனைக்குரியன. "உருவ வழிபாட்டினை வற்புறுத்தியவர்கள் சமயக் குரவர்கள். மெய்யுணர்வில் முற்றுப் பேறுடையராய் இறைவனால் வலிதின் விரும்பி ஆட்கொள்ளப் பெற்றோராய் அவரது எல்லையில்லாத பேரருளைப் பெற்று யாவர்களும் செய்யவொண்ணாத செயல்களைச் செய்தோராய் விளங்கி நமது சமயத்தை நிலைநாட்டி அருட் குரவர்கள் தங்கள் பதிகங்களில் உருவ வழிபாட்டை வற்புறுத்தியதனோடு அமையாது தாங்களும் பதிகள் தோறுஞ் சென்று வழிபாடு செய்து போந்தனரென்றால் அவர்கள் காட்டிய வழியே நாம் உய்யும் நெறியாகக் கடைப்பிடித்து ஒழுகலே நமது கடமையாம். அது தாழ்ந்த நிலையென்று நினைப்பது அறியாமையாம்" (மேலது ப.103) என்ற கருத்து இவண் நினையத் தகும். நமது இறையருட் சான்றோர்கள் தலவழிபாட்டினையும் உருவ வழிபாட்டினையும் வலியுறுத்தியுள்ளனர்.

இறைவன் இறையருட் சான்றோர்களுக்குப் பல நிலைகளில் தன்னை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். அச் சான்றோர்கள் தாங்கள் கண்டவற்றைப் பிறர்க்கும் காட்டிப் போந்தனர். அவர்கள் காட்டிய வடிவிலும் வழிபாட்டு நெறியிலும் நம் கருத்தையும் செயலையும் செலுத்தி உய்ய வேண்டும் என்பது நாவலரின் கருத்தாகும்.

நெடிய மரபுப் பின்புலம் கொண்ட தமிழர்கள் வழிபாட்டில் உருவ வழிபாட்டினைக் கைக் கொண்ட சிறப்பினைப் பலபடியாக நாவலர் வலியுறுத்திக் கூறியுள்ளார். உருவ வழிபாட்டிலும் சைவ சமயத்திலும் மிகுந்த நம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்த நாவலர் திருச்சிராப்பள்ளியில் பணியாற்றிய போழ்து சைவ சித்தாந்த சபையில் சமயச்சொற்பொழிவுகளை ஆற்றி மக்களைச் சமயநெறிக்கு ஆற்றுப் படுத்தியுள்ளார்.

திருவிழாக்கள்

மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் கூறுகளில் ஒன்றாக விழாக்கள் அமைந்துள்ளன. வழிபாட்டின் கூறாகத் திருவிழாக்கள் திகழ்கின்றன. மக்கள் ஒன்றுகூடி இணைந்து மகிழ்ந்து கடவுளுக்கு நன்றி கூறும் வழிபாட்டு முறையாக விழாக்களில் குறிப்பாகத் திருவிழாக்கள் அமைகின்றன. பழந்தமிழ் இலக்கியங்கள் பண்டைநாளில் நிகழ்ந்த விழாக்களைப் பதிவு செய்துள்ளன. பக்தி இலக்கியங்களும் பல்வேறு விழாக்களைக் குறிப்பிடுகின்றன. நாவலர் நமது இலக்கியங்களில் பதிவாகியுள்ள குறிப்புகளைத் தொகுத்தாய்ந்து திருவிழாக்களை விளக்கியுள்ளார். அவரது ஆய்வுப் பார்வை திருவிழாக்களின் உண்மையான நோக்கத்தினை அனைவர்க்கும் புலப்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளது.

திருவிழாக்களைப் பற்றிக் குறிக்கும் போழ்து, "ஓர் பெரிய திருவிழாச் செய்வதென்றால் நகரத்திலுள்ள பலவகை மாந்தர்களும் ஒருங்கு கூடியிருந்து ஆராய்ந்து முடிவு செய்வதென்ற வழக்கம் அக்காலத்து மக்களின் ஒற்றுமையையும் ஆளுந்திறனையும் நன்கு விளக்குகின்றதன்றோ? திருவிழா நடக்கும் ஒவ்வொரு நாளிலும் நகரத்தின் பல பக்கங்களிலும் அறவுரைக் கட்டுரைகளும் சமய வரலாற்று ஆராய்ச்சிகளும் நிகழும் என்பது திருவிழாவின் பயனை எவ்வளவு மிகுதிப் படுத்திக் காட்டுகின்றது. கல்வியும் சமய அறிவும் குறைந்துள்ள இக்காலத்தில் திருவிழாக்கள் நடைபெறும் பொழுது இத்தகைய செயல்கள் நிகழுமேல் எவ்வளவு பெரும்பயனுண்டாகும். இக்காலத்தில் திருவிழாக்களை நடத்தி வைக்கும் அறநிலையத் தலைவர்களும் அறப் புலவர்களும் பிறரும் இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பு நம் முன்னோர் செய்து காட்டிய வழிகளை இனிமேலும் பின்பற்றி ஒழுகுமாறு பெருமான் திருவருள் பாலிப்பானாக" (மேலது, பக்.397-398) என நாவலர் விளக்குகின்றார். இக் கருத்து அனைவரின் சிந்தனைக்கும் உரியதாகும். இக் கருத்து இன்றைய நிலையினையும் பழந்தமிழர்தம் பண்பாட்டுச் சிறப்பினையும் தெற்றென வெளிக்காட்டும் தன்மையினவாகத் திகழ்கின்றது. விழாக்களின் நோக்கும் போக்கும் திசைமாறிச் செல்லும் நிலையில் நாவலரது கருத்து காலத் தேவையாகவும் விளங்கக் காணலாம். திருவிழாக்களின் உண்மைப் பயன்களை

அனைவரும் அறிந்து பயன்கொள்ளும் வகையில் அதன் நுட்பங்களை நாவலர் வலியுறுத்திக் காட்டுகின்றார்.

வழக்காறுகள்

பழந்தமிழ் இலக்கியங்களில் பதிவாகியுள்ள வழக்காறுகளை நாவலர் கட்டுரைகளின் வாயிலாக விளக்கியுள்ளார். மக்களின் நம்பிக்கைகள், வழக்கங்கள் முதலான வாழ்வியல் செய்திகள் பலவற்றையும் நாவலர் சிந்தித்துள்ளார். "புறநானூற்றிற் கண்ட சில பழைய வழக்குகளும் வரலாறுகளும்" என்ற ஆய்வுக் கட்டுரை பழந்தமிழரசர்களின் வழிபாடு மற்றும் நம்பிக்கைகளை விவரிப்பதோடு போரில் சிறந்தவர்களுக்குச்செய்யும் சிறப்புகளையும் பட்டியலிடுகின்றது. மேலும், மழை வரத்துக் குறித்த நம்பிக்கையையும், தெய்வமுறையும் இடங்கள் குறித்த மக்களின் நம்பிக்கையையும் இலக்கிய மேற்கோள்கள் வழியாக நாலவர் விளக்கியுள்ளார். நன்னாளிற் கதிர் கொய்து வந்து புதிது உண்டல், நீர் விளையாட்டு, மழைக்கான மக்களின் வழிபாடு, புலி இடப்பக்கத்து வீழ்ந்த விலங்குகளை உண்ணாது என்னும் கருத்து, செத்தோரைப் பேராந்தை அழைக்கும் என்பது ஆகிய நம்பிக்கை வழக்காறுகளை விளக்கியுள்ளார். போர்ப் பயிற்சியாளர்கள் முருக்க மரத்தாற் செய்த தூணினை இலக்காக நிறுத்தி அதிற் படைக்கலன்களை வழங்கிப் பயில்வாரென்ற செய்தி வடக்கிருத்தல், இறந்தோரைச் சுடுதல், தாழியாற் கவித்தல், கணவனையிழந்த மகளிர் தீப்பாய்தல், கைம்மை நோன்பு நோற்றல் முதலாய பல வழக்கங்களைக் குறிப்பிட்டுள்ளார். புறப்பாட்டால் அறியப்படும் பல வழக்காறுகளையும் விளக்கியுள்ளார்.

நாவலரின் சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும் தமிழ்ப் பண்பாட்டின் பல செய்திகள் வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களை அறிமுகஞ் செய்கின்ற போழ்தும் பாடல்களுக்கு விளக்கம் நல்கும் நிலையிலும் நாவலர் பண்பாட்டுச் செய்திகளை மக்களுக்கு மனத்தில் பதியத்தக்க வகையில் வெளிப்படுத்தியுள்ளார். வழக்காறுகள் குறித்து நாவலர் சங்க இலக்கியம் தொடங்கி, பக்தி இலக்கியக் காலம் வரையிலுமான பல இலக்கியங்களை மேற்கோள்களாகக் கட்டுரைகளில் பல இடங்களில் காட்டியுள்ளார்.

நிறைவுரை

நாவலரின் வாழ்வும் எழுத்துகளும் பண்பாட்டு வடிவங்களாக விளங்குகின்றன. இவரது ஆய்வுகள் ஆய்வுப் பண்பாட்டு நெறியைப் புலப்படுத்தியுள்ளன. தமிழ் ஆய்வாளர் தமிழ் நூற்புலமை மிக்கவராகத் திகழ்தல் வேண்டும். மேலும் நல்ல தகுதியை வளர்த்துக் கொண்டு தெளிந்த சிந்தனையுடன் ஆய்வுப் பயனை எண்ணி ஆய்வில் ஈடுபடுதல் வேண்டும் என்று நாவலர் குறிப்பிடுகின்றார்.

தமிழ் மொழியின் இலக்கணமும் இலக்கியமும் தமிழர்தம் பண்பாடுகளைப் புலப்படுத்துதலை விரிவாக விளக்கியதோடு மொழிவளர்ச்சிக்குரிய நெறிமுறைகளையும் சுட்டியுள்ளார்.

கல்வியில் வளர்ச்சி பெறாத எந்த இனமும் பண்பாட்டில் உயரமுடியாது என்றுரைத்துத் தமிழினம் கல்வியிற் சிறந்த போழ்தெல்லாம் உயர்ந்து நின்ற பாங்கினை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியுள்ளார். கல்வியில் ஆசிரியர் பண்பாட்டினை வளர்த்தெடுக்க வேண்டிய வழிமுறைகளை உளம்கொள்ளுமாறு கூறியுள்ளார்.

தமிழிசை தோன்றி வளர்ந்து வளம்பெற்று நிலைத்திருக்கும் பான்மையினைத் தக்க காட்டுகளுடன் விவரித்திருப்பது அனைவரும் உளங்கொள்ளுந் தகையது.

மேலும் வீரத்திற்கு நாவலர் தரும் விளக்கம் தமிழர்தம் பண்பாட்டினை விளக்குவதாகிறது. படைவீரம், கொடை வீரம் என்று பாகுபடுத்தியதோடு கொடையினை மறுத்தலையும் வீரமாகக் காட்டி நமது புலவர்தம் மாண்பினை இலக்கியச் சான்றுகள் வழி நிறுவியுள்ளார்.

இழிவுதரும் குலப்பாகுபாடு தமிழர்தம் பண்பாடு அல்ல என்கிறார். சமயம் மக்களை ஒப்ப மதிக்கும் தகையது. சிவசமயம் தமிழகத்தில் தொன்மையான முதன்மைச் சமயம் என்பது. நாவலர் தம் கருத்து.

வழிபாடுகளில் உருவவழிபாட்டை ஏற்றுக் கொள்கிறார். விழாக்களின் உண்மை நோக்கம் மக்களின் கூட்டுறவு வளர்த்தல், சமய அறிவினை விரிவடையுமாறு செய்தல் முதலியனவாகும் என்ற நாவலரின் கருத்துகள் அனைவரின் சிந்தனைக்கும் உரியன. அது மட்டுமன்றி இலக்கியங்கள் வெளிக்காட்டும் வழக்காறுகள் வழியாகப் பண்பாட்டுச் செய்திகளை விளக்கிய நாட்டாரின் தமிழ்ப் பணி என்றும் தமிழ் நிலத்தை வளம்பெறச் செய்யும்.

துணை நூல்கள்

1. தமிழ்மாறன், மோ. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் கடிதங்களில் வாழ்வியல் சிந்தனைகள், மரியபூமாலை பதிப்பகம், தஞ்சாவூர் 613 007, சனவரி 2000.
2. நடராசன், வே. நாட்டார் ஐயா, கழக வெளியீடு, 1988
3. விருத்தாசலம் பி. (ப.ஆ) நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக் கட்டுரைகள், அறப் பணிக்கழகவெளியீடு, தஞ்சை, 1994.

*****

பல்துறைச் சிந்தனை

தி. மகாலட்சுமி

மொழியாய்வு, பண்பாட்டாய்வு,வரலாற்றாய்வு ஆகியன 1940களில் தமிழில் செழிப்புற்றிருந்தன. உலகளாவிய மொழிகளில் தமிழின் தொன்மை அளப்பரியது எனக் காட்டுதற்கும், தமிழர் பண்பாடு உலக நாகரிகத்தின் வெளிப்பாடு என உணர்த்துதற்கும் தமிழ்ப் பேரறிஞர் தம் ஆற்றல்களை ஆழமாகவும், அகலமாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

அவ்வகையில் நவீன தமிழ் இலக்கியச் சூழல் கருக்கொண்டு வளர்ந்து வந்த வேளையில், இந் நவீன இலக்கியத்தில் மரபுவழியான உறவுகளையும், தமிழ் இலக்கியத்தின் நீண்ட பாரம்பரிய இலக்கியச் செல்வங்களைக் கைக்கொள்ள வேண்டியதையும், அதன் தனித்துவத்தை எடுத்தியம்பும் பணியையும் செய்தவர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்.

வெள்ளையர்கள் வடநாட்டார் ஆரியர், தென்னாட்டார் திராவிடர் என்றும், இருவரும் ஒருவரை யொருவர் உயர்வு தாழ்வு கற்பித்துப் பேசும்படியும் செய்தனர். எனவே இரண்டு மக்களும் தங்களுக்கெனச் சொந்த வரலாறு கொண்டு வாழ்ந்து வருபவர்கள் என்பதை உணர்த்த வேண்டிய கடமை அன்றிருந்த சான்றோர்க்கு ஏற்பட்டது. அவ்வகையில் தான் ந.மு. வேங்கடசாமி நாட்டாரும் தமது ஆழ்ந்த தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை கொண்டு இதனை நிறுவுகிறார்.

“கற்கண்டு சுவை மிக்கதென்று கேட்டளவில் அதன் சுவையை உணர முடியுமா? அதனை வாயிலிட்டுச் சுவைத்து உண்ணும் பொழுதன்றோ அதன் இன்சுவை புலனாகும்? அதுபோல் தமிழையும் பலகாலும் கற்றும் கேட்டும் சிந்தித்தும் உரைத்தும் ஆராய்ந்தும் துய்க்கும் பொழுதே அதன் இனிமை மிகுதி புலனாகும்*(ப230)

---

* இக் கட்டுரையில் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் கருத்தாகத் தரப்படுவன அனைத்தும் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக் கட்டுரைகள் நூலுள் இடம்பெறுவன. அங்கங்கே சுட்டியுள்ள பக்க எண்கள் அந்நூற்பக்க எண்களைக் குறிக்கும்.

என்ற கொள்கையில் இறுதிவரை நின்று தமிழை ஒருபடி ஆழமாக நிலைநிறுத்திச் சென்றவர் ந.மு. வேங்கடசாமி நாட்டார். 12.4.1884-1944 என ஓர் அறுபதாண்டு வாழ்ந்து தம் தொண்டால் பல நூறு ஆண்டுகள் செய்ய வேண்டிய அரும்பணியை இவர் ஆற்றியிருக்கிறார்.

படைப்பிலக்கியத்தினின்று திறனாய்வு வேறுபடுகிறது. எனவே சமூகத் தேவையோடு கூடிய உள்ளடக்கத்தையும் திறனாய்வு பெற்று விளங்குகிறது. இதனை உணர்ந்த நாட்டார் அவ்வாறு செய்வதற்கு, வரலாறு, பண்பாடு, மொழி, இலக்கியம், மானிடவியல், உளவியல் போன்ற பிறதுறைகளிலும் கவனம் செலுத்திப் பல அரிய அறிவுச் செல்வங்களைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அளித்துள்ளார்.

உரையாசிரியர், ஆய்வாளர், பேராசான், சொற் பொழிவாளர் எனப் பன்முகச் சிந்தனைகளில் இவர் தம்மை ஐக்கியப் படுத்திக் கொண்டவர். இவர் கடின உழைப்பால், தமிழ்நாட்டிற்கு ஆற்றிய தொண்டு நமது முன்னேற்றத்திற்குப் பல்லாற்றானும் பயன்படுவதாக உள்ளது. இவரது படைப்புகள் நாட்டுடைமையாக்கப் பட்டிருப்பது ஈண்டு எண்ணத்தக்கது. தமிழ் இலக்கியம், தமிழரின் பண்பாடு, தமிழரின் தத்துவம், தமிழ் மொழியியல், வரலாற்றுப் பார்வை ஆகிய தலைப்புகளில் இவரது பங்களிப்பை எடுத்துக் காட்டுவதும், தமிழின் விவரணைகளை எடுக்க வேண்டிய முறைமையைச் சொல்லுவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும். அவ்வகையில் தஞ்சாவூர், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் கல்வி அறப்பணிக் கழகம் **நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக் கட்டுரைகள்** என்ற தலைப்பில் 1994இல் வெளியிட்ட நூலைத் தரவாகக் கொண்டு இவ்வாய்வு எழுந்துள்ளது.

தமிழ் இலக்கியம்

தமிழின் இலக்கியவளம் கிரேக்கம், சீனம், போன்றவற்றோடு ஒருங்கு வைத்து எண்ணத்தக்கது. இது வாழையடி வாழையெனத் தழைத்துத் தமிழ் மக்களை வளப்படுத்துகிறது. வள்ளுவன், கம்பன், பாரதி போன்ற உலகப் பெருங்கவிகளை, அறிஞர்களை வழங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறது.

நாட்டார் தமிழிலக்கியத்தை எவ்விதம் நம்மிடையே தந்து சென்றுள்ளார் எனப் பார்ப்போம். மக்களை முன்னுக்கு அழைத்துச் செல்வதில் சமூகத் தலைமக்கள் ஒவ்வொரு நிலையிலும் தங்கள்

வேலைகளைச் செய்கின்றனர். அவ்வகையில் இலக்கியப் படைப்பு செய்கின்றவன் மக்களின் ஆன்மாவாக இருந்து அவர்களை அழைத்துச் செல்லக் கடப்பாடுடையவன்.

தமிழிலக்கியத்தின் மாண்பு என்பது என்ன? தொல்காப்பியம் சுட்டும் அகம்புறமா? நீதிகளைச் சொல்லும் வள்ளுவமா ? 'அரசியல் பிழைத்தோருக்கு அறமே கூற்றாகும்' என்ற சிலப்பதிகாரமா?, 'வேறுள குழுவையெலாம் மானிடம் வென்றதாகப் பாடும் கம்ப மகாகாவியமா?' எல்லாரும் இன்புற்று இருத்தலே விருப்பமென வாழ்ந்த தாயுமானவரது கண்ணிகளா? வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி நின்ற வள்ளலாரா? புலனில் வாழ்க்கை இல்லை என்றுரைத்த பாரதியா? 'கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே' என்ற பாரதிதாசனா? இவையனைத்தும் கொண்ட அகல்பரப்பே தமிழிலக்கிய மாண்பு. ஆனால் குறிப்பிட்ட ஒரு காலச் சூழலுள் குறிப்பிட்ட ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்பதை இச்சான்றோர் அறிந்துள்ளனர். அவ்வகையில் தான் நாட்டார் தமிழிலக்கியத்தில் காணப்படும் வீரமும், காதலும், மாண்பு பொருந்திய நட்பும் மக்களுக்குத் தேவை என்பதை உணர்ந்து மக்களுக்கு அவ்வுணர்வை ஊட்டி வளர்க்க அவர் காலம் வரை வாழ்ந்தவர்களை எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

ஐயமும் தெளிவும் அறிஞர் அறிவுறுத்தும் ஒரு கொள்கையென்றே கூறமுடியும். வள்ளுவரும் 'எப்பொருளிலும் மெய்ப்பொருள்' கொள்ளக் கூறிப் போந்தார். அவ்வகையில் இன்றைய நிலையில் நமக்குக் கால வளர்ச்சியுடன் கூடிய பல புதிய ஆய்வு அறிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இலக்கியத்தின் பயன் இன்னதெனக் கூற விளைந்த க. கைலாசபதி,

> "முதலாவது மொழித்திறன் பற்றிய அறிவு; இரண்டாவது இன்பநுகர்ச்சி; மூன்றாவது வாழ்க்கையைப் பற்றியும் உலகைப் பற்றியும் ஏற்படும் புதிய விளக்கம்"

என்கிறார் (இலக்கியமும் திறனாய்வும் ப.20). இவர் பாடத்திட்டத்தில் உள்ள கல்விக் கொள்கைக்கு இந்நோக்கு உள்ளது என்று கூறுகிறார். அப்படியென்றால், சமூக முன்னேற்றத்திற்கு உழைத்த அறிஞர், அவர் சுவைத்ததில் மக்கள் அறிந்து கொள்ளத்தக்க இலக்கியம் இதுவெனக் கூறுவது, அம்மக்களின் முன்னேற்றத்திற்காகத் தான் என்பது தெளிவாகப் புலனாகிறது.

தமிழ்ச்சுவை

"கன்னலிலே சுவையறியும் பான்மைபோல்" என்பார் பாரதியார். இலக்கியம் வாழ்வின் சுவையான பகுதிகளை நிறைத்திருக்கும் கிண்ணம். சுவை உள்ளது மட்டுமே இலக்கியம். மற்றது இறந்துபடும். இரண்டாயிரம் ஆண்டுக்கால நீரோட்டத்தில் சுவையிலும் சுவையான இலக்கியங்கள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. அதனை முறையாக அறிவதே வாழ்வின் பயனாக இருக்கும் என்ற கொள்கையை உடையவராக ந.மு. வேங்கடசாமி நாட்டார் இருந்திருக்கிறார்.

இவர் சைவம் சார்ந்தவராக இருப்பினும் பிற சமய நூல்களையும், அவை சார்ந்த இலக்கியங்களையும் வழுவாது போற்றியவர். "இராமகாதையே - புனைந்துரையாயினும் ஆகுக. அதன் கோட்பாடுகள் பல பொருத்தமற்றவையாயினும் ஆகுக. ஒன்பான் சுவையும் ஒருங்கு பெய்து வைத்த கொள்கலம் போன்ற கம்பராமாயணத்தைக் கற்றுக் கவிச்சுவையை நுகர்ந்து இன்புறுதலும், அதில் வந்துள்ள நன்மக்களின் பண்புகளையறிந்து பயனெய்தலும் யாவர்க்கும் கடனாம்" (ப.117) என்ற கோட்பாட்டை முன்வைத்தவரின் எண்ணம் இனிமையானது.

"நற்பொருள் செய்வாருக்கிடம் பொருள் செய்வார்க்கு மஃதிடம்"

என்ற சீவகசிந்தாமணி அடிகளை எடுத்துக்காட்டி நற்பொருள் என்பது கல்வியைக் குறிக்கும் தமிழ் சொல்லாட்சி என நாட்டார் மகிழும் இடம் (ப.128) நம்மையும் அவருள் நுழையச் செய்து இனிமை கொள்ள வைக்கிறது. கலித்தொகையில் வரும்,

அடிதாங்கும் அளவின்றி யழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலைக் கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே

என்னும் பாடற்குறிப்புகளையும் சுவைத்து அவர் சொன்ன விதம் (ப.239) சிறந்தது. தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ் ஆகிய ஏடுகளில் அவ்வப்போது எழுதப்படும் கட்டுரைகள் நுணுக்கமான தகவல்களோடும், தமிழ்ச் சுவையோடும், நுண்மாண் நுழைபுல ஆய்வோடும் இருந்தன என்றால் நாட்டார் போன்றவர்கள் குரல் வெளிப்பட்டமையால் தான் என்பது நனிவிளங்குகிறது.

சங்க இலக்கியம்

சங்க இலக்கியத்தில் அகம், புறம் என்ற இரண்டில் கைக் கொள்ளத்தக்கன இவையெனத் தமிழர்களின் மாண்பைச் சுட்டும் முகமாகப் பல சிறப்பான அமரத்துவ உண்மைகளை என்றும் உரைக்கும் கவிதைப் பொருளை நாட்டார் எடுத்துத் தருகிறார். இவை இன்றைய நிலையில் சான்றோர்களுக்கும், மக்களுக்கும் உத்வேகம் அளிக்கக் கூடியன. இதன்வழி நாம் நமது இலக்கியப் பரப்பையும், அதன் நுண்மையையும் அறிந்து போற்றி ஊக்கத்தைப் பெறுகிறோம். இந்நிலையை உருவாக்கிய நாட்டாரின் பணி காலத்தைக் கடந்து நிற்கக் கூடியது.

காதலும் வீரமும் இரண்டு வழிகளெனப் போற்றி வாழ்ந்த அந்தத் தொடக்க நாட்களை மீண்டும் கொணரும் பொருட்டாகப் பல அரிய பாடல்களை நாட்டார் எடுத்துக் காட்டுகிறார். காதல் என்பது இன்றும் தவறு என்று பறை சாற்றுவோர் இருக்கும் நிலையில், அதன் மேன்மையை, தலைமையின்பத்தை, உணர்வு பூர்வமாக இவர் காட்டுகிறார்.

களவுக்காலத்தில் தலைவி தலைவனைப் பிரிந்து வாழவேண்டியுள்ளது. அதுபோது அவள் வருந்தும் படியான பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அப்போது அவள் தோழியிடம் உரைப்பதாகத் தீட்டும் பாடல்களை நாட்டார் எடுத்துக்காட்டுகிறார். இவை அன்றும் என்றும் மனத்துள் வட்டமடித்து இன்பக் களிப்பூட்டத்தக்க பாடல்களாகும். எனது காதல் நிலம், கடல், வானம் என்ற பெரும் எல்லைகளைவிட உயர்வானது என்று தலைவி ஒரு பாடலில் பாடுகிறாள். மற்றொரு பாடலில் எனது காதல் மலரிலே சிறந்த தாமரையிலுள்ள தேன்போல், இயற்கைவளம் நிறைந்த குன்றிலே உள்ள மரவகையிலே சிறந்த சந்தன மரத்திலுள்ள தேன் போல் சிறந்தது. அவன் நினைக்கும் பொழுதெல்லாம் இனிமை தரத்தக்கவன் என்று பாடுவது சிறப்புக்குரியது (ப.217). இதோ அப்பாடல்:

"நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்றோள் பிரிவறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்திற் றொடுத்த தீந்தேன் போலப்"

பெரியபுராணம், சுந்தரர் பரவையார் மீது கொண்ட காதலை,

"கற்பகத்தின் பூங்கொம்போ, காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயற்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த வரைகொடியோ
அற்புதமோ! சிவனருளோ அறியேன்என் றதிசயித்தார்"

என்று பாடுகையில் பாடலின் சுவை உயர்ந்தது காதலினால்தான் என்பது தெற்றெனத் தெரியும் (ப.199). தமிழ்ப் பாடல்கள் அதிமதுரமான காதலைப் பாடுவதற்கு ஏற்றதொரு மொழியாகும். பக்தியும் நம்மிடம் காதலினால் கலந்ததொரு பேரின்பமாகவே இருக்கிறது. இதனால் மக்களுக்குக் கொடுக்கும் பயன் யாதோ எனின் தமிழ்ச்சுவை இத்தனை உயர்ந்தது என்பதை அனைவருக்கும் எடுத்துரைக்கும் தேனீயாக நாட்டார் தம்மைக் கருதிக் கொண்டு செயல்பட்டமையாகும்.

காதல் செழித்தவனிடம் தானே வீரமும் ஆக்க சக்தியாக மாறும். அடிமைப்பட்டுத் துன்பத்தில், வறுமையில் வாடும் இந்திய மக்களைக் குறிப்பாகத் தமிழர்களை விடுவித்து இன்ப வாழ்வு தருவதற்கு, வீரம் தருவதற்கு வீராவேசப் பாடல்களைத் தந்து அவர்களை நாட்டார் பட்டை தீட்டுகிறார்.

பாரியைப் பற்றி அவரது நண்பரான கபிலர் பல பாடல்கள் பாடியுள்ளார். அவனை வணங்கினால் பரிசில் தருவான். எதிர்த்தால் அழிவது உறுதி என்று ஒரு பாடலில் பாடுகிறார்.

புறமுதுகு காட்டாத வீரம் ஆண்களுக்கு மறம் என்று புறநானூறு கூறுகிறது. கணவனையும், சகோதரனையும் போரில் இழந்த ஒருத்தி, போர் முரசு கேட்டு, அடுத்துத்தன் இளம் பிள்ளையைத் தலைசீவிப் பூமுடிக்கிறாள்! என்று மானம் நிறைந்த தமிழர்களின் வரலாறு காட்டி நமக்கு ஊக்கத்தை நாட்டார் தருகின்றார்.

கவிதையின் பேரெல்லையைத் தொட்டுக் காட்டியவன் கம்பன். அவன் காட்டும் மாந்தரைக் காட்டுவதன் வழி இலக்கிய நயத்தை நாட்டார் நமக்குத் தருகிறார். அதன் வழிச் செயலூக்கமும், இன்ப உணர்வும் ஊட்டி நம்வாழ்வைச் செம்மையாக்குகிறார்.

இலக்கியம் என்று நாட்டார் சுட்டிக் காட்டிய அனைத்துமே அன்றைய சூழலின் சமூகத் தேவையை யொட்டியே அமைந்துள்ளன. தாமரை மலரில் தேனெடுத்துச் சந்தனமரத்தில் கூட்டைக் கட்டி, அதிலே தேனைப் பாதுகாத்து, தீஞ்சுவை அளிக்கும்

தேனீயைப்போல் சிறந்தவர் நாட்டார் என நமக்குக் கூறாது கூறி நிற்கிறார்.

நாட்டார் காட்டிய இலக்கியச் சுவையில் நமக்குக் கிடைத்தது என்ன என்று பார்த்தால் அது மனத்தை இளமையாக்கிக் கொள்ளுதல். அதாவது புத்துயிர் கொடுப்பது. வீரமும் காதலும் நிறைந்து இருப்பது தான் வாழ்க்கை. அதற்குத் தடையாக இருப்பனவற்றைப் புறந்தள்ளுவதே மாந்தருக்கு அணி என்பனவாகும்.

தமிழரின் பண்பாடு

மனிதனுடைய இயல்பே, இயற்கையைத் தன்னுடைய தேவையையொட்டி மாற்றி அதனை வெற்றி கொள்வதுதான். மனிதன் ஒன்றுபட்டுச் செயல்படும் போதுதான் பல வெற்றிகளைப் பெற்று வாழ்வை இன்பத்தால் நிறைக்கிறான். இங்ஙனம் ஒன்றுபட்டு ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு ஒன்றிணைவது, ஒன்றின்கீழ் பணியாற்றுவது என்பதே அடிநாதமாகிறது. அதைத் செம்மையுற ஒழுங்கு படுத்திக் கொள்ள அறிஞர் கலை, இலக்கியம் என்பனவற்றைக் கருவியாக்கினர்.

பண்பட்டதும், பழக்கவழக்கமும் பண்பாடு எனப்படு கின்றன. மேலைநாட்டு இலக்கிய அறிஞர் மேத்யூ அர்னால்டு "மனிதன் சிந்தித்தவற்றுள், மனிதன் செய்தவற்றுள் எது சிறந்து நிற்கிறதோ அது பண்பாடு" என்கிறார். மேலும் அது கலை இலக்கியங்களில் தான் வெளிப்படும் என்கிறார்.

தமிழ்ச் சமூகம் பெற்றுள்ள பண்பாடு என்பது என்ன? அது உலகப் பண்பாட்டுத் தளத்திற்குப் புதிய வளங்களைச் சேர்க்கிறதா? அத்தகையதை நாட்டார் எங்ஙனம் கூறுகிறார் என்று பார்ப்போம்.

நாட்டார் விடுதலை என்கின்ற சத்தியப் போராட்டம் நடந்த காலத்தில் வாழ்ந்தவர். அவர் தமிழ்ச் சமூகத்திடம் இருந்து பெற்றதும், அதற்கிட்டதும், நாம் இன்றும் போற்றும் நித்திய உண்மைகளைத்தான். பழக்கவழக்கம் என்பது இயற்கைபோன்று அன்றாட நிகழ்வில் உள்ள ஒன்று. புதிய ஒன்று மக்கள் வாழ்வைச் செம்மையுற வழிசெய்யத் தலைமக்களால் கொணரப்படுவது பண்பாடு என்றாகிறது. அவ்வகையில் நாட்டார், அவரது பங்களிப்பாகக் கலை, இலக்கியம், அறிவியல் என்று வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அழகுற கொணர்ந்து சேர்த்துக் காட்டுகிறார்.

“மனிதனின் முக்கியப் பண்பு வறுமையினால் தன் வாழ்வை இழந்து கொண்டிருக்கும் மனிதனுக்கு உணவு தரவேண்டும். அவ்வாறு செய்பவன், வான் உள்ளவரை புகழ்பெற்று வாழும் பாக்கியவான்” என்கிறார் நாட்டார்.

சோழமன்னன் ஒருவன் பண்ணன் என்பவனின் வள்ளல் தன்மையைப் பாராட்டி, “பசிப்பிணி மருத்துவன்” என்கிறான். அதோடு மட்டுமல்லாமல் தான் செய்ய நினைத்த தருமச் செயல்களை, இவனைவிடத் தான் சிறப்பாகச் செய்ய இயலாது என எண்ணுகிறான். எனவே தன் வாழ்நாளையும் பண்ணன் பெற்று வாழ்க என்று அவனை வாழ்த்துகிறான்.

இங்குப் பண்ணனைப் புகழும் திறன் போல (ப.253) இவர் ஆய்வும் தமிழ்ப்பசிக்குப் பிணிதீர்க்கும் அருமருந்தாய் அமைகிறது என்பது இவரது கட்டுரைகளைப் படிப்பவர்களுக்குப் புரியும்.

“புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனையராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே”

என்ற பாடலில் தனக்கென வாழாது, தான் என்பது இந்த உலகம் என்று வாழ்கிறவனால் தான் இவ்வுலகு உள்ளது என்கிறார் (ப.427). இப்படிச் சங்கப் பாடல்களில் உள்ள என்றும் பின்பற்றத் தக்க, உயர் பண்பாட்டு நெறிகள் பலவற்றை நாட்டார் நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

வறியவன் இளமைபோல் வாடிய கிளைகள்;சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு நிழலில்லாதன; யாவரிடத்தும் வரம்பு கடந்து தீமை செய்தான் அடியுடன் அழிதல் போல் வேருடன் வெம்பும்படி ஞாயிற்றின் வெங்கதிர்கள் சுடுவதாயின எனப் பாலைக் கலியில் பாலையின் வெம்மை உணர்த்தும் கருத்துகள் பாலையைவிட மனிதப் பண்புகளையும், பயன்களையும் எடுத்தோதுகின்றன (ப.241).

தொல்காப்பியர் அன்றைய சமூகத்தின் தலைமக்கள் வாழ்வின் கடமையெனக் கொண்டவை இவை இவையெனக் கற்பியலில் கூறுகிறார். ‘கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே’ என்று சிறந்தவற்றைக் கூறிச் சென்றது போல்தான் நாட்டாரும் கூறுகின்றார்.

தமிழர் மாண்பு

தமிழரின் பொதுவாழ்வு, அகவாழ்வு என்பதில் சில அடிப்படையான நியதிகளை மாண்பு என ஆக்கியுள்ளனர். களவுக்குப் பிறகே கற்பொழுக்கம் தொடங்க வேண்டும். விரும்பிய ஆடவருடன் மனமொத்து வாழ்வதே கற்பொழுக்கம். இதைக் கம்பன் இராமகாதையைப் படைக்கும் போது, சீதை, இராமன் ஆகிய இருவரும் கண்டபோதே ஒன்றினர், பிறகுதான் இராமன் சிலை முறித்துச் சீதையை மணந்தான் என்று காட்டுகிறார். இது இன்றும், என்றும் போற்றத்தக்க மாண்பு ஆகும்.

புலவருக்கும் மன்னருக்கும் இருந்த நேரடித் தொடர்புகள் பல அறிவோம். இதில் புறநானூறு பெரும்பங்கு வகிக்கிறது. அதில் ஒன்றை நாட்டாரின் நுழைபுலம் மிக்க கட்டுரை எடுத்துக் காட்டியுள்ளது.

இளங்கண்டீரக்கோ - இளவிச்சிக்கோ என்பவர் சங்ககால மன்னர்கள். இவர்கள் ஒருநாள் அளவளாவிக் கொண்டிருந்த போது அங்கு வந்தப் பெருந்தலைச் சாத்தனார் இளங்கண்டீரக்கோவை மட்டும் தழுவி உசாவி நின்றார். இதனால் இளவிச்சிக்கோ வருத்தம் கொண்டார். இதைக் கண்ட புலவர் இளவிச்சிக் கோவை வணங்காது நின்றதற்கான காரணத்தை விளக்குகிறார்.

"தம் கணவர் சேய்மைக்கண் சென்றிருப்பின் பெண்டிரும் பாடிவந்தோருக்குப் பரிசில் கொடுத்தனுப்பும் உயர்குடியிற் பிறந்தவன் கண்டீரக்கோன். ஆகலின் அவனை யான் புல்லினேன். "நீயும் நன்னன் வழியில் தோன்றியவனும், உயர்குணமுடையோனும் ஆயினும் நும்முன்னோருள் ஒருவன் புலவர்கட்குக் கதவுஅடைத் தானாதலின் நுங்கள் மலையை எம்மவர் யாவரும் பாடாது விடுத்தனர்; ஆதலின் யானும் நின்னைத் தழுவிற்றிலேன்" என்று கூறியதாக நாட்டார் உணர்த்தும் செய்தி (ப.13). தமிழர் மாண்பு பற்றிய கதைகளுக்கு மேலும் வலிமை சேர்ப்பதாக உள்ளது.

தமிழர் மாண்பு மானத்தோடு ஒப்புயர்வுடையது. மானம் போனபின் வாழாமையையும், மரணத்தையும் போற்றும் வீரத்தைப் பாடுவன.

"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
ஈயென இரக்குவராயின், சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்;

இன்னு யிராயினும் கொடுக்குவன்; இந்நிலத்து
ஆற்றலுடையோர் ஆற்றல் போற்றாது என்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே"

என்று நலங்கிள்ளி பாடியதாக வரும் அடிகளில் மாண்பும் மறனும் மிக்கு நிற்பதைக் காணமுடிகிறது. இது மறம் பாடும் பாடலாக இருப்பினும், "துஞ்சுபுலி இடறிய சிதடன்" என்ற உவமைத் தொடர் நனி சிறந்த கவி உவமை என்பதில் யாதொரு ஐயமும் இருக்காது. தன்னிடம் கேட்பவருக்கு அரசே தருவேன் என்றும், அப்படி அல்லாது எடுப்பேன் என்பவரைப் புலிபோல் சிதைப்பேன் என்றும் உவமை நயமும், கவி நயமும் விளங்க ஒரு மன்னன் பாடியமை நாட்டார் போல் (ப.222) நாம் அனைவரும் மகிழும் கருத்தே.

"இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடாக்கிய
இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீர் உலகின் முழுவது மில்லை"

என்று வில்லவன் கோதை (சிலம்பு) வாயிலாக, ஒற்றுமை உணர்வும், ஒற்றுமையுள்ளும் உள்நிற்கும் தமிழுணர்வும் நாட்டாரைப் போல (ப.226) அனைவரையும் மகிழச் செய்யும் மாண்பான கருத்தாகும்.

"வாளினைத் தொழுவதல்லால் வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உள்ளே என்னா அண்டங்கள் நடுக்க நக்கான்"

என்று கம்பராமாயணத்தில் இரணியன் கூறுவதைச் சங்ககால மறமாண்பு மிக்க பாடல்களின் எதிரொலியாகவே காணவேண்டியுள்ளது (ப.227). மகளிரின் ஊடல் நாளில் ஆடவர் வணங்குவதும், பணிவதும் பழந்தமிழ் அகப்பண்பு.

"ஊடுக மன்னோ ஒளிஇழை யாம்இரப்பு
நீடுக மன்னோ இரா"

என்ற குறளும் ஊடலின் போது ஆடவன் கொள்ளும் இரப்பைப் புகழ்படுத்தியே காட்டுகிறது. 'ஊடல் நாளிலும்' எனும் போது ஊடலின் வலிமை உணர்த்தப்படுகிறது; இரத்தலும் வணங்கலும் இல்லாத மாண்பை உயிர்போகும் நாளிலும் ஒருவன் விரும்பக் கூடாது என்பதை விளக்குகிறது. இதை விளக்கும் முகமாகவே இப்பாடல் சுவை கூட்டி நிற்கிறது.

அறிவியல் காட்டும் பண்பாடு

மனத்துக்கான கலைசார்ந்த பண்பாடு மட்டும் வாழ்வைச் செம்மைப் படுத்துவது அல்ல. அறிவியல் சார்ந்த பண்பாடும் வாழ்வைச் செம்மைப்படுத்தும் எனக் காட்டுவதற்கு நாட்டார், தமிழர்களின் முன்னேறிய நிலையைக் காட்டுகிறார்.

தமிழர்கள் பண்டைய நாளில் பல வெளிநாட்டினருடன் வணிகம் செய்தனர். அவர்கள் வணிகத்தின் போது கடல்கடந்து, நிலம் கடந்து சென்று மீண்டும் தங்கள் நாட்டிற்குத் திரும்பினர். அதற்கான பூகோள அறிவையும், வானவியல் அறிவையும் அவர்கள் எவ்வகையில் கைக்கொண்டனர் என்பதை நாட்டார் காட்டுகிறார். உலகில் ஏனையோர் பெற்றிருந்த வானவியல் அறிவைப் போலவே தமிழரும் பெற்றிருக்க வேண்டும். "பாஸ்கரர்' போன்ற சிறந்த வானவியல் விற்பனர் தமிழ்நிலத்திலும் தோன்றியிருக்க வேண்டும். வழிவழி வருபவர் இன்மையானும், எண்ணிய கருத்துகளை எடுத்தியம்பும் வழி அடைபட்டிருந்தமையாலும் தமிழர் வானவியல் அறிவு மறைந்துபட்டு விட்டது. வானவியல் தொடர்பான கோள்களுக்கு, நட்சத்திரங்களுக்குத் தமிழில் வழங்கிய பெயர்களைக் கொண்டே இதனை அறியமுடிகிறது. நாட்டாரின் முயற்சியால் நமக்குக் கிடைத்துள்ள செய்திகள் இவண் உள்ளன.

ஒன்பது கோள்கள்	தமிழில் உள்ள பலபெயர்கள்
ஞாயிறு	செங்கதிர், பகலோன், பரிதி, வெய்யோன்,என்றூழ், பனிப்பகை, சான்றோன்.
திங்கள்	அம்புலி, தண்சுடர், நிலவு, அல்லோன், அலவன்.
செவ்வாய்	சேய், குருதி, ஆரல், நிலமகன், அழலோன்.
புதன்	அறிவன், கணக்கன், புலவன், புந்தி, மால், பச்சை.
வியாழன்	பொன், அந்தணன், அரசன், அமைச்சன், ஆண்டளப்பான்.
வெள்ளி	பளிங்கு, புகர், மழைக்கோள்.
சனி	நீலன், காரி, கரியோன், கதிர்மகன், முதுமகன், முடவன்.

இராகு	இருள், கரும்பாம்பு.
கேது	கொடி, செம்பாம்பு.

என இவ்வாறு வரும் பல சொற்களை இயல்பாகவும் புலமையிலும் தமிழர் பயன்படுத்தியமை தெரிய வருகிறது. இத்தனை உயரிய கருத்துகளை அறிஞர்களே அறிந்திருந்தனர் என்றில்லாமல் இயல்பாகக் கூறுமிடத்தும் பயன்படுத்தப் பட்டுள்ளன. அதனால்தான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை துஞ்சியநாளில் கூடலூர் கிழாராற்,

"தலைநாண்மீன் நிலைதிரிய
நிலை நாண்மீன் அதனெதிரேர் தர"

என்ற பாடலில் வெள்ளி வீழவும் இரும்பொறை இறக்கவுமான நிகழ்ச்சியை (ப.461) வடிக்க முடிந்திருக்கிறது.

இன்றைய காலம் வரையிலுமே தத்துவஞானிகள் ஆசியப் பகுதிகளில், குறிப்பாக இந்தியா, சீனா, எகிப்து போன்ற பகுதிகளில் இருந்து வந்தனர் என்பதில் இருந்தே நமது பண்பாட்டுச் செல்வம் என்பது எத்தகைய சிறப்புடையது என்பதை அறியலாம்.

அன்றைய தமிழ் மக்களின் மனத்தை அகலமாக்கியும் ஆழமாக்கியும் வாழ்ந்து வந்தது இலக்கியம். அவர்கள் வாழ்வை வெற்றியடையச் செய்தது அவர்கள் பெற்ற அறிவு. அவர்கள் இரண்டையும் ஒன்றையொன்றுப் பிணைத்து எவ்வகையில் முன்னேற்றம் கண்டனர் என்பதையும், தமிழ்மக்கள் இன்றும் அதனைக் கைக்கொள்ள வேண்டும் என்பதையும் தெளிவாகக் காட்டிய நாட்டாரின் வன்மையும் நுண்மையும் புகழுக்குரியன.

தமிழரின் தத்துவம்

சமூக மக்களின் வாழ்க்கையை முழுமையிலிருந்து பார்த்து அவர்களின் மேம்பாட்டிற்கு வகை செய்வது தத்துவ ஞானத்தின் பாற்படும். மனிதன் செம்மையுற அடிப்படையாக அமையும் இத்தத்துவத்தைத் தமிழர்கள் சங்ககாலம் தொட்டு இன்றுவரை பல தத்துவங்களோடு கலந்து உறவாடிச் செம்மை அடைந்துள்ளனர்.

அப்படிப் பார்க்கும்போது தமிழர்களுக்கென்று உள்ள மதம்-தத்துவம் எது என்றால் சிறப்புக் கருதிச் சைவமே முதன்மை பெறும். வேறு மதங்களான வைணவம், சைனம், பௌத்தம் போன்றவை வாழ்க்கையைச் செழிப்பும் செல்வாக்கும்

அடையச்செய்தன. இருப்பினும் சைவம் மற்ற தத்துவப் பொருளை எல்லாம் உட்கொண்டு, வாழ்க்கையைச் செழிக்கச் செய்ய, இன்னும் சிலவற்றைத் தன்னுள் சேர்த்துக் கொண்டது. இக் கருத்தை வலியுறுத்தும் நாட்டார் தமிழ்மக்களின் தனித்துவ அடையாளத்தையும் சுட்டுகிறார்.

சமயமும் பக்திப் பாடல்களும்

தமிழகத்தில் தோன்றிய சமயங்களுள் ஆதியாகச் சைவமே தோன்றியது என்பது நாட்டார் கருத்து. இருப்பினும் தற்போது வழங்கப்படும் சைவசமயத்திற்கும் ஆதியில் இருந்த சைவ சமயத்திற்கும் பெருத்த வேறுபாடு இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் கொண்டவராக நாட்டார் இல்லை.

"முதுகுடுமிப் பெருவழுதி என்பவன் பஃறுளியாறு கடல்கோட்படாதிருந்த பழங்காலத்தில் விளங்கிய ஒரு தமிழ் வேந்தன். அவனைப் பாடிய புலவர் ஒருவர், 'முக்கட் செல்வர் கோயிலை வலஞ்செய்தற்கண் நின்குடை தாழ்க' எனப் பணித்தமையால் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பே சிவபிரானுக்குத் திருக்கோயிலிருந்த செய்தி வெளியாகின்றது (ப.99) என்று நாட்டார் குறிப்பிட்டுக் காட்டுவதில் முக்கண்ணர் என்று சிவனைக் கூறியுள்ளமை புலனாகிறது. இருப்பினும் அந்நாளில் அதற்கு நேரெதிர் கொள்கை கொண்ட ஒரு சமயமும் இருந்திருக்க வேண்டுமாகிறது. காரணம் இவண் கொடுத்திருக்கும் செய்தியில் புலவன், 'தாழ்க' எனப்பணித்தமை கொண்டு அறியலாம். எனவே இது ஆய்வுக்குரியது.

ஆதியில் சைவக் கோட்பாடுகள் என்னவாக இருந்தன என்பதை விரிவாக நாட்டார் கூறவில்லை. பின்னர், அருவம், உருவம், அருஉருவம் என்னும் மூன்றுங் கடந்ததே கடவுளின் உண்மை நிலையென்றும், உயிர்களின் மேல் வைத்த கருணையால் அம்மூவகை வடிவையும் இறைவன் எடுத்தருள்வானென்று சைவசித்தாந்தம் கூறும் என்று சைவசமயத்தை எளிதாகப் புரியும்படி கூறியிருப்பது (ப.102) பாராட்டுக்குரியது. இருப்பினும் சைவ சமய நூல்கள் என்று இவர் கூறும் பட்டியலில் திருக்குறளும் (ப.101) இடம் பெறுவது சற்றுச் சைவ சார்பு மிகைபட்டவராக இவரை அடையாளங் காட்டுகிறது. "பிறவா யாக்கைப் பெரியோன்" என்பது ஒன்றே சிவனைக் குறிக்கப் போதிய சான்று அன்று.

"மலர்மிசை ஏகினான், அறவாழி அந்தணன் என்று கூறியிருக்கும் கடவுட் பெயர்களும் வேறு சில ஏடுகளும் திருவள்ளுவர் சமணரென்பதனைக் காட்டுமென்றும், பௌத்தரென்பதனைக் காட்டுமென்றும் ஒவ்வொருவரும் ஒரு கருத்தைக் கூறுவர். வள்ளுவனார் உலகிற்கு முதலாகக் கடவுளுண்டென்பது, வேள்வியை ஒத்துக்கொள்வது முதலிய காரணங்களால் அக்கொள்கைகள் மறுக்கப்படுகின்றன . . . எனினும் இவரியற்றிய நூலானது உலகத்தாரனைவருக்கும் பொதுவாகிய தொன்றென்பது பலரும் இதனைப் பொதுமறையெனப் போற்றுதலானே அறியலாகும்" என்று இவரே திருக்குறளைப் பொதுமறை என ஓரிடத்தில் கூறிப் (ப.163) பின்னர் சைவத்தில் அதனை வைக்கிறார். இப்படிச் சைவத்தில் திருக்குறளை வைப்பதற்கு நாட்டார் பல சான்றுகள் காட்டியிருப்பினும் இது மேலும் ஆய்வுக்குரியது.

'சுந்தரர் செந்தமிழ்' என்ற பகுதியில் சுந்தரரின் பாடல் வரிகள் சில நாட்டாரால் எடுத்துக்காட்டப்படுகின்றன (ப.173). அவை முடிவாகப் பல ஆராய்ச்சிக்கும் முடிவுக்கும் இடந்தருவனவாக அமைகின்றன.

"கற்றக் கல்வியினும் கனியானை" என்று இறைவனைப் போற்றும் சுந்தரர்,

> "பிறவிக் கடல் நீந்தியேறி அடியேன் உய்யப்
> போவதோர் சூழல் சொல்லே"

என்று பாடுவார். முன்னதில் 'கற்றக் கல்வியினும் என்ற தொடர் கல்வியை மேம்படுத்திப் பார்க்கும் உயர்வுப் பார்வை. இறைவனுக்கு இணையாக எண்ண வைத்து விட்டது சுந்தரர் செய்த அருஞ்செயல். அடுத்துக் காட்டிய அடியில் 'பிறவிக் கடல்' என்னும் தொடர் ஆழ்வார்களும் நாயன்மார்களும் சங்கப் பாடல்களில் சிறந்த தேர்ச்சி பெற்று அதன் காதல் துறைகளையும் பிற பாடல்களையும் பக்திப் பாடல்களின் பாட வழிகாட்டினர் என்னும் கருத்துக்கு வலுச் சேர்க்கிறது. குறிப்பாகச் சுந்தரர் திருக்குறளில் சிறந்த பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டும் என்பதனை மேற்கண்ட பாடல் அடியாலும், 'உறங்கி விழித்தா லொக்கும் இப்பிறவி' என்னும் அடியாலும் அறிய முடிகிறது. அவருக்குச் சங்கப் பாடல்களிலும் ஈடுபாடு இருந்தது என்பதனை,

> "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும்
> கொடுப்பாரில"

என்ற அடிகளின் வழி உணர முடிகிறது (ப.20). இவ்வளவு எளிமையாக உணரமுடியும் இவ்வரிய கருத்துகள் நாட்டாரின் உழைப்பில் விளைந்தது என்பதை எண்ணுதல் நம்கடன்!

தமிழ்மொழியியல்

முன்னைய பழமைக்கும் பின்னைய புதுமைக்கும் ஏற்கும் முறையறிந்து இளமையோடு வாழ்ந்து வருவது தமிழ்மொழி. இதனைச் செந்தமிழ், தேமதுரத் தமிழோசை, நற்றமிழ் என்று பலவாறு பாராட்டிப் பெருமிதம் கொள்வான் பாரதி.

> "பொதுவாகச் சொன்னால், ஒவ்வொரு மொழியும்
> அதுஉயிர் வாழ்வதற்காக வளரவும் மாறிக்
> கொள்ளவும் வேண்டியுள்ளது"

என்பது ஓர் அறிஞர் கூற்று. மொழி என்பது மாற்றமடைய வேண்டும் என்பது இன்றைய மொழியியல் அறிஞர் கூற்றாகவும் உள்ளது. தொல்காப்பியரும் 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்று கூறியுள்ளார். எனினும் செய்யுள் ஈட்டும் சொற்கள் இதுவெனக் கூறவந்த இவர்,

> "இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (சொல்.880)

என்று கூறித் தமிழ்மொழியை வளப்படுத்தியவற்றுள் பிறமொழிக்கும் பங்குண்டு என்பதை ஏற்கிறார்.

"ஐந்தெழுத்தா லொருபாடை யென்றறையவு நாணுவர் அறிவுடையோரே" என்று சுவாமிநாத தேசிகர் தம் இலக்கணக் கொத்து என்னும் நூலில் வடமொழிக்கும் தமிழுக்கும் உள்ள எழுத்துகளை ஆராய்ந்து அதில் வடமொழியில் இல்லாத தமிழில் உண்டான ஐந்து எழுத்துகளை எடுத்துக்கூறி அது மட்டுமே தமிழுக்கு உரிய தனித்தன்மை, தனிப்படை. அதனால் ஒருமொழி பெரியதாக எண்ணப்படுமோ என எழுப்பிய வினா அன்றும் அடுத்தும் பல எதிர்வினைகளைச் சுமந்தது என்பதைப் பொதுவாக யாவரும் அறிவர். நாட்டாரும் தம் பங்குக்கு இத்தகை எண்ணவோட்டத்தைச் சாடி (மொழி) ஒன்றினின்று மற்றொன்றிற்கு வந்தனவென்று கூறுவோன் 'மருந்திற் றணியாத பித்தனென் றெள்ளப்படுவோன் என்பது தேற்றம்' (ப.315) என்ற தமது கடுமையான கண்டனத்தை வைக்கிறார்.

தமிழானது பகுத்தறிவுடைய மக்கள் முதலிய உயிரை உயர்திணை என்றும், பகுத்தறிவில்லாத உயிரையும், உயிரில் பொருள்களையும் அஃறிணை என்றும் அறிவு பற்றிப் பாகுபாடு செய்திருப்பது போல வடமொழி செய்யவில்லை. வேறு எம்மொழியும் செய்யவில்லை. இவ்விரு வகைப் பெயர்களே தமிழ்மக்களின் உயரிய அறிவையும், கொள்கைகளையும் தமிழின் தனி மாண்பினையும் விளக்குவதற்குப் போதியனவாகும் (ப.316) என்பது நாட்டார் வழியாக அழகாக வெளிப்படுத்தப்படுகிறது.

தமிழ்மொழி மீதுள்ள பற்று காரணமாக இவர் இந்தியை இந்தியாவுக்குப் பொதுமொழியாக்குதல் பொருந்தாது என்று கூறி அதனால் வரும் தீங்குகளைத் தெளிவு படுத்துகிறார். ஒரு மொழியைப் பொதுமொழியாக்கும் போது அம்மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களை எடுத்துக் காட்டுகிறார். தன்தாய் மொழியைக் காக்கத் துடிக்கும் அரசியல் கிளர்ச்சியாளர்கள் அம்மொழியை வேற்று மாநிலத்தார் மீது திணிப்பது நன்மை தராது என்பன போன்ற கருத்துகளால் அரசியலுக்கும், மொழிக்கும் உள்ள நெருங்கிய உறவுகளை உணர்த்துகிறார். இவர் தாய்மொழி, உலகப்பொதுமொழி என்ற இரண்டையே வலியுறுத்துகிறார். மற்றமொழி மூன்றாவதாக அமைவது அதிக நன்மை விளைவிக்காது என்கிறார் (ப.493). மொழி கண்களைக் காக்கும் இமையாக இருக்க வேண்டுமேயன்றி வெறும் சுமையாக இருந்தால் இறக்கி வைத்தலே நலம் பயக்கும் என்று தெளிவுறுத்தும் நாட்டார் கருத்து போற்றத்தக்கது.

வடமொழி என்பது தேவபாசையென்று உறுதி செய்தும், பிறமொழி எதற்கும் அதன் தன்மை இல்லை என்றும் அறிஞர் கூறிய கூற்றை மறுத்துத் தமிழ் மொழியின் தனித்துவச் சிறப்பை வெளிப்படுத்துகிறார்.

வடமொழி சத்தப் பிரமாணம் என்றும், இறைவனால் உரைக்கப்பட்டது என்றும், ஒலியாக இருந்ததைக் கண்டவர்களே தொகுத்தனர் என்றும் கூறப்பட்டுவந்த நிலையில், தமிழ்மொழி தொடர்பாக நாட்டார் செய்த ஆராய்ச்சி மிகவும் பயனுள்ளது.

தமிழ்மொழியில் உள்ள எழுத்துகள், அதற்கான பெயர்கள் அனைத்தும் ஒலிப்பு முறையில்தான், செயல் முறையில் தான் வைக்கப்பட்டது என இவர் நிறுவுகிறார். உயிர் எழுத்துகள், மெய்யெழுத்துகள் என்ற பெயர் வரக் காரணத்தைக் கூறும்போது அதற்கு நச்சினார்க்கினியரின் உரையை எடுத்து இயம்புகிறார்.

"மெய்பதினெட்டினையும் இயக்கித்தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று"

"பன்னீருயிர்க்குந் தான்இடங் கொடுத்து அவற்றான் இயங்குந்தன்மை பெற்ற உடம்பாய் நிற்றலின் மெய் என்ற பெயர் பெற்றது" (ப.303)

என்கிறார். அத்தோடு சார்பெழுத்தில் ஆய்தம் என்பது என்னவென்று உரைக்கிறார்.

"ஆய்தமென்பதன் பொருள்தான் யாதோ எனின் ஆய்தல் என்பது நுணுகுதல் என்னும் பொருட்டாதலின் நுணுகிய ஓசையுடையது என்பது பொருளாதல் வேண்டும்" (ப.304).

ஒலியாகக் கடவுளால் படைக்கப்பட்டது வடமொழி என்ற கூற்றை ஏற்ற நாட்டார், தமிழ்மொழியும் அத்தகையதுதான் என்று கூறி நுணுக்கமாக ஆய்ந்து நிறுவித் தமிழுக்குத் தற்காப்பு செய்துள்ளார். ஆயின் அனைத்து மொழிகளுமே தொடக்கக் கட்டத்தில் ஒலியாகத்தான் இருந்துள்ளன. மக்களிடையே எழுத்தும், பதியும் கருவிவகைகளும் கண்டறியாத காலத்தில் அவ்வாறு தானே இருக்க முடியும். எனவே கடவுளால் படைக்கப்பட்டது என்று கூறினாலும் ஒலி என ஒத்துக் கொள்வது நாட்டுப்புறவழக்கையே. க. கைலாசபதி,

"வீரயுகத்திற்குரிய பழைய வீரப்பாடல்கள் அனைத்தும் வாய்மொழியிலக்கியமாகவே அமைவன என்பதை முதன் முதலில் ஐயத்திற்கிடமின்றி நிறுவியவர் 'மில்மன்பரி' என்ற அமெரிக்கர். செம்மை சான்ற உயர்தனிக் கவிதைகளாம் கிரேக்க ஆதிகாவியங்கள் எழுத்தறிவில்லாத வாய்மொழிக் கவிஞராய் குலமரபுத் தொழிலாகப் பாடப்பெற்றன என்று ஆணித்தரமாக 1927இல் அவர் எடுத்துக் கூறிய போது அறிஞருலகம் திடுக்கிட்டது. ஆயினும் காலப்போக்கில் பரியின் முடிவு சரியானதே என்பது உறுதிப்பட்டு வந்துள்ளது என்கிறார்" (ஒப்பியல் இலக்கியம், ப.50).

அப்படிப் பார்க்கும் போது நாட்டார் தமிழின் பல்வேறு சிறப்புகளை எடுத்துக் காட்டுகிறார். சொற்பொருள்களை வெளிக்கொண்டு வருவதும், தவறு என்று கண்டால் சுட்டிக் காட்டுவதும், தன்னடக்கம் சான்ற புலமையும் கொண்டு நாட்டார் உழைத்தமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. எனவே அவரது

உழைப்பு இன்று நாம் பல மைல் தூரம் முன்னேறுவதற்கு உதவியாக உள்ளது என்பதே பொருந்தும்.

இலக்கிய ஆய்வைப் போன்றே தமிழ் இலக்கணச் சொற், பொருள் ஆய்வு முடிவுகளும் வியக்க வைக்கின்றவையாக இருத்தலுக்கு மேலும் சில சான்றுகளைக் காண்போம்.

ஐங்குறுநூற்றின் நெய்தல் எட்டாம் பத்தைப்போல் பதிற்றுப்பத்தின் நாலாம் பத்து அந்தாதியாக அமைந்துள்ளது. எனவே அந்தாதி பாடியதற்குச் சங்கப் புலவர்களே அடிகோலினர் என்பது போதரும் (ப.256).

"ஆறிய கற்பின் அடங்கிய சாயல்"

"ஊடினும் இனிய கூறும் இன்னகை"

"சுடர்நுதல் அசைநடை"

என்றும் இன்னும் பலவாகவும் (ப.256) பதிற்றுப்பத்து சேரமன்னர்களின் இல்லோர் புகழப்படும் பான்மை.

"அப்பர் என்னும் பெயர் ஆட்டின் ஆணினையும், பாட்டிஎன்னும் பெயர் பன்றி, நாய், நரி என்பனவற்றின் பெண்ணினையும், பிள்ளை என்னும் பெயர் மக்களுள்ளே பெண்ணினையும் பண்டு குறிப்பனவாயிருந்தன" என்பன போன்ற ஆய்வு முடிவுகளும் (ப.257), செய்திகளும் நாட்டாரின் பரந்துபட்ட புலனுக்குக் காட்டாக நிற்பன. அவரது அயரா உழைப்பு இது போன்ற தெளிவுகளை மக்கள் பெறுவதற்கோர் கருவியாக அமைந்தது.

வரலாற்றுப் பார்வை

சமூகமாக வாழும் மனிதன் எப்போதும் மூன்று கால இணைவாகவே சிந்தித்து எதிர்கால வாழ்க்கையை நோக்கிச் செல்கிறான். பின்னோக்கிப் பார்த்து எவ்வளவு தெளிவான படிப்பினையைப் பெறுகிறானோ, அதே அளவு முன்னோக்கி விரைந்து செல்கிறான். எனவே மரபு வழியான தொடர்புதான் நம்மைச் சுயத்துடனும்,குழப்பமின்றியும் முன்னோக்கிச் செலுத்துகிறது.

தமிழ்ச் சமூகம் தனக்கெனத் தனித்துவம் நிறைந்த வரலாற்றினைப் பெற்றுள்ளது. இச் சமூகம் சுதந்திரத்திற்காகப்

போராடி, வெற்றியடைந்து வாழ்வதற்கு அடிப்படையாய் இருப்பது உண்மையும் நீதியுமாகும் என்று கூறுகின்றார் நாட்டார்.

வையத் தலைமை கொண்டோருக்குக் கடமை ஒன்று உண்டு. அது தம் கீழ் உள்ளோரை முன்னோக்கி அழைத்துச் செல்வது. அதாவது எந்த ஒன்றும் முன்னாளில் எவ்வாறு இருந்தது என்பதைத் தாமும் அறிந்து பிறர்க்கும் உணர்த்தி நம்பிக்கையையும் உத்வேகத்தையும் ஊட்டுவது. இப்பணியை நாட்டார் அழகுறச் செய்துள்ளார் என்பதை இவரது ஆய்வுக் கட்டுரைகளில் பரவலாகக் காணமுடிகின்றது.

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், பெரியபுராணம் போன்றவற்றின் இலக்கிய மாண்பு காட்டல், இத்தகைய மாண்பைப் பெற்ற தமிழகம் (1940) அடிமைப்பட்டு இருப்பதால், அதற்காகப் போராடுபவர்களுக்கு ஆன்மீக ஆற்றலையும், நியதியையும் வழங்குதல், தமிழர்களுக்கெனத் தனித்த வரலாறு இல்லை என்று பேசுவோர்க்கு உண்டு எனக் காட்டுதல் போன்றவற்றின் வழி நாட்டார் காட்டும் வரலாற்றை அவரது கட்டுரைகளில் பரவலாகக் காணமுடிகிறது. தமிழர்களின் வரலாற்றைக் கூறும்போது தமிழ் மண்ணை ஆண்ட தமிழர்களது எல்லை இமயம் வரை நீண்டிருந்தது என்று கூறுமிவர் இந்நாள் சிறுமையையும் சுட்டிக் காட்டுகிறார். பதிற்றுப் பத்து கூறும் கருத்து, இமயம் வரை ஆண்டதற்கு ஆதாரமாக இருக்கிறது (ப.259) என்கிறார்.

> **"ஆரியர் துவன்றிய பேரிசையிமயம், தென்னங் குமரி யோடாயிடை மன்மீக் கூறுநர் மறந்தவக் கடந்தே என்பதனால் செங்குட்டுவனும் இமயமுதல் குமரி வரையுள்ள அரசர்களை வென்று விளங்கினர் என்பது பெறப்படும்"**

இதன்வழி வெள்ளையரிடம் அடிமைப்பட்ட இழிந்த நிலையும், வடவாரியருக்குக் குறைந்தவர் தமிழர் என்ற இழுக்கும் சூரியனைக் கண்ட பனித் துளியாகி விடுகிறது.

தென்னாட்டுச் சமயம் சைவம், அது சங்க காலம் தொட்டே உள்ளது என்று கூறுகிறார். மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் பாடிய பாட்டைக் காட்டாகக் கூறுகிறார் (ப.472).

> **"நீரும் நிலனும் தீயும் வளியும்**
> **ஆக விசும்போ டைந்துட னியற்றிய**
> **மழுவாள் நெடியோன் தலைவ னாக**
> **மாசற விளங்கிய யாக்கையர்"**

இதில் சிவனின் மங்கலச் சின்னமான மழுவாள் மற்றும் மாசறு மேனியாகிய தழல் உருவமும் காட்டுவதன் வழிச் சைவம் சங்ககாலத்துச் சமயம் என்று கூறுவதைக் காணமுடிகிறது.

நாட்டார் தம் பரந்துபட்ட அறிவு, நுணுகிய ஆய்வுத்திறன் கொண்டு பொதுவாகப் பலராலும் அறியப்படாத செய்திகளை, வெளிப்படுத்துகின்றார்.

"சிவன் வடமொழியைப் பாணினிக்கும், தென் மொழியாம் தமிழை அகத்தியனுக்கும் கொடுத்து இருமொழியையும் வளர்த்தார் என்ற செய்தி யாவரும் அறிந்தது. எனினும், "அம்மூலையில் உள்ளது; சென்று கொள்க! என்னலும் முனிவர் (அகத்தியர்) விரைந்து சென்று தமிழ்! தமிழ்! எனக் கூவி, அங்கிருந்த ஓலைச் சுவடிகளை வாரிக்கொண்டு போந்து, செவ்வேளை வணங்கி விடைபெற்றுத் தமிழ்மொழியை இவ்வுலகில் நிலவச் செய்தனர்" என (ப.12) முருகவேள் அகத்தியனிடம் தமிழ் கொடுத்ததாக வரும் கந்தபுராணச் செய்தி பொதுவாகச் சிலர் மட்டுமே அறிந்த செய்தி. நாட்டார் இதனைப் பலரும் அறியும்படிச் செய்கிறார். எனினும் தமிழ் இலக்கிய உலகில் சிவன் அகத்தியருக்குத் தமிழ் கொடுத்த செய்தியே அதிகம் என்பதை மிக நீண்ட தம் 'அகத்தியர்' என்ற கட்டுரையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அகத்தியருக்குத் தொல்காப்பியர் முதலான பன்னிரண்டு சீடர்கள் இருந்தனர் என்பது பொதுவாக அறியப்படும் ஒன்று. எனினும், தமிழில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகள் இருப்பதும் மூன்றுக்கும் தலைமையாக அகத்தியர் இருந்து, ஒவ்வொரு பிரிவுக்கும் பன்னிரண்டு சீடர்களாக முப்பத்தாறு பேர் இருந்தனர் என்பதும் பொதுவாகத் தமிழர் அறியாத செய்தி. தமிழ் இலக்கிய உலகில் இதுபோன்ற ஒரு கருத்தும் நிலவிவந்ததை இவர் கட்டுரை நமக்குக் காட்டுகிறது.

"தேவவிருடியாகிய செழுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருள் சிகண்டி என்னும் அருந்தவமுனி சாரகுமாரனென அப்பெயர் பெற்று குமரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கமும் என்று அடியார்க்கு நல்லார் கூறியுள்ள கூற்றை எடுத்துக் காட்டி (ப.31) 'சிகண்டி' என்பார் பன்னிரண்டு சீடர்கள் என ஏற்கனவே சொல்லப்பட்டவர்களுள் இல்லாமையானும், அகத்தியர் சீடர்களுள் ஒருவர் இசையைப் பற்றி அறிந்திருந்தார் என வேறு குறிப்புகளில் காணப்படாமையாலும் அடியார்க்கு

நல்லாரின் இக்குறிப்பினைக் கொண்டு அகத்தியருக்கு இயல் இசை நாடகங்கட்கு வெவ்வேறாகப் பன்னிரு மாணாக்கர் இருந்தனரோ என்று கருதுதற்கு இது இடந்தருகின்றது என்று நாட்டார் கூறுவது (ப.32) மேலும் ஆய்விற்குரியது.

'கபிலரகவல்' வழித் திருவள்ளுவர் முதலானவர்களின் பிறப்பு வரலாற்றைக் கூறும்போது 'இலங்கையை வெற்றி கொண்டு இன்றைக்கு இரண்டாயிரத்தறுபது வருடங்களுக்கு முன்னர் அரசு புரிந்த சோழமண்டலத் தானாகிய பௌத்திர பௌத்திரனாகிய ஏலேல சிங்கன் என்னும் பிரபுவுக்கு நண்பினர் என்று அபிதான கோசம் ஆசிரியர் முத்துத்தம்பி பிள்ளை கூறியுள்ளதாக நாட்டார் கூறும் செய்தி (ப.123) ஓர் அரிய வரலாற்றுத் தகவல் அகும்.

நாட்டார், தமிழர்கள் நீண்ட நெடிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் என்று கூறுவதை மேற்கூறியவற்றின்வழி அறியமுடிகிறது. பக்தி இயக்கம் தோன்றிய காலத்தே தான் சைவம் என்ற சமயம் இங்கு வளர்ந்தது. மற்றும் புலவர் பாடிய வட இமயம்வரை ஆட்சி செலுத்தினான் என்பதற்கு வரலாற்றுச் சான்று இல்லை. எனவே இலக்கியம் வரலாற்றை அறிய உதவுமே அன்றி அதுவே வரலாற்றுச் சான்றன்று. எப்படியிருப்பினும் சிறப்பான ஊக்கத்தை அவரது ஆய்வு தமிழகத்திற்கு வழங்கியது என்பதை மறுக்கவியலாது.

காய்தல் உவத்தல் இன்றித் தன் அறிவுக்கு எட்டிய செய்திகளைக் கடின உழைப்பாலும் பொறுப்பான ஆய்வுகளாலும் எடுத்து வைக்கிறார் நாட்டார். எனினும் ஒரு கருத்தைத் தன் அறிவுக்குப் புலப்பட்டதெனு ஆதாரங்களுடன் நிறுவிய பின்னர் அத்தோடு நில்லாது தொடர்ந்தமையும், மிக்க ஆய்வுக்குரியோர் எனப்பட்டோர் செய்யும் சிறு தவறுகளைச் சுட்டிக் காட்டும் முகமாகச் செய்த ஆய்வுகளும், அதன் வாதப் பிரதிவாத அடுக்குகளுமாக இவருக்குச் சுவையாகப் பல நிகழ்ந்துள்ளமை இக்கட்டுரைகளின் பால் தெரிய வருகின்றன. அறிவுடையார் செய்யும் விவாதங்கள் அறிவைக் கூட்டிக் காட்டியே முடியும். அவரை மாற்றுக் கருத்தால் வெல்ல முயன்ற அதற்கு நாட்டார் தந்த பதில் விளக்க உரைகளும் விவாதங்களும், தமிழுக்குக் கிடைத்த அணியெனலாம். அல்லது உடைமை எனலாம்.

தன்கருத்துக்கு மாற்றுக் கருத்தை ஒருவர் கூறும்போது, எதிர்க் கருத்து வைக்கும் மனிதரின் கருத்தை ஏற்று அவர்

வல்லமையைப் போற்றி அவர் கருத்து உண்மையாக இருக்கும் நிலையில் அது தமக்கும் தமிழுக்கும் கிடைத்த அரிய பெட்டகம் என்கிறார். மேலும் தேடித் தான் படிக்கும் வேலை எஞ்சியது என்கிறார். இது எதிராளியை வீழ்த்தி விட வேண்டும் என்ற செருக்கு இவரிடம் இல்லாததைக் காட்டுகிறது. இங்ஙனம் நாட்டார் அவர்கள் தம் நுணுகிய ஆய்வுத்திறன் கொண்டு சுவையான பல செய்திகளை வழங்கியுள்ளார். மேலும் சுவையான இலக்கியங்களை முறையாக அறிவதே வாழ்வின் பயன் என்பதை உணர்த்துகிறார்.

பரந்த, ஆழமான, உணர்வுமிகுந்த, நியாயமான ஆய்வு நோக்குகளை ந.மு. வேங்கடசாமி நாட்டார் படைப்புகள் வெளிப்படுத்துகின்றன. அவரது கட்டுரைகள் யாவும் கற்கும் தோறும் புதுமையும் மிகுந்தவை.

நாட்டார் வாழ்ந்த காலத்து ஆய்வறிவு, கருத்துச் சுதந்திரம், அவருக்கிருந்த இடையூறு, பொருளாதரப் பற்றாக்குறை என நினைத்துப் பார்த்தால் அன்னாரது பணி இறவாப் புகழுக்குரிய ஒன்று என்று கூறுவது சரியான மதிப்பீடாக இருக்கும். நாட்டார் சிறந்த நாவன்மையும், இலக்கியப் புலமையும், செயலூக்கமும் கொண்டு ஓயாது உழைத்து உள்ளார். அவரது பணியைத் தொடர்வது நம் கடமையாகும்.

*****

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
விவிலியத் தமிழ்	40.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
Agreement in Dravidian Languages	100.00
நாடகவியல்	70.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி	25.00
வ. உ. சி. வளர்த்த தமிழ்	20.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00
கருவூரார் பல திரட்டு	70.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
சங்ககாலக் காசு இயல்	30.00
பாரதி இந்தியா	40.00
தமிழில் மருத்துவ இதழ்கள்	50.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00

Pub.No.487 **நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்** 50.00